செப்டம்பர், 1958
விளம்பி - புரட்டாசி
40 நயா பைசா

# மஞ்சரி

இத்தனை ரெயில் விபத்து ஏன்?

ஊஞ்சல் உற்சவம்

அற்புத மருந்து - தண்ணீர்

பிணங்களின் நடுவே
(லெபனான் கதை)

பெண்களும் அழகும்
(புஸ்தகச் சுருக்கம்)

## ஒரே மருந்து

இடையிலுள்ள காலத்தில் ஆனந்தமாக வாழ்வதைத் தவிர, பிறப்புக்கும் இறப்புக்கும் வேறு மருந்து இல்லை.

—ஸாந்தாயனு.


# மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர் :
என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர் :
தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன்
கா. ஸ்ரீ. ஸ்ரீ.
த. நா. ஸேனபதி
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி
கௌரி அம்மாள்
கி. சாவித்திரி அம்மாள்
சீதா தேவி
'ஆர்வி'
மோ. ஸ்ரீ. செல்லம்
கி. தாமோதரன்

ஓவியர்கள்:
ஸாமி, மகான், சுசி, சுப்பு

மஞ்சரி, தபாற் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை-4. பிரதி ஆங்கில மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 40 நயா பைசா (6½ அணா). வருஷ சந்தா ரூ. 4/75 (ரூ. 4-12-0). சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புங்கள். விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள்.


'மஞ்சரி'யிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 11] ஸ்தாபிதம்: நவம்பர் '47 :: செப்டம்பர் 1958 [இதழ் 9

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

# ஊரும் உலகமும்

★

**உணவுப்பண்ட விலையேற்றம்:** திடீரென்று உணவுப்பண்டங்கள் விலையேறியதைப்பற்றி லோக் சபாவில் விவாதம் நடந்தபோது, யூனியன் உணவு மந்திரி ஏ. பி. ஜெயின் பேசியிருக்கும் பேச்சு, மக்களுக்குத் தைரியம் அளிப்பதாக இல்லை. அடுத்த ஆறு முதல் எட்டுவார காலம் உணவுப் பண்டவிலைகள் கஷ்டந்தான் தரும் என்று அவர் கூறுகிறார். இது போதும் கடைக்காரர்களுக்கு. உடனே அவர்கள் கிடுகிடு என்று விலையேற்றிவிடுவார்கள். இந்தக் கஷ்டம் தெய்வம் செய்ததா, மனிதன் செய்ததா என்று தெரியவில்லை என்றார் உணவு மந்திரி. ''சர்க்கார் செய்தது'' என்று உடனே பதில் அளித்தார் ஓர் அங்கத்தினர். லோக் சபை அங்கத்தினரான சிப்பன்லால் ஸாக்ஸேனா என்பவர், சர்க்காரின் உணவுக்கொள்கையைக் கண்டித்து உபவாசமே தொடங்கிவிட்டார். 'பசி பத்தும் செய்யும்' என்பார்கள். 'அன்னம் பிராணன்' என்பது வேத வாக்கு. வேறு பிரச்னைகளையெல்லாம் ஒத்திப் போடலாம். உணவுப் பிரச்னையை ஒரு கணமும் ஒத்திப் போட முடியாது. ஏதோ சில நடவடிக்கைகளைச் சர்க்கார் எடுக்கப் போவதாக உணவு மந்திரி கூறுகிறார். அந்த அளவுக்கு நல்லதுதான். ஆனால், உணவு விலையேற்றப் பிரச்னையின் கடுமையை உணர்ந்த தொனியை அவருடைய பேச்சிலே காண முடியவில்லை. இதன் அவசரத்தையோ அபாயத்தையோ உணர்ந்ததாக இல்லை அவருடைய பேச்சு. 'இதில் அரசாங்கம் என்ன செய்ய முடியும்?' என்பது போல இருக்கிறது அவர் சொல்லும் சொல். இது சரியல்ல. உணவுத்தானிய விசாரணை போர்டு ஒன்று அமைக்கப்போகிறார்களாம். 'நாளைக்கு வாழ்க்கைப்படுகிறேன்; கழுத்தே சுகமாயிரு' என்றுகூடச் சொல்லலாம். விசாரணை முடிகிற வரையில் சும்மா இரு என்றால், வயிறு கேட்காது. விசாரணை ஒரு பக்கம் நடக்கட்டும்; நேரு சொல்வதேபோல உள்நாட்டிலேயே உணவு உற்பத்தியைப் பெருக்க நீண்டகாலத் திட்டங்களும் போடட்டும். ஆனால் அயல்நாட்டுத் தானியங்களை வரவழைப்பதோ தானியப் பதுக்கல்களை வெளியே கொண்டுவருவதோ போன்ற வேறு நடவடிக்கைகளையும் உடனடியாகச் சர்க்கார் மேற்கொள்ள வேண்டியது மிக்க அவசியம். தவிர, உணவுத்தானியங்கள் அருந்தலான இடங்களில் விலையேறுவதைச் சமாளிப்பதோடு, வேறு இடங்களில் அதைச் சாக்காகக் கொண்டு விலை ஏறிவிடாமல் கண்டிப்பான முறையில் தடுப்பதும் சர்க்காரின் கடமையாகும்.

* * *

**எல்லைப்புறத் தொல்லை:** இந்தியாவுக்கும் மேற்குப் பாகிஸ்தானுக்கும் இடையே காஷ்மீரில் சேனைகள் ஒன்றை ஒன்று எதிர்நோக்கி நிற்கின்றன. ஆயினும், சண்டை

இல்லை; விவகாரம் மட்டும் நடந்துகொண் டிருக்கிறது. இந்தியாவுக்கும் கிழக்குப் பாகிஸ்தானுக்கும் இடையே உள்ள அஸ்ஸாம் எல்லையிலோ சில்லறைத் தொல்லை நிகழ்ந்துகொண்டே யிருக்கிறது. பாகிஸ்தான் போலீஸார் நிரபராதிகளான இந்திய மக்களைத் துப்பாக்கியால் சுட, இந்தியப் போலீஸார் திருப்பிச் சுட்டுப் பாகிஸ்தான் போலீஸாரை விரட்ட, மீண்டும் மீண்டும் இது தொடர, தகராறு விளைந்துகொண்டே யிருக்கிறது. ஏதோ ஆற்றின் கரையே எல்லையாக இருக்கவேண்டும் என்கிறார்களாம் பாகிஸ்தானியர். இந்த எல்லை மாற்றப் பிரச்னை ஒரு சிறு பகுதி சம்பந்தப்பட்டதாம். இது காஷ்மீர்ப் பிரச்னை போன்றதல்ல; சிறிய பிரச்னை. இதைச் சுமுகமாகத் தீர்த்துக்கொள்ள முடியும். ஆனால், பாகிஸ்தானியரின் போக்கைப் பார்க்க, இதையும் ஒரு பெரிய பிரச்னையாக முற்றவிட அவர்கள் முயல்வது போல் தோன்றுகிறது. இதற்கிடையே பாகிஸ்தான் முதல் மந்திரி நூன், நம்முடைய பிரதம மந்திரி நேரு இருவரும் டில்லியில் சந்தித்துப் பேசி இதற்கு ஒரு முடிவு காண இசைந்த செய்தி வருகிறது. இந்தச் சந்திப்பினால் கிழக்கெல்லைப் பிரச்னை தீர்வதுடன், இந்தியா - பாகிஸ்தான் பற்றிய வேறு பல பிரச்னைகளும் தீரத் தக்க சூழ்நிலை ஏற்படும் என்று நம்புகிறோம். நம் பிரதம மந்திரி நேரு திரும்பத் திரும்பச் சொல்கிறமாதிரி, எது நிகழ்ந்தாலும் பாகிஸ்தானுடன் என்றென்றும் நட்போடு வாழவே இந்தியா விரும்புகிறது. இதே விருப்பத்தைப் பாகிஸ்தானும் காட்ட வேண்டும்.

## நாஸ்திகனின் பிரார்த்தனை

1955 வசந்த காலத்தில் ஓர் அழகிய ஆறு வெள்ளப் பெருக்கு எடுத்தது. தெற்குக் கலிஃபோர்னியா மலை ஒன்றில் உற்பத்தியாகி, ஒரு சிறு நகரத்தின் வழியாகச் செல்வது அந்த ஆறு. அங்கே இரண்டு உபநதிகள் அதில் வந்து விழுகின்றன.

நகரம் வெள்ளத்திலே ஒரேயடியாக முழுகியது. கஷ்ட நிவாரண சேவை புரிய வந்தவர்கள், பலரைப் பேராபத்திலிருந்து காப்பாற்றினார்கள். சார்லி என்ற ஒரே ஒருவனைப் பற்றி மட்டும் ஒரு தகவலும் தெரியவில்லை. அவன் கோவிலுக்குப் போகும் வழக்கத்தை அடியோடு புறக்கணித்தவன்,

நிவாரண சேவகர்கள், ''சார்லி,'' ''சார்லி'' என்று திரும்பத் திரும்பக் கூப்பிட்டார்கள். வெகு நேரம் பதிலே இல்லை. கடைசியில் மெலிந்த குரல் ஒன்று எங்கிருந்தோ கேட்டது. அந்தக் குரல் வந்த திசையில் நிவாரண சேவகர்கள் சென்றார்கள். அங்கே பார்த்தால், ஒரு பலமான மரத்தின் உச்சிக் கிளையில் சார்லி உட்கார்ந்துகொண் டிருந்தான். அக்கம் பக்க மரங்களெல்லாம் வெள்ளத்திலே வேரோடு பறிபட்டு ஆற்றோடு போய்விட்டன. சார்லி உட்கார்ந்திருந்த மரம் மாத்திரம் மிஞ்சியிருந்தது.

நிவாரண சேவகர்கள், ''என்ன, சார்லி, இரவெல்லாம் என்ன செய்தாய்? உன் பழைய பிழைக்காக வருந்தினாயா? உன்னைக் காப்பாற்றும்படி கடவுளைப் பிரார்த்தித்தாயா?'' என்று கேட்டார்கள்.

''அதெல்லாம் இல்லை. என்னைப் போன்ற நாஸ்திகரைக் கடவுள் காப்பாற்ற முன்வரமாட்டார் என்று எனக்குத் தெரியாதா? என்னைக் காப்பாற்றும்படி அவரை நான் பிரார்த்திக்க வில்லை. ஆனால், இதோ இந்த மரம் கடவுள் படைத்தது: கடவுளுடையது; இதை மட்டும் காப்பாற்றும்படியே அவரைப் பிரார்த்தித்துக்கொண் டிருந்தேன்'' என்றான் சார்லி.

—ஈ. ப்ருக்ஸ், 'காரொனெட்'.

# சத்தியமே பெரிது

**காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீமத் சங்கராசாரிய ஸ்வாமிகளுடைய உபந்நியாசம் ஒன்றின் இடையே விளங்கும் வரலாறு இது.**

ஆதி சங்கரர் காலத்தில் ஒரு பெரிய காபாலிகன் இருந்தான். அவன் பெயர் க்ரகசன். காபாலிகர்கள், ஈசுவரனைப்போல எலும்பு மாலை அணிந்து, மயானச் சாம்பலைப் பூசி, மண்டையோட்டில் மாமிசப் பிச்சை வாங்குவார்கள். ஆனால் அந்தக் காலத்தில் ஆசாரியர் அவர்கள், "வேதத்துக்கு இணங்க, சாமானிய தர்மங்களையும் ஆசாரங்களையும் அநுசரித்தால் போதும். தாந்திரிக மார்க்கங்களை அநுசரிக்க வேண்டாம்; மதுபானமும் ஊனும் வேண்டாம்" என்று சொல்லி வந்தார்.

ஆகவே, காபாலிகனாகிய க்ரகசன், 'எப்படியாவது ஆசாரியர் அவர்களைத் தீர்த்துக் கட்டினால்தான் நம் மதம் பிழைக்கும்' என்று அபிப்பிராயப்பட்டான். ஒரு நாள் சமயம் பார்த்து ஆசாரியர் அவர்களிடம் வந்தான். "நான் வெகு நாளாக இந்தத் தாந்திரிக மார்க்கத்தில் உபாசனை பண்ணிக்கொண்டு வருகிறேன். பெரிய ஹோமம் ஒன்று பண்ணவேண்டும். அந்த ஹோமத்துக்கு ஒரு நரபலி கொடுக்க வேண்டும். ஆனால் அந்தச் சிரஸ், பெரிய சக்கரவர்த்தியினுடைய தலையாக இருக்க வேண்டும். சக்கரவர்த்தி தலையைக் கேட்டால் என் தலையே போய்விடும். ஆகையால், அது முடியாது. ஆனால் அதற்குப் பதிலாக ஒரு பெரிய ஆசாரியருடைய தலையைக் கொடுத்தாலும் என் தபஸ் சித்தியாகும். நீங்களே உதவி செய்ய வேண்டும். நீங்கள் சந்நியாசி. உங்களுக்கு எந்த ஆசையும் கிடையாது" என்று சொன்னான்.

உடனே ஆசாரியர் அவர்களுக்கு, தம் உடல் பிறருக்குப் பயன்படுகிறதே என்று சந்தோஷம் உண்டாகி விட்டதாம். "அப்படியா! நாளைக்குச் சாயந்தரம் ஆற்றங்கரைக்கு வா. நான் தனியாக இருப்பேன். சமாதியில் இருக்கும் போது தலையை எடுத்துக்கொண்டு போ" என்று சொல்லிவிட்டார்.

அவ்வாறே அவன் ரகசியமாக மறுநாள் ஆற்றங்கரைக்குப் போனான். அங்கே ஆசாரிய சுவாமிகள் தாம் சொன்னபடியே சமாதியில் உட்கார்ந்திருந்தார். காபாலிகன் கத்தியை எடுத்துக் கொண்டு வெட்டப் போனபோது திடீரென்று அங்கே பத்மபாதர் வந்துவிட்டாராம். ஆசாரியர் அவர்களுடைய பரமசிஷ்யர் அவர்.

பத்மபாதர் அவர்களுக்கு ஆசாரிய சுவாமிகள், காபாலிகனுக்குச் சொல்லியிருந்த விஷயம் தெரியாது. திடீரென்று அவருக்கு ஆவேசம் வந்துவிட்டது. ஹோ என்று கத்திக்கொண்டு ஒரே பாய்ச்சலில் காபாலிகன் மேலே பாய்ந்து அவன் மார்பைக் கிழித்துப் போட்டுவிட்டு, ஹாஹா என்று சிம்மம் மாதிரி அட்டகாசம் பண்ணிக்கொண்டிருந்தாராம். சமாதியில் இருந்த ஆசாரியர் அவர்கள், இந்த நரசிம்ம அட்டகாசத்தைக் கேட்டவுடன் கண்ணை விழித்துப் பார்த்தாராம்.

காபாலிகன் செத்துக் கிடந்தான்; பத்மபாதர் கையில் ஒரே ரத்தம். ஆசாரிய சுவாமி

காப்பிரைட்: ஆசாரிய ஸ்வாமிகளின் உபந்நியாசங்கள் (தமிழ்ப் புத்தகம்), கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை-4; விலை ரூ. 2.

கள் விழித்தவுடன் பத்மபாதருடைய ஆவேசம் தணிந்து போக, அவர் ஆசாரியரின் காலில் போய் விழுந்தாராம். ''என்னப்பா இது?'' என்று கேட்டார் ஆசாரியர் அவர்கள். ''எனக்கு ஒன்றுமே தெரியாது'' என்று பத்மபாதர் சொன்னாராம். அப்போது ஆசாரியர் அவர்கள், ''உனக்கு ஏதாவது நரசிம்ம உபாசனை உண்டோ?'' என்று கேட்டாராம்.

''சின்ன வயசில் யாரோ ஒருவர் நரசிம்ம மந்திரத்தை உபதேசம் பண்ணினார். அது சித்தியாக வேண்டும் என்றால் புரச்சரணம் பண்ணிக்கொண்டு வர வேண்டும் என்று சொன்னார். அதற்காக அஹோபிலம் என்ற மலைக்குப் போனேன். அங்கே உட்கார்ந்து கொண்டு ஜபம் பண்ணுகிறபோது ஒரு நாள் வேடன் ஒருவன் வந்தான். 'ஏன் உட்கார்ந்திருக்கிறாய்? இங்கு உனக்குச் சோறு கூடக் கிடைக்காதே' என்று சொன்னான். 'நான் நரசிங்கத்தைப் பிரத்தியக்ஷமாய்க் காணவேண்டி இங்கே தவம் செய்ய வந்தேன்' என்று சொன்னேன். அப்புறம் அவனிடம் தியான சுலோகத்தில் சொல்லியபடி சிம்மத்தின் அங்க அவயவ ரூபத்தைச் சொன்னவுடன், 'நீ பொய் சொல்ல மாட்டாய். நீ சொல்கிற மாதிரியான சிங்கத்தை நான் இது வரையில் பார்த்ததில்லை. ஆனால் அந்த மாதிரி சிங்கம் இந்த மலையில் இருக்கிறது என்று நீ சொல்வதனால் நாளைக்குச் சூரியாஸ்தமனத்துக்குள் உன் முன்னாடி அதைச் சத்தியமாகக் கொண்டுவந்து கட்டி விடுகிறேன்' என்றான்.

''உடனே அந்தச் சிங்கத்தைத் தேடி மலை முழுக்க அலைய ஆரம்பித்துவிட்டான். மறுநாள் தேடினான். பசி தாகம் ஒன்றும் தெரியாமல், சிங்கம் சிங்கம் என்ற ஒரே நினைவாக, தியான சுலோகத்தில் சொன்னது போன்ற ஓர் உருவத்தையே சதா நினைத்துக்கொண்டிருந்தான். அஸ்தமன வேளை வந்தது சிங்கம் அவன் கண்ணில் அகப்படவில்லை. சொன்ன காரியத்தை நிறைவேற்ற முடியவில்லையே என்று துக்கம் உண்டாயிற்று. உடனே ஒரு கொடியை ஒரு மரத்தில் கட்டி, ''ஏ சிங்கமே, நீ எப்படியோ என் கண்ணில் அகப்படாமல் சுற்றுகிறாய். பிராம்மணர் பொய் சொல்ல மாட்டார். 'உன் கண்ணில் அது அகப்படாதே' என்று அவர் சொன்னதுதான் நிஜமாகப் போய்விட்டது. நீதானே என் சத்தியத்தைப் பொய்யாகப் பண்ணினாய்? உனக்காக என் உயிரையே விட்டுவிடுகிறேன்'' என்று சத்தியத்துக்காகப் பிராணத் தியாகம் செய்யச் சுருக்குப் போட்டுக் கொண்டானாம்.

''உடனே நரசிம்ம மூர்த்தி ஹுங்காரம் பண்ணிக்கொண்டு சிம்மரூபமாக அவன் முன்னே வரவே, கயிறு அறுந்துபோயிற்று. 'ஏ சிங்கமே, இப்போதாவது வந்தாயா? வா. உன்னைக் கொண்டு போய் அவரிடம் நிறுத்துகிறேன்' என்று அந்தக் கொடியைப் போட்டுச் சிங்கத்தைக் கட்டி இழுத்துக் கொண்டு வந்துவிட்டான்.

''சிம்ம கர்ஜனை கேட்டது. அவன் இழுத்து வருவது தெரிந்தது. ஆனால் சிம்மம் தெரியவில்லை. 'எனக்குத் தெரியவில்லையே! உனக்குத் தெரிகிறதே. நீதான் என் குரு' என்று வேடன் காலில் வீழ்ந்து பிரார்த்தித்தேன்.

''சப்த ரூபமாக ஸ்வாமி எனக்கு அநுக்கிரகம் பண்ணினார். 'லோகத்துக்கே பெரிய உபகாரம் செய்யும்படியான சந்தர்ப்பம் உனக்கு வரப் போகிறது. அப்போது உன் ரூபமாக நான் வெளிப்படுகிறேன்' என்று சொன்னார். அதுதான் தெரியும். வேறு ஒன்றும் எனக்குத் தெரியவில்லையே!'' என்று பத்மபாதர் சொன்னாராம். சில 'சங்கர விஜய'ங்களில் இந்தக் கதை இருக்கிறது.

வேடன் பக்தி பண்ணவில்லை. சத்தியத்துக்காக உயிரையே அர்ப்பணம் பண்ணினான். அப்போது பகவான் அவனுக்குத் தரிசனம் கொடுத்தார்.

பக்தியைக் காட்டிலும் துவேஷம் பெரிது: அதைக் காட்டிலும் பெரிது சத்தியம்.

# ஷா வகுத்த அரசியல்

ரா. ஸ்ரீ. தேசிகன்

சமீப காலத்தில் வாழ்ந்து மறைந்த பெர்னர்ட் ஷா (1856 - 1950) ஓர் ஆச்சரிய மனிதர். அரசியல், சமூகம், கலை, இலக்கியம் எல்லாத் துறைகளையும் பேனு முனையால் கலக்கி உலகெங்கும் கீர்த்தி பெற்றவர். சம்பாஷணையிலும் ஈடு இணையற்றவர். கேலிப் பேச்சிலும் எழுத்திலும் நிபுணர். ஆனல் அத்தனையிலும் பொருள் பொதிந்திருக்கும். அவருடைய அரசியல் கருத்துக்களை இங்கே காணலாம்.

பேராசிரியர் பெர்னர்ட் ஷா எழுதிய நூல்களுக்குள் கால வெள்ளத்தில் அழியாது நிற்பது 'மீண்டும் மெதூஸலாவுக்கு' என்ற நாடகம். இந்த நாடகத்தைத் துருவி ஆராய்வதற்கு முன்பு, 'அரசியலில் இது யாது, அது யாது என்று ஒவ்வொருவரும் அறிய வேண்டியது' (Everybody's Political what's what) என்ற நூலும், 'அறிவுமிக்க பெண்ணுக்கு ஸோஷலிஸம், முதலாளித்துவம், சோவியத் கொள்கை, பாஸிஸ தத்துவம் முதலியவற்றுக்கு வழிகாட்டி' (The Intelligent Woman's Guide to Socialism, Capitalism, Sovietism and Fascism) என்ற நூலும் படிப்பதற்குரியவை.

இவருடைய நாடான அயர்லாந்தைச் சார்ந்த கோல்ட்ஸ்மித் கண்ட தத்துவத்தை ஓர் உரைகல்லாய்க் கொண்டு இவர் பல பொருள்களையும் சோதித்துப் பார்க்கிருர்.

மக்கள் மாயச் செல்வம் மல்கும்
நாடு நலிவுறும் நாடு நலிவுறும்
காண்பீர் காண்பீர் கண்கள்
[கொண்டே

என்ற கோல்ட்ஸ்மித் வரிகள் நம் உள்ளத்தைத் தொடும். சிலர் அளவு கடந்த செல்வத்தில் திளைக்க, மற்றவர் வறுமைச் சேற்றில் ஆழ்ந்து உழலும் நாடு சீர்குலைந்து அழிந்துவிடும். சமுதாயத்தில் அனைவரும் உழைத்தே உண்டி அருந்த வேண்டும். உழைப்பின்றி உணவு உட்கொள்ளுபவன் ஒரு திருடனுவான். உழைப்பு என்பு உடல் சம்பந்தப்பட்டதும் அல்ல. அறிவாலும் கலையாலும் உபதேசத்தாலும் - சுருங்கக் கூறுமிடத்து எந்த விதத்தாலும் - சமுதாயத்துக்குச் சேவை செய்தே எவனும் உணவைப் பெற வேண்டும். உலகத்துக்குப் பயன்படாதவர்களைத் தோட்டத்திலிருந்து களைகளைப் பிடுங்கி எறிந்துவிடுவது போல், அவர்களுக்கு யாதொரு துன்பமுமின்றி அழித்துவிட வேண்டியதுதான் சாலப் பொருந்தும் என்பது ஷாவின் கருத்து.

ஒருபால் பெரும் பொருட் குவியல், ஒருபால் வறுமையின் தாண்டவம்; ஒரு பால் இந்திர போகம், ஒருபால் உடுக்க உடையும் உண்ண உணவுமின்றித் தவிக்கும் நிலை - இந்தச் சூழ்நிலையில் செல்வம் படைத்தவர் இன்புற்றிருக்க முடியுமோ? அழகு வாய்ந்த பெண்கள் வறுமை காரணமாகச் செல்வச் சீமான்களுக்குத் தங்கள் மானத்தை விற்று வாழ்க்கை நடத்த முயலுவார்கள். இந்த விபசாரத் தொழிலால், செல்வருடைய உடல் நலம் கெட்டுவிடும். அவர்கள் கெடுவது மட்டும் அல்ல; அவர்களுடைய

சந்ததியினரும் நோயால் வாடுவார்கள். மேலும், வறுமை தாண்டவம் ஆடுகிற இடத்தில் தொத்து நோய் இயல்பாய் வெடித்தெழும். அந்தத் தொத்து நோய் அந்த இடத்தோடு நின்றுவிடுமோ? அது எங்கும் பரவிப் பல்லாயிரக்கணக்கான மக்களை மாய்த்துவிடும். ஆதலால், எல்லோரும் இன்புற்றிருந்தால்தான், உலகம் உய்யும். இதற்கு ஒரு வழியை ஷா காட்டுகிறார். எல்லாவற்றையும் சமுதாய உடைமை ஆக்கி (Nationalisation) வருவாயைச் சமமாய்ப் பங்கிட்டு விட்டால் (Equality of income), உலகத்தில் தலைவிரித்தாடும் அத்தனை இன்னல்களும் மறைந்து மக்கள் இன்புற்றிருப்பார்கள் என்கிறார் அவர்.

எல்லாவற்றையும் சமுதாயச் சொத்து ஆக்க முடியுமா என்று ஒருவர் கேட்கலாம். இப்போதுதான் ஒவ்வொன்றாகப் பல பொருள்களை அப்படித் தேசிய மயம் ஆக்கிக்கொண்டு வருகிறோமே. ரெயில்வேக்கள், போஸ்டாபீஸ்கள், நிலக்கரிச் சுரங்கங்கள் - இவை தேசத்தின் பொது உடைமைகளாய்த் திகழவில்லையா? சுங்கச் சாவடிகளை அகற்றிவிட்டோம். ரஸ்தாக்கள் எல்லாம் பொது ஆகிவிடவில்லையா? வரி செலுத்துகிறவர்களுக்கும் வரி செலுத்தாதவர்களுக்கும் அவை பயன்படுவதைப் பார்க்கிறோம். மின்சார விளக்குப் போடுவது, தெருவைச் சுத்தமாக வைத்துக்கொள்ளுவதற்கான ஏற்பாடுகளை அமைப்பது, தண்ணீர் வசதிகளை வகுத்துக் கொடுப்பது, நோய் நொடிகளை அகற்றப் பொதுச் செலவுகளில் மருத்துவ நிலையங்களை நிறுவுவது - இவை போன்ற எத்தனையோ நல்ல காரியங்கள் பொதுச் செயல்களாய் நம் முன் திகழப் பார்க்கிறோமே! இந்த நிலையிலே மற்ற எல்லாக் காரியங்களையுமே ஏன் நாம் பொதுச் செயலாக ஆக்க முடியாது என்ற வினாவை ஷா எழுப்புகிறார்.

முதல் முதலில் நிலத்தைப்பற்றி இவர் இந்தப் பிரச்னையை எழுப்பி, அதை நுணுக்கமாய் ஆராய்கிறார். நில சம்பந்தமான சரித்திரம் நம் முன் மிக நன்றாய் விரிகிறது. நிலத்தைத் தேசீயச் செல்வமாக்குவதே சாலவும் நன்று என்ற முடிவுக்கு ஷா வந்துவிட்டார். சோவியத் அரசியலில் நிலத்தைச் சர்க்காரே எடுத்துக்கொண்டுவிட்டது. அப்படி எடுத்துக்கொண்டு பண்படுத்திய தன் விளைவாக நாட்டின் செல்வம் பெருகியது. சமுதாயத்தின் முன்னேற்றம் எல்லா நிலங்களையும் சர்க்கார் எடுத்துக்கொண்டு பயிர் செய்வதில்தான் இருக்கிறது என்பதை ஷா நமக்கு நன்றாய் உணர்த்துகிறார்.

கட்சிப் பிரதி கட்சியால் (Party System) உண்மை வெளிவருவதில்லை. பல குழுக்களை அமைத்துக்கொண்டு எதையும் ஆராய முயல வேண்டும். படிப்புப்பற்றிய குழுக்கள், பொருளாதாரக் குழுக்கள், பொருளை நுகர்கிற மக்களின் பொதுக் குழுக்கள் - இவை போன்ற பல குழுக்கள் மூலந்தான் நாடு முன்னேற முடியும். தக்க சான்றோர்கள்தான் இந்தக் குழுக்களை அலங்கரிக்க வேண்டும். பார்லிமெண்டையே இரண்டு பிரிவுகளாய்ப் பிரிப்பது நலம் என்று சிட்னி வெப் சொன்னார். அவருடைய இந்தக் கொள்கையை ஷா ஆதரிக்கிறார். அரசியல் சம்பந்தமான பொருளை ஒரு பார்லிமெண்ட் அலசிப் பார்க்க வேண்டும்; மற்றொன்று: பொருளாதாரத்தைப்பற்றி நீண்ட சிந்தனை செய்ய வேண்டும். அறிவுக்கும் நல்ல நடத்தைக்குந்தான் நாம் வணக்கம் செய்ய வேண்டும். குழுவினர்கள் தங்கள் தங்கள் அலுவல்களைத் தக்க முறையில் புரியாவிட்டால், இரக்கமின்றி அவர்களை இருக்கிற இடம் தெரியாமல் ஒழிப்பதுதான் அறமாகும்.

ஜனநாயகத்தைப்பற்றிச் சில விஷயங்களை மக்கள் அறிய வேண்டும்.

ப்ளேட்டோ தம் 'குடியரசி'ல், ''தாயைத் தவிர வேறு எவரும் குழந்தைகளைக் கவனிக்க முடியாது'' என்கிறார். ஆனால், ''பெற்ற தாய் தந்தையர் தம் குழந்தைகளைத் தக்க முறையில்

கவனிக்க முடியாதவர்கள்'' என்று மாரிஸ் மொழிகிறர். இதிலும் ஓரளவு உண்மை இருக்கத்தான் இருக்கிறது. எனவே, குழந்தைகளேயும் தேசச் சொத்துக்களாய்க் கருதி அவர்களைப் பேண வேண்டும் என்று ஷா கருதுகிறர். ''ஜனநாயகம் என்ருல் சமத்துவம் என்று சொல்லுகிறீர்கள். சமத்துவத்தை உலகில் நீங்கள் காண்கிறீர்களா? இயற்கை அன்னே பட்சபாதமின்றி நடந்துகொள்ளவில்லே. அயின்ஸ்டீன்போல ஒரு சிறந்த மேதாவியையும் படைக்கிருள்; ஐந்தும் இரண்டும் சேர்ந்தால் என்ன என்று அறிந்து கொள்ளவே முடியாத அறிவிலியையும் படைக்கிருள். சரியான சந்தர்ப்பங்களே எல்லாருக்கும் அளிக்க வேண்டும்; எல்லாரும் சமமாக இருந்து, கொள்வினே கொடுப்பினே செய்துகொள்ள வேண்டும். நல்ல உண்டி, அவரவருடைய சக்திக்கு ஏற்ற படிப்பு போன்றவற்றை எல்லாருக்கும் அளிக்க வேண்டும். வருவாயை எல்லாரும் சமமாய்ப் பகிர்ந்து கொடுத்தால்தான் இவை யாவும் விளேயும்'' என்று ஷா கூறுகிருர்.

பொருளே உள்ளபடி உணர்வது, பகுத்தறிவது, பழுத்த ஞானம் இவை எல்லாரிடத்திலும் இல்லே; சிலரிடத்தேதான் இவை தென்படுகின்றன. இந்த உண்மையைக் குழந்தைகள் உணராமல் போனுல், அவர்கள் தக்க பிரஜைகள் ஆக மாட்டார்கள். ஸோஷலிஸம் பிறந்து, வறுமையையும் அகற்றிவிட்டால், குழந்தைகள் தக்க முறையில் வளரும். ஜன சமுதாயச் செலவில் அவர்களுடைய படிப்புக்கும் தக்க வசதிகள் ஏற்படும். குழந்தைகளேத் தக்க பிரஜைகள் ஆக்குவதில் சர்க்கார் பொறுப்பு எடுத்துக்கொள்ளுமானுல், தாய் தந்தையர்களின் சுமை குறையுமன்ருே? மேலும், எல்லாத் தாய் தந்தையர்களும் குழந்தைகளே வளர்க்கும் ஆற்றல் படைத்தவர்கள் அல்ல.

குழந்தைகள் படித்தே தீர வேண்டும். இப்பொழுது இருக்கிற படிப்புச் சரியான படிப்பல்ல. நாட்டின் நலத்தை விருத்தி செய்யும் மக்களேப் படைக்கும் கல்வியைச் சர்க்காரே அமைக்க வேண்டும். வறுமைப் பேய் நாட்டைவிட்டு அகன்ருல், கல்வித் துறையிலும் பல நலங்கள் திகழக் காண்போம்.

விஞ்ஞான வளர்ச்சிக்காகப் பட்சிகளேயும் விலங்குகளேயும் கொல்லுகிற கோரக் காட்சிகளேக் கண்டு ஷா உள்ளம் நைகிருர். நாம் பருகும் பால்கூட அவருக்கு மாமிசமாய்க் காட்சி அளித்தது. பிராணிகளே வதைத்து ஏன் உண்மையை நாடவேண்டும் என்று அவர் உள்ளம் உடைந்து கேட்கிருர்.

மருத்துவர்களேப்போலக் கயவர்களே நாம் பார்க்க முடியாது என்கிருர் ஷா. வியாதிகளே இயற்கை அன்னேயே குணப்படுத்திவிடுகிருள். நோய்களின் மூலம் உயிர் வாழ்கிற வைத்தியர்கள் நிந்திக்கத் தகுந்தவர்கள். சாதாரணமாய்ப் பிராணிகளே வதைக்கிறவர்களேச் சர்க்கார் கண்டிக்கிறது. ஆனுல் விஞ்ஞான வளர்ச்சிக்காகப் பிராணிகளே மட்டும் வதைக்கலாமோ? அம்மையைத் தடுப்பதற்காக ஊசி போடுகிருர்கள். இத்தகைய செயல் இயற்கைக்கு முரண்பாடு என்று இவர் வாதிக்கிருர்.

சமயத் துறையிலும் சில மாறுதல்களே நுழைக்க வேண்டும். பைபிளில் கூறிய சிருஷ்டிக் கிரமத்தை மக்களுக்குப் போதிக்காமல் இருப்பது நல்லது. அறிவின் ஓட்டத்தைத் தடை செய்யும் எந்தச் சமயமூம் நிந்திக்கத் தகுந்தது.

சட்டமும் சரிவர நிறைவேறவில்லே. ஆயுத பலத்தைக் கொண்டு போரில் வெற்றி பெறுகிருர்கள். நியாய மன்றத்திலும் ஏழைகளுக்கு நியாயம் கிடைக்கிறதில்லே. பணந்தான் வெற்றி அடைகிறது.

தனித்த மனிதனின் ஆட்சியும் வெறுக்கத் தகுந்தது. சான்ருேர்கள் அடங்கிய குழுக்கள் மூலந்தான் அரசியல் நடைபெற வேண்டும். அவர்களுடைய செயல்களேச் சமுதாயம் நன்ருய்க் கவனித்து

அவைகளுக்குத் தக்க விமரிசனம் செய்ய வேண்டும். அவர்கள் நீடித்த காலம் அதிகார ஸ்தானத்தில் அமரக் கூடாது. அதிகாரம் அவர்களுடைய உள்ளத்தை மாசுறச் செய்யலாம்.

மேலும், தனித்த மனிதன் கொலை செய்தால் அவனுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கிறார்கள்; ஆனால் பல பேர் சேர்ந்து போர்க்களத்தில் ஒருவனை ஒருவன் வெட்டி மடித்துக்கொண்டால், இப்படிச் செய்கிறவனுக்குப் புகழ் மாலை சூட்டுகிறார்கள்! சேர்ந்து புரிகிற இந்த நீசமான காரியம் (Collective Scoundrelism) ஒழிய வேண்டும். தனித்த மனிதனுக்கு ஒரு நியாயம், அரசாங்கத்துக்கு ஒரு நியாயம் என்ற பிளவு இருக்கும் வரையில், காட்டில் வாழும் விலங்கின் நிலையிலிருந்து இன்னும் மனிதன் முன்னேறவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

சீஸர், நெப்போலியன், ஹிட்லர் போன்றவர்கள் புகழ்வதற்குரியவர் அல்ல: இவர்களை உலகத்தை அழிக்கவந்த கடுந் தொத்து நோய்கள் என்று சொல்லலாம். அற நெறியில் நிற்கிற சான்றோர்களுக்கே நாம் வணக்கம் செலுத்த வேண்டும். அரசியலும், தனித்த மனிதனும் ஒரே அன்பு நெறியின் கீழ் அமர்ந்து நிற்கவேண்டும்; அப்பொழுதுதான் அமைதி நிலவும். வறுமையை ஒழிக்க வேண்டும். வறுமையை ஒரு குற்றமாக நாம் கொள்ள வேண்டும். ஒரு நல்ல நாட்டில் ஈகைக்கு இடமில்லை. ஈகையும் வறுமை என்ற அஸ்திவாரத்தின்மீதே எழுந்ததன்றோ? வறுமையை ஒழிக்க ஒரு வழிதான் இருக்கிறது. அந்த மருந்து யாதென்று வினவுவீராயின், எவருக்கும் சரிசமமான வருவாய் கிடைக்கச் செய்வதே என்று பதில் அளிக்கலாம். இந்தப் பல்லவியின் ஒலியைத்தான் ஷாவின் நூல்களில் எங்கும் கேட்கிறோம். இத்தகைய கனவு உருவாகுமாறு நாமும் அரும்பாடுபடுவோமாக.

### மது மயக்க தீரம்

பல் வலித்ததால் டாக்டரிடம் வந்தான் ஒரு கப்பல் சிப்பந்தி. பல்லை எடுக்கவேண்டும் என்றார் டாக்டர். உடனே கப்பல் சிப்பந்தி பயந்து குலை நடுங்கத் தொடங்கினான். அவனுக்குத் தைரிய மூட்டுவதற்காகப் பலமாக ஒரு டோஸ் விஸ்கீ கொடுத்து அவனைக் குடிக்கச் செய்தார் டாக்டர்.

பிறகு, ''இப்போது எப்படி இருக்கிறது? நல்ல தைரியமாயிருக்கிறாயா?'' என்று கேட்டார்.

''தைரியமாக இருக்கிறேனவா? நல்ல தைரியம் வந்துவிட்டது. சகோதரா, இப்போது எந்தப் பயலாவது வந்து என் பல்லைமட்டும் பிடுங்கட்டும்; பார்க்கிறேன், ஒரு கை'' என்றான் கப்பல் சிப்பந்தி.

—'தி லயன்'

### பள்ளிப் படிப்பு

பள்ளிக்கூடங்களில் பையன்களுக்கு மற்ற மனிதர்களின் மனத்தில் பிறந்த கருத்துக்களையெல்லாம் நிறைய நிறையப் போதிக்கிறார்கள். ஆனால், பையன்களின் சொந்த மனத்தின் சக்தியைக் கண்டுகொள்ளப் பயிற்சி அளிப்பதேயில்லை.

—ஆர். ஆர். ஹான்காக், 'ஸண்டே டைம்ஸ்', லண்டன்.

### விட முடியாத குணங்கள்

விருப்பு வெறுப்பற்று நடு நிலைமையோடு இருக்க இரண்டே வழிகள்தான் உண்டு. ஒன்று, அடி முட்டாளாயிருப்பது; மற்றது, முற்றும் அலட்சியமாயிருப்பது. விருப்பு வெறுப்புக்கள் ஒவ்வொருவருக்கும் வேண்டிய குணங்கள்; ஒதுக்கித் தள்ளக் கூடியவை அல்ல.

—சார்லஸ் கர்ட்டிஸ்

நாமகிரித் தாயாரே தமக்குக் கணிதப் புதிர்களை விடுவித்ததாக நம்பிய நிபுணர் -

# மேதை ராமாநுஜன்

'முன்ஷி'

கணித உலகத்தில் எதிர்பாராமல் தோன்றிப் பலருக்கு வழிகாட்டிய ஓர் ஒளி முப்பத்தெட்டு ஆண்டுகளுக்குமுன் சட்டென்று மறைந்தது. அந்த மேதைச் சுடர் மானிடரிடையே ராமாநுஜன் என்ற பெயருடன் சில காலம் வசித்து வந்தது.

கணித ஆராய்ச்சியாளரான பேராசிரியர் ஈ. டி. பெல் (E. T. Bell) என்பவர் இப்படி எழுதுகிறார்: ''உண்மையிலேயே மகா அறிவாளியான ராமாநுஜனைப் போன்ற ஒருவர் எதிர்பாராமல் எங்கிருந்தோ வந்து சேர்ந்தால், ஆராய்ச்சி நிபுணர்கள்கூட அவரைத் தேவலோக நன்கொடை என்றே கருதுகிறார்கள். அவருடைய உட்பார்வை மிகவும் சூட்சுமமானது. ஒன்றுக்கொன்று முற்றும் சம்பந்தமற்றவை என்று பிறர் கருதும் சூத்திரங்களுக்கும் தத்துவங்களுக்கும் இடையில் எங்கேயோ பாதாளத்தில் புதைந்து கிடக்கும் அடிப்படை ஒற்றுமையை அவர் கண்டு உலகுக்கு அறிவிக்கிறார். அதன் பயனைப் புத்தறிவு பெற்ற பிற அறிஞர்களுக்கு, வெகு காலம் வேலை கொடுக்கும் ஆராய்ச்சித் துறைகள் பல கிடைக்கின்றன.''

இந்த 40 வருஷ காலத்தில் பல இந்தியக் கணித சாஸ்திரிகள் சர்வதேச கீர்த்தி சம்பாதித்துக் கொள்ளும்படியான பல உயரிய சோதனைகள் நிகழ்த்தி யிருக்கிறார்கள். ஆனாலும், ராமாநுஜனுக்கு இணையான மற்றொருவர் கணிதத் துறையில் தோன்றவில்லை.

கும்பகோணத்தில் ஒரு ஜவுளிக் கடையில் குமாஸ்தாவாக இருந்த சீனிவாச ஐயங்கார் என்பவருடைய மூத்த குமாரர் ராமாநுஜன். அவருடைய தாயாரின் தந்தை ஈரோட்டில் கோர்ட்டு அமீனாவாக வேலை பார்த்து வந்தார். அப்போது அங்கே ராமாநுஜன் பிறந்தார். இந்த வரலாற்றில் அந்த நிகழ்ச்சிக்கு ஒரு முக்கிய இடம் உண்டு. அருகே, சேலம் ஜில்லாவில், நாமக்கல்லில் வீற்றிருக்கும் நாமகிரித் தாயாரிடம் ராமாநுஜனுடைய அம்மாவுக்குப் பக்தி உண்டு; அந்த விசுவாசமும் நம்பிக்கையும் மகனிடமும் அதிக அளவில் தென்பட்டன. பிற்காலத்தில், பகல் முழுவதும் சிரமப்படுத்திய கடினமான கேள்விகளின் விடைகளும் முற்றும் புதுப்பிரச்னைகளும் இறுதிச் சூத்திரங்களும் கனவில் ராமாநுஜனுக்குத் தோன்றும்; அவற்றைத் தமக்குத் தோற்றுவித்தவர் நாமகிரித் தாயார்தான் என்று அவர் நன்றியோடும் தயங்காமலும் கூறுவார். அந்த இறுதி விடைகள் திடீரென்று அவருக்கு எப்படித் தோன்றின என்று அறிஞர் உலகம் வியக்கும்: கட்டிடத்தின் மேற்கூரை போன்றவை அந்த விடைகள். கட்டிடத்துக்குக் கீழே உள்ள தூண்களும் சுவர்களும் அஸ்திவாரமும் போன்ற வழிகளை அமைப்பது, பலருக்கும் பல்லாண்டு வேலையாகும்.

ராமாநுஜன் 1887 - ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22-ஆம் தேதி பிறந்தார். சிறு வயசிலேயே அவர் கல்வியில் பல துறைகளிலும் தம் சாமர்த்தியத்தைக் காட்டிப் பரிசும் உபகாரச் சம்பளமும் பெற்றார். சிறு வயசில் அவர் மந்தமாக இருந்தார் என்றும், கணக்கைத் தவிர மீதி விஷயங்

காப்பிரைட்: ஸ்வராஜ்யா (ஆங்கிலம்: 26-4-'58), ராயப்பேட்டை, சென்னை.

களில் அவர் மனம் செல்லவில்லை என்றும் சிலர் கருதுவது தவறு.

அவர் இரண்டாம் படிவத்தில் படிக்கும்போதே, 'கணிதத்தின் இறுதி உண்மை என்ன?' என்ற கேள்வியைக் கிளப்பினார். எவரும் திருப்திகரமான விடை அளிக்கவில்லை. பி. ஏ., வகுப்புக்கு ஏற்பட்ட விஷயங்களை அந்த நாளிலேயே தம் முயற்சியால் அவர் கற்று முடித்தார். பல பி. ஏ. மாணவர்கள் கணிதத்தில் தங்கள் சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ள அவரிடம் வருவார்கள். ஆனால் அவர் அளித்த விளக்கங்கள் அவர்களுக்கு உதவினவோ, என்னவோ; சந்தேகந்தான். அவருடைய வழிகள் புதியவை; விடை காண அவர் கையாண்ட 'ஏணி'களும் 'சார'ங்களும் புது வகையானவை. அவருடைய அதிசயமான உட்பார்வை அவருக்குத் திருப்தியளிக்கலாம்; ஆனால் பரீட்சிப்பவருக்கோ கண்கட்டு வித்தையாகவே தோன்றும்.

அவர் தம் சோதனைகளைப் பருத்த குறிப்பேடுகளில் ஞாபகத்துக்காகப் பதிவு செய்வது வழக்கம். அப்படி ஒரு புது விஷயத்தைப்பற்றிப் பல பக்கங்கள் நிரப்பி மனம் மகிழ்ந்த பின்பு, பேராசிரியர் ஆய்லர் (Euler) ஒரு நூற்றாண்டுக்கு முன்பே கண்டறிந்து பிரசுரித்த விஷயம் அது என்பது தெரிய வந்தது. அப்போது அவருக்குப் பெரிய ஏமாற்றம் உண்டாகி அவருடைய உற்சாகமெல்லாம் சூனியமாயிற்று. குறிப்புக் காகிதங்களை அவர் தம் வீட்டு ஓட்டுக் கூரையின் கீழே செருகிவிட்டார்.

அவர் ஆறாவது படிவத்தில் இருந்தபோது கார் என்பவரின் 'தூய கணிதப் பொது விதிகள்' (ஸினப்ஸிஸ் அவ் ப்யூர் மாத்தமாட்டிக்ஸ்) என்ற புத்தகத் தொகுப்பு அவர் கை வசம் வந்தது. அதிலுள்ள கடினமான புது வகைக் கணக்குகளையெல்லாம், அவர் வேறு நூல்களையோ வாத்தியார்களையோ நாடாமல் போட்டு முடித்தார்; தடங்கல் ஏற்பட்டபோதெல்லாம் அவற்றைத் தாண்ட நூதனமான செய்முறைகளையும் கொள்கைகளையும் சிருஷ்டித்துக்கொண்டார்.

மெட்ரிகுலேஷன் பரீட்சையில் நல்ல மார்க் பெற்றதால் அவருக்கு 'சுப்ரமண்யம் ஸ்காலர்ஷிப்' என்னும் உபகாரச் சம்பள வசதி கிடைத்தது. அதைக் கொண்டு அவர் கும்பகோணம் அரசாங்கக் கல்லூரியில் எப். ஏ., வகுப்பில் சேர்ந்தார். ஆனால் பிற பாடங்களை அசட்டை செய்து கணித ஆராய்ச்சியிலேயே மெய்மறந்து ஈடுபட்டதால் முதல் வருஷப் பரீட்சையில் தவறி, உபகாரச் சம்பளத்தை இழக்க நேர்ந்தது.

தொடர்ந்து மனத்தளர்ச்சியும் செயலின்மையும் அவரை வாட்டின. அவர் வீட்டிலிருந்து வெளியேறி அங்குமிங்கும் அலைந்தார்; தெலுங்கு ஜில்லாக்கள் வரைக்கும் சென்றார். செலவுக்கு என்ன செய்தாரோ தெரியாது; ஆனால் திக்குத் திசை தெரியாத அந்த அஞ்ஞாத வாசத்திலும் அவருடைய பருத்த குறிப்பேடுகளில் புது விஷயங்கள் இடம் பெற்றுக்கொண்டே இருந்தன. அவருடைய தன்னம்பிக்கை பாராட்டத் தக்கது.

பல நாள் கழித்து அவர் ஊர் திரும்பினார். பரீட்சையில் தேற மறுபடியும் முயன்றார்; தோல்வியுற்றார். இதற்கிடையே, 1909-இல் அவருக்கு விவாகமாயிற்று. ஓரிடத்தில் வேரூன்றிச் சம்பாதிப்பது முன்னிலும் அதிக அவசியமாயிற்று. ஸ்ரீ வி. ராமஸ்வாமி ஐயர், பேராசிரியர் பி. வி. சேஷு ஐயர், திவான் பகதூர் ஆர். ராமசந்திர ராவ், ஸ்ரீ எஸ். நாராயண ஐயர் போன்றவர்களின் சிபாரிசால் கடைசியாக அவருக்குச் சென்னைத் துறைமுகப் போர்ட் டிரஸ்ட் ஆபீசில் குமாஸ்தா வேலை கிடைத்தது. சிபாரிசு செய்தவர்கள் கணித அறிஞர்கள்; ராமாநுஜன் மகா மேதாவி என்பதையும் அவருடைய மேதையை அளவெடுக்கத் தமக்குத் திறமை காணாது என்பதையும் உணர்ந்தவர்கள். ஆகவே, காரியாலயத்தில் அவருக்குச் சலுகைகள் கிடைத்-

தன. வயிற்றுப் பிரச்னையை மறந்து தம் லட்சியத்தைப் பின் தொடர்வது அவருக்கு இப்போது சாத்தியம் ஆயிற்று.

திவான் பகதூர் ராமசந்திர ராவ் ராமாநுஜனைப் பாராட்டி எழுதியிருக்கும் கடிதம் படிக்கத் தகுந்தது. அந்தக் காலத்தில் சென்னை எஞ்சினீரிங் காலேஜில் பிரின்சிபாலாக இருந்த மிஸ்டர் கிரிஃபித்ஸ் என்பவரும் ராமநுஜனின் சக்திகளை அறிந்து, அவருடைய ஆற்றலை, போர்ட் டிரஸ்டின் சேர்மனாக இருந்த ஸர் ஃபிரான்ஸிஸ் ஸ்பிரிங் என்பவரிடம் எடுத்துரைத்தார். ஸர் ஃபிரான்ஸிஸும் கணிதத்தில் ஆர்வம் உள்ளவர்.

ராமாநுஜன் தயாரித்த கட்டுரைகளும் குறிப்புக்களும் இந்தியக் கணித சங்கப் பத்திரிகையில் இடம் பெறத் தொடங்கின. இங்கிலாந்தில் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையைச் சேர்ந்த கணிதப் பேராசிரியர் ஜி. எச். ஹார்டி என்பவருக்கும் அதே விஷயங்களில் ஆர்வம் உண்டாகையால், ராமாநுஜனின் நண்பர்கள் அவரை, 'ஹார்டியுடன் கடிதப் போக்கு வரத்து வைத்துக் கொள்வது நல்லது' என்று தூண்டினார்கள். ராமாநுஜன் முதல் கடிதத்தில், பல விஷயங்களுக்கிடையே, ஹார்டியின் முடிவு ஒன்றைக் கண்டித்து அதிலிருந்த பிழையைச் சுட்டிக் காட்டி யிருந்தார். அந்தக் கடிதத்தைப் படித்ததுமே, அதை எழுதியவர் அதிசயமான ஓர் அறிஞர் என்று ஆசிரியருக்குத் தெரிந்துவிட்டது. ராமாநுஜன் நன்றாக மலர்ந்து பிரகாசிப்பதற்கு உடனே கேம்பிரிட்ஜ் வந்து சேர வேண்டும் என்று ஹார்டி எழுதினார். ஆனால் அந்தக் காலத்தில், 45 வருஷங்களுக்கு முன் தென்னாட்டு வைஷ்ணவன் ஒருவன் கடல் கடந்து இங்கிலாந்து செல்வது அவ்வளவு சுலபமா? ஈசல் புற்றுப்போல் ஆட்சேபங்கள் கிளம்பின. பலர் சமாதானங்களும் கூறினார்கள்.

இதற்கிடையில், இந்திய சீதோஷ்ண இலாகாவின் பிரதான அதிகாரி டாக்டர் ஜி. டி. வாகர் என்பவர் ராமாநுஜன் விஷயத்தில் சிரத்தை கொண்டு, கவலையில்லாமல் முழு மனத்துடன் கணித சேவை புரிய வசதியாக அவருக்குச் சென்னைச் சர்வகலாசாலையார் கணிசமான பண உதவி அளிக்க வேண்டும் என்று வற்புறுத்திச் சொன்னார். சர்வகலாசாலையார் அந்த யோசனையை நல்ல மனத்துடன் ஏற்று ராமாநுஜனுக்கு ரூ. 75 வீதம் இரண்டரை வருஷம் ஸ்காலர்ஷிப் அளிக்க முன் வந்தார்கள். இது மகிழ்ச்சிக்குரிய விஷயம்.

கடைசியில் ராமாநுஜன் இங்கிலாந்து செல்லலாம் என்ற அநுமதி கிடைத்தது. சென்னைச் சர்வகலாசாலையார் மறுபடியும் ஒரு சிறந்த தீர்மானத்துக்கு வந்து, ராமாநுஜனுக்கு வருஷத்துக்கு 250 பவுன் வீதம் இரண்டு வருஷம் உதவி அளிப்பதாகவும், துணிமணி, பிரயாணம் முதலியவற்றுக்கான செலவை ஏற்றுக்கொள்வதாகவும் ஒப்புக்கொண்டார்கள். 1914-இல் இவை பெருந்தொகைகள். அதன் பிறகு இந்த ஸ்காலர்ஷிப் 1919 ஏப்ரல் முதல் தேதிவரை நீடித்திருக்கும் என்றும் தீர்மானித்தார்கள். அப்போது ராமானுஜனுக்கு உண்டான முதல் எண்ணம், இனித் தம் குடும்பத்தார் பணமுடை இல்லாமல் சுகமாய் வாழலாம் என்பதே. தம் உபகாரச் சம்பளத்தில் மாதம் ரூ. 60 வீதம் தம் தாயாருக்கு அனுப்பிவிட வேண்டும் என்று அவர் சர்வகலாசாலையாரிடம் ஏற்பாடு செய்து கொண்டார்.

ராமாநுஜன் இதன் பின் கேம்பிரிட்ஜ் போய்ச்சேர்ந்தார். அங்கே ட்ரினிடி கல்லூரியில் அவருக்கு இடம் கிடைத்தது. அந்தக் கல்லூரியும் அவருக்கு வருஷத்துக்கு 60 பவுன் வீதம் சகாயம் அளித்தது.

ராமாநுஜனின் கணிதக் கல்வி சொந்த சம்பாத்தியம். படிப்படியாகக் கல்லாததால் அவருடைய அறிவில் அங்கங்கே இடைவெளிகள் பல இருந்தன. அபார ஞானம் ஒரு புறம், சாதாரண அம்சங்களில் அறியாமை மறுபுறம் - இப்

படி இரண்டும் அவரிடம் கலந்திருந்தன. அவருக்கு முறையாகப் போதித்து அவருடைய குறைகளை இட்டு நிரப்பி, பிற ஆராய்ச்சியாளர்களுடன் தொடர்பு கொள்ளும் சக்தியை உண்டாக்குவது அவசியமாயிற்று. ஆசிரியர்கள் ஹார்டி, லிட்டில்வுட் என்ற இருவரும் இந்தத் தொண்டில் ஈடுபட்டார்கள். ஆனால் இதில் ஒரு விந்தை என்னவென்றால், குருஸ்தானத்தில் இருந்த அந்த இருவரும், ''நாங்கள் ராமாநுஜனுக்குச் சாதாரண விஷயங்களைக் கற்பிக்கிறோம். இதற்குப் பதில் அற்புதமான விஷயங்களை அவரிடமிருந்து கற்கிறோம். அவருடன் தொடர்பு ஏற்பட்டது எங்கள் பாக்கியமே'' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஓர் இடத்தில் ஹார்டி, ''ராமாநுஜனின் அருள் - கற்பனையைக் கெடுக்க எனக்கு இஷ்டமில்லை; அவருடைய சொந்த யோசனைகள் ஆழம் அறிய முடியாதவை; தோல்வி அறியாதவை; அந்தப் பிரவாகம் வடிவதாகவே தெரியவில்லை..'' என்று எழுதியிருக்கிறார்.

ராமாநுஜனின் குறிப்பேடுகளில் முதல்தரமான விஷயங்கள் நிரம்பின; அவை கரை புரண்டோடித் தலைசிறந்த ஐரோப்பிய கணிதப் பத்திரிகைகளில் தோன்றின; அவற்றைப் படித்ததால், பல அறிஞர் புது வழிகளில் ஆராய்வதும், புதுச் சிகரங்களை எட்ட முயல்வதும், புதுக் கடல்களில் முத்துக் குளிப்பதும் சாத்தியமாயின. ராமாநுஜனின் கழுத்தில் புகழ் மாலைகள் விழுந்தவண்ணம் இருந்தன.

ஆனால், என்ன பரிதாபம்! 1917 மே மாதத்தில் அவருடைய உடல் நிலை கெட்டு வருவது தெரிந்தது. க்ஷய ரோகமோ என்ற சந்தேகம் தோன்றிற்று. குளிர் நாடான இங்கிலாந்தை விட்டுச் சென்னைக்கு வந்துவிட்டால் நன்மை ஏற்படலாம். ஆனால் யுத்த காலத்தில் அது எப்படி முடியும்? ஆரோக்கிய விடுதிகளில் தங்கி அவர் சிகிச்சையும் பத்திய உணவும் பெறவேண்டி வந்தது. அந்தக் காலத்திலும் அவர் தம் வேலையை விடாமல் செய்துகொண்டே இருந்தார்.

1918 பிப்ரவரியில் மிகப் பெரிய நல்ல செய்தி ஒன்று வெளிவந்தது: 'ராயல் ஸொஸைட்டி' என்பது இங்கிலாந்தின் பிரதான விஞ்ஞானக் கழகம். அதில் அங்கத்தினராக ஒருவரைத் தேர்ந்தெடுப்பது மிகவும் சிரமமான காரியம். தங்கள் துறையில் முதல் தரமான பணி ஆற்றியவர்களுக்கே அந்தச் சிறப்புக் கிடைக்கும். 30 வயசில், முதல் பிரேரணையின்போதே, சங்கத்தினர் ராமாநுஜனை 'ஃபெலோ அவ் தி ராயல் ஸொஸைட்டி'யாக ஏற்றுக்கொண்டார்கள். சந்தேகத்துக்கு இடம் இல்லாத அவருடைய திறமையே இந்த வெற்றிக்குக் காரணம். ராமாநுஜன இரண்டாவது இந்திய எஃப். ஆர். எஸ். முதல் இந்திய எஃப். ஆர். எஸ்., ஒரு பார்ஸிக்காரர். அவருடைய பெயர் ஏ. சி. வாடியா. 1841 - இல் வாடியா இந்த அங்கத்தினர் பதவியைப் பெற்றார்.

1918 அக்டோபர் மாதத்திலேயே ராமாநுஜன் 'ஃபெல்லோ அவ் தி ட்ரினிட்டி காலேஜ், கேம்ப்ரிட்ஜ்' என்ற கௌரவத்தையும் பெற்றார். ஆசிரியர் ஹார்டியும் அந்தப் பதவியை வகித்தவர்தான். அது யாரும் ஆசைப்படக்கூடிய கௌரவம். இந்தக் கௌரவ பதவி பெற்றவருக்கு வருஷம் ஒன்றுக்கு 250 பவுன் வீதம் ஆறு வருஷம் சம்பளம் கிடைக்கும். ஆனால், குறிப்பிட்ட வேலையோ நிபந்தனையோ அவருக்குக் கிடையாது. கவலையற்று மனச்சாட்சிக்கு விரோதம் இல்லாமல் தம்முடைய துறையில் அவர் உழைக்கவேண்டும்; இஷ்டப்பட்டால் தாம் கண்டறிந்த விஷயங்களைப்பற்றிக் கட்டுரைகள் எழுதலாம்; பிரசங்கங்கள் நிகழ்த்தலாம்.

ராமாநுஜனுக்காக நிரந்தரமான ஏற்பாடு ஏதாவது செய்யும்படி சென்னைச் சர்வகலாசாலையினரை, கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையினர் தூண்டினார்கள். சென்னைச் சர்வகலாசாலையினர் இதன் மேல் அவருடைய ஸ்காலர்ஷிப்

காலத்தை மேலும் ஐந்து வருஷ காலத்துக்கு நீட்டியதோடு, தொழில் சம்பந்தமாக அவர் செய்யும் பிரயாணச் செலவுகளையும் பிற செலவுகளையும் ஏற்றுக்கொண்டார்கள். அவருக்காக விசேஷ ஆசிரியர் பதவி ஒன்றை நிறுவவும் சென்னைச் சர்வகலாசாலையினர் யோசித்தார்கள்.

ஆனால் மனித முயற்சிகளைக் கண்டு தெய்வம் கருணையற்றுச் சிரித்தது! ராமாநுஜன் 1919 ஏப்ரல் மாதம் சென்னை வந்து சேர்ந்தார். நகரிலுள்ள உயர்தர டாக்டர்கள் அவரை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்று முயன்றார்கள். ஆனால் நோயாளி சென்னையில் தங்காமல் கும்பகோணத்துக்கும் வேறு இடங்களுக்கும் போய்விட்டார். நண்பர்கள் மிகவும் சிரமப்பட்டு 1920 ஜனவரி மாதம் அவரை மறுபடியும் சென்னைக்கு அழைத்து வந்தார்கள். சிகிச்சை மீண்டும் தொடங்கியது. ஆயினும் ஏப்ரல் 26 - ஆம் தேதி அவர் தம் பெற்றோர்களையும் மனைவியையும் தவிக்க விட்டு, முப்பத்துமூன்றும் வயசில் பரலோகம் சென்றார். அவருக்கு மக்கட்பேறு இல்லை.

வலியால் துடிக்கும்போதும், அவருடைய கணித சிந்தனை வாள் போலக் கூராக இருந்தது. மரணத்துக்கு நான்கு நாள் முன் வரைக்கும் அவர் படுத்தபடியே தம் வேலையில் ஈடுபட்டிருந்தார், 'மாக் தேட்டா ஃபங்க்ஷன்ஸ்' (Mock Theta Functions) என்னும் புதிய கணனம் அவருடைய பெரிய சிலேட்டுப் பலகையில் உருவாகிக் கொண்டிருக்கும்போதே, காலன் அவரைக் கண்டு சிரித்தான்; அவனை அவர் அசட்டை செய்தார். இறுதியில் காலனே வெற்றி அடைந்தான். ராமாநுஜன் அமரத்துவம் பெற்றார்.

ராமாநுஜனின் குணாதிசயங்களை ஆசிரியர் ஹார்டி வர்ணிக்கும்போது ராமாநுஜனுடைய எளிய சுபாவம், தாழ்மை, நன்றியுணர்ச்சி முதலியவற்றைக் குறிப்பிடுகிறார்; எஃப். ஆர். எஸ்., பட்டத்தால் ராமாநுஜன் கர்வமே கொள்ளவில்லை என்று ஹார்டி புகழ்ந்து எழுதியிருக்கிறார். தம் பெற்றோரிடமும் குலதெய்வத்தினிடமும் ராமாநுஜனுக்குப் பூர்ண பக்தி உண்டு. தம் தேகநிலை வஷயத்தில் டாக்டர்கள் அளவு கடந்து ஆர்ப்பாட்டம் செய்ததாக அவர் கருதினார்.

இங்கிலாந்திலிருந்து புறப்படுவதற்கு முன்பு அவர் சென்னைச் சர்வகலாசாலையாருக்கு எழுதிய கடிதத்தில், ஏழை மாணவர்களிடம் தமக்கு உண்டாகும் அநுதாபத்தை விளக்கி, தமது பணத்திலிருந்து அவர்களுக்கு உதவி புரிய நல்ல திட்டங்கள் வகுக்கவேண்டும் என்று எழுதியிருந்தார். பல வகைகளிலும் அவருக்குக் கிடைக்க இருந்த மொத்த வருமானம் இந்தியப் பொருளாதார நிலையில் மிகப் பெரிய தொகையாகும். அதில் ஒரு பங்கைத் தர்ம மார்க்கத்தில் செலவிட வேண்டும் என்பது அவருடைய கருத்து. தகுதியுள்ள ஏழை மாணவருக்கு உதவி புரிவதை நல்ல தர்மமாக ராமாநுஜன் கருதினார்.

## சந்திரனில் சந்திப்பு

ஐக்கிய அமெரிக்காவின் புகழ்பெற்ற பௌதிக சாஸ்திரியான டாக்டர் எட்வர்டு டெல்லர் என்பவரை, ''சந்திரனில் என்ன காணலாம் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?'' என்று யாரோ கேட்டார்கள்.

''ருஷியர்களை'' என்று அவர் பதில் அளித்தார்!

—லியனார்டு லயான்ஸ்

# சௌகந்திக வனத்தில்

★




பாசுபதம் பெற்ற அர்ஜுனன், தன் தந்தை தேவேந்திரன் அழைக்கவே, தேவலோகம் சென்றான். அங்கே தேவர்களின் முன்னிலையில் அவனை இந்திரன் கவுரவித்தான். தேவராஜனோடு சிங்காசனத்தில் சமமாக அமர்ந்தான். சில காலம் அங்கேயே இன்புற்று வாழ்ந்திருந்தான்.

காம்யக வனத்தில் பாண்டவர் அர்ஜுனனைப்பற்றிய செய்தி தெரியாமல் துயரத்தில் ஆழ்ந்திருந்தார்கள். தேவலோகம் சென்று அர்ஜுனனை நேரில் பார்த்த லோமச முனிவர், இந்திரனின் வேண்டுதலுக்கு இசைந்து தர்மபுத்திரர் முதலியவர்களிடம் அர்ஜுனன் வரலாற்றைக் கூறினார். நாரத முனிவரின் கட்டளையினால் தர்மபுத்திரர் தீர்த்த யாத்திரைக்குப் புறப்பட்டார். அவருடன் லோமசரும் சென்றார். வழியில் முனிவர் தருமருக்குப் பல அரிய விஷயங்களை உபதேசித்தார். பல புண்ணிய ஸ்தலங்களின் பெருமையை எடுத்து விளக்கினார்.

அகஸ்தியரின் பெருமை, விருத்திராசுர வதம், கங்காவதரணம், ருச்யசிருங்க சரிதம் போன்ற பல புண்ணியக் கதைகளை எடுத்து உரைத்தார். பரசுராம சரிதம், சுகன்யை உபாக்கியானம் போன்ற அரிய சரிதங்களை விளக்கிக் கூறினார்.

லோமச முனிவரின் ஆசி பெற்று உபதேசத்தைப் பின்பற்றிப் பாண்டவர் திரௌபதியுடன் கைலாசத்தை நோக்கிப் புறப்பட்டார்கள். அர்ஜுனனை எங்காவது பார்க்கலாம் என்றும் கருதினார்கள். வழி எளிதில் செல்ல முடியாதபடி இருந்தது. ஆகவே, தர்மபுத்திரர் பீமனிடம் திரௌபதியையும், தம்மோடு வரும் அந்தணர்களையும் காத்திருக்கும்படி கூறித் தாமும் நகுலனும் லோமச முனிவரும் மட்டும் கைலாச கிரிக்குச் சென்று வருவதாகச் சொன்னார்.

மகாபாரதத்தில் வரும் உபாக்கியானங்களும் சரி, பாத்திரங்களும் சரி, பல வகை. ஒவ்வொரு கதையிலும் ஒரு பேருண்மையைக் கண்டறியலாம்; ஒவ்வொரு பாத்திர வர்ணனையும் தனித் தனிக் குணசித்திரம் ஆகும்.



அதற்குப் பீமன், ''திரௌபதி அர்ஜுனனைக் காண மிகுந்த ஆவலுடன் இருக்கிறாள். மேலும், தங்களுக்கு அர்ஜுனனைக் காணாததால் இவ்வளவு வருத்தமாக இருக்கிறதே! என்னையும், சகதேவனையும், திரௌபதியையும் காணாவிட்டால் தாங்கள் பின்னும் வருந்துவீர்களே! ராட்சசர்கள் வாழும் இந்த மலையில் நான் தங்களைத் தனியாக விடமாட்டேன். திரௌபதியும் தங்களைப் பிரிந்து வாழமாட்டாள். சகதேவனோ எப்பொழுதும் விடாமல் தங்களைப் பின்பற்றுகிறவன். அதனால் மற்ற எல்லாரும் இங்கே இருக்கட்டும். திரௌபதியும் நகுல சகதேவர்களும் நடக்க முடியாமல் சோர்ந்துவிட்டால் நான் அவர்களைத் தூக்கிக்கொள்கிறேன்'' என்று சொன்னான். அதற்குள் திரௌபதி சிரித்துக்கொண்டு, ''என்னைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். நான் என் தவ வலிமையால் இந்த மலையில் ஏறி அர்ஜுனரைக் காண்பேன்'' என்றாள்.

இவ்வாறு பேசிக்கொண்டே அவர்கள் சுபாகு என்ற அரசன் ஆண்டுவரும் இடத்தை அடைந்தார்கள். சுபாகு அவர்களை வரவேற்று உபசரித்தான். தர்மபுத்திரர் தம்மோடு தொடர்ந்து வருபவர்களை அந்த அரசனிடம் ஒப்புவித்துப் பீமன், திரௌபதி ஆகியவருடன் அர்ஜுனனைப் பார்க்கக்கால் நடையாகப் புறப்பட்டார். வழியில் பல இடங்களில் தேடியும் அர்ஜுனனைக் காணாமல் வருத்தமுற்றார்கள். கந்தமாதன மலையில் அவனைக் காணலாம் என்று தீர்மானித்துச் செல்லலானார்கள். வழியில் மழை முதலியவற்றால் துன்புற்றார்கள். வழி நடந்து அயர்வுற்று நினைவிழந்தாள் திரௌபதி. அவளுக்குத் தக்கபடி சிகிச்சை செய்து நினைவூட்டினார்கள். பீமன் கடோத்கசனை நினைத்தான். அப்பொழுதே அவன் வந்து திரௌபதியைத் தூக்கிக்கொண்டு அவர்க

ளுடன் சென்றான். அவனைச் சார்ந்த அரக்கர்கள் மற்றவர்களைத் தூக்கிக்கொண்டார்கள். அனைவரும் நரநாராயணாசிரமம் சென்று அர்ஜுனனைக் காண எண்ணி, அங்கே ஆறு நாள் தங்கினார்கள்.

ஒரு நாள் பாண்டவர் திரௌபதியுடன் ஓர் அழகிய காட்டில் உலாவிக்கொண்டிருந்தார்கள். அங்கே மலர் சொரியும் மரங்களும், தடாகங்களும், தாமரைகளும், இனிமையாகப் பாடும் புள்ளினங்களும் நிறைந்திருந்தன. அங்கு வீசும் காற்று, பாண்டவருக்கு இன்பமூட்டியது. இடையே வடகிழக்கிலிருந்து ஒரு காற்று வீசியது. அதில் இனியதோர் மணம் மிதந்து வந்தது. அதைத் தொடர்ந்து ஆதித்தனைப் போல் துலங்கும் ஒரு வெண்தாமரை மலரும் வந்தது. பாஞ்சாலி அதன் மணத்தை மோந்தாள். தரையில் விழுந்த அந்தப் பூவை எடுத்தாள். அவள் உள்ளத்தில் ஆனந்த வெள்ளம் பொங்கியது. பீமனிடம், ''நாதா, இந்தப் பூவைப் பார்த்தீர்களா? எவ்வளவு அழகாயிருக்கிறது! என் மனத்துக்கு இனிய இந்தப் பூவைத் தர்மரிடம் கொடுப்பேன். தங்களுக்கு என் மேல் அன்பு இருந்தால் ஏராளமாக இந்தப் பூவைக் கொண்டு வாருங்கள். நான் காம்யக வனத்துக்குத் திரும்பும்பொழுது எடுத்துச் செல்வேன்'' என்றாள்.

பிறகு அந்தப் பூவைத் தர்மரிடம் எடுத்துச் சென்றாள். பீமன் தங்கம் பொதிந்த வில்லையும் பாம்பு போல் சீறும் பாணங்களையும் எடுத்துக் கொண்டான். கோபமுற்ற சிங்கம் போலவும் மதங்கொண்ட யானை போலவும் காற்று வந்த திசையை நோக்கிப் பாஞ்சாலியின் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய விரைந்து சென்றான். கின்னரர், கந்தர்வர் முதலியோர் வாழும் அந்த மலையில் பீமன் அந்தப் பூவைத் தேடிக்கொண்டே முன்னேறினான். தந்தை வாயு அவன் உடலைத் தழுவினார். அதனால் அவனுக்குச் சிரமம் தோன்றவில்லை. மலையில் பீமனுடைய கண்களுக்குத் தெரியாமல் கணவன்மாருடன் இருந்த பெண்மணிகள் அவனது வனப்பைக் கண்டு மெய்மறந்தார்கள்.

பீமன், 'நான் இங்கே தாமதித்தால் அரசர் கவலைப்படுவார். நகுலனையும் சகதேவனையும் விடாமல் அருகிலேயே வைத்துக்கொள்வார். எப்படியாவது விரைவில் பூவை எடுத்துக்கொண்டு திரும்பவேண்டும். எங்கிருக்கிறதோ?' என்று யோசித்தபடி கருடனைப்போல் வேகமாக முன் சென்றான். மதங்கொண்ட யானைபோல் மேன் மேலும் மலையில் ஏறிச் சென்றான். இடையே குறுக்கிட்ட கொடிய விலங்குகளை நசுக்கிக்கொண்டே போனான். சில பயந்து ஓடின. பீமன் தன் பயங்கர ஒலியால் திசைகள் முழங்கும்படி செய்தான்.

கந்தமாதன மலையின் ஒரு சிகரத்தில் அநேக யோஜனை தூரம் அடர்ந்திருக்கும் வாழைத் தோட்டத்தைக் கண்டான். வாழைகள் பனைமரம்போல் உயர்ந்திருந்தன. அந்தக் காட்டின் இடையே நுழைந்து பீமன் பல வாழைகளை முறித்து எறிந்தான். பலவற்றைப் பிடுங்கி எறிந்தான். இந்தச் சத்தம் கேட்டுக் கொடிய விலங்குகள் பல மருண்டு ஓடி ஒளிந்துகொண்டன அப்பொழுது அங்கே நனைந்த இறக்கைகளுடன் ஆயிரக்கணக்கில் பறவைகள் வருவதை அவன் கண்டான். அவற்றைத் தொடர்ந்து சென்று ஓர் அழகிய குளத்தைக் கண்டான். மதங்கொண்ட யானைபோல் அதில் இறங்கிக் கலக்கினான். கரையேறிச் சங்கத்தை ஊதினான். கானகமே அதிர்ந்தது. குகைகளில் எதிர் ஒலி உண்டாயிற்று. இந்த முழக்கம் வாழைத் தோட்டத்தில் உறங்கிக் கிடந்த ஹநுமானின் செவியில் விழுந்தது. அவர் விழித்துக் கொண்டு உடம்பை முறித்துக் கொண்டார். தம் வாலைத் தரையில் அடித்தார். அந்த ஒலியினால் மலையே அதிர்ந்தது. ஒலி வந்த இடத்தைத் தேடிச் சென்றான் பீமன்.

வாழைத் தோட்டத்தின் நடுவே ஒரு பெரிய பாறையில் படுத்திருக்

கும் ஹநுமானைக் கண்டான். ஹநுமானின் ஒளி பொருந்திய உடல் மின்னலைப் போல் கண்ணைப் பறித்தது. கையைத் தலையணையாகக் கொண்டு படுத்திருந்தார் அவர். வால்மட்டும் கொடிபோல் உயர்ந்து நிமிர்ந்திருந்தது. அதன் ஒளியால் வாழைகள் எல்லாம் தங்க மயமாகத் தோன்றின. பெரிய உடம்புடன் வழியை அடைத்துக்கொண்டு படுத்திருந்த அவரைப் பார்க்க இமயத்தின் சிகரம் போல் இருந்தது. பீமன் அவரருகில் சென்று சிங்கநாதம் செய்தான். அதைக் கேட்டு மலையே நடுங்கியது. ஹநுமான் சிறிது கண்ணைத் திறந்து அருகில் இருக்கும் வீரனைப் பார்த்தார். புன்னகை செய்து, ''கவலையற்றுத் தூங்கும் என்னை எதற்காக எழுப்பினாய்? பிராணிகளிடம் தயையுடன் பழக வேண்டும் என்பது உனக்குத் தெரியாதா? நீ விசேஷ அறிவுடைய மனிதனுயிற்றே; உனக்கு ஏன் தர்மம் தெரியவில்லை? பெரியோர்களை நீ சேவித்ததே இல்லைபோல் இருக்கிறது! புத்திக் குறைவால்தான் விலங்குகளைத் துன்புறுத்துகிறாய். நீ யார்? எதற்காக இங்கே வந்திருக்கிறாய்? சொல். மனிதர்கள் இங்கே வரமாட்டார்கள். வரவும் முடியாது. யோகசக்தி கொண்ட சித்தர்தான் இங்கே வரமுடியும். உன்மேல் தயையாலும் அன்பினாலும் சொல்கிறேன். நீ இதற்குமேல் போகாதே! போகவும் முடியாது. உனக்கு நல்வரவு கூறுகிறேன். இங்கே இருக்கும் அமுதம் போன்ற பழங்களைத் தின்றுவிட்டுத் திரும்பிப் போ!'' என்றார்.

இதைக் கேட்டுப் பீமன், ''நீ யார்? எதற்காக வானரத்தின் உருவம் எடுத்துக்கொண்டிருக்கிறாய்! நான் க்ஷத்திரியன். சந்திரனிடமிருந்து உண்டான குருவம்சத்தில் பிறந்தவன். குந்தி தேவியின் வயிற்றில் பிறந்தவன். வாயு தேவனின் மகன். என் பெயர் பீமசேனன்'' என்றான். அப்பொழுது ஹநுமான், ''நான் வானரன். உனக்கு வழி விட மாட்டேன். நீ திரும்பிப் போய்விடு. வீணாக அவமானம் அடையாதே!'' என்றார். உடனே பீமன், ''எனக்கு அவமானம் அல்லது எது வேண்டுமானாலும் வரட்டும். வழி விடாவிட்டால் வீணாகத் துன்பமே அநுபவிக்க நேரும்'' என்றான்.

''எனக்கு வயசாகிவிட்டது; நகர முடியவில்லை. அவசியம் போக வேண்டுமானால் என்னைத் தாண்டிப் போ!'' என்றார் ஹநுமான்.

''எங்கும் நிறைந்த பரமாத்மா மனிதனின் உடல் முழுவதும் நிறைந்திருக்கிறார். ஞானத்தினால் மட்டும் அறியத் தகுந்த அவரை நான் தாண்டுவது அவமதிப்பதாகும். சாஸ்திரங்களால் இந்த உண்மையை உணர்ந்திராவிட்டால் ஹநுமான் சமுத்திரத்தைத் தாண்டியதுபோல் உன்னைத் தாண்டிச் செல்வேன்'' என்றான் பீமன்.

அதற்கு ஹநுமான், ''அந்த ஹநுமான் யார்? உனக்குத் தெரியுமானால் சொல்'' என்றார். அப்பொழுது பீமன், ''ஹநுமான் எனக்குச் சகோதரர்; ராமாயணத்தில் புகழ் பெற்றவர். அவர் ஒரே தாவில் தாண்டினார். நான் அவருக்கு நிகரான பலமுடையவன். எனக்கு வழி விடாவிட்டால் உன்னை யமலோகத்துக்கு அனுப்பிவிடுவேன்'' என்று எச்சரித்தான்.

தமக்குள்ளேயே சிரித்துக்கொண்டு ஹநுமான், ''என்னால் எழுந்திருக்க முடியவில்லை. கிழத்தன்மை என்னை வாட்டுகிறது. தயை செய்து என் வாலைச் சற்று நகர்த்திவிட்டுப் போ'' என்றார்.

பீமன் அலட்சியமாக இடது கையால் அவருடைய வாலைத் தூக்கினான். அதை அசைக்கக்கூட முடியவில்லை. இரண்டு கைகளாலும் தூக்கிப் பார்த்தான். முகத்தைத் திருப்பிப் புருவங்களை நெரித்து முழுப் பலத்துடனும் தூக்கினான்; முடியவில்லை. உடல் தளர்ந்தது. வேர்வை மேலிட்டது. ஒன்றும் செய்ய முடியாமல் வெட்கித் தலை குனிந்து கைகூப்பிக்கொண்டு, ''வானரச் சிரேஷ்டரே! நான் தவறாகப் பேசியதை மன்னிக்க வேண்டும். தாங்கள் யார்? கந்தர்வரா, தேவரா, யட்சரா, சித்தரா? ஏன் இந்த

வடிவத்தில் இருக்கிறீர்கள்?'' என்றான்.

அதற்கு ஹநுமான், ''பாண்டுவின் மகனே! உனக்கு என் வரலாற்றை அறிய ஆவல் அதிகமானால் கூறுகிறேன்'' என்றதும், தாம் வாயு பகவானுக்கு அஞ்சனா தேவியினிடம் பிறந்த ஹநுமான் என்றார்; ராமாயண வரலாற்றையும் முழுவதும் கூறினார். ''ராமர் வைகுண்டம் சென்ற பிறகு இங்கு அப்ஸர மாதர்களும் கந்தர்வர்களும் அவர் கதையைப் பாடி எனக்கு மகிழ்ச்சியூட்டுகிறார்கள். இந்த வழியில் மனிதர் செல்லக் கூடாது. அதனால்தான் உன்னைத் தடுத்தேன். யட்சரோ ராட்சசரோ உன்னை எதிர்க்கக் கூடும்; சபிக்கவும் சபிக்கலாம். நீ தேடிவந்த செளகந்திக ஓடையும் இங்கேதான் இருக்கிறது'' என்றார்.

பீமன் தமையனாரை வணங்கி, ''நான் பாக்கியசாலி. தமையனை வணங்கும் பேறு எனக்குக் கிடைத்ததே! தாங்கள் கடலைக் கடக்கும் பொழுது எடுத்த உருவத்தை எனக்குக் காட்டி அருளவேண்டும்'' என்று வேண்டிக்கொண்டான். முதலில் ஹநுமான் மறுத்தபோதிலும் பீமன் வற்புறுத்தி வேண்டவே, தம் விசுவரூபத்தைக் காட்டினார். பீமன் அதைக் கண்டு வியந்து வணங்கி மீண்டும் சுய உருவை எடுத்துக்கொள்ளும்படி அவரை வேண்டினான். அவர் பழையபடி ஆகி, பீமனைத் தழுவிக் கொண்டார். கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழியப் பீமனிடம், ''நீ போய் வா! நான் இங்கே இருப்பதாக ஒருவரிடமும் சொல்லாதே! குபேரன் வீட்டிலிருந்து அப்ஸர மாதர்கள் வரும் சமயம் ஆகிவிட்டது. நீ ராமாயணத்தை நினைவூட்டியதால் என் மனம் மகிழ்ச்சி அடைகிறது. சகோதரனான உனக்கு என்ன உதவி வேண்டுமானாலும் செய்கிறேன். உன் பகைவரின் பட்டணத்தைக் கல்லால் அடித்து வேண்டுமானாலும் பொடியாக்குவேன். போரில் உன் தம்பியின் கொடியில் இருந்து கொண்டு பகைவரின் பிராணனைப் போக்கும்படி சத்தம் செய்வேன்'' என்று கூறி மறைந்தார். பீமன் ஹநுமானின் விசுவரூபத்தை எண்ணிக்கொண்டு செளகந்திக வனத்தை நோக்கிப் புறப்பட்டான்.


குபேரனுடைய வீட்டருகில் அழகாக அமைந்திருக்கும் அந்த ஓடையைத் தேவரும் கந்தர்வரும் அப்ஸர மாதரும் சூழ்ந்திருந்தார்கள். ராட்சசர்களும் கின்னரர்களும் குபேரன் ஜலக்கிரீடை செய்யும் அந்தச் செளகந்திக வனத்தைக் காத்து வந்தார்கள். காவல் செய்யும் அரக்கர்கள் ஆயிரக் கணக்கில் இருந்தார்கள். அவர்களுக்குக் குரோதவசர் என்று பெயர். பீமன் ஓடையில் இறங்கும்போது அவர்கள் தடுத்து, ''குபேரர் அநுமதி பெற்றுத்தான் இறங்க வேண்டும்'' என்றார்கள். ''பிறரை யாசிப்பது க்ஷத்திரிய தர்மமல்ல. இந்த மலை அருவி அனைவருக்கும், குபேரனுக்கும் பொதுவானதுதான். நான் எதற்காகக் குபேரனிடம் யாசிக்க வேண்டும்!'' என்று கூறிவிட்டு மத யானைபோல் பீமன் ஓடையில் இறங்கினான். அரக்கர்கள் தோமரம், பட்டிசம் முதலிய ஆயுதங்களை எடுத்துக்கொண்டு பீமனிடம் ஓடி வந்தார்கள். பீமன் தன் கதையைச் சுழற்றி அவர்களை அடித்தான். அடி தாங்காமல் அரக்கர்கள் இமாலயத்தின் சிகரத்தில் ஏறிக் குபேரனிடம் ஓடினார்கள். அமுதம் போன்ற அந்த ஓடையின் நீரைப் பருகியதும் பீமன் சிறந்த வாசனையுடன் கூடிய செளகந்திக மலர்களை ஏராளமாகப் பறித்துக்கொண்டான். அரக்கர்கள் குபேரனிடம் பீமனைப்பற்றி முறையிட்டார்கள். குபேரனோ, ''பீமன் பாஞ்சாலிக்காகப் பூக்களைப் பறிக்கிறான். ஆகவே, வேண்டியதைப் பறித்துக்கொள்ளட்டும்'' என்றான். இதற்கிடையில், தர்மபுத்திரர், பீமன் சென்ற இடத்தைத் திரெளபதி மூலம் அறிந்து கடோத்கசனின் உதவியால் அனைவருடனும் செளகந்திக வனத்துக்கு வந்து சேர்ந்தார். அனைவரும் பீமனைக் கண்டு மகிழ்ந்தார்கள்.

லெபனான் கதை:

# பிணங்களின் நடுவே

கலில் கிப்ரான்

தமிழாக்கம்: கா. ஸ்ரீ. ஸ்ரீ.



லெபனான் நாட்டில் பிறந்து அரபிய மொழிக்குப் பெருந் தொண்டாற்றிய தீர்க்கதரிசி வரைந்த தத்துவக் கதை இது. இதன் கருத்து இன்றைக்கும் பொருத்தமாக இருக்கிறது.



நள்ளிரவில் பயங்கர அமைதி குடிகொண்டிருந்தது. அடர்ந்த முகில்களுக்குப் பின்னால் வெண்மதியும் தாரகைகளும் மறைந்திருந்தன. நான் தனியே அச்சத்துடன் நடுநடுங்கியவனாய், செத்துப்போன பிணங்கள் நிறைந்த மலையடிவாரத்தில் திரிந்து கொண்டிருந்தேன்.

பாதி இரவு கடந்திருக்கும். நடு எலும்புள்ள இறக்கைகளுடன் அச்சமூட்டும் பிசாசுகள் என்னைச் சுற்றிக் கும்மாளமிட்டன. பிரம்மாண்டமான பூதமொன்று திடீரென்று என் எதிரில் நின்றது. அதன் மாய சக்தியையும் கோர வடிவத்தையும் கண்டு நான் மயக்கம் போட்டு விழுவேன்போல இருந்தது. இடி முழங்குவதுபோல அது பேசியது: ''ஏன் இப்படி நடுங்கிச் சாகிறாய்? என்னிடம் நீ பயப்படுகிறாய்; ஆனால் இந்த அச்சத்தை உன்னால் மறைக்க முடியாது. சிலந்தி வலையிலுள்ள நூலை விட நீ மெலிந்தவனாக இருக்கிறாயே. அடே, உலகில் உனக்குப் பெயர் என்ன?''

பெரிய பாறையொன்றைக்

கெட்டியாகப் பிடித்துக்கொண்டு இந்தத் திடீர் அதிர்ச்சியிலிருந்து என்னைச் சமாளித்துக்கொண்டேன். நோயாளிபோல ஈனக் குரலில் நான் பதில் சொன்னேன்: ''என் பெயர் - ஆண்டவனடிமை.''

ஒரு கணம், பூதம் ஊமைபோல இருந்தது. அதன் அமைதி எனக்குப் பின்னும் அச்சத்தை உண்டாக்கியது. அதன் வடிவு இப்போது எனக்குப் பழக்கமாகிக்கொண்டு வந்தது. ஆனால் அதன் விந்தையான சிந்தனைகளையும் சொற்களையும் அற்புதக் கொள்கைகளையும் உணர்ச்சிகளையும் அறிய அறிய என் நரம்புகளூடே ஒரு நடுக்கம் பாய்ந்தது.

அப்போது பூதம் கர்ஜித்தது: ''ஆண்டவனுக்கு அடிமைகள் பல பேர் இருக்கிறார்கள். தன் அடிமைகளினால் ஆண்டவன் பெரிதும் தவித்து வருந்துகிறான். இதற்கு மாறாக உன் தகப்பன் உனக்கு 'அசுரத் தலைவன்' என்று ஏன் பெயர் வைக்காமல் போனான்? இந்த உலகிலுள்ள பல சங்கடங்களோடு இன்னும் ஒரு விபத்து அதனால் கூடியிருக்குமே! நீ அச்சத்தினால் நடுங்கி நடுங்கி, உன் பெற்றோர்கள் அளித்த பரிசுக் குவியலோடு ஒட்டிக்கொண்டிருக்கிறாய். உன் தாய் தந்தையர் கொடுத்த ஆஸ்தியே உன் துயரத்துக்குக் காரணம். செத்தவர்களோடு நீ சேராதவரையில், சாவுக்கு அடிமையாகத்தான் கிடக்கப் போகிறாய்.

''உன் செயல்கள் யாவும் சாரமற்றவை; வீணானவை. உன் வாழ்க்கையில் சத்து இல்லை. உண்மையான வாழ்வை நீ கண்டதில்லை; காணப்போவதும் இல்லை. உன்னையே நீ ஏமாற்றிப் பிழைக்கும் இந்த வாழ்க்கை, உயிரோடு மரண அநுபவத்தைப் பெற உன்னை விடப் போவதில்லை. மக்களின் வாழ்வாகிய புயல் உன் முன்னால் நடுங்கி ஆடுவதாக உன் பிரமைக் கண்ணுக்குத் தெரிகிறது. உண்மையில் அந்த மக்கள் பிறந்தபோதே செத்துவிட்டார்கள். ஆம், அவர்களை அடக்கம் செய்பவர்கள் யாரும் இல்லை. இப்போது உனக்கு ஒரு நல்ல தொழில் கிடைத்திருக்கிறது - கல்லறைக்குக் குழி தோண்டுவது! வாழ்ந்துகொண்டிருக்கும் சிலரை இந்த உயிர்ப் பிணங்களிடமிருந்து நீ விடுவிக்க முடியும். இந்தப் பிணங்கள் அந்த மக்களுடைய வீடு வாசல்களையும் வழிகளையும் சூழ்ந்துகொண்டு குவியல் குவியலாகக் கிடக்கின்றன.''

நான் அந்தப் பூதத்தை எதிர்த்துப் பேசினேன்; ''இத்தகைய தொழிலை நான் கைக்கொள்ள முடியாது. என் மனைவி மக்களுக்கு என் ஆதரவும் துணையும் வேண்டும்'' என்றேன்.

பூதம் தன் தோள் வலிமையைக் காண்பித்துக்கொண்டு உயிர்ச் சக்தி துள்ள என்மேல் சாய்ந்து, யானை பிளிறுவதுபோல ஓலமிட்டது. ''ஒவ்வொருவருக்கும் ஒரு மண் வெட்டியைக் கொடுத்துக் கல்லறை தோண்டக் கற்றுக் கொடு. உன் வாழ்வில், ஆழ்ந்த துயரம் தவிர வேறு ஏதுமில்லை. வெள்ளையடித்த சுவர்போன்ற இந்த உடம்புக்குள்ளே அது மறைந்திருக்கிறது. நீ எங்களோடு சேர்ந்துவிடு. பிசாசுகள்தான் உண்மைக்குத் தலைமை தாங்குகின்றன. மெல்ல மெல்லக் கல்லறைக்குக் குழி தோண்டினாலும் அதனால் திட்டமான பயன் உண்டு. புயலில் நடுங்கி ஓட முடியாமல் இருக்கும் செத்த புழுக்களை அது தீர்த்துவிடுகிறது'' என்றது.

பிறகு எதையோ சிந்தித்து, ''உன் சமயம் யாது?'' என்று கேட்டது பூதம்.

நான் துணிச்சலோடு, ''கடவுளிடம் எனக்கு நம்பிக்கை உண்டு. அவருடைய தூதர்களை நான் மதிக்கிறேன். எனக்கு நல்லொழுக்கத்தில் அன்பும், முடிவற்ற பிரபஞ்சத்தில் பரிவும் உண்டு'' என்றேன்.

அந்தப் பூதத்துக்குத்தான் என்ன விந்தையான அறிவு, என்ன உறுதியான நம்பிக்கை! அது பேசியது: ''இந்த வெற்றுச் சொற்களை மனிதன் பேசும்படி வைத்தது அறிவின் செயல் அல்ல; இறந்த காலம் செய்த வேலை அது.

உண்மையில் நீ உன்னை மட்டுந் தான் நம்புகிருய்: உன்னைத் தவிர வேறு யாரையும் மதிப்பதில்லை. உன்னுடைய முடிவற்ற விருப்பங் களிலேதான் உனக்கு நம்பிக்கை. ஆரம்பத்திலிருந்து இன்று வரை யில் மனிதன் தனக்கு ஏற்ற பல பெயர்களைச் சூட்டிக்கொண்டு தன்னையே வழிபட்டு வந்திருக் கிருன்; இப்போது, 'ஆண்டவன்' என்ற சொல்லுக்கு 'நான்' என்று பொருள் செய்துகொள்கிருன்.''

இப்படிப் பேசிய பிரம்மாண்ட மான பூதம் கடகடவென்று நகைத்தது. வெறித்த மலைக் குகை களில் அதன் எதிரொலி கேட்டது. அது ஏளனம் செய்துகொண்டே, ''தம்மையே தாம் வழிபடும் இந்த மனிதர்கள் எவ்வளவு அற்புதமானவர்கள்! உண்மையில் பார்க்கப் போனுல் இவர்கள் மண்ணுங்கட்டியைத் தவிர வேறு ஒன்றுமில்லை'' என்றது.

அது தன் பேச்சைச் சற்று நிறுத்தியது. அது சொன்னதை நான் சிந்தித்துப் பார்த்தேன்; அதன் பொருளை ஆராய்ந்தேன். வாழ்வைவிட விந்தையானதும், சாவைவிடப் பயங்கரமானதும், உண்மையைவிட ஆழ்ந்ததுமான அறிவுக்கு அந்தப் பூதம் தலைமை தாங்குவதை உணர்ந்தேன்; பயந்துகொண்டே சிறிது துணி வுடன், ''உனக்கும் ஏதாவது சமயம் அல்லது கடவுள் உண்டா?'' என்று கேட்டேன்.

அது சொன்ன விடை இது: ''என் பெயர் பைத்தியக்காரக் கடவுள். எப்போதும் நான் பிறந்து கொண்டே இருக்கிறேன். என் வாழ்வுக்கு, என் இருப்புக்கு, நானே கடவுள். நான் அறிவாளி யல்ல; ஏனென்ருல், அறிவு என்பது பலவீனத்துக்கு அடையா ளம். நான் பெருவலிமை வாய்ந்த வன். என் காலசைவினுல் பூமி சுழலுகிறது. நான் நிற்கும்போது, தாரகைகளின் ஊர்வலமும் என் னுேடு நின்றுவிடுகிறது. நான் மக்களைக் கண்டு நகைக்கிறேன். இரவில் அசுரர்களோடு உலாவு கிறேன். பிசாசுகளின் சக்கர வர்த்தியோடு எனக்கு நெருங்கிய நட்பு உண்டு. வாழ்வு, சாவு ஆகியவற்றின் ரகசியங்களில் எனக்கு உரிமை உண்டு.

''காலையில் நான் கதிரவனைப் பழிக்கிறேன்; பகலில் மனிதனைத் திட்டுகிறேன்; மாலையில் இயற் கையை அழிக்கப் பாடுபடுகிறேன்; இரவில் மண்டியிட்டு என்னையே வழிபடுகிறேன். நான் எப்போதும் தூங்குவதில்லை; ஏனெனில், நான் காலத்தின் ஆன்மா; பரந்த கடல்; 'நான்' என்ற தத்துவம். நான் மனிதனுடைய உடலை உண் கிறேன்; அவனுடைய குருதியைப் பருகி என் வேட்கையைத் தணிக் கிறேன்; அவனுடைய இறுதி மூச்சை என் பிராண வாயுவாகப் பயன்படுத்துகிறேன். உன்னை நீயே ஏமாற்றிக்கொண்டாலும் நீ என் உறவினன், தம்பி. என்னைப் போலவேதான் நீயும் இருக்கிருய்! ஒதுங்கிப் போ, ஆஷாடபூதியே! நகர்ந்துகொண்டே மீண்டும் பூமிக் குப் போ. அங்கு உயிர்ப் பிணங் களின் நடுவே உன்னை நீயே வழி பட்டுக்கொள்!''

நான் உணர்ச்சியை இழந்து, திகிலுடன், பாறைகளும் குகை களும் நிரம்பிய அந்த மலையடியி லிருந்து கீழே புரண்டேன். நான் காதால் கேட்டதையும் கண்ணுல் கண்டதையும் என்னுல் நம்ப முடியவில்லை. பூதம் சொன்ன உண்மைகள் என் நெஞ்சைப் பிளந்தன. சோர்ந்து சிந்தனைகளில் ஆழ்ந்தவனுய் இரவு முழுவதும் சமவெளியில் திரிந்தேன்.

நான் ஒரு மண்வெட்டியை எடுத்துக்கொண்டேன். ''கல் லறைக்குரிய குழிகளை ஆழமாகத் தோண்டு. போய், உயிர்ப் பிணங் களில் ஏதாவது ஒன்று கிடைத் தால் அதைக் கொண்டுவந்து, பூமிக் குள் புதை'' என்று எனக்குள் சொல்லிக்கொண்டேன்.

அன்றையிலிருந்து நான் கல்லறைகளை வெட்டிக்கொண் டிருக்கிறேன்; உயிர்ப் பிணங்களை அவற்றுள் புதைக்கிறேன். ஆனுல் நானே தன்னந்தனியே இருக் கிறேன்; உயிர்ப் பிணங்களோ நிறைய இருக்கின்றன; எனக்கு உதவிக்கும் யாரும் இல்லை.

கண்ணனைக் கொண்டாடுவதில் எத்தனையோ விதம்;
அவற்றில் ஒன்று அழகு நிரம்பிய இந்த விழா.


# ஊஞ்சல் உற்சவம்

சுகமய் சர்க்கார்

சிராவண மாசம் (ஆடி-ஆவணி); வானத்தில் மழை மேகங்கள் கூடியிருக்கின்றன. இந்தச் சமயத்தில்தான் வங்காளத்தில் 'ஜூலன் ஜாத்ரா' என்ற ஊஞ்சல் உற்சவம் நடக்கிறது. கேதகி, கதம்பம் இந்த மாதிரி மலர்களின் மணம் எங்கும் கமழும். நீர்நிலைகளில் தாமரை, அல்லி போன்ற மலர்கள் கண்கொள்ளாக் காட்சி அளிக்கும். ஆறுகளில் நீர் நிரம்பி ஓடும். படகோட்டிகள் குரல் எடுத்துப் பாடும் ஓடப்பாட்டில்தான் என்ன உற்சாகம்! இரவில் மேகங்களின் இடுக்கிலிருந்து வளர்பிறைச் சந்திரனின் மங்கலான ஒளி வீசும். இப்படி எங்கும் அழகும் பசுமையும் கொஞ்சும் பருவத்தில் அன்புக் கடவுளாகிய கண்ணனும், உணர்ச்சியின் உருவான ராதையும் மரத்தடியில் ஊஞ்சல் ஆடும் காட்சியைக் கண்டு களிக்கலாம். 'தோலோத்ஸவம்' என்பதே 'ஜூலன்' என்று வங்காளி மொழியில் மாறிவிட்டது. 'இந்தோல ஜாத்ரா' என்றும் இதற்கு ஒரு பெயர் உண்டு. சிராவண மாசத்து வளர் பிறை ஏகாதசியில் 'இந்திராதி தேவர்கள் விதித்தபடி' தொடங்கிச் சிராவண பௌர்ணமி வரையில் நடக்கும் உற்சவம் இது. சாலக்கிராமச் சிலையையோ கிருஷ்ண விக்கிரகத்தையோ அன்றாடம் வழிபடுபவர்கள் இந்த ஊஞ்சல் உற்சவத்தில் ஆர்வத்தோடு ஈடுபடுகிறார்கள். 20 ஆண்டுகளுக்கு முன்னால் வைஷ்ணவ ஜமீன்தார்களின் மாளிகைகளில் இந்த உற்சவம் மிகவும் விமரிசையாக நடக்கும். விஷ்ணு கோயில்களுக்கு எதிரே விசாலமான மண்டபத்தின் நடுவே வெள்ளி ஊஞ்சலில் சிருங்கார ரீதியில் கண்ணனும் ராதையும் காட்சியளிப்பார்கள். சுற்றிலும் பக்தர்கள் நின்றுகொண்டு இனிமையாக ஹரிநாம சங்கீர்த்தனம் செய்யும்போது எல்லாருடைய உள்ளமும் பரவசம் அடையும். 'காஸ்' விளக்கொளியில் மண்டபம் அலங்காரங்களுடன் மிகவும் அழகாக விளங்கும். அந்தி நேரம் பூர்விகல்யாணி ராகத்தில் மேளம் இசைக்கும்போது உலகமே ஏதோ மாயையும் ரகசியமும் குடிகொண்டது போன்ற பிரமை ஏற்படும். ஒவ்வொருவரும் மனக் கண்ணால் பிருந்தாவனத்தில் அன்று கண்ணன் புரிந்த விளையாடல்களைக் கண்டு களிப்பார்கள். அந்த நாள் இனி வராது.

இருந்தாலும், இப்போதும் அங்கங்கே கிராமங்களில் ஊஞ்சல் உற்சவம் நடக்கத்தான் நடக்கிறது; மக்களும் கண்டு களிக்கிறார்கள். அன்றாடம் பூஜையில் ஈடுபடாதவர்கள்கூட இந்த உற்சவத்தன்று மட்டுமாவது மண்ணால் ராதாகிருஷ்ண மூர்த்தியைச் செய்து வழிபடுகிறார்கள். இதோடு பலவகை அலங்காரங்களும் கண்ணைக் கவரும். நாலு புறமும் காகிதப்பூக்களையும் நறுமணமுள்ள மலர்களையும் தோரணங்களாக அலங்கரித்தும், அங்கங்கே செயற்கை ஊற்றுக்களை அமைத்தும் வைத்திருப்பார்கள். நகரங்களில் பெரும்பாலோர் வாசல் பக்க அறையை அலங்கரித்து ஊஞ்சல் விழாக் கொண்டாடுவார்கள். கண்ணன், ராதை இவர்களின் மண் பொம்மை அல்லது படத்தை ஊஞ்சலில் வைத்து ஆட்டுவார்கள். பிருந்தாவனத்தருகில் குடிசைகள், வயல்

காப்பிரைட்: ப்ரபாஸி (வங்காளி: ஜூலை '58), கல்கத்தா.



கள் இருப்பதுபோலவும், மாடுகளை ஆயர்கள் மேய்ப்பது போலவும் சிறிய அளவில் செய்துவைத்திருப்பார்கள்; காடு போன்ற பகுதியில் சின்னச் சின்னச் சிங்கம், புலி, மயில், மான் பொம்மைகளை வைத்திருப்பார்கள். ஒரு பக்கம் பல வர்ண மீன்கள் குளத்தில் இருப்பதுபோல் செய்து வைத்திருப்பார்கள்.

வழிவழியாக இந்த விழாவை நடத்திவரும் குடும்பத்தார் அந்த ஐந்து நாளும் காலட்சேபத்துக்கான ஏற்பாடுகளைச் செய்திருப்பார்கள். கிருஷ்ண லீலைக் காட்சிகள் தீட்டிய வர்ணப் படங்களை எங்கும் மாட்டி வைத்திருப்பார்கள். இவைகளைப் பார்க்க ஏராளமான பேர் வருவார்கள். படிக்காத மக்களும் பல புராண விவரங்களை இவைகளிலிருந்து புரிந்து கொள்வதுதான் இதிலுள்ள விசேஷம். சில இடங்களில் அன்னதானம் நடக்கும். அந்த ஐந்து நாளும் எங்கே போனாலும் சாப்பாட்டுக் கவலை இல்லை; வயிறார உணவு கிடைக்கும். இந்த மாதிரி சமயங்களில் சந்தை கூடுவது வழக்கம். இருந்தாலும், மழைக்காலம் ஆகையால் அதிகமாகப் பண்டங்களைக் கொண்டு வரமாட்டார்கள். கும்பலும் குறைவாகத்தான் இருக்கும். சிறுவர்களும் சிறுமிகளும் பைசாக் கொடுத்து ரங்கராட்டினம், ஊஞ்சல் இவைகளில் ஆடிவிட்டு வருவார்கள். வங்காளத்துக்கு வெளியே வடபகுதியிலும் மத்திய இந்தியாவிலும் இந்தத் தினத்தில் 'ராகி பூர்ணிமா' என்ற விரதத்தைக் கொண்டாடுகிறார்கள். அன்று நண்பர்கள், உறவினர்கள் எல்லாரும் ஒன்று கூடி அன்புப் பிணைப்பைக் குறிக்க மணிக்கட்டில் நூல் கட்டிக்கொள்வார்கள்; ஒரே வயசானவர்கள் ஒருவரை ஒருவர் அணைத்துக்கொள்வார்கள். பெரியவர்கள் சிறியவர்களை ஆசீர்வதிப்பார்கள்; சிறியர்கள் பெரியவர்களை வணங்குவார்கள். 1909-இல் வங்காளப் பிரிவினையின் போது அதை எதிர்த்து அரசியல் கிளர்ச்சி மூண்டது; அப்போது மகாகவி ரவீந்திரநாதர் போன்ற பெருந்தலைவர்கள் வங்காளத்திலும் மணிக்கட்டில் நூல் கட்டிக் கொள்ளும் (ரட்சா பந்தனம் - காப்பு) வழக்கத்தைக் கடைப்பிடித்து, ''இந்தியர் அனைவரும் அந்நிய ஆட்சிக்கு எதிராக ஒன்றுபடுங்கள்'' என்று பிரசாரம் செய்யலானார்கள்.

ஊஞ்சல் விழாவை எப்போது முதல் கொண்டாடி வருகிறார்கள் என்று ஆராயும்போது ரசமான பல விவரங்கள் தெரியும். மகாபாரதத்தில் வரும் கண்ணன் வரலாற்றில் பிருந்தாவன லீலைகளைப்பற்றி ஏதும் இல்லை. விஷ்ணு புராணம், பாகவத புராணம், ஹரிவம்சம், பிரம்ம வைவர்த்த புராணம் இவற்றிலும், உப புராணங்கள் சிலவற்றிலும் இந்த லீலைகளைப்பற்றி விரிவாகக் காணலாம். ஆனால் உபபுராணங்களைத் தவிர மற்றவற்றில், 'இந்தோல - ஜாத்ரா' என்று வழங்கும் ஊஞ்சல் விழாவைப்பற்றி ஒன்றுமே காணவில்லை. வங்காள வைஷ்ணவர்கள் ரகுநந்தன ஸ்மிருதியைப் பின்பற்றுகிறார்கள். ரகுநந்தனர் 400 ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்தவர். அவர்கூட இந்த

'இந்தோல ஜாத்ரா'வைப் பற்றிக் குறிப்பிடவில்லை. இதிலிருந்து இந்த விழா ஏதோ சமீபத்தில் ஏற்பட்டதாக இருக்கும் என்று சிலர் சந்தேகப்படலாம். ஆனால் ஒன்றைப்பற்றிக் குறிப்பிடாவிட்டால், அது இல்லை என்று நிர்ணயம் செய்துவிடுவது தர்க்க ரீதிக்கு ஒவ்வாத வாதமாகும். இப்படி ஒவ்வொன்றுக்கும் ஆதாரம் தேடுவதென்றால் குழப்பமாகவே முடியும். ஆகவே, வெகு காலமாக மக்கள் இதைக் கொண்டாடி வருவதாகவே கொள்ளவேண்டும். ஆனால் மகாபாரதத்தில் கண்ணன் இருந்தாலும் ராதைபற்றிய விவரம் இல்லை. விஷ்ணு புராணம், பாகவத புராணம் இவை ராதையை முக்கியமாகக் கொள்ளவில்லை. பிரம்ம வைவர்த்த புராணத்திலும் சில உப புராணங்களிலும் ராதையின் பெயர் குறிப்பிடக்கூடிய ஓரளவுக்கு வருகிறது. ஆயினும், ஜயதேவருக்குப் பின்னால்தான் வைஷ்ணவ கவிதைகளில் ராதை அதிகமாக இடம் பெறுகிறாள். சைதன்யருக்குப் பின் (வட இந்திய) வைஷ்ணவ தர்மத்தில் அவள் பெயர் நிலைத்துவிட்டது. ஆகவே, ஊஞ்சலில் கண்ணனை வைத்து ஆட்டும் வழக்கம் பழமையானதாக இருந்தாலும் ராதையுடன் சேர்த்து இப்படி ஆட்டுவது பின்னாலேயே ஏற்பட்டிருக்க வேண்டும்.

மொத்தத்தில் ஒன்று தெரிகிறது: தட்சிணாயனம் தொடங்கும்போது இந்த விழாவைக் கொண்டாடுவதால் சூரிய வழிபாட்டுக்கும் இதற்கும் சம்பந்தம் இருப்பதுதான். சூரிய நாராயணனுடைய ஓர் அவதாரந்தானே கண்ணபிரான்!

அதோடு ஐந்து நாட்கள் கொண்டாடுவதற்கு ஒரு காரணம் ஊகிக்கலாம். ஆதிகாலத்துக் கணிப்பு முறைக்கு இந்தக் காலக் கணிப்பு முறை எவ்வளவோ முன்னேறியிருக்கிறது. அந்தக் காலத்தில் நட்சத்திர, கிரக நிலைகளைக் குறிக்கும்போது தட்சிணாயனத் தொடக்கம் எப்போது என்று நிலையாக அறியச் சில நாள் பிடித்திருக்கும். அதனாலேயே இந்த வழக்கம் ஏற்பட்டிருக்கவேண்டும்.

## தலைக்கு மிஞ்சிப்போன காரியம்

சில சமயம் பத்திரிகாசிரியர் என்ன பரிகாரம் செய்தாலும் சரிப்படாத பிழை ஏற்படுவது உண்டு. ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த ஓஹியோ நகரத்துத் தினசரிப் பத்திரிகையில், ஒரு சமயம் இதில் பாதி அதில் பாதியாக இரண்டு செய்திகள் ஒன்று சேர்ந்துவிட்டன.

அந்தப் பத்திரிகைக்கு மிக ஏராளமாய் விளம்பரம் கொடுத்துவந்த பெரிய உள்ளூர் வியாபாரியின் மகளுக்கு நடந்த கல்யாணம் பற்றியது ஒரு செய்தி; ஊருக்குப் புதிதாய் வந்த தீயணைக்கும் எஞ்சினைப் பரீட்சித்துப் பார்த்த வர்ணனை அடங்கியது இன்னொரு செய்தி.

பத்திரிகையில் இந்த இரண்டும் கலந்து ஒன்றாகிவிட்ட கலப்படச் செய்தி இதுதான்:

''மணமகள் தன் தந்தையின் கையைப் பிடித்தபடி மெல்ல மெல்ல நடந்துவந்தாள். எவரும் சொக்கிப் போகும்படி செய்யத்தக்க பட்டு கவுனும் ஜிலு ஜிலு என்று பிரகாசித்த ஜரிகைத் தாவணியும் அணிந்து வந்தாள்.

''உறுமலோடு வந்த அந்த அரக்கி, வெகு அநாயாசமாக டன் டன்னாய் ஆகாயத்தில் எண்பது அடி உயரத்துக்குத் தண்ணீரை வீசி வீசி உமிழ்ந்தாள். துளியும் அவள் தளர்ச்சியுற்றதாய்த் தென்படவேயில்லை.''

பத்திரிகாசிரியர் தமது பதவியை ராஜீநாமாச் செய்யக்கூடத் தாமதிக்கவில்லை. தொப்பியை எடுத்தார்; தலையிலே மாட்டிக்கொண்டார். கிளம்பிவிட்டார். எங்கே போனாரோ, திரும்பியே வரவில்லை. —'ந்யூ யார்க் ஹெரால்டு ட்ரிப்யூன்'

நிலத்திலே உள்ளவை பயிரிலே ஏறி, மனிதனுக்கு உதவுகின்றன!

# உடலுக்கு வேண்டிய உப்புக்கள்

கே. ஏ.

இயற்கைத் தாய் நம் வாழ்க்கைக்கு அவசியமான பல உபபுச் சத்துக்களை நிலத்தின் அடிப்பகுதியில் சேமித்து வைத்திருக்கிருள். பல பயிர் பச்சைகளும் தமக்கு வேண்டிய போஷணையை நிலத்தில் இருக்கும் இந்த உப்புக்களிலிருந்தே பெறுகின்றன. மனிதர்கள், தமக்கு வேண்டிய சக்தியைத் தானியங்கள், பருப்பு, காய்கறிகள், பழங்கள் இவற்றின்மூலம் பெறுகிருர்கள். இந்த உப்புக்கள் மனிதருடைய ரத்தத்தோடு கலந்து வேறு வேறு இந்திரியங்களை வளர்க்க உதவுகின்றன.

இந்த உப்புக்களுக்குள் கால்ஷியம் (சுண்ணும்புச் சத்து) மிகச் சிறந்தது. சக்தி நிறைந்த இந்த உப்பு மனிதனுக்குச் சுத்தமான ரத்தத்தை உதவி, உடலுக்குத் திடத்தைக் கொடுக்கிறது. பல் வலுவாய் இருப்பதற்கு இது முக்கியமானது. பால், பாலேடு, டர்னிப்ஸ், முட்டை, காய்ந்த அவரைப் பருப்பு, உளுந்து, காபேஜ், புளிச்சக் கீரை (கோங்கூர), காய்ந்த அத்திப்பழம், கொத்தவரங்காய், வெந்தயக் கீரை, காலிஃப்ளவர், லெட்யூஸ் கீரை, முள்ளங்கி, எலுமிச்சம் பழம், ஆரஞ்சு, திராட்சை, எள் இவற்றில் கால்ஷியம் அதிக அளவில் இருக்கிறது.

ஸோடியம் ஜீரண சக்தியை அதிகரிக்க உதவுகிறது. இதிலிருந்து உடலுக்கு வேண்டிய இரும்புச் சத்துக் கிடைக்கிறது. இதை உட்கொள்வதால் செவிடு, கண் பார்வைக் குறைவு போன்ற குறைகள் எல்லாம் சரியாகிவிடுகின்றன. காய்ந்த பழங்கள், பால், பாலேடு, முட்டை, ஆப்பிள், புளிச்சக் கீரை, காபேஜ், தருப்பூசி, பீட்ரூட், தக்காளி, பேரிக்காய் முதலியவற்றில் ஸோடியம் ஏராளமாக அடங்கி இருக்கிறது.

ஃபாஸ்ஃபரஸ் மூளைக்கும் நரம்புகளுக்கும் வேண்டிய போஷணையைக் கொடுத்து, எலும்பு, பல், மயிர் இவையெல்லாம் வளரக் காரணமாகிறது. அதிகமாக மூளைக்கு வேலை கொடுப்பவர்கள், ஃபாஸ்ஃபரஸைக் கட்டாயம் சாப்பிட வேண்டும். இந்தச் சத்து உடம்பிலிருந்து குறையத் தொடங்கியவுடன் அவர்களுக்கு ஓய்ச்சலும் சோம்பலும் உண்டாகும்; வளர்ச்சி குன்றும். வாதாம் பருப்பு, ஆப்பிள், புளிச்சக் கீரை, மீன் இவற்றின்மூலம் ஃபாஸ்ஃபரஸ் அதிகமாய்க் கிடைக்கும்.

கந்தகம் என்பது முக்கியமான மற்ருேர் உப்புச் சத்து. இது உடலுக்குத் தானே வளம் தருவதோடு, மற்ற உப்புக்களை ஜீரணம் செய்துகொள்ளும் சக்தியையும் குடலுக்கு உண்டாக்குகிறது. நம் உணவில் கந்தகத்தின் அளவு குறைந்துவிட்டால், உடலில் அசுத்தப் பொருள்கள் அதிகரிக்கும்; கல்லீரல் ஊக்கமாக வேலை செய்யாது. பாலேடு, முட்டை, மீன், மாமிசம், ஈஸ்ட், காபேஜ், சாக்கலெட், கர்ஜூரக்காய், புளிச்சக் கீரை, பால், உருளைக்கிழங்கு, வெங்காயம் இவைகளில் கந்தகச் சத்து நிறைந்திருக்கிறது.

உடலின் எடையைச் சமமாகப் பாதுகாத்து, காயம்பட்ட சமயங்களில் ரணத்தைச் சீக்கிரம் ஆற்றுவது பொட்டாசியம் என்னும் உப்பு. தினசரி உணவில் இதைச் சேர்த்துக்கொள்வதால், மலச் சிக்கல் நீங்கி, உடம்பு வலி போகும். இந்தச் சத்துக் குறைந்தால், மலச் சிக்கல் வந்துவிடும்; உடம்பில் சிரங்கும் சொறியும் தோன்றும்; கல்லீரலின் வேலை மந்தமாகும்;

காப்பிரைட்: கர்மவீர் (கன்னடம்: 20-7-'58), ஹுப்ளி.

உடம்பில் பட்ட காயம் ஆறுது. தக்காளி, ஆலிவ் எண்ணெய், காபேஜ், ஆரஞ்சு, எலுமிச்சம் பழம், திராட்சை, உருளைக்கிழங்கு, அன்னுஸ், வெள்ளரிக்காய் இவற்றில் எல்லாம் பொட்டாஸியம் அதிக அளவில் இருக்கிறது.

நரம்பு மண்டலங்களை ஒழுங்காக வேலை செய்யும்படி ஊக்கி அவைகளுக்கு அவசியமான சக்தியைக் கொடுப்பது மக்னீஷியம். இது மனிதர்கள் தூக்கத்தின் சுகத்தை அநுபவிக்க உதவுகிறது. உற்சாகத்தைக் கொடுக்கிறது. இது உடம்பிலிருந்து குறைந்துவிட்டால், மனசுக்கு அமைதி குறைந்து பித்தம் அதிகரிக்கும். கோதுமைத் தவிடு, கொக்கோ, தக்காளி, லெட்யூஸ், கோங்கூர, பேரீச்சம் பழம், அத்திப்பழம், எலுமிச்சம் பழம், ஆரஞ்சு, பீட்ரூட், காபேஜ், ஆப்பிள் இவற்றில் மக்னீஷியச் சத்து அதிகமாக இருக்கிறது.

மனித உடலின் சுரப்பிகளை எல்லாம் ஆட்டி வைப்பது அயோடின். உடம்பு கக்குகிற விஷப் பொருள்களால் மூளைக்கு அபாயம் நேராமல் காவல் செய்வது இதுதான். இந்தச் சத்து, உடலில் போதிய அளவுக்கு இல்லா விட்டால் சுரப்பிகளெல்லாம் வேலை நிறுத்தம் செய்துவிடும். நோய்கள் தலைதூக்கும். தக்காளி, காரட், கிட்னி, அவரைப் பருப்பு, வெள்ளைக் காபேஜ், வாழைப்பழம், லெட்யூஸ், உருளைக்கிழங்கு, வெள்ளுள்ளி இவைகளில் அயோடின் சத்து நிறைந்திருக்கிறது.

குளோரின் என்பது உடலின் அசைவை அதிகப்படுத்துவது. கீல்கள், தசைகள் இவைகளுக்குக் குளோரின்தான் புதிய சக்தியை உண்டாக்குகிறது. உடலில் கொழுப்பு வளர்வதை இது தடுக்கிறது. பல்நோய் (பயோரியா) வராமல் தடுக்கிறது. உடலின் அசுத்தங்களை வெளியேற்றக் காரணமாக இருக்கும் குளோரினை, 'உடலின் சலவைக்காரன்' என்று சொல்வது உண்டு. பால், பாலேடு, தக்காளி, புளிச்சக் கீரை, முட்டை, வாழைப் பழம், பேரீச்சம் பழம், கோதுமை, காபேஜ், பேரிக்காய் இவற்றில் குளோரின் அதிக அளவில் இருக்கிறது.

ஃப்ளோரின் என்பது ஒரு வாயு. இது தொத்து நோய்களிலிருந்து உடலைக் காக்கிறது. எலும்புகளுக்கு உறுதி கொடுக்கிறது. இது இளமையை நீடித்து நிற்கச் செய்கிறது. உணவில் ஃப்ளோரின் சத்துக் குறைந்தால் கண் பார்வை மங்கும். பல் சொத்தை ஆகும். தொத்து நோய்கள் வெகு சீக்கிரத்தில் ஒட்டிக்கொள்ளும். இது தானியங்கள் எல்லாவற்றிலும் இருக்கிறது. பாலேடு, பீட்ரூட், வெள்ளுள்ளி, காபேஜ், காலிஃப்ளவர், புளிச்சக் கீரை, முட்டை இவற்றிலெல்லாம் இந்தச் சத்து நிறைய இருக்கிறது.

நரம்பு மண்டலங்களுக்குப் பலத்தைக் கொடுப்பது மாங்கனீஸ். இந்தச் சத்து, உணவில் குறைந்துவிட்டால் பைத்தியம் என்னும் நோய் உண்டாகும். வாதுமைப் பருப்பு, முட்டை, எலுமிச்சம் பழம், ஆரஞ்சு இவற்றிலிருந்து மாங்கனீஸ் சத்துக் கிடைக்கிறது.

## பள்ளிக்கூடத்தில் முதல் நாள்

பள்ளிக்கூடத்துக்கு முதல் நாள் சென்று திரும்பி வந்த சிறுவன் மிகவும் மனம் சோர்ந்தவனாக, "நான் நாளைக்குப் பள்ளிக்கூடம் போகப் போவதில்லை" என்றான்.

"ஏனோ?" என்று கேட்டாள் தாய்.

"எனக்கோ படிக்கவும் முடியவில்லை; எழுதவும் முடியவில்லை; பேசவும் வாத்தியார் விடமாட்டேனென்கிறார்" என்று சிறுவன் பதில் அளித்தான்.

—'வுமன்ஸ் லைஃப்'

விளக்குக்குப் பதில் கட்டையையே
எரிக்கும் மலைஜாதியார்!

# ஆனைமலை ஆதிவாசிகள்


**பிலோ இருதயநாத்**

பொள்ளாச்சியிலிருந்து பஸ் மார்க்கமாகப் போனால், முடீஸ் செல்லும் வழியில், 'நீர் வீழ்ச்சி' என்ற இடம் வரும். அங்கே சுற்றுப் பக்க மலைகளிலும் மலையடிவாரத்திலும் கீழ்ப் பூஞ்சியிலும் ஆனைமலை ஆதிவாசிகள் வாழ்கிறார்கள்.

யானைகள் சூழ்ந்து வாழும் காட்டில் இவர்களும் வாழ்வதைக் கண்டால் நம் உடல் நடுங்குகிறது. பல ஆண்டுகளுக்கு முன் இவர்கள் மலையாளப் பகுதியிலிருந்து வந்தார்களாம். இன்று இந்த ஆனைமலைப் பகுதியில் சுமார் நூறு மைல் தூரம் பரவி வாழ்கிறார்கள்.


இவர்களுடைய குடிசைகள் பதினைந்து அடி உயரம் இருக்கும். முழுவதும் மூங்கில் பத்தைகளைக் கொண்டும் மூங்கில் பாய்களைக் கொண்டும் சுவர்களைப்போல் கட்டி, அதன்மேல் இலைகளையும் செம்மண்ணையும் கலந்து பூசிக் குடிசைகளை அமைப்பார்கள். புலையர் குடி இருக்கும் இடத்துக்கும் குடிசைக்கும் பாடி என்றே பெயர். இவர்களுடைய குடிசைகளுக்கு எதிரில் ஒரு பந்தல் போட்டிருக்கிறது. அதில் சுமார் இருபது முப்பது பேர் படுத்து உறங்கலாம். அந்தப் பந்தல் நான்கு பக்கமும் அடைப்பு இல்லாமல் இருக்கும். அந்தப் பக்கங்களில் இரவில் பெரிய பெரிய காட்டு மரங்கள் எரிந்து கொண்டே இருக்கும். காட்டு விலங்குகள் வராமல் தடுக்கும் ஏற்பாடு இது. முற்றின மூங்கிலைப் பிளந்து, பாய், மணை, குடிசைச் சுவர் இப்படிப் பலவிதமாய் உபயோகிக்கிறார்கள்.

புலையர்கள் கறுத்த மேனியும், பரட்டைத் தலையும் மாநிறமும் ஐந்தடி உயரமுமாக இருக்கிறார்கள். மயிரைச் சிலர் அழகாகச் சுருட்டி விடுகிறார்கள். சாதாரண நாளிலும் சரி, விசேஷ நாளிலும் சரி, வேஷ்டியும் தலைப்பாகையும் அணிந்திருக்கிறார்கள். சிலர் கையில் பித்தளைக் காப்பும் காலில் இரும்பு வளையமும் அணிந்திருக்கிறார்கள். அரிவாளும் முனையில் கட்டை அமைத்த கடப்பாரையுந்தான் இவர்களுடைய முக்கிய ஆயுதம். எங்கே சென்றாலும் இந்த இரண்டையும் இவர்கள் எடுத்துச் செல்லுவார்கள்.



முடைந்த பாயுடன் ஒரு புலையன்

காப்பிரைட்: சுதேசமித்திரன் (தமிழ்), சென்னை-2.



மூங்கில் படியும் பாண்டங்களும்

புலைய மங்கையைப் 'புலைச்சி' என்று குறிக்கிறார்கள். புலைச்சிகள் சாதாரணமாக நம் பெண்களைப் போல் உயரமும், குறைந்த விலையில் நூல் புடைவையும் அணிகிறார்கள். கையில் பித்தளைக் காப்புகள் இரண்டு மூன்றும், காலில் பித்தளைக் காப்பும் அணிந்திருக்கிறார்கள். சிலர் கழுத்தில் வெள்ளிச் சங்கிலியோ வெள்ளிக் காசு மாலையோ அணிந்திருக்கிறார்கள். காசு மாலை பழைய வெள்ளி நாலணாவைத் துவாரம் செய்து வரிசையாகத் கோத்தது. காதில் ஓலைச்சுருள் அணிகிறார்கள். இந்த ஓலைச் சுருளைத் 'தோடு' என்று கூறுகிறார்கள். இவர்களுடைய உடை சற்று அழுக்காக இருக்கிறது. கோழி வளர்ப்பு, வீட்டு வேலை செய்வது, இறைச்சிகளை வற்றல் போடுவது, தோட்டத்தில் வாழையும் கத்திரிக்காயும் பயிர் செய்வது போன்ற வீட்டுப் பணிகளைப் பெண்கள் செய்கிறார்கள்.

ஆண்கள் தலைமயிரைத் தங்கள் தலைப்பாகைக்குள் சுருட்டிக் கட்டிக்கொள்ளுகிறார்கள். பெண்கள் 'கோடாலி முடிச்சு'ப் போடுகிறார்கள். சிலர் மலையாள மங்கையரைப் போல் நீண்ட கொண்டையும் போடுவதுண்டு பிரியப்பட்ட பூக்களையும் கொண்டையில் வைப்பதுண்டு. முன் காலத்தில் இவர்களுடைய கூந்தல் பாதம் வரையில் வளர்ந்திருக்குமாம். இன்றும் சிலருக்குக் கூந்தல் நீண்டு வளர்ந்திருக்கிறது.

குழந்தை பிறந்ததும் உடனே அதைக் கந்தைத் துணியில் போடுவதுண்டு. பிறந்த ஏழாம் நாள், குழந்தைக்கு நாமகரணம் செய்கிறார்கள். வேண்டியவர்களுக்கு மட்டுமே அன்று இறைச்சி உணவு சமைப்பார்கள். குழந்தை பிறந்து அடுத்த பௌர்ணமியில் ஏணை போடுவதுண்டு. ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரே பழகக வழக்கந்தான. பித்தளை நகைகளைத் தான் அதிகமாகக் குழந்தைகளுக்குப் பூட்டுகிறார்கள். தங்களுக்குக் குழந்தைகள் இல்லை என்றால் தம்பி, அக்காள், மாமன் போன்றவரின் குழந்தைகளைத் தத்து எடுத்து வளர்ப்பதும் உண்டு. பெண்கள் ருதுவானால் தங்கள் குடிசையை விட்டுச் சிறிது தூரத்தில் தனிக் குடிசை கட்டி, அதில் ஏழு நாள் இருந்து எட்டாம் நாள் குளிக்கச் செய்து, அவள் இருந்த குடிசையையும் தீக்கிரை ஆக்கிவிடுகிறார்கள்.

விசேஷ நாளிலும், திருமண நாளிலும், பிணத்தின் முன்னிலையிலும் ஆண்களும் பெண்களும் சேர்ந்து, சில ஆண்கள் புல்லாங்குழல் வாசிக்க, நடனம் ஆடுவது உண்டு. வாசிக்கும் வாத்தியங்களெல்லாம் மூங்கிலில் செய்தவை. வெட்டுக் கத்தி, அரிவாள், கோல் வெடி, மரத்தடிப் பிடிபோட்ட கடப்பாரை இவைதான் இவர்களுடைய முக்கியமான ஆயுதங்கள்.

இரவில் இவர்கள் விளக்கேற்றுவதில்லை. அதற்குப் பதிலாக நெருப்புக் கட்டைகளைத்தான் உபயோகிக்கிறார்கள், நெருப்பில் இரண்டு மூன்று அம்புகளின் முனைகள் காய்ந்துகொண்டே இருக்கும். கொடிய மிருகங்கள் வந்தால் அந்த அம்புகளை உபயோகிக்கிறார்கள்.


பெண்கள் ருதுவான பின்னும் முன்னும் அவரவருடைய வசதிப்படி மணம் செய்விக்கிறார்கள். பெண்ணுக்குப் பத்து வயசாகும் போதே சில பெற்றோர் மணம் செய்து கொடுப்பதும் உண்டு. பெண்ணுக்கு ஆணின் சிநேகம் மணத்துக்கு முன் இருக்கக் கூடாது. மணத்துக்கு முன் பந்தற்

காலும் உண்டு, பந்தலும் உண்டு. இவர்களில் ஆண்கள் இரண்டு மூன்று மணங்கள் புரியலாம். மணம் வீட்டில் பிறைக்கு முன்னால் நடைபெறும். அன்று எந்த விதமான இறைச்சியையும் சமைக்கக் கூடாது.

பால்ய விவாகம் பத்து வயசில் நடைபெறும். தம்பதிகள் பெரியவர்களான பின் ஒருவரை ஒருவர் விரும்பாவிட்டால், பஞ்சாயத்து மூலமும் பெரியவர்களின் முன்னிலையிலும் விடுதலை பெறுவார்கள். இப்படி விடுதலை பெற்றபின் மறுபடியும் மணக்கும் மாப்பிள்ளை, முதல் மணச் செலவைக் கொடுக்கவேண்டும்.

மணத்துக்கு ஆண்கள் கோடி வேஷ்டியும் தலைப்பாகையும், பெண்கள் கோடிப் புடைவையும் அணிவார்கள். மணத்தன்று காலையில் பையனை வீட்டின் முன் பந்தலில் உட்கார வைப்பார்கள். பையன் பந்தலிலிருந்து பெண் வீட்டுக்கு வந்ததும், வாசலில் நிற்க வைத்து, மஞ்சள் நீரில் காட்டுக் கிழங்கைப் போட்டு, பையனுக்கு ஆரத்தி சுற்றுகிறார்கள். பிறகு பையன் ரூபாய் பன்னிரண்டும் 'மாமிக் கூரை' என்று ஒரு புடைவையும் பெண்ணுக்கு ஒரு புடைவையும் மூங்கில் தட்டில் வைத்து மாமியாருக்குக் கொடுத்து வணங்க வேண்டும். மணத்தின் போது தாலி கட்டுவதில்லை. அதற்குப் பதில் கறுப்புக் கயிற்றைக் கழுத்தில் கட்டுகிறார்கள். காதல் மணமும் விதவை மணமும் இவர்களுக்குள் உண்டு.

தம்பதிகளுக்குள் சண்டை, பெண்ணின் துன்மார்க்கம் இவை காரணமாக விவாக விலக்கு ஏற்படும். ஊரிலுள்ள பூசாரியும் தலைவரும் சேர்ந்து, தம்பதிகள் இருவரையும் வைத்துக்கொண்டு குற்ற விசாரணை நடத்துவார்கள். குற்றத்துக்கு அபராதம் விதித்துச் சமாதானம் செய்து வைப்பார்கள். அது பலிக்காவிட்டால் விலக்கி விடுவார்கள்.



புலையர் குடும்பம்

இறந்தவர்களைப் புதைப்பார்கள். கணவன் இறந்தால் மனைவி மயானத்துக்குப் போகக்கூடாது. மூத்த பையனின் தலையில் மஞ்சள் பானையை இறந்தவனின் மனைவி வைப்பாள். பையன் அதை இறந்தவனின் காலடியில் உடைப்பான். மனைவி தன் கறுப்புக் கயிற்றை அறுத்து, கணவனின் காலில் கட்டி, காலைப் பிடித்து வணங்குவாள். பிறகு அவள் யாரையும் பார்க்காமல் தன் குடிசைக்குள் செல்ல வேண்டும்.

மனைவி இறந்தால் அவளுடைய மயிரை எடுத்து அரிவாளில் முடிபோட்டு அறுத்து அவள்மீதே அந்த மயிரை மறுபடியும் போட்டுவிட்டுத் தன் குடிசைக்குள் கணவன் போகவேண்டும். மனைவியின் பிணம் போகும் வரைக்கும் வெளியில் அவன் வரக்கூடாது; மயானத்துக்கும் போகக் கூடாது.

காட்டுக் கிழங்குகள்தான் இவர்களுக்கு முக்கிய உணவானாலும், எல்லா உணவும் எல்லா மிருகங்களின் இறைச்சியும் சாப்பிடுவார்கள். ஆனால் திங்கட்கிழமையும், சனிக்கிழமையும், சூரிய கிரகணத்திலும் இறைச்சி சாப்பிட மாட்டார்கள்.

காட்டிலேயே இருக்கும் புலையர்கள், அரசாங்கத்துக்காக யானை பிடிக்கவும் அதைப் பழக்கவும் உதவி செய்கிறார்கள். சிலர் பக்கத்தில் இருக்கும் வயல்களில் கூலிக்கும் வேலை செய்கிறார்கள். சிலர்

தங்களுக்குக் கிடைத்த நிலத்தில் வேளாண்மையும் செய்வதுண்டு.

சிலர் வலை வைத்துக் காட்டுக் கோழிகளையும், பறவைகளையும் பிடிப்பதுண்டு. புலையர்கள் நாளைக்கு வேண்டுமே என்று எதையும் சேர்த்து வைப்பதில்லை. மற்ற ஆதிவாசிகளைப் போலத்தான் இவர்களும் தேன் எடுக்கிறார்கள். காட்டில் கோடரியால் வேலை செய்வதிலும், சுமைகளை மலை உச்சிக்குத் தூக்கிச் செல்வதிலும் சமர்த்தர்கள். இப்போது சில புலையர்கள் கொஞ்சங் கொஞ்சமாக வீடுகளிலும், வயல்களிலும் தேயிலைத் தோட்டங்களிலும், வேலை செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். தண்ணீரை ஓடையில் தேக்கி அதில் மயக்க வேர்களையும் இலைகளையும் கரைத்து, மீன்களுக்கு மயக்கம் வந்து மிதந்ததும் அவற்றைப் பிடிப்பார்கள்.

புலையர்களுடைய தலைவனை மூப்பன் என்றும், எஜமானன் என்றும் குறிக்கிறார்கள்.

ஒரு பாடிக்கு ஒரு தலைவனும், ஒரு பூசாரியும் இருக்கிறார்கள். குற்றம் செய்தவர்களுக்குப் பஞ்சாயத்தார் அபராதம் போடுவார்கள். அதைத் தெய்வத்துக்கென்று செலவு செய்கிறார்கள்.

மாரியையும், மாகாளியையும், காட்டுத் தெய்வங்களையும் வழிபடுகிறார்கள். வீரபத்திரன், பத்திரகாளி என்ற இரண்டு தெய்வங்களையும், மரத்தடியில் திண்ணை கட்டி வைத்து வணங்குகிறார்கள். தேங்காய், பழம், கோழி போன்றவற்றைப் படைப்பார்கள். பெண்களும் கோயிலுக்குள் போகலாம்.

இவர்கள் கொச்சைத் தமிழையே சற்று வேகமாகப் பேசுகிறார்கள். இன்று இவர்கள் எழுதுவதும் வாசிப்பதும் தமிழ்தான்.

## எது அதிக மோசம்?

ஒருபோதும் பேசாத முட்டாளோடு இருப்பதா? ஒருபோதும் கேளாத அறிஞனோடு இருப்பதா? - இந்த இரண்டில் எது அதிக எரிச்சலை உண்டாக்கும் என்பதைச் சொல்லுவது சாத்தியமில்லை.

—ஸிட்னீ ஹாரிஸ்

## ஓட்டல் இன்பம்

ஓட்டலுக்குள் ஓர் ஆள் நுழைந்து ஒரு மேஜையடியில் உட்கார்ந்தார். தாம் கையில் கொண்டு வந்திருந்த பொட்டலத்தைப் பிரித்து அதில் இருந்த ரொட்டித் துண்டுகளைத் தமக்கு முன்னே அடுக்கி வைத்துக்கொண்டார். ஓட்டல் டம்ளர் ஒன்றை எடுத்துக் குழாயில் தண்ணீர் பிடித்துப் பக்கத்திலே வைத்துக்கொண்டார். ஆற அமர உண்ணலானார்.

இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த ஓட்டல் மானேஜர் ஓடி வந்து, "என்ன இது?" என்று ஆத்திரத்தோடு கேட்டார்.

"நீர் யார்?" என்று கேட்டார் ஆள்.

"நானா? நான் இந்த ஓட்டலின் மானேஜர்" என்று அவருக்குப் பதில் கிடைத்தது.

"சரிதான். உம்மைத்தான் இத்தனை நாழிகையும் நான் பார்க்கவேண்டும் என்றிருந்தேன். ஆமாம்; ஏன் இந்த ரேடியோ பாடவில்லை?" என்றார் ஆள் வெகு நிதானமாக.

—ஜான் கார்ப்பெண்டர், 'ஈவினிங் ந்யூஸ்,' லண்டன்.

கிழக்கிந்தியக் கம்பெனியின் காலத்தில் கோட்டை கொத்தளத்தோடு விளங்கிய ஊர் இன்று சாதாரண ஊராக இருக்கிறது.

# அஞ்சு தென்னை

என். ஆர். ப்ரபாகரன்

திருவாங்கூர் கடற்கரையில் இருக்கும் அஞ்சு தெங்ஙு (ஐந்து தென்னை) என்ற கிராமம் கி. பி. பதினேழாவது நூற்றாண்டில் ஆங்கிலேயரின் தனிப்பட்ட கவனத்துக்கு இலக்காக இருந்தது. இது திருவனந்தபுரத்திலிருந்து பதினெட்டு மைல் தூரத்தில் இருக்கிறது. அந்தக் காலத்தில் இந்தக் கிராமம் ஆற்றங்கல் என்ற ஊர் ராணியின் ஆளுகையில் இருந்தது. போர்ச்சுகீசியரும் டச்சுக்காரரும் பல தடவை இங்கே வந்து மிளகு வியாபாரம் செய்தார்கள். 1684-இல் ஆற்றங்கல் ராணியின் அனுமதி பெற்று ஈஸ்ட் இண்டியா கம்பெனியார் இந்த ஊரில் ஒரு வியாபார சாலையை ஸ்தாபித்தார்கள். குடி தண்ணீரும் ரோடு சௌகரியமும் இல்லாத இந்த ஊரில் வியாபார சாலையை ஸ்தாபிக்க ஆங்கிலேயரைத் தூண்டியது இங்கே மிளகு ஏராளமாக இருந்ததுதான்.

அஞ்சு தெங்ஙில் தங்கள் ஆட்சியை ஈஸ்ட் இண்டியா கம்பெனியார் ஸ்தாபிக்க முயலுவதாக எண்ணி, ஆற்றங்கல் பிரஜைகளும் டச்சுக்காரர்களும் அவர்களிடம் வெளிப்படையாக வெறுப்புக் காட்டினார்கள். ஆயினும், ஜான் ப்ராபோன் என்ற கம்பெனி மானேஜருடைய வேண்டுகோளின் பேரில் இங்கே ஆங்கிலேயர் ஒரு கோட்டை கட்டுவதற்கும், குத்தகை எடுத்து மிளகு வியாபாரம் நடத்துவதற்கும் ராணி அனுமதி அளித்தாள். பிறகு டச்சுக்காரரின் போதனையால் ராணி கம்பெனியின் நல்ல எண்ணத்தில் சந்தேகம் கொண்டு, 'கோட்டை கட்டக் கூடாது' என்று தடையுத்தரவு பிறப்பித்தாள். ப்ராபோன் இந்தத் தடையுத்தரவைப் பொருள்படுத்தாமல் கோட்டை கட்டும் வேலையைத் தொடர்ந்தார். ஆங்கிலேயரை அஞ்சுதெங்ஙிலிருந்து வெளியேற்றுவதற்கு ராணி ஒரு சேனையை அனுப்பினாள். ஆயினும், உடனேயே இரு தரப்பாருக்கும் சமாதான உடன்பாடு ஏற்பட்டது. 1695-ஆம் ஆண்டில் கோட்டையின் வேலை பூர்த்தியாகிவிட்டது உடன்பாட்டின்படி ஒவ்வோர் ஆண்டும் நிலத்துக்கு வாடகையும் சில காணிக்கைப் பொருள்களும் கம்பெனியார் ராணிக்குக் கொடுத்தார்கள்.

இந்தக் கோட்டை சதுர வடிவம் உடையது. கோட்டையில் ஒவ்வொரு சுவரும் அறுபது சஜ நீளம்; இருபது அடி உயரம். இன்றும் சுவருக்கு எத்தகைய குறைவும் ஏற்படவில்லை. கோட்டையின் கிழக்கே அமைதியான உப்பங்கழியும் (காயல்) மேற்கே அலறும் அரபிக்கடலும் இருக்கின்றன. மதிலுக்குள்ளே சர்ச்சும் வேறு சில கட்டிடங்களும் இருந்தன. கம்பெனியின் வியாபாரப் பொருள்களும் உத்தியோகஸ்தரின் வீடுகளும் கோட்டைக்கு வெளியே இருந்தன. ஒரு சிறிய சேனையும் தற்காப்புக்காக இருந்தது. எதிர்த்து வரும் பகைவரை ஒடுங்கச் செய்யப் போதுமான துப்பாக்கி முதலிய ஆயுதங்களும் கோட்டைக்குள் இருந்தன.

கம்பெனிக்காரருடன் ராணி செய்துகொண்ட உடன்பாட்டைத் திருவாங்கூர் மன்னர் ஏற்றுக்கொண்டார். ஆனால் சிற்றரசர்களாக இருந்த எட்டு வீட்டுப்

காப்பிரைட்: மாத்ருபூமி (மலையாளம்: 17-8-'58), கோழிக்கோடு.

பிள்ளைகளும் மாடம்பிமாரும் இதை ஏற்கவில்லை. ஆங்கிலேயரின் உதவியைக் கொண்டு ராணியும் திருவாங்கூர் மன்னரும் சிற்றரசர்களை அடக்கி விடுவார்கள் என்று அஞ்சிய சில சிற்றரசர்கள் 1697-இல் சில மக்களின் உதவியைக் கொண்டு அஞ்சுதெங்கு கோட்டையைத் தாக்கிக் கைப்பற்ற முயன்றார்கள். அவர்களுடைய முயற்சி வீணாயிற்று.

மிளகும் காலிகோ துணியும் ஏராளமாகக் கிடைத்ததால், அஞ்சுதெங்கின் வியாபாரம் விரைவில் முன்னேறியது. ஆங்கிலேயரின் மேற்குக் கடல்கரை வியாபார கேந்திரங்களில் அஞ்சுதெங்கு முக்கிய ஸ்தானமாயிற்று. ஆனால் இந்த நிலைமை அதிக காலம் நீடிக்கவில்லை. சுயகாரியப் புலிகளாக இருந்த கம்பெனி அதிகாரிகள் சிலருடைய செயலால் வியாபாரம் குறையலாயிற்று. கிஃபார்ட் என்ற சுயநலக்காரர் டச்சு துபாஷின் உதவியால் உள்நாட்டு வியாபாரிகளை விழுங்குவதற்காகக் கம்பெனியில் பொய்க் கணக்குப் புஸ்தகங்களையெல்லாம் தயாரித்தார்.

ஆங்கிலேயருக்கு இடம் கொடுத்த ராணி 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் காலமானாள். பிறகு பட்டத்துக்கு வந்த ராணி தைரியம் இல்லாதவளாக இருந்தாள். சிற்றரசர்களான நாலு பிள்ளைமார் என்பவர்கள் தான் உண்மையில் அரசு செலுத்தினார்கள். அவர்களிலும் வெஞ்சமுத்த பிள்ளை என்பவரின் விருப்பப்படியே ராணி நடக்கத் தொடங்கினாள்.

ஒரு சமயம் மால்ஹீரோஸ் என்ற ஆங்கிலேயரின் வீட்டுக்குச் சென்ற சில முஸ்லிம் வியாபாரிகளை அந்த ஆங்கிலேயர் அவமதித்தார். இந்த விஷயத்தைக் கிஃபோர்டிடம் தெரிவித்தவுடன் அவர் அந்த வியாபாரிகளின் ஆயுதங்களைப் பிடுங்கி, அவற்றாலேயே வியாபாரிகளின் தலையில் அடித்து உடைக்கச் செய்தார். இது நாட்டு மக்களுக்கும் ஆங்கிலேயருக்கும் மனக் கசப்பு ஏற்படக் காரணமாயிற்று. இதனால் வியாபாரம் தடைப்பட்டது. மக்களின் மனத்தில் அப்போது எழுந்த ஆத்திரம் அடங்கி இருந்ததே ஒழிய அணையவில்லை.

ஆங்கிலேயர் ஒவ்வொரு வருஷமும் ராணிக்குக் கொடுத்துவந்த காணிக்கைப் பொருளைச் சில வருஷங்களாகக் கொடுக்கவில்லை. ராணி தூதரை அனுப்பிக் கேட்டதில், ஆங்கிலேயர் அஞ்சி, கிஃபோர்ட்மூலம் நேரில் கொடுப்பதாகப் பதில் அனுப்பினார்கள். அதைத் தொடர்ந்து ராணி அவர்களை ஆற்றங்கலுக்கு வருப்படி அழைத்தாள். அப்போது கோட்டையிலிருந்த உத்தியோகஸ்தர்கள் எல்லாரும், கிஃபோர்ட், மால்ஹீரோஸ் என்ற இரண்டு மேல் அதிகாரிகளும் காணிக்கைப் பொருளுடன் ஆற்றங்கலுக்குப் புறப்பட்டார்கள். வழிநடுவே அவர்களைச் சில மக்கள் சூழ்ந்து கொண்டார்கள்; மால்ஹீரோஸ் என்பவரைத் துண்டு துண்டாக வெட்டிப் போட்டார்கள். கிஃபோர்டை மரக் கட்டையில் ஆணியால் அறைந்து ஆற்றில் தூக்கி எறிந்தார்கள். அவர்களோடு வந்த சேனைகளையும் முறியடித்தார்கள். பிறகு கோட்டையைக் கைப்பற்ற மக்கள் சென்றபொழுது, கோட்டைக்குள் இருந்த ஸாமுவேல் இன்ஸ் என்ற தீரர் நீண்டகாலம் போராடிக் கோட்டையைக் காப்பாற்றினார்.

மக்கள் செய்த கொடுஞ் செயலுக்காக ராணி தன் வருத்தத்தைத் தெரிவித்ததோடு, அந்த மக்களைத் தண்டிப்பதாகவும், ஆங்கிலேயருக்கு உதவி செய்வதாகவும் தலைச்சேரியில் இருக்கும் ஆங்கிலேயருக்கு உறுதி கூறி அனுப்பினாள். மக்களின் வேகம் தணியாமல் இருந்ததனால், பப்பாயிவிருந்து மிட்ஃபோர்ட் என்பவர் ஒரு படையுடன் அஞ்சுதெங்குக்கு வந்து, ராணியிடமும் சிற்றரசர்களிடமும் அநுமதி பெற்று, மக்களைப் பலவிதமாய்த் துன்புறுத்தினார். பிறகு ஆற்றங்கல் கோட்டையையும் ராணியிடமிருந்து கைப்பற்றித் தாமே ஆட்சி புரியத் தொடங்கிவிட்டார். மிளகு

வியாபாரம் முழுவதும் மிட்ஃபோர்டின் குத்தகையாக இருந்தது. இறந்துபோன இருபது சேனை வீரர்களின் சம்பளத்தையும் கம்பெனியின் கஜானாவிலிருந்து மிட்ஃபோர்ட் எடுத்துக்கொண்டு வரத் தொடங்கினார்.

மிட்ஃபோர்டுக்குப் பிறகு அலெக்ஸாண்டர் ஓம் என்பவரின் தந்தை அதிகாரியானார். அவர் கூறியதைப் பின்பற்றி ராணியும் ஆங்கிலேயரும் திருவாங்கூர் ராஜாவும் சேர்ந்துகொண்டு, நாட்டுத் தலைவர்களைத் தண்டிக்கவும் நஷ்டஈடு கொடுக்கவும் ஒப்பி ஓர் உடன்பாடு செய்துகொண்டார்கள்.

ஆற்றங்கல் ராஜ்யமும் திருவாங்கூரும் ஒன்றானபோது, கேரளத்திலும் மற்ற இந்தியப் பகுதிகளிலும் ஆங்கிலேயரின் ஆட்சி மிக விரிவடைந்திருந்தது. அதனால் அஞ்சுதெங்கின் முக்கியத்துவம் குறைய ஆரம்பித்தது. கர்நாடகப் போர்க்காலத்தில், போர்க் கருவிகளை வைத்துக் காப்பாற்ற இந்த இடம் உபயோகப்பட்டது. 1776-இல் இது மிகவும் சாமானிய வியாபார ஸ்தலமாக மாறியது. 1810-இல் அந்தப் பெருமையும் இதற்கு இல்லாமல் போய்விட்டது.

அஞ்சுதெங்கு சாமான்ய இடமானதிலிருந்து பிரிட்டிஷ்காரர் நேராக இதை ஆண்டு வந்தார்கள். வெகு காலம் இது மலபார் ஜில்லாவின் பகுதியாக இருந்தது. 1906-இல் அஞ்சுதெங்கு, தங்கச்சேரி இரண்டையும் பிரித்து, இதை அஞ்சுதெங்கு என்ற பெயருடன் தனி ஜில்லாவாக அமைத்தார்கள். இதைத் திரு-கொச்சியின் பிரிட்டிஷ் பிரதிநிதியே ஆண்டு வந்தார். இதிலிருந்து வந்த வரிப்பணத்திலிருந்து ஏழாயிரம் ரூபாய் திருவாங்கூர் அரசாங்கத்துக்குக் கொடுபட்டு வந்தது.

பாரதத்துக்குச் சுதந்தரம் கிடைத்தபோது அஞ்சுதெங்கு பிரதேசம் சென்னை ராஜ்யத்தைச் சார்ந்ததாக இருந்தது. 1950-இல் இதை மீண்டும் திருவாங்கூருடன் சேர்த்தார்கள். 1953 முதல் இது கடய்காவூர்ப் பஞ்சாயத்தின் ஒரு பகுதியாயிற்று.

இன்று அஞ்சுதெங்கின் பரப்பு 311 ஏக்கர். 1951-இல் இதன் ஜனத்தொகை 7161. அநேகமாக எல்லாரும் மீன் பிடிப்பவர்கள். இவர்கள் ரோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர்கள்.

இப்போது இங்கே நான்கு கோட்டைச் சுவர்களும், ஆங்கிலேயர் உபயோகித்த இடுகாடுந்தான் எஞ்சி இருக்கின்றன. இந்த இடுகாட்டில் இருக்கும் கல்லறைகளைப்பற்றி 1765-இல் போர்பஸ் என்பவர் குறித்திருக்கிறார்.

இங்கே இரண்டு ரோமன் கத்தோலிக்க ஆலயங்கள் இருக்கின்றன. ஒன்று மிகப் புராதனமானதாம். அதன் சுவரில் ஆங்கிலேயரின் மனத்தைக் கவர்ந்த சில சித்திரங்கள் முன்பு இருந்திருக்கின்றன. கவனக் குறைவால் அவை அழிந்துபோயிருக்கின்றன.

அஞ்சுதெங்கின் கோட்டை மதிலுக்குக் கிழக்கே நாகரிகமான ஒரு வீடு இருந்து வருகிறது. ஆங்கில ஆசிரியரான லாரன்ஸ் ஸ்டேன் என்பவருடைய உள்ளத்தைக் கவர்ந்தவளும் அவருடைய பேனாவுக்கு அமரத்தன்மை அளித்தவளுமான எலிஸா ட்ரேப்பர் என்பவள் இந்த வீட்டில்தான் பிறந்தாளாம். இந்த வீட்டில் ஐவன் என்பவர் தம் தாயுடன் இன்று வாழ்கிறார். இவர்களுக்கு எலிஸா ட்ரேப்பரைப் பற்றி ஒன்றும் தெரியாது.

சரித்திர ஆசிரியரான ராபர்ட் ஓம் என்பவர் இந்த அஞ்சுதெங்கில்தான் பிறந்தார். புகழ்பெற்ற இன்னும் சிலரும் இந்த ஊரில் பிறந்திருக்கிறார்கள்.

கலகத்துக்கும் வியாபாரத்துக்கும் கேந்திரமாக இருந்த இந்த ஊரில், சமாதானத்தைக் கடைப்பிடிக்கும் மக்கள் இன்று வாழ்ந்து வருகிறார்கள். இப்போது கயிற்றுத் தொழிலுக்குப் பெயர்பெற்றிருக்கிறது இந்த இடம். இங்கே உள்ள பெண்களும் ஆண்களும் தயார் செய்யும் தங்க நிறக் கயிறுகள், நம் பாராட்டுதலுக்கு உரியவையாகும்.

# கழிவுப் பொருளிலே சக்தி

*அல்லு ந. ராமசந்திரன்*

**மின்சார சக்தியை மேலும் மேலும் அதிகமாய்ப் பெறப் பாடு படுகிறோம். சுலபமாய் எங்கும் பெறக்கூடியது எரிவாயுவின் சக்தி. இதனால் எவ்வளவோ மிச்சமும் லாபமும் உண்டு என்பதை இவர் விளக்குகிறார். மதுரைக்காரரான இவரே சில இடங்களில் எளிய முறையில் எரிவாயு உற்பத்திக் கருவியை அமைத்திருக்கிறாராம்.**

இயற்கை எரிவாயுவை விஞ்ஞானிகள் மெதேன் வாயு, சதுப்பு நில வாயு, இயற்கை வாயு (Methane gas, Marsh gas, Natural gas) என்றெல்லாம் சொல்கிறார்கள். நம் நாட்டில் புதிதாகக் கால்நடைகளின் சாணியிலிருந்து இதை உண்டாக்குவதால் சாணி எரிவாயு (Gow dung gas) என்று இங்கே சொல்கிறார்கள்.


பல தேசங்களில் எண்ணெய் ஊற்றுக்கள் காணத் தோண்டும் போது, முதலில் இந்த எரிவாயுவே கிடைக்க ஆரம்பிக்கிறது. அந்தப் படிவத்துக்குக் கீழேதான் மண் எண்ணெய் ஊற்றுக்கள் கிடைக்கும். அமெரிக்க நாட்டில் நெடுங்காலமாக டெக்ஸாஸ் மாகாணத்தில் பல இடங்களில் இந்த எரிவாயு கிடைக்கிறது. அங்கெல்லாம் சமையல் செய்யவும், பிளாஸ்டிக் முதலான சாமான்கள் செய்யவும், நிலக்கரிக்குப் பதிலாக எரிக்கவும் இதை உபயோகிக்கிறார்கள். பாகிஸ்தானில் பலூசிஸ்தான் மாகாணத்தில் சூயி என்ற ஊரில் பூமியில் இந்த எரிவாயு ஏராளமாக இருப்பதைச் சமீபத்தில் கண்டு, கராச்சி போன்ற நகரங்களில் சமையல் செய்யவும் நீராவி உற்பத்தி செய்யவும் இதைப் பயன்படுத்த ஏற்பாடுகள் செய்துவருகிறார்கள். சமீபத்தில் இந்திய அரசாங்கத்தார் நடத்திய பரிசோதனையில் ஜ்வாலாமுகி என்ற மலைப்பாங்கான பிரதேசத்தில் 6000 அடி ஆழம் தோண்டியதில் இந்த எரிவாயு கிடைத்திருக்கிறது. அந்த இடத்துக்கு அருகே உள்ள ஜ்வாலா தேவி என்ற கோயிலில் சுமார் 600 ஆண்டுகளாகப் பூமியிலிருந்து வரும் 12 தீபச்சுடர் சதா எரிந்து வருவதைப் பார்த்தே, இந்தப் பரிசோதனைக்கு நிச்சயம் செய்தார்கள். இங்கே ஆழமாகத் தோண்டினால் எண்ணெய் ஊற்றுக் கிடைக்குமென்று நிபுணர்கள் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். நம் தென்னாட்டில் பல பகுதிகளில் தண்ணீருக்காகக் குழாய்க் கிணறு தோண்டும்போது, இந்த எரிவாயு கிடைத்து எரிவது பல தடவை வந்த பத்திரிகைச் செய்திகளின் மூலம் தெரிய வருகிறது. அந்த இடங்களில் எரிவாயுவை உபயோகத்துக்குக் கொண்டுவர இன்னமும் ஏற்பாடுகள் நடக்கவில்லை.

இந்தப் பரிசோதனையைச் செய்யவும் எரிவாயுவை உபயோகிக்கவும் பல கோடிப் பணம் செலவாகிறது. தவிர, வெளிநாட்டு நிபுணர்களுக்கு ஊதியம் கொடுப்பதன் மூலமும் இந்த நாட்டுக் கருவிகளைத் தருவிப்பதன் மூலமும் நம் பணம் ஏராளமாய் வெளிநாடுகளுக்குச்

காப்பிரைட்: தொழில் இந்தியா (தமிழ்: ஜூலை - செப், '58),
4, மோதிலால் தெரு, தியாகராய நகர், சென்னை-17.

செல்கிறது. நம் விஞ்ஞானிகள் செயற்கை முறையால் பம்பாய், கல்கத்தா நகரங்களில், பாதாளச் சாக்கடைக் கழிவுகளிலிருந்து இந்த எரிவாயுவைப் பெரிய அளவில் உற்பத்தி செய்து, நிலக்கரி எரிவாயுவுக்குப் பதிலாகக் குழாய் மூலம் வீடுகளில் அடுப்பெரிக்க விநியோகம் செய்கிறார்கள்.

வீடுகளில் பிரத்தியேகமாய் உபயோகிக்கக் கூடிய சிறு எரிவாயு உற்பத்திக் கருவிகளை நம் நாட்டு விஞ்ஞானிகள் தயார் செய்து கொடுக்கிறார்கள். மத்திய விவசாய ஆராய்ச்சிக் கழகத்தாரும் இப்படி அமைத்துக் கொடுக்கிறார்கள் இப்போது டில்லி நகரத்தின் சுற்றுப் புறங்களில் இந்தக் கருவிகள் உபயோகத்தில் இருப்பதுடன், தனிப்பட்ட ஸ்தாபனங்கள் அமைத்த கருவிகள் நம் நாட்டின் பல பாகங்களில் தினம் வேலை செய்கின்றன.





1. கிணறு போன்ற தொட்டி; 2. மண் சுவர்; 3. குப்பைகள் உள்ளே புகும் குழாய்; 4. குப்பைகள் வெளியே வரும் குழாய்; 5. துத்தநாகத் தொட்டி; 6. சங்கிலி; 7 ராட்டினம்: 8 சமன் செய்யும் பளு; 9. அடைப்பு - திறப்புப் பிடி பொருத்திய இரும்பு அல்லது ரப்பர்க் குழாய்; 10. கம்பங்கள்.

தென்னாட்டு நண்பர்கள் இதில் இன்னும் ஆர்வம் காட்டவில்லை. கன்யாகுமரி ஜில்லாவில் ஒரு தேயிலைத் தோட்டத்தில் இந்தக் கருவியை நான் அமைத்திருக்கிறேன். அதிலிருந்து கிடைக்கும் எரிவாயுவினால் எஞ்சினை இயக்கி உற்பத்தி செய்யும் மின்சாரத்தால் விளக்குகள் எரிகின்றன. அதில் கிடைக்கும் எருவைத் தேயிலைச் செடிகளுக்கு உரம் இட்டதில் அவை இரண்டு மடங்குக்குமேல் கொழுத்து வளர்ந்திருக்கின்றன.

எந்த வீட்டிலும் சமையல் செய்ய ஏதாவது ஓர் எரிபொருளை விலைக்கு வாங்கிச் சாம்பலாக்கி விடுகிறார்கள். இல்லையென்றால், மின்சாரம், நிலக்கரி, எரிவாயு இவற்றை உபயோகிக்கக் கட்டணம் செலுத்த வேண்டியிருக்கிறது. இந்தச் சாணி எரிவாயுக் கருவியால் வீட்டின் கழிவுகளிலிருந்து இனாமாக நமக்குச் சமையல் செய்ய எரிவாயு கிடைக்கிறது. புகை இல்லாமல் இது எரிவதால் வீடும் தூசி. புகை இல்லாமல் சுத்தமாக இருக்கிறது. சமையலை எந்த நேரத்திலும் இதைக் கொண்டு அதிவிரைவில் செய்ய முடிகிறது. ஆகவே, அரசாங்கமே இதில் கவனம் செலுத்தி இதை அமைத்துக் கொடுக்கும் நிபுணர்களைப் பழக்கினால், நாட்டின் பல பாகங்களில் இது பரவும். நம் நாட்டின் சீதோஷ்ண நிலைமை இதற்கு மிக்க அநுசரணையாக இருக்கிறது.

அந்த அந்த ஊரில் கிடைக்கும் செங்கல், கருங்கல், சிமெண்டு போன்றவற்ருல் வீட்டின் வெளி முற்றத்தில் இந்தக் கருவியைக் கட்டிவிடலாம். பூமி மட்டத்திலிருந்து 6 அடி ஆழம் உருண்டை வடிவமாகக் கிணறு போல் தொட்டி அமைக்கவேண்டும். குப்பைகள் தண்ணீருடன் உடனே புகவும் வெளியே வரவும் சுட்ட மண் குழாய்களை (Stoneware pipes), அந்தத் தொட்டியில் பொருத்த வேண்டும். எரிவாயு சேகரம் செய்யும் உருண்டைத் துத்தநாகத் தொட்டி ஒன்று நல்ல தண்ணீரில் மிதக்கும்படியாக அந்தக் கிணற்றின்மேல் இரண்டு சுவர்களைச் செங்கல் சிமெண்டினுல் கட்டவேண்டும். இதுதான் எரிவாயு உற்பத்திக் கருவி. எரிவாயு சேரச் சேர, துத்தநாகத் தொட்டி மேல்நோக்கிப் போகவும் குறையக் குறையக் கீழ் நோக்கி வரவும் வசதியாகக் கம்பத்தின்மேல் ராட்டினத்தில் ஒரு சங்கிலி தொங்க விட்டு, பளுவின் மூலம் அவை சமமாகும்படி (பாலன்ஸ்) செய்யவேண்டும். கழிவை உள்ளே செலுத்தும் குழாய் மேலாகவும் எரு வெளிவரும் குழாய் தாழ்வாகவும் அதில் அமைந்திருப்பதால், குப்பைகளை உள்ளே செலுத்தும்போது கருவியில் இடம் கொள்ளாமல் மடிந்த எரு தானுகவே வெளியில் வந்து விழுகிறது. எரிவாயு சேகரத் தொட்டியிலிருந்து, அடைப்பு - திறப்புப் பிடி பொருத்திய இரும்பு அல்லது ரப்பர்க் குழாய்களின் மூலம் சமையல் செய்யும் இடத்துக்கு எரிவாயுவைக் கொண்டு வந்து, அதற்காக உள்ள இரும்பு அடுப்பில் நெருப்புப் பற்ற வைத்து, அந்தத் தீயில் சமையல் செய்கிருர்கள். எரிவாயு அளவுக்கு மேல் அதிகம் பெருகினுல், அந்த அதிகப்பட்ட வாயு தண்ணீர் வழியாகத் தானுகவே வெளியேறி விடும். எனவே, எந்த யந்திர உதவியும் இல்லாமல் இந்தக் கருவி தானுகவே இயங்குகிறது.

இதில் உண்டாகும் எரிவாயு, நிலக்கரி எரிவாயுவைப் போல்



எரிவாயுக் குழாய் வந்து சேருகிற இரும்பு அடுப்பு

விஷவாயு அல்ல. நெருப்புச் சுடரைக் காண்பித்தால் மட்டுமே இது பற்றி எரிகிறது. தணலைக் காண்பித்தால் இதில் நெருப்புப் பிடிப்பதில்லை. ஆகவே, இதனுல் அபாயம் இல்லை. நிலக்கரி எரிவாயுவைக் காட்டிலும் அதிகச் சூட்டுடன் இது எரிகிறது.

இதுவரையில் நம் நாட்டில் யாரும் பயன்படுத்த முயலாத சில கழிவுப் பொருள்களிலிருந்து பெரிய அளவில் எரிவாயுவும் கம்போஸ்ட் எருவும் தொழிற்சாலை ரீதியில் செய்யக் கூடிய விவரங்களை இனி விவரிக்கிறேன்.

நகரங்களில் பெரிய அளவிலும் கிராமங்களில் சிறிய அளவிலும் குப்பைகள் கிடைக்கின்றன. நகரங்களுக்கு வெளிப்புறத்தில் வாகனங்களின் மூலம் குப்பைகளைக் கொண்டு போய் அங்கே தரையில் குழி வெட்டிக் கம்போஸ்ட் எரு செய்கிருர்கள். அப்படிச் செய்வதில் உரச் சத்தைப் பூமி சிறிது கிரகித்துக் கொள்கிறது; வெயில் படுவதால் நைட்ரஜன் சத்துக் காற்றில் கலந்து வீணுகிறது. மேலும், குப்பைகள் கம்போஸ்ட் ஆக மாற 3 மாத காலம் பிடிக்கிறது. கல் மண் முதலியவையும் பெரிய அளவில் அதில் இருக்கின்றன. இந்தப் புது முறையினுல் நகரங்களின் உள்புறத்திலேயே குப்பைகள் முழுவதும் 15 தினங்களில் கம்போஸ்ட் ஆவதுடன், எரிவாயுவும் இனமாகக் கிடைக்கிறது. எரிவாயுக் கருவியிலிருந்து வெளிவரும் எச்சத்தை அப்படியே இரும்பு ஸிலிண்டரில் அழுத்தமாக அடைத்து, கம்போஸ்ட் செய்துவிடலாம். எந்த விதமான சேதமும் ஆகாதபடியால் கம்போஸ்ட்டிலும் உரச் சத்து

மிகுதியாக இருக்கிறது. இந்த முறையில் குப்பைகள் சிதைவது பிராண வாயு சம்பந்தமில்லாத நிகழ்ச்சி (anaerobic decomposition) ஆனபடியால் எரிவாயுவிலாவது வெளிவரும் எருவிலாவது எந்த விதமான துர்நாற்றமும் இருப்பதில்லை. இந்தக் கருவி நகரத்தின் உள்புறத்தில் இருந்தாலும் சுகாதாரக் கெடுதல் இல்லை. வெளிவரும் எருவில் கல், மண் முதலானவை இருப்பதில்லை.

குப்பைகளை ஸிலிண்டர்களில் அழுத்தி அடைக்கும் முறையில் ஆஸ்திரேலியா கண்டத்தில் காண்டர்பரி என்ற ஊரிலும் சுவிட்ஜர்லாண்டு தேசத்தில் பேசில் என்ற ஊரிலும் எருவைத் தயார் செய்கிறார்கள். ஆனால் அவர்கள் எரிவாயுவை உற்பத்தி செய்யவில்லை.

எல்லாத் தொழிற்சாலைகளிலும் மனித மலத்தினால் வருமானம் கிடையாது. எரிவாயுக் கருவிகளை அமைப்பதன் மூலம், அந்த மலங்களுடன் பிற குப்பைகள் கலந்து சிறந்த கம்போஸ்ட் எருவும் கிடைக்கும்; நிறைய எரிவாயுவும் கிடைக்கும். அந்த எரிவாயுவைப் பலவிதத்தில் அவர்களே உபயோகம் செய்துகொள்ளலாம்; அல்லது வெளியில் விற்கலாம்.

தோல் பதனிடும்போது துர்க்கந்தம் உண்டாவதால், அந்தத் தொழிற்சாலைகளை நகரங்களுக்கு வெளிப்புறத்தில் தொலைவில் அமைக்கவே அநுமதிக்கிறார்கள். இதுவரையில் அந்தத் துர்நாற்றத்தை அகற்ற யாரும் முயற்சி செய்யவில்லை. இந்த மாதிரி எரிவாயு உற்பத்திக் கருவியை அவற்றில் அமைத்து, கழிவுகள் அந்தக் கருவிகளில் நேரே பாயும்படி செய்தால் துர்நாற்றம் உண்டாகாது. அதிலிருந்து சிறந்த எருவும் எரிவாயுவும் நிறையக் கிடைக்கும்.

தென்னை மட்டையிலிருந்து நார் எடுக்கும் தொழில் மலையாளத்தில் நிறைய நடக்கிறது. மட்டைகளைத் தண்ணீரில் சுமார் 6 மாச காலம் ஊற வைத்து யந்திரத்தையோ ஜனங்களையோ கொண்டு நார் வேறு, மரத்தூள் வேறாகப் பிரிக்கிறார்கள். எரிவாயுக் கருவிகளை அமைத்து மட்டைகளை உள்ளே செலுத்தினால், சுமார் ஒரு மாச காலத்தில் மரத்தூள் பகுதி எரிவாயுவாக மாற ஆரம்பிக்கிறது; மட்டைகள் இளகி விடுகின்றன. பிறகு சுலபமாக நாரை எடுக்கலாம். இந்த மரத்தூள் பெரிய அளவில் எரிவாயு கொடுக்கக் கூடியது.

அமெரிக்க நாட்டில் இந்த எரிவாயுவைச் சமையல் செய்ய உபயோகப்படுத்துவதுடன் வீட்டின் சமசீதோஷ்ண நிலைக் கருவிகள் வேலை செய்யவும் உபயோகிக்கிறார்கள். மோட்டார் டயர்களுக்கு உபயோகமாகும் ரப்பருடன் சேர்க்கும் கரித்தூளை இந்த எரிவாயுவிலிருந்து எடுப்பதுடன், பிளாஸ்டிக் முதலானவற்றை உற்பத்தி செய்யவும் இதைப் பயன்படுத்துகிறார்கள். டினைலார் என்ற செயற்கைக் கம்பளியும் இந்த எரிவாயுவை உபயோகித்தே உற்பத்தியாகிறது.

செயற்கை முறையில் இந்த எரிவாயுவை எந்த இடத்திலும் அமைக்க முடிவதால், அதிகப் பணச் செலவு இல்லாமல் விறகுக்குப் பதில் புகையாது எரியும் எரிவாயு இனமாகத் தினமும் கிடைக்கிறது.

நம் நாடு சுதந்தரம் அடைந்து 10 வருஷ காலத்துக்கு மேல் ஆகிறது. நம் நாட்டுப் படித்த மக்கள்கூட இன்னமும் மேல்நாட்டு மோகம் கொண்டிருப்பதுடன், அந்த நாட்டு விஞ்ஞானிகள் செய்வதே மேன்மையானது என்று கருதுகிறார்கள். ஆனால் நம் நாட்டு விஞ்ஞானிகள்தான் இந்தச் சிறு கருவிகளைக் கண்டு பிடித்தார்கள். ஜனங்களின் ஆதரவு இல்லாமல் எந்தத் தொழிலும் முன்னேற முடியாது. நம் சர்க்காரே பல நிபுணர்களை இந்தத் தொழிலில் பழக்குவதன்மூலம், இப்போதும் பின் காலத்திலும் அதிகமாக ஜனங்களுக்கு உபயோகமாகக் கூடியது இந்த எரிவாயு உற்பத்திக் கருவி.

# பி. பி. ஸி - யின் வெளிநாட்டு ஒலிபரப்பு

ஜே. பி. க்ளார்க்

**பிரிட்டிஷ் ரேடியோ ஒலிபரப்புக்கு உலகெங்கும் பெருமதிப்பு இருக்கிறது. காரணம், அது உலகத்துச் செய்திகளை நன்றாய்த் திரட்டி மிகத் திறமையாக ஒலி பரப்புவதுதான். பி. பி. ஸி. வெளிநாட்டு ஒலிபரப்பின் டைரக்டர் இவர்.**


பிரிட்டிஷ் பிராட்காஸ்டிங் கார்ப்பொரேஷன்காரர் ஏற்கனவே சாம்ராஜ்ய ஒலிபரப்பு (எம்பயர் பிராட்காஸ்டிங்) மட்டும் நடத்திக் கொண்டிருந்தார்கள். அதிலிருந்து 1932, டிசம்பர் 19 - ஆம் தேதி முதல் வெளிநாட்டு ஒலிபரப்பை (எக்ஸ்டர்னல் ஸெர்வீஸஸ் நடத்தி வருகிறார்கள். பி.பி.ஸி - யின் ஒலி பரப்பு முதலில் ஆங்கிலத்தில் மட்டுமே நடைபெற்றது. காமன் வெல்த் மக்களுக்குள் செய்திப் போக்கு வரத்துச் சாதனமாகவே அப்படி ஆங்கிலம் பயன்பட்டது. தினந்தோறும் பத்து மணி நேரம் பி. பி. ஸி. ஒலிபரப்பு அப்போது நடந்தது. சென்ற இருபது வருஷ காலத்தில் பல பாஷைகளிலும் ஒலிபரப்பி வருகிறார்கள். இப்போது தினந்தோறும் 40 முதல் 50 பாஷைகளில் ஒலி பரப்புகிறார்கள்.



அரசர் கிறிஸ்துமஸ் செய்தியை ஒலி பரப்பும் சம்பிரதாயத்தை 1932-இல் முதல் முதல் தொடங்கி வைத்தவர் ஐந்தாம் ஜார்ஜ் மன்னர்

பி. பி. ஸி-யின் தினசரி ஒலி பரப்புக்களின் மொத்த நேரம் சுமார் 80 மணி. இவை உலகெங்கும் கேட்கின்றன. உள்நாட்டு ஒலிபரப்பு, டெலிவிஷன் காட்சி இரண்டையும் ஒன்று சேர்த்தாலும், மொத்தம் இத்தனை மணி நேரம் வராது. வெளி நாட்டு ஒலிபரப்பில் வருஷம் ஒன்றுக்குச் சுமார் 48,000 செய்தி ஒலிபரப்பும் 50,000 பேச்சும் நடக்கின்றன. பி. பி. ஸி. ஒலிபரப்புக்கள் பலவற்றை, அந்த அந்த நாட்டு ஒலிபரப்பு நிலையங்கள் மீண்டும் ஒலி பரப்புகின்றன. இவற்றைத் தவிர, வெளி நாடுகளில் ஒலிபரப்புவதற்கென்று, ரேடியோ. டெலிவிஷன் இரண்டு வித புரொகிராம்களிலும் பலவற்றை ரெக்கார்டு செய்து அவற்றையும் உலகில் பல இடங்களுக்குப் பி. பி. ஸி. நிலையத்தார் அனுப்புகிறார்கள். ரேடியோ மூலம் இங்கிலீஷ் சொல்லிக்

மூலம்: காமன்வெல்த் டுடே (ஆங்கிலம்: நம்பர் '57), லண்டன்.



கிழக்காப்பிரிக்க நீக்ரோக்கள் வந்து பி. பி. ஸி. ஒலி பரப்புக்காகப் பலவித டிரம்களை வாசிக்கும் காட்சி

கொடுக்கும் பாடங்களை 32 பாஷைகளில் ஒலி பரப்புகிறார்கள். பல கோடிப் பேர் நேரே லண்டனிலிருந்தே வரும் ஒலிபரப்பிலும் ரெக்கார்டு செய்த உள்ளூர் ஒலி பரப்பிலுமாக இவற்றைக் கேட்கிறார்கள்.

முக்கியமான புரோகிராமை ஆங்கிலத்தில் 21-மணி நேரம் சிற்றலை (ஷார்ட் வேவ்) மூலம் ஒலிபரப்புகிறார்கள். இதற்குப் பொது வெளிநாட்டு ஒலிபரப்பு (ஜெனரல் ஓவர்ஸீஸ் ஸெர்வீஸ்) என்று பெயர். காமன்வெல்த் நாடுகள் அத்தனையிலும் இது கேட்கும். ஒவ்வொரு நாளும் 21 மணி நேரம் இது நடக்கிறது. இதில் பொதுச் செய்தி, விளையாட்டுகள்பற்றிய செய்தி, நாடகம், பாட்டு, கதை எல்லாம் ஒலிபரப்பாகின்றன.

காமன்வெல்த்துக்குள்ளும் வெளிநாடுகளிலும் உள்ள மக்களுக்கு நட்பு முறையில் தகவல் தெரிவிப்பதும், அவர்களுடன் கலைத் தொடர்பு கொள்வதும், அவர்கள் பொழுது போக்குக்கு உதவுவதுமே பி. பி. ஸி - யின் பொதுவான நோக்கம்.



இருபத்தைந்து வருஷங்களுக்குப் பிறகு, அதாவது 1957-இல் காமன்வெல்த்துக்கு இரண்டாம் எலிஸபெத் ராணி முதல் முதலாக டெலிவிஷன் காட்சியில் செய்தி விடுத்தாள்

பி. பி. ஸி - யில் உழைக்கும் அத்தனை பேரும் சென்ற வருஷம் பெரியதொரு சோதனைக்கு ஈடு கொடுத்து மீளவேண்டியதாயிற்று. அத்தகைய அநுபவமும் பல பெரிய பெரிய நிகழ்ச்சிகளும் 1956 - இல் நேர்ந்தன. சில நிகழ்ச்சிகளைமட்டும் இங்கே குறிப்பிடலாம். போலந்து, ஹங்கரி இரண்டு நாடுகளிலும் தேசியக் கொந்தளிப்பு ஏற்பட்டது. இதனால் அந்த இரண்டு நாடுகளிலும் சில விசேஷப் பிரச்னைகள் தோன்றின.

ஹங்கரியின் கம்யூனிஸ்ட் ஆதிக்கத்தைக் கவிழ்த்து ஜனநாயக சர்க்கார் ஏற்பட்டது. அதைச் சிறிது காலத்தில் மீண்டும் கம்யூனிஸ்டுகள் அமுக்கிவிட்டார்கள். ஹங்கரி நாட்டின் புரட்சிச் செய்திகளை ருஷிய பாஷை உள்பட உலகின் பல பாஷைகளில் பி. பி. ஸி. ஒலி பரப்பியது. உடனே பழையபடி ஸோவியத் ரேடியோ பலமாய் 'ஜாம்' செய்து தொல்லை கொடுக்கத் தொடங்கியது. 1956-ஏப்ரல் முதல் அக்டோபர்

வரைக்கும் மட்டும் அநியாயமான இந்தத் தொல்லையே இல்லை.

இதற்கிடையே மத்தியக் கிழக்கு நாடுகளிலும் ஸூயஸ் கால்வாயிலும் பிரிட்டன் நடவடிக்கை எடுக்க நேர்ந்தது. இதனால் பி. பி. ஸி - யின் அரபு பாஷை ஒலி பரப்பையும் பலமாகச் செய்ய வேண்டி வந்தது: இங்கே ஒரு விஷயம் குறிப்பிடத் தக்கது: மிக முன்னால் தொடங்கிய பி. பி. ஸி. ஒலிபரப்புக்களில் ஒன்று அரபு ஒலிபரப்பு; 1958 - ஜனவரியில் தான் அதன் இருபதாம் ஆண்டு விழா நடைபெற்றது. பி. பி. ஸி - யின் தினசரி அரபு ஒலிபரப்பு வர வர அதிகரித்துக்கொண்டே வந்தது. 1957 - ஏப்ரல் முதல் தினம் 9½ மணி நேரம் அரபு ஒலி பரப்பு நடக்கிறது. ஆங்கிலத்துக்கு அடுத்தபடியாக மிக அதிக நேரம் பி. பி. ஸி - யில் ஒலி பரப்பாகிற பாஷை அரபுதான்.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் மத்தியக் கிழக்கு நாடுகளிலும் நெருக்கடி தீர்ந்தவுடனே, ஹாஸா, ஸ்வாஹிலி, ஸோமாவி என்ற மூன்று ஆப்பிரிக்க பாஷைகளிலும் பி. பி. ஸி. தினந்தோறும் ஒலிபரப்பத் தொடங்கியது. ஏற்கனவே, ஆங்கிலம், பிரெஞ்சு, அரபு, ஆஃப்ரிக்கான்ஸ் இந்தப் பாஷைகளில் மட்டுமே ஆப்பிரிக்காக் கண்டத்துக்குப் பி. பி. ஸி. ஒலி பரப்பிக்கொண் டிருந்தது.

பி. பி. ஸி - யின் வெளி நாட்டு ஒலிபரப்புத் தொடங்கி 25 வருஷம் வளர்ந்து முதிர்ச்சி பெற்றுவிட்டது என்று அதன் நிர்வாகிகள் திருப்தி கொண்டு அமைந்து விடவில்லை. வருகிற வருஷங்களில் மேலும் மேலும் திறமையாகப் பணி புரிய அவர்கள் திட்டமிட் டிருக்கிறார்கள். 1932 டிசம்பரில் அமைத்த ஒலிபரப்புக் கருவிகள் (ட்ரான்ஸ்மிட்டர்ஸ்) இன்னமும் ஒழுங்காய் வேலை செய்துகொண்டுதான் இருக்கின்றன. அடுத்த பத்து வருஷத்தில் இவற்றையும் வேறு ஒலிபரப்புக் கருவிகளையும் நவீன முறையில் மாற்றவும் சிலவற்றை அகற்றிப் புதுக் கருவிகளை அமைக்கவும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொண் டிருக்கிறார்கள்.

## சந்தேகம் தீர்ந்தது

கழுக்கு மொழுக்கென்றிருந்த பலசாலியான ஆள் ஒருவர், பஸ்ஸிலிருந்து இறங்கிக்கொண் டிருந்தார். அவருக்குப் பின்னால் சோனியான குள்ளர் ஒருவர் முண்டியடித்துக் கொண்டு இறங்க வந்தார். குள்ளர் முதலில் இறங்க வழி விட்டார் பலசாலி. ஆனால் அப்படி இறங்கும்போதே, தம் காலை நீட்டிக் குள்ளரை இடறிவிட்டார். குள்ளர் அப்படியே தடுக்கிச் சாலையோரத்திலே குப்புற விழுந்தார்.

குள்ளர் தம் உடம்புத் தூசியை யெல்லாம் துடைத்து விட்டுக் கம்பீரமாக எழுந்து நின்று கண்ணில் சுடர் பறக்கப் பலசாலியை ஒரு பார்வை பார்த்தார்.

''நீர் வேண்டுமென்றே இப்படிச் செய்தீரா? விளையாட்டாய்ச் செய்தீரா?'' என்று பலசாலியைக் கேட்டார்.

பலசாலி புன்சிரிப்புச் சிரித்துக்கொண்டே, ''வேண்டுமென்றேதான், குள்ளரே: என்ன விஷயம்?'' என்றார்.


குள்ளர் தம் கவலை நீங்கியவராக, ''அப்படியானால் சரி. ஏனென்றால், எனக்கு இந்தமாதிரி தமாஷெல்லாம் பிடிக்காது'' என்று சொல்லி, வேகமாய் நடையைப் போட்டார்.

—'நெவார்க் ஸ்டார் லெட்ஜர்'

# இத்தனை ரெயில் விபத்து ஏன்?

**எஸ். ஜே. போள்**

பொழுது விடிந்தால் பொழுது போனால் ரெயில் கவிழ்வதைப்பற்றிய செய்திகளைப் பத்திரிகையில் படிக்கிறோம். இதற்கு என்ன காரணங்கள்? இதைப்பற்றி விரிவாக, எஞ்சின் டிரைவர் ஒருவரே அனுபவபூர்வமாக எழுதுகிறார். இந்திய இளைஞர்களுக்கு டிரைவர் வேலை கிடைப்பது மிகவும் அரிதாக இருந்த காலத்தில் இவர் இந்தத் துறையில் நுழைந்தவர்; சமீபத்தில் வேலையிலிருந்து நற்புகழுடன் ஓய்வு பெற்றிருக்கிறார். இவருடைய இந்தக் கட்டுரை, டிரைவர்களுக்கு மட்டுமன்றி, பிரயாணிகளுக்கும் கைகாட்டியாயிருக்கிறது.



மாலையில் குளுமையான நேரம். எஞ்சினில் தகதகவென்று எரியும் நிலக்கரியின் வெப்பம், அந்தக் குளுமையில் சிறிது பொறுத்துக் கொள்ளும்படியாக இருந்தது. சாயந்தரம் புனாவிலிருந்து புறப்பட்ட எக்ஸ்பிரஸ் தோண்டு இருக்கும் திசை நோக்கிப் புகையைக் கக்கிச் சென்றது. நடுவழியில் அது எங்கும் நிற்காது. கைகாட்டிகள் சாய்ந்திருந்தமையால் டிரைவர் கவலையின்றி வண்டியை ஓட்டினான். தடதடவென்று வேகமாக ஓடியது வண்டி.

தண்டவாளத்துக்கு இருபுறமுமுள்ள காட்சிகள் டிரைவருக்கு அன்றாடம் பழக்கமானவை. ஆதலால், லோணி ஸ்டேஷன் பக்கத்தில் இருப்பதை அவன் அறிந்தான். வண்டி அங்கே நிற்காதாகையால், ஸ்டேஷனிலுள்ளவர்களுக்கு எச்சரிக்கையாக எஞ்சின் சீட்டியடித்தது. வேகமும் சிறிது அதிகமாயிற்று.

ஆனால் ஐம்பது கஜம் தொலைவு கூட வண்டி போயிருக்காது; அதற்குள், 'ஐயையோ!' என்று கூறிக்கொண்டே டிரைவர் திடீரென்று பிரேக் போட்டான். வேகமாக ஓடிய வண்டி, குலுங்கி ஆடியது. கர்-கர்-கர் என்ற சத்தம் கேட்டது. பிரயாணிகள் ஒருவர்மேல் ஒருவர் மோதிக் கொண்டார்கள். மேற்பலகைகளில் இருந்த சாமான்களோடு, அங்கே தூங்கிக்கொண் டிருந்தவர்களும் கீழே விழுந்தார்கள்.

சக்கரத்தில் விழுந்த பிரேக் சிறிது தளர்ந்தது; உடனே மறுபடி அழுத்தமாக டிரைவர் பிரேக்கைப் போட்டான். எழுந்து

காப்பிரைட்: கிர்லோஸ்கர் (மராட்டி: ஆகஸ்ட் '58), கிர்லோஸ்கர்வாடி, ஸாதாரா ஜில்லா.

நின்றவர்கள் ஆடி விழுந்தார்கள். இப்படி மூன்று நான்கு தடவை நடந்தது. மனிதர்கள் மீண்டும் எழுந்தார்கள். மீண்டும் விழுந்தார்கள். என்ன நிகழ்கிறது என்பது யாருக்குமே தெரியவில்லை. யாத்திரிகர் அனைவரும் பயத்தால் நடுங்கினார்கள்; குழந்தைகள் கீச்சிட்டுக் கத்தின. டிரைவர் மட்டும் ஓயாமல் பிரேக்கைப் போட்டுப் போட்டு வண்டியை நிறுத்த முயன்றுகொண்டிருந்தான்.

இவ்வளவுக்கும் காரணம், அந்த வண்டியை நோக்கித் தொலைவிலிருந்து வேகமாக வந்துகொண்டிருந்த ஒரு சிவப்புப் புள்ளி! அதைக் கண்டதுமே டிரைவருக்கு வியப்பாக இருந்தது; அவன் பிரேக்கை அழுத்தினான்.

அந்த இடத்துக்கு அருகில் எங்கும் கைகாட்டி இல்லை. அப்படியிருக்க, இந்தச் சிவப்பு ஒளி எங்கிருந்து வந்தது? ஏதோ அபாயம் என்பதை அறிவிக்க, எவனாவது சிவப்பு விளக்குக் காட்டுகிறானோ? வேகமாக வந்த வண்டி விரைவில் நிற்பதாக இல்லை. பிரேக்கைத் தளர்த்துவதும் போடுவதுமாக இருந்தான் டிரைவர். பிரயாணிகளின் வேதனையோ சொல்லத் தரமல்ல.

அந்தச் சிவப்புப் புள்ளி மெல்ல மெல்ல அருகில் வந்தது. சக்கரங்களின் ஓசையோடு பெருமூச்சு விட்டபடி, வண்டி ஸ்டேஷனுக்கு அருகில் போய் நின்றது. அந்தச் சிவப்புப் புள்ளி, அபாய அறிவிப்பேதான்! ஒரு போர்ட்டர் ராந்தலைத் தூக்கிப் பிடித்த வண்ணம், வண்டியை நிறுத்தும்படி கையை ஆட்டிக் கூச்சல் போட்டுக்கொண்டு ஓடிவந்தான்.

வண்டி சரியாக நிற்கக்கூட இல்லை; அதற்குள் பல பிரயாணிகள் தடதடவென்று கீழே குதித்து எஞ்சினை நோக்கி ஓடினார்கள். அவர்கள் டிரைவரைச் சூழ்ந்துகொண்டு, ''என்ன ஐயா, வண்டி ஓட்டுகிறாய்? இவ்வளவு நேரம் நாங்கள் சாகப் பிழைக்க இருந்தோமே!'' என்று கூச்சல் போட்டார்கள். ''டாக்டரை அழைத்து வந்து ஆளைப் பரிசோதியுங்கள். ஐயா புட்டி போட்டிருக்கிறார், அல்லது அவருக்குப் பைத்தியம் போல் இருக்கிறது!'' என்று ஒருவர் கிண்டல் செய்தார்.

டிரைவர் சற்றும் கோபித்துக்கொள்ளாமல், சிவப்பு விளக்குடன் ஓடிவரும் போர்ட்டரைச் சுட்டிக் காட்டினான். போர்ட்டர் இரைக்க இரைக்க வந்து, ''ஆண்டவன் அருளால் இன்று பெரிய விபத்துக்குத் தப்பினோம். ஸ்டேஷனில் மெயின் லயனில் கூட்ஸ் வண்டி நிற்கிறது; அதை அடுத்த தண்டவாளத்துக்குக் கொண்டுவர, காபின்மன் தண்டவாள இணைப்பை மாற்ற எவ்வளவோ முயன்றார். ஆனால் யந்திரத்தில் ஏதோ கோளாறு இருப்பதனால் அந்த இணைப்புப் பிரியவே இல்லை. அதனால்தான் விளக்கைத் தூக்கிக்கொண்டு ஓடி வந்தேன். நீங்கள் சடக்கென்று பிரேக் போடாமல் இருந்திருந்தால் இந்த வண்டி நேரே ஸ்டேஷனுக்குள் வந்து கூட்ஸ் வண்டியுடன் மோதியிருக்கும்!'' என்றான்.

''ஹா! என்ன ஆபத்து!'' என்று எல்லாரும் வியந்தார்கள்.

போர்ட்டர் மேலும் பேசினான்; ''அதோ பாருங்கள், அந்த இணைப்பு இருபதடி தூரத்தில்தான் இருக்கிறது. பிரேக் போடுவதில் சற்றுத் தாமதம் ஏற்பட்டிருந்தால் இரண்டு வண்டிகளும் மோதி இந்நேரம் பொடியாகியிருக்கும். அது மட்டுமா?'' என்று சொல்லி, அவன் எச்சிலை விழுங்கினான்.

''கூட்ஸ் வண்டியில் கிரசின் டாங்கிகள் நிரம்பியிருக்கின்றன. வண்டி மோதினால் அவை பற்றிக்கொண்டு தீ எங்கும் பரவியிருக்கும். மோதலில் தப்பித்துக்கொண்டவர்களுங்கூட இந்தத் தீயில் எரிந்துதான் போயிருப்பார்கள்'' என்று முடித்தான் போர்ட்டர்.

இதைக் கேட்டதும் பிரயாணிகளுக்கு ஒன்றுமே செய்யத் தோன்றவில்லை. பெண்கள் சிலர் திடுக்கிட்டு நின்றார்கள். இரண்டு தண்டவாளங்களும் தம்மை நேரா

கச் சாவின் வாயில் இழுத்துச் செல்வதற்கு இருந்ததை அவர்கள் அறிந்துகொண்டார்கள். இணைப்பின் அருகில் வண்டியை நிறுத்திய டிரைவரின் திறமையை எல்லாருமே போற்றினர்கள். அவனை முதலில் திட்டியவர்கள் இப்போது மன்னிப்புக் கேட்டார்கள்; சிலர் அவனுக்குப் பணமும் வேறு பொருள்களும் பரிசளிக்க முன் வந்தார்கள். ஆனல் அவன் அந்தப் பரிசுகளைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. சிவப்பு விளக்குடன் ஓடி வந்த போர்ட்டரை முதுகில் தட்டிப் பாராட்டலானன்.

ரெயிலில் எப்பொழுதுமே இத்தகைய விபத்துக்கள் நேர்கின்றன என்பதில்லை. என் அநுபவங்களைச் சொல்வதுதான் இந்தக் கட்டுரையின் நோக்கம். குமாஸ்தா வேலையில் அலுத்துப் போய், ஒரு நண்பனுடைய ஆலோசனையைக் கேட்டு, நான் இளமையில் இந்தத் துறையில் புகுந்தேன். அந்தக் காலத்தில் நம் நாட்டு இளைஞர்களுக்கு எஞ்சின் டிரைவர் வேலை கிடைப்பது அரிதாக இருந்தது. கஜகர்ணம் போட்டு நான் அந்த வேலையைப் பெற்றேன். டிரைவர்கள் பெருத்த சம்பளம் வாங்குவதையும் உல்லாசமாக வாழ்வதையுமே நான் முதலில் கண்டேன். இந்தத் துறையில் உள்ள சிரமங்களைப்பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாமல் இருந்தது.

ஆயினும் நாளடைவில் இந்தக் கஷ்டங்களை நேரில் பார்த்தேன். எஞ்சினின் கடகடவென்ற ஓட்டத்தினுலும் ஓசையினுலும் ஆட்டத்தினுலும் டிரைவரின் உடல் அசைந்துகொண்டே இருக்கிறது. பல ஆண்டுகள் இந்த அதிர்ச்சிக்கு உள்ளாவதனல் அவனுடைய நரம்புகள் தளர்கின்றன. வேலையிலிருந்து விலகும்போது அவன் பாதிப் பிணமாகிறன். சின்னஞ்சிறு இரும்புப் பீடத்தில் ஓயாமல் உட்கார்ந்து வேலை செய்வதனல், பல டிரைவர்களுக்குத் தீராத நோய்கள் உண்டாகின்றன. கால் தொங்கிக் கொண்டே இருப்பதனுல் சிலருக்குப் பாரிச வாயு வந்து, கால்கள் தொங்கலாடுகின்றன. மூக்கிலும் வாய்க்குள்ளும் புகை புகுந்து பலருக்கு மார்பு வலிக்கிறது. சிலருக்கு மனத்தில் பலவீனமும் ஏற்படுகிறது.

வேகமாக வண்டி ஓடுகையில் நடுவே ஒரு கைகாட்டியைப் பாராமல் இருப்பது சகஜம். அப்போது டிரைவருக்கு அச்சம் உண்டாகிறது. 'ஒரு வேளை கைகாட்டி விழாமல் இருந்ததோ? முன்னல் ஏதாவது வண்டி இருந்து, நாம் மோதினல் என்ன ஆகும்?'-இப்படி நினைத்ததும் நெஞ்சம் தளர்கிறது.

என் நண்பரான ஒரு டிரைவர் ஒரு தடவை வளைவில் போய்க் கொண்டிருந்தார். எதிரே கைகாட்டி சாய்ந்திருந்ததாகத் தெரிந்ததனல் அவர் வேகமாக வண்டியை விட்டார். வளைவுக்கு நடுவில் வந்தபோது திடீரென்று ஒரு சிவப்பு வெளிச்சம் அவர் கண்ணுக்குத் தெரிந்தது. உடனே அவரைப் பயம் பிடித்துக்கொண்டது. "என்ன அப்பனே, கைகாட்டி சாயாதிருக்கையில் வண்டியை விட்டுவிட்டாயே; இப்போது என்ன செய்வது?" என்று உதவியாளனிடம் சொல்லியபடியே அவர் தலை சுற்றி மூர்ச்சையாகி விழுந்துவிட்டார். இன்னும் இரண்டு மாதங்களில் அவர் ரிடையராவதற்கு இருந்தார். இந்தச் சிறு பிழையால் தமக்குக் கடைசி நாளில் கெட்ட பெயர் வருமே என்று அவர் நடுங்கினர். உதவியாளனும் ஃபயர்மனும் முகத்தில் தண்ணீர் தெளித்து அவரை எழுப்பி, "கைகாட்டி சாய்ந்துதான் இருக்கிறது. எதிர்ப் பக்கம் இருந்த வீட்டில் சிவப்பு விளக்குப் போட்டிருந்ததனல் நீங்கள் ஏமாந்துவிட்டீர்கள்" என்ற உண்மையைச் சொல்லி அவரைத் தேற்றினர்கள். கைகாட்டிக்கு அக்கம்பக்கத்தில் சிவப்பு அல்லது பச்சை விளக்குகள் இருந்தால், டிரைவர்கள் தூரத்திலிருந்து அவற்றைக் கண்டு ஏமாறுவதுண்டு.

ரெயில் வண்டிக்கு ஏதாவது விபத்து நேர்ந்தால் எல்லாருமே

டிரைவரைத்தான் பழிக்கிறார்கள். சாமானிய மக்கள் இருக்கட்டும்; ரெயில்வேயில் வேலை செய்யும் உத்தியோகஸ்தர்களுக்குக்கூட, டிரைவர்களின் வாழ்க்கையைப் பற்றிப் பெரும்பாலும் ஒன்றும் தெரிவதில்லை. என் நண்பரான கார்டு ஒருவர் ஒரு தடவை என் எஞ்சினுக்கு வந்தார். அது சரியான குளிர் காலம். 'இரண்டாம் வகுப்புப் பெட்டியில் குளிர் தாங்கவில்லை; எஞ்சினுக்குப் போனால் சூடாக, இதமாக இருக்கும்' என்று எண்ணி, அவர் என்னிடம் வந்தார்.

எஞ்சினில் அதைவிட அதிகமாகக் குளிர் நடுக்கும் என்பது அவருக்குத் தெரியாது; நான் சொன்னாலும் அவர் புரிந்துகொள்ள மாட்டார். ''சரி, வாருங்கள்'' என்றேன்.


காற்று உஸ்ஸென்று முகத்தில் வீசி அடித்தது. வண்டி, மணிக்கு அறுபது மைல் வேகத்தில் ஓடிக்கொண்டிருந்தது. என் நண்பருக்குக் குளிரில் பல் கிட்டியது. சிறிது தூரம் போவதற்குள், உடம்பைத் தூக்கித் தூக்கிப் போட்டது. 'அடுத்த ஸ்டேஷனில் என்னை இறக்கிவிடுங்கள்' என்று அவர் கெஞ்சினார். அரை மணி நேரத்துக்குள் அவர் இந்தப் பாடு பட்டார். குளிரையும் காற்றையும் மழையையும் தாங்கிச் சில சமயம் இருநூறு மைல் தூரம் நில்லாமல் ஓடும் எஞ்சின் டிரைவரின் நிலை என்னவாக இருக்கும் என்பதை அவர் அப்போதுதான் தெரிந்துகொண்டார்.

கோடைக் காலத்திலோ கேட்கவே வேண்டாம்! வெட்ட வெளியில் வண்டி ஓடுகிறது. நாலு புறத்திலிருந்தும் நெருப்புக் காற்று வீசுகிறது. இனி நூற்றைம்பது மைல் தாண்டித்தான் வண்டி நிற்கும். ஆதலால், எஞ்சினில் வெப்பம் குறையாமல் இருக்க அதில் நிலக்கரியை ஓயாமல் நிரப்ப வேண்டும். எரிக்கும் வெயிலில், டெண்டரில் உட்கார்ந்து, கரியை உடைக்க வேண்டும். 2500 டிக்ரி ஃபாரன்ஹீட் வெப்பத்தில் எஞ்சின் தீ எரிகிறது. அந்தத் தீயின் வேகத்தையும் எரிச்சலையும் தாங்கிக்கொண்டு டிரைவர் வண்டி ஓட்டுகிறான்.

மழைக் காலத்தில் மட்டும் என்ன வாழ்ந்தது! எங்கும் ஒரே மூட்டம். எதிரிலுள்ள விளக்கும் தெரிவதில்லை. மழை ஓயாமல் கொட்டுகிறது. டிரைவரின் ஆடைகள் நனைந்து தண்ணீர் சொட்டுகிறது; ஆடைகள் மீண்டும் உலர்ந்து மறுபடி நனைகின்றன. டிரைவருக்கு இவற்றையெல்லாம் கவனிக்கப் பொழுது ஏது? வண்டி ஓடுவதைத்தான் அவன் பார்க்க வேண்டும்.

இவ்வளவு தொந்தரவிலும் அவன் எல்லாப் பொறுப்பையும் ஏற்க வேண்டியிருக்கிறது. ரெயில்வே விபத்து நேர்ந்தால் உண்மையில் அவனைப்போலவே அதற்குப் பொறுப்பாளிகள் பலர் இருக்கிறார்கள். ஆயினும், அவர்கள் தப்பித்துக்கொள்ள முயலுகிறார்கள். வண்டியின் பாதுகாப்புக்கு உரியவர் கார்டு; அவர் பெயரிலிருந்தே இது தெளிவாகத் தெரிகிறது. வண்டி ஒரு ஸ்டேஷனிலிருந்து புறப்படும்பொழுது கைகாட்டி சாய்ந்திருந்தாலும், கார்டு சமிக்கை செய்தாலன்றி டிரைவர் வண்டியை விடமாட்டான். கைகாட்டி சாயாதிருக்கையில் டிரைவர் முன்னால் சென்றால், அல்லது ஏதாவது ஆபத்து இருப்பதாகத் தோன்றினால், கார்டு தாமே பிரேக் போட்டு வண்டியை நிறுத்த முடியும். அவருடைய 'காபினி'ல் இத்தகைய வசதி உண்டு. கார்டுக்கு இவ்வளவு பொறுப்பு இருந்தும் விபத்து விசாரணையின்போது அவரை விளக்கம் கேட்பது மிகவும் அரிது தான்.

ஒரு நாள் ஹாட்கியிலிருந்து ஒரு கூட்ஸ் வண்டி புறப்பட்டது. இரண்டு வண்டிக்குரிய எடையை (லோட்) அதில் ஏற்றினார்கள். ஒரு வண்டிக்கு எடை குறைவாக இருந்ததனால் மற்றொரு வண்டியின் எடையையும் சேர்த்து, ஸ்டேஷன்மாஸ்டர் நீண்ட வண்டித் தொடரைத் தயார் செய்தார்; அதற்கு இரண்டு



எஞ்சின்களும் பூட்டினார்: ஆனால் பின்னால் கோத்த தொடரின் 'பிரேக் பைப்'பை முன் தொடரோடு இணைக்க மறந்துவிட்டார். அப்படி இணைக்க வேண்டியது அவரது கடமை. ஆனால் எப்போதும்போல எல்லாம் சரியாக இருக்கும் என்று எண்ணினார். கார்டும் வண்டியில் ஏறினதும் 'வாக்குவம் பிரெஷ்'ரைச் சோதிக்கவில்லை. அவர் சீட்டியடித்ததும் டிரைவர் வண்டியை விட்டான்.

'லயன் க்ளியர்' கிடைத்திருந்ததனால் நடுவே பிரேக் போட வேண்டிய அவசியம் டிரைவருக்கு நேரவில்லை. பிறகு ஒரு ஸ்டேஷனில் சில பெட்டிகளைப் பிரித்துவிட வேண்டியிருந்ததனால் அவன் பிரேக் போட்டான்; பின்னால் இருந்த பாதித் தொடருக்குப் பிரேக்கே பிடிக்கவில்லை. அதனால் பயந்துபோய் அவன் வேகத்தைக் குறைத்தான். ஆனால் அவனுடைய துரதிருஷ்டம் பாருங்கள்; அந்த இடம் இறக்கமாக இருந்தது. வண்டி வசத்துக்கு வராது என்று தெரிந்ததும், அவன் அபாயத்தைக் குறிக்கும் 'கோடு விஸில்' கொடுத்தான் நீண்ட கூட்ஸ் வண்டி 'அபாய விஸில்' கொடுப்பதைக் கேட்ட ஸ்டேஷன் மாஸ்டர், 'பெட்டிகளைப் பிரிப்பது கிடக்கட்டும்; வண்டியை இங்கு நிறுத்தினாலே விபத்து' என்று அறிந்து, உடனே தண்டவாள இணைப்புகளை மாற்றி, ஸைட் தண்டவாளத்திலிருந்து மெயின் தண்டவாளத்துக்கு வண்டியை விட்டார். கூட்ஸ் ஷெட்டுக்குப் போக வேண்டிய வண்டி, பிளாட்பாரத்தின் அருகில் தடதடவென்று ஓடுவதைக் கண்ட மக்கள் வியந்தார்கள்.

நல்ல வேளையாக அந்த வண்டி, இறக்கத்தினால் வந்த வேகம் தணிந்ததும் மெதுவாக ஓடியது. அடுத்த ஸ்டேஷனில் இருந்த ஸ்டேஷன் மாஸ்டர் வண்டியை ஸைட் தண்டவாளத்துக்கு மாற்றியதும், அது அங்கே நின்றது. அன்று மெயின் லயனில் பாசஞ்சரோ மெயிலோ அப்பொழுது இல்லாதது நல்லதாயிற்று. இல்லாவிட்டால் விபத்து நேர்ந்து, அந்தப் பழி டிரைவரின் தலையில் சுமந்திருக்கும். வண்டியை இணைத்த ஸ்டேஷன் மாஸ்டரையோ, வாக்குவம் பிரெஷரைச் சோதிக்காத கார்டையோ யாரும் கவனித்திருக்க மாட்டார்கள்.

சமயத்தில் பிரேக் பிடிக்காவிட்டால் எத்தனையோ தொந்தரவுகள் நேரும். ஒரு வேடிக்கையான நிகழ்ச்சி என் நினைவுக்கு வருகிறது. துத்னி என்ற ஸ்டேஷனில் நான் ஓட்டிவந்த வண்டி நிற்க வேண்டும். ஸ்டேஷன் அருகில் வந்ததும் பிரேக் போட்டேன்; பிடிக்கவே இல்லை. போதாக்குறைக்கு அது இறக்கமான இடம். வண்டி வேகமாக ஓடி, ஸ்டேஷனைத் தாண்டிவிட்டது. 'விபத்து நிச்சயம்' என்று நினைத்த கார்டு நடுங்கிப் போய், படுக்கைக்குள் தம்மைச் சுற்றிக்கொண்டு, விபத்திலிருந்து தப்புவதற்காக வண்டிக்கு வெளியே குதித்துவிட்டார். இறக்கம் முடிந்ததும் வேகம் தணிந்து வண்டி தானாக நின்றது. பாவம், அந்தக் கார்டை எல்லாரும் பரிகசித்தார்கள்; விழுந்ததனால் லேசான காயம் வேறு!

வண்டி பயமில்லாமல் ஓடுவதற்குக் கைகாட்டி மிகவும் முக்கியம். ஆபத்தைத் தெரிவிக்கும் கைகாட்டிகளில் கோளாறு இருந்தால் விபத்து நேருவது இயல்பு. ஆபத்துக் கைகாட்டிகள் தொலைவிலிருந்து பளிச்சென்று தெரிய வேண்டும். அதிலுள்ள விளக்குகளை அடிக்கடி துடைத்துச் சுத்தம் செய்ய வேண்டும். ஆனால் எப்போ

தும் இது நடக்கிறது என்பதில்லை. டிரைவர்கள் ஓயாமல் புகார் செய்தால் அதிகாரி மேற்பார்வை செய்ய வருவார். ஆனால் அவர் வரும் தேதி முன்னமே தெரிந்துவிடுவதனால், அன்று விளக்குகளைத் துடைத்துத் திரிகளைச் செம்மையாகக் கத்தரித்துப் பளிச்சென்று வைத்திருப்பார்கள். 'டிரைவர்களின் புகாரில் ஒன்றும் அர்த்தமே இல்லை' என்று அதிகாரி முடிவு கட்டுவார்.

கைகாட்டிகளைச் சாய்க்கும் காபின்மனுடைய தவறுகளாலும் அவனுடைய உதவியாளர்களின் அஜாக்கிரதையினாலும் சில சமயம் பெரிய விபத்துக்கள் நேரக்கூடும். ஒரு வண்டி போனதும் அதற்குக் கொடுத்த கைகாட்டி அப்படியே சாய்ந்திருப்பதைக் காபின்மன் கவனிக்காமல் இருப்பான். கைகாட்டி விழுந்திருப்பதைக் கண்டு, அடுத்து வரும் வண்டியின் டிரைவர் நேராக வண்டியைச் செலுத்திச் செல்வான். இதற்குள் ஏதாவது விபத்து நேர்ந்தால், காபின்மன் உடனே கை காட்டியை மேலே இழுத்துக்கொள்வான். தான் ஸிக்னல் கொடுத்திருந்தும் டிரைவர் வண்டியை ஓட்டியதாக அவன் சாதிப்பான். ஸிக்னல் கொடுத்திருந்தது என்று டிரைவரால் நிரூபிக்க முடிவதில்லை; அதனால் அவன் தண்டனைக்கு ஆளாகிறான். இப்படி எத்தனையோ டிரைவர்கள் மாட்டிக்கொண்டதுண்டு.

நானே இத்தகைய ஒரு விபத்தில் சிக்கினேன். ஒரு நாள் மாலையில் ஸோலாப்பூரிலிருந்து பாசஞ்சர் வண்டியை ஓட்டிச் சென்றேன். அன்று வண்டி ஸோலாப்பூரிலேயே மிகவும் தாமதமாக வந்திருந்தது. சரியான மழை; எங்கும் ஒரே வெள்ளக்காடு. கண்ணுக்கு முன்னால் ஒன்றுமே தெரியவில்லை; அவ்வளவு மூட்டம். மிகவும் ஜாக்கிரதையாக, குல்பர்க்கா வரையில் வண்டியைக் கொண்டு போனேன்.

மழையிருட்டாக இருந்தாலும், ஸ்டேஷனருகில் வந்தபோது கை காட்டி மரம் சாய்ந்திருந்ததைப் பார்த்தேன். வண்டியை ஸ்டேஷனுக்குச் செலுத்தினேன். என் வண்டியை முதல் லூப் லயனுக்குத் திருப்பினேன். ஸ்டேஷன் தொலைவில் இருந்தது. தண்டவாளம் வளைந்து செல்லும் இடம். வண்டி வேகமாக ஓடாவிட்டாலும், சிறிது தூரம் சென்றதும் மற்றொரு வண்டி எதிரே நிற்பதைத் திடீரென்று கண்டேன். நான் பலங்கொண்ட மட்டும் பிரேக் போட முயன்றேன். ஆனால் என்ன பயன்?


முன்னால் இருந்த வண்டியின் கார்டும் ஜாக்கிரதையாக இருந்திருக்க வேண்டும். வண்டி அங்கே நின்றதுமே அவன் இறங்கி, தன் பின்னாலுள்ள இணைப்பைப் பிரித்திருக்கிறார்களா என்று பார்த்திருக்க வேண்டும். பார்த்து, அபாய அடையாளமாகத் தண்டவாளத்தில் 'டெடோனேடர்' (சிறு வெடி) வைத்திருக்க வேண்டும். அவன் அதைச் செய்யவில்லை.

பின்னால் அதே லயனில் வந்த என் வண்டி, பிரேக் போட்டும் பயன்படாமல், அந்த வண்டியின் மேல் மோதியது. வானம் இடிந்து விழுந்ததுபோல, பயங்கரமான சத்தம் கேட்டது. நானும் ஃபயர்மனும் வெளியே பறந்தோம். முன்னால் இருந்த வண்டியின் பின் பெட்டிகள் பல, பொடிப் பொடியாயின. எஞ்சினும் பல பகுதிகளில் கெட்டுப் போயிற்று; பெட்டிகளும் உடைந்தன. நான் பிரேக் போடாமல் இருந்திருந்தால், முன்னால் நின்ற வண்டிக்கு இன்னும் எவ்வளவோ சேதம் ஏற்பட்டிருக்கும். அந்த வண்டியின் கார்டு இறந்துவிட்டான். என் வண்டியிலும் பல பிரயாணிகள் காயம் அடைந்தார்கள். இப்படி விபத்து நேர்ந்ததைப் பார்த்த அக்கணமே காபின்மன் மிகவும் தந்திரமாகக் கைகாட்டியை மேலே இழுத்துத் தன் பொறுப்பிலிருந்து தப்பித்துக்கொண்டான். வண்டியை வேகமாக விட்டதற்காகவும், கைகாட்டி சாயாமலிருந்தும் வண்டியை ஸ்டேஷனில் செலுத்தியதற்காகவும் என்மீது வழக்குத் தொடுத்தார்கள்.

விசாரணையில் நான் குற்றமற்றவன் என்று ருஜுவாகிவிட்டது.

சில காபின்கள் மிகத் தொலைவில் மனித நடமாட்டமில்லாத காட்டில் இருப்பதுண்டு. இத்தகைய காபின்களில் இரவில் வேலை செய்வது சிரமந்தான். கூடமாடப் பேசவோ பொழுது போக்கவோ யாரும் இல்லாமையால் காபின்மன் அலுத்துப் போய்த் தூங்கி விடுவான். அதனால் தண்டவாள இணைப்புக்கள் மாற்றப்படாமல் அப்படியே இருக்கும். இதனாலும் பல விபத்துக்கள் நேர்வதுண்டு. இப்படி இணைப்பை மாற்றாததனால் என் நண்பர் ஒருவர் விபத்தில் மாண்டார். பஞ்சாப் மெயிலில் அவருக்கு அப்பொழுது வேலை. ஸாவ்தா ஸ்டேஷனருகில், முன் வண்டிக்கு மாற்றிய இணைப்பு அப்படியே இருந்தது. தடதட வென்று வேகமாகப் பாய்ந்துவந்த பஞ்சாப் மெயில், பக்கத்தில் நின்ற கூட்ஸ் வண்டிமேல் மோதி, இரண்டு வண்டிகளும் படுநாசமாயின.

ரெயில் விபத்துக்கு இப்படி எத்தனையோ வகையான காரணங்கள். டிரைவரின் அஜாக்கிரதையினால் மட்டும் விபத்து ஏற்படுகிறது என்பதில்லை. கூட்ஸ் வண்டியில் அறுபது எழுபது பெட்டிகளை மாட்டுகிறார்கள். ஏற்றமான இடத்தில் இவ்வளவு பெட்டிகளையும் இழுத்துச் செல்ல எஞ்சினுக்குச் சக்தி இருப்பதில்லை. இந்தக் கஷ்டமான இழுப்பில் ஏதாவது ஒரு பெட்டியின் 'கப்ளிங்' அறுந்து, முன்னால் இருந்த பெட்டிகள்



எஞ்சினோடு போய்விட, மற்றவை பின்னால் நின்றுவிடும்!

இப்படித்தான் ஒரு தடவை நீண்ட கூட்ஸ் தொடர் ஒன்று, ஏற்றத்தில் போய்க்கொண்டிருந்தது. அவ்வளவு பளுவை இழுத்துச் செல்ல எஞ்சினால் முடியவில்லை. ஆதலால் டிரைவர், பின்னால் பாதிப் பகுதியைத் துண்டித்துவிட்டு, முற்பகுதியை எஞ்சினோடு இழுத்துச் செல்லத் தீர்மானித்தான். வழியில் விட்ட பெட்டிகளைக் காத்து, விபத்து நேராமல் பார்த்துக்கொள்வது கார்டின் பொறுப்பு. சட்டப்படி அவர் அந்தப் பின் பெட்டிகளோடு இருந்து, பின்னால் சென்று தண்டவாளத்தில் அபாய அறிவிப்பாக 'டெடோனேடர்' வைத்திருக்க வேண்டும். ஆனால் இந்தப் பெரியவர் தமது பொறுப்பை உணராமல் பின் பெட்டிகளுக்கு யாதொரு பாதுகாப்பும் ஏற்படுத்தாமல், டிரைவரோடு முன் பாதியில் போய்விட்டார்.

அந்தப் பாதி கூட்ஸ் அடுத்த ஸ்டேஷனை விட்டுச் சென்றதும், வண்டி போய்விட்டதென்று ஸ்டேஷன் மாஸ்டர் நினைத்தார். அந்த வண்டிக்கு இத்தனை பெட்டிகள் பூட்டியிருக்கிறார்கள் என்பது அவருக்குத் தெரிய இடமில்லை; 'கூட்ஸ்தான் போய்விட்டதே' என்று கருதி, பின்னால் அதே தண்டவாளத்தில் வந்த மெயிலுக்கு அவர் 'லயன் க்ளியர்' கொடுத்துவிட்டார்.

இரவு வேளை; காட்டு வழி; 'லயன் க்ளியர்' கிடைத்திருக்கிறது. வழியில் இருந்த கூட்ஸ் பெட்டிகளோ ஒரு வளைவில் இருந்தன; ஆதலால், டிரைவரின் கண்ணுக்கு அவை தென்படவில்லை. வண்டி கிஜு கிஜு கிஜு கிஜு வென்று ஓடி வந்தது. கூட்ஸ் பெட்டிகளின் அருகில் வந்ததும், மெயிலை நிறுத்த டிரைவரால் முடியவில்லை. என்ன நடக்கப் போகிறதோ என்று அவன் நினைக்கு முன்பே, மெயில்வண்டி கூட்ஸின் மேல் பாய்ந்தது. பெட்டிகள் இங்கும் அங்கும் சிதறின. மெயில் எஞ்சின் துண்டு துண்டாயிற்று.

மெயில் பெட்டிகள் இருபுறமும் பறந்து, பிரயாணிகள் நசுங்கிச் செத்தனர். எஞ்சின் டிரைவரும் அவனுடைய உதவியாளரும் எஞ்சின் யந்திரம் ஒன்றில் எக்கச் சக்கமாகச் சிக்கி இறந்தார்கள். அந்த யந்திரத்தை அறுத்துத்தான் அவர்களின் பிணங்களை வெளியேற்ற வேண்டியிருந்தது.

முதலில் நான் ஃபயர்மனாக இருந்தபோது பயங்கரமான விபத்து ஒன்று நேர்ந்தது. ஆனால் நல்ல வேளையாக அதில் யாருக்கும் காயம் படவில்லை. ப்ராம்ஜி என்று அந்தக் காலத்தில் பிரசித்த டிரைவர் ஒருவர் இருந்தார். அவரோடு நாக்பூர் எக்ஸ்பிரஸில் நான் வேலை பார்த்தபோது, போர்காம் அருகில் இந்த விபத்து நிகழ்ந்தது. அப்பொழுது எக்ஸ்-பி டைப் எஞ்சின்கள் புதியனவாக வந்திருந்தன. இந்த எஞ்சின்கள் வளைவில் போகும்போதும் வேகமாக ஓடும்போதும் இருபுறமும் ஆடும். தொலைவிலிருந்து பார்க்கும்போது, பிடரியை ஆட்டிவரும் வேட்டை நாய்போல இருந்ததனால், இவற்றை 'ஹண்டிங் டைப் எஞ்சின்' என்றும் சொல்லி வந்தார்கள்.

அன்று வழியில் தாமதமாகி விட்டதனால், நேரத்தைச் சரிப்படுத்துவதற்காக, ப்ராம்ஜி வண்டியைச் சிறிது துரிதப்படுத்தினார். அந்தப் பளுவான எஞ்சின் இருபுறமும் ஆடலாயிற்று. பளுவும் ஆட்டமும் சேர்ந்ததனால், எஞ்சின் சக்கரத்தின் கீழிருந்த தண்டவாளங்கள் விரிந்தன. எஞ்சின் பத்திரமாகச் சென்றபோதிலும், தண்டவாளம் விரிந்ததனால், பின்னால் வந்த டெண்டரும் பெட்டிகளும் தரையில் இறங்கி, அப்படியே இழுபட்டன. சிறிது நேரத்தில் வண்டிச் சக்கரங்கள் யாவும் தரையில் அமுங்கி, வண்டி நின்றுவிட்டது. சக்கரங்கள் தரையில் இறங்கியதுமே, பிரயாணிகளுக்கு அதிர்ச்சி ஏற்பட்டது; அவர்கள் விழுந்து எழுந்தார்கள். ஏதோ ஆபத்து என்று அவர்கள் கூச்சலிட்டார்கள். வண்டி நின்றதுமே அவர்கள் தடதடவென்று வெளியே குதித்து, என்ன நடந்தது என்றுகூடப் பார்க்காமல், காட்டுக்குள் ஓட்டம் பிடித்தார்கள்!

தண்டவாளத்தின் கேஜ் (குறுக்களவு) மாறுவதுபோலவே வண்டிச் சக்கரத்தின் கேஜ் மாறினாலும் வண்டிகள் விழுந்துவிடும். ஓயாமல் ஓடித் தேய்வதனால் வண்டிச் சக்கரத்தின் கேஜ் மாறும். இப்படி மாறிய பெட்டிகள், சிறிது அகன்ற தண்டவாளத்தில் செல்லும்போது, தரையில் நழுவி விழும். இதனால் விபத்து ஏற்படுவதுண்டு. ஆதலால் தண்டவாளத்தின் கேஜ் எப்போதும் மாறாமல் இருக்கிறதா என்பதை ரெயில்வேக்காரர்கள் கண்ணும் கருத்துமாகக் கவனிக்கிறார்கள். பகலில் பல தடவை குறுக்கும் நெடுக்கும் போய்ப் பார்க்கிறார்கள். இரவிலும் இரண்டு பேர், இரண்டு ஸ்டேஷன்களுக்கிடையில் போய் வந்து, ரெயில்வே லயனைப் பாதுகாக்கிறார்கள்.

வண்டிச் சக்கரங்களின் கேஜ் மாறுபட்டதனால், மாடே என்னும் ஊரில் விபத்து ஏற்பட்டது. அந்தத் தொடரில் நாற்பது பெட்டிகள் இருந்தன. முதல் இருபது பெட்டிகள் தண்டவாளத்தில் நேராகச் சென்றுவிட்டன; இருபத்தோராவது பெட்டி ஓர் இடத்துக்கு வந்ததும், சக்கரங்களின் கேஜ் மாறுபட்டதனால் தரையில் இறங்கியது. பளுவான புதிய டபிள்யூ-ஜி டைப் எஞ்சின், அந்த நிலையிலேயே தொடரை இழுத்துச் சென்றது. அந்தப் பெட்டி கோணல் மாணலாக இழுபட்டமையால், அதற்கு அடுத்த மூன்று பெட்டிகள் அதிர்ச்சியினால் தரையில் இறங்கின. அப்போதுதான் எஞ்சினில் அதிர்ச்சி ஏற்பட்டது; பெட்டிகள் தண்டவாளத்தில் இறங்கியதை டிரைவர் உணர்ந்து, வண்டியை நிறுத்தினான்.

வண்டி தண்டவாளத்தை விட்டு இறங்குவதுபற்றி நாம் அடிக்கடி பத்திரிகைகளில் படிக்கிறோம். இப்படி வண்டி இறங்குவதனால் ஆபத்து நேரிடாவிட்டாலும், ரெயில்வேக்குப் பல வகையில் நஷ்டங்கள் விளைகின்றன. சில

நாளைக்கு முன் இப்படித்தான் ஒரு பெட்டி, தண்டவாளத்தை விட்டு விலகியது. ஆனால் எஞ்சின் மிகவும் சக்தி வாய்ந்ததாக இருந்ததனால், யாதகிரியிலிருந்து நாராயண்பேட் வரையில், சுமார் பன்னிரண்டு மைல் தூரம் அப்படியே தண்டவாளத்தில் இழுபட்டுச் சென்றது. வண்டிச் சக்கரத்திலுள்ள கூரான முனைபட்டு, அவ்வளவு தூரத்துக்கும் தண்டவாளத்தின் கீழுள்ள மர 'ஸ்லீப்பர்'களும் 'டைபார்ஸு'ம் (Tie bars) அறுபட்டுப் போயின!

தண்டவாளத்தில் தாராளமாக வளைய வரும் மாடுகளும் கழுதைகளும் சில சமயம் விபத்துக்குக் காரணமாகின்றன. விசில் கொடுத்தாலும், அபாயம் இருப்பதை அவை உணருவதில்லை. சொல்லி வைத்தாற்போல, வண்டி வரும்போது அவை குறுக்கே பாய்கின்றன. அவை மாட்டிக்கொள்வதனால், வண்டி தண்டவாளத்திலிருந்து விலகும். வண்டியில் நசுங்கிய மாட்டின்மேல் கழுகுகள் வட்டமிடும். பக்கத்தில் எஞ்சின் வந்தாலும் அவை நகருவதில்லை. சில சமயம் அவையும் நசுங்கி, வண்டி பெயர்வதுண்டு. எலெக்டிரிக் எஞ்சினுக்கு முன்னாலுள்ள ஜன்னலில் ஒரு கழுகு பாய்ந்ததனால் கண்ணாடி உடைந்து, டிரைவரின் முகத்தில் காயம் பட்ட செய்தியை நீங்கள் படித்திருப்பீர்களே!

என் அநுபவத்தில் நிகழ்ந்த வேடிக்கைச் சம்பவம் ஒன்றைச் சொல்லுகிறேன். ஸோலாப்பூருக்கு அருகில், என் வண்டியின் முன்னால் ஒரு கழுதை வந்தது. வண்டி வேகமாகப் போய்க்கொண்டிருந்தது. ஆகையால், கழுதை அடிபட்டுத் தொலைவில் போய் விழும் என்று நினைத்தேன். ஆனால் அப்படி நடக்கவில்லை. அந்தக் கழுதை எஞ்சினின் 'கவ் காட்சரி'ல் மோதி, எதிரிலிருந்து அடித்த கடுமையான காற்றினால் அப்படியே அமுங்கிக் கிடந்தது. அது செத்துப் போய் அங்கு விழுந்து கிடக்கிறது என்று நினைத்தேன். ஆனால் அது அந்த வண்டியில் சுகமாக யாத்திரை செய்தது! ஸோலாப்பூர் ஸ்டேஷனில் வண்டி நுழைந்தபோது எல்லாரும் வேடிக்கையைப் பார்த்துச் சிரித்தார்கள். என் முகத்தில் கரி அதிகமாகப் படிந்திருக்கிறதோ என்று எண்ணினேன். ஆனால் வண்டி நின்றதும், எஞ்சினில் அமுங்கிக் கிடந்த கழுதை ஒரே குதியாகக் குதித்து நடந்தது. ஸ்டேஷனில் மக்களின் கோலாகலத்தைப் பார்க்க வேண்டுமே!

இப்படி எவ்வளவோ தொல்லைகள் இருந்தாலும், டிரைவர் ஜாக்கிரதையாகவும் சமயோசிதமாகவும் துணிச்சலாகவும் நடந்துகொண்டால் விபத்துக்களைத் தவிர்க்கக் கூடும். ரெயில்வே லயனுக்கு இருபுறமும் இருக்கும் பிரதேசங்கள் அவனுக்கு நன்கு பழக்கமானவை. ஆதலால், இருட்டிலும் புயலிலும் அவன் வண்டியைப் பாதுகாப்புடன் செலுத்த முடியும். தான் போக வேண்டிய தூரத்தையும், எஞ்சினிலுள்ள நீராவிச் சக்தியின் அளவையும் அவன் பார்த்துக்கொள்கிறான். நீராவிச் சக்தியை அவன் சிக்கனமாகச் செலவழித்தால், வழியில் தங்கவேண்டிய அவசியம் நேராது. இறக்கம் வரும்போது அவன் அந்தச் சக்தியை மிகவும் குறைக்கிறான். ஏற்றம் வரும்போது, பின்னாலுள்ள அறுபது பெட்டிகளை இழுப்பதற்கு ஏற்றபடி அவன் எஞ்சினை முன்னமே தயார் செய்கிறான். தண்ணீரையும் சிக்கனமாகப் பயன்படுத்துகிறான். வாராவதியில் அவன் வண்டியை நிறுத்த மாட்டான். ஏனெனில், இப்படி நிறுத்துவதனால் இரவில் பிரயாணிகள் கீழே இறங்கிப் பார்க்கிறார்கள்; வாராவதியைப் பற்றி அவர்களுக்கு முன்னறிவு இல்லாததனால் பலர் ஆற்றில் விழுந்து மடிகிறார்கள். இவையெல்லாம் மேலுக்குச் சிறிய விஷயங்களாகத் தோன்றினாலும் மிகவும் முக்கியமானவை.

ஒரு நாள் ராயச்சூர் மெயிலை நான் ஓட்டிவந்தேன். யாதகிரி ஸ்டேஷனருகில் இரவு முழுவதும் தங்கவேண்டி வருமோ என்று

தோன்றிற்று. அது அடைமழைக் காலம்; இரண்டு நாளாக விடாத மழை. யாதகிரி ஸ்டேஷனிலிருந்து மூன்று மைல் தொலைவில், கிருஷ்ணாவில் கலக்கும் பெரிய கால்வாய் ஓடுகிறது. மழைக்காலத்தில் அது ஒரு மைல் அகலம் இருக்கும். அதன்மேலுள்ள வாராவதியில் தண்ணீர் ஏறியிருந்தது. நான் அந்த வாராவதியருகில் வந்தபோது, தண்டவாளத்துக்கு மேல் ஒரு சாண் உயரம் தண்ணீர் ஓடியது. தண்டவாளம் சரியாக இருக்கிறதா என்பதை நான் எப்படி அறிந்துகொள்வது? வாராவதியில் வண்டியை விடுவதும் ஆபத்து. தண்டவாளம் தண்ணீரில் அடித்துச் சென்றிருந்தால் என்ன ஆகும்?

ஆனால் அந்தப் புயலில் வாராவதியருகில் நீண்ட நேரம் நிற்பதும் ஆபத்துக்கு இடமானதுதான். வெள்ளம் வடியுமட்டும் அங்கு நின்றால், எஞ்சினிலுள்ள நீராவிச் சக்தியும் கரியளவும் தண்ணீரளவும் குறைந்துவிடும். பசியிலும் தாகத்திலும் மக்கள் துன்புறுவார்கள். இன்னும் எவ்வளவோ தொந்தரவு!

நான் மெதுவாக வாராவதி மேலுள்ள தண்ணீரைக் கவனித்துப் பார்த்தேன். வெள்ளம் சளசளவென்று வந்து தண்டவாளங்களில் மோதும்போது, நீண்ட தூரம் நேரான நீர்க்கோடு எழும்புவதைக் கண்டேன். தண்டவாளம் சரியாகத்தான் இருக்கிறது என்பதை அறிந்து, அந்தக் கோட்டைக் கவனித்துக்கொண்டே, மெதுவாக வண்டியை விட்டேன். வாராவதியைப் பத்திரமாகத் தாண்டிவிட்டேன்!

ரெயில்வே எஞ்சின் டிரைவருடைய வாழ்க்கையில் இப்படி எத்தனையோ துன்பங்கள், எத்தனையோ ஆபத்துக்கள்! விபத்து நேர்ந்தால் எல்லார் கோபமும் சாபமும் அவன் மேல்தான் விடிகின்றன. அவனது சிரமம் பற்றி யாருக்கும் அக்கறை இருப்பதில்லை.

எனக்குத் தெரிந்த இளைஞனான ஒரு டிரைவரைப்பற்றிச் சொல்லுகிறேன். அவன் காலையில் விக்டோரியா டெர்மினஸிலிருந்து புறப்படும் வண்டியை இகத்புரி வரையில் கொண்டு செல்ல வேண்டும். காலையில் விக்டோரியா டெர்மினஸில் அந்த வண்டிக்குத் தயாராக வருவதற்கு அவன் முந்திய நாள் இரவு பன்னிரண்டு மணிக்கு வீட்டை விட்டுப் புறப்பட வேண்டியிருக்கிறது. பம்பாயில் இடம் கிடைக்காமையால் அவன் லோணாவலாவில் இருக்கிறான். டிரைவர்களுக்கு ரெயில்வேயில் வீடு கொடுப்பதில்லை. இந்த நிலையில் அவன் இரவு முழுவதும் வண்டியில் பாதித் தூக்கம் தூங்கிவிட்டுக் காலையில் வேலைக்கு வருகிறான். தன் வண்டியை அவன் இகத்புரியில் விட்டு, மற்றொரு வண்டியை அங்கிருந்து விக்டோரியா டெர்மினஸுக்குக் கொண்டு வருகிறான். தன் வேலை முடிந்ததும் அவன் அடுத்தபடி கிடைக்கும் வண்டியில், லோணாவலாவுக்குத் திரும்பி வீட்டுக்கு வருகிறான். இவ்வளவு தொல்லையில் அவன் உடல்நிலையும் மனநிலையும் எப்படி இருக்குமென்று சொல்லத் தேவையில்லை.

எஞ்சின் டிரைவர், சமூகத்தோடு சேர்ந்து வாழ முடிவதில்லை; அவ்வளவேன்: குடும்பத்தாரோடு சுகமாக வாழவும் அவனால் முடிவதில்லை. அவன் வேலை செய்யும் நேரம் காலையும் பகலும் மாலையும் இரவுமாகக் கண்டபடி மாறிக்கொண்டே இருக்கும். அவனுக்கு நல்ல தூக்கமோ ஓய்வோ கிடையாது. நூறு அல்லது இருநூறு மைல் தூரம் வண்டியை ஓட்டி வந்ததும், அவன் 'ரெஸ்ட் ஹவுஸி'ல் ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. 'ரெஸ்ட் ஹவுஸ்' ஸ்டேஷன் எல்லைக்குள்தான் இருக்கிறது இரவு முழுவதும் பெட்டிகளை இணைக்கும் எஞ்சின்கள் குறுக்கும் நெடுக்கும் ஓடும். காதைப் பிளக்கும் அதன் கூக்குரலிலும் தடதடச் சத்தத்திலும் தூக்கம் வருவதேது? பாதி கண்ணயர்ந்த நிலையில் எழுந்திருந்து, டிரைவர் மீண்டும் எஞ்சினில் ஏறுகிறான். இப்படி இருக்கிறது அவன் வாழ்க்கை.

# என்னைக் கேளுங்கள்

காப்டன் என். சேஷாத்திரிநாதன்

வைத்தியம், சுகாதாரம், ஆரோக்கியம் இவைபற்றி ‘மஞ்சரி’ வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு இயன்றமட்டும் பதிலளிக்க இந்த டாக்டர் இசைந்திருக்கிறார். இவர் வைத்தியத் துறையில் கல்வியும் அநுபவமும் நிறைந்தவர்; ரத்த பரிசோதனை நிபுணர்; கிண்டி இன்ஸ்டிட்யூட் அதிகாரியாக இருந்தவர். நோயுள்ளவரின் தனித்தனி நிலையை நேரில் கவனித்தே டாக்டர் வைத்தியம் செய்ய வேண்டும். ஆகவே, இதில் வரும் பதில்களைப் பொதுவாகக் கொள்ளலாமே தவிர, வைத்தியமே இவற்றைக் கொண்டு செய்துகொள்ளலாம் என்று நண்பர்கள் நினைக்கக் கூடாது.

ஆர். ராமசுவாமி, ஹார்விபட்டி, மதுரை.

கேள்வி: மூன்று வருஷங்களுக்கு முன்பு தொண்டையிலிருந்து ரத்தம் வந்தது. திரும்பவும் ரத்தம் அதேபோல் சமீபத்தில் வந்தது. இது க்ஷயரோகம் என்று டாக்டர்கள் கூறி வைத்தியம் செய்தார்கள். ஆனால் இன்னமும் இந்தத் தொல்லை இருக்கிறது. தை மாதம் திருமணம் செய்துகொள்ளலாமா?

விடை: வைத்தியத்தை முற்றும் செய்துகொண்ட பிறகு - ‘கொஞ்சமும் இருமல் இல்லை; மற்றும் வைத்திய பரிசீலனை செய்ததில் நோய் முற்றும் குணமாகிவிட்டது’ என்று டாக்டர்கள் சொன்னபிறகு - திருமணம் செய்துகொண்டால் நலம்.


எஸ். தாமரையம்மாள், சேணங்கோட்டை.

கே: வயசு 16. எனக்குச் சின்ன வயசிலிருந்து காமாலை. இதனால் என் உடல் வளர்ச்சி குறைந்துவிட்டது. முகத்தில் வெண்மை நிறம் தோன்றுகிறது.

வி: தாமரையம்மாள் சொல்வதைப் பார்த்தால், அவளுக்கு முதலில் காமாலை தோன்றியிருந்தாலும் இப்போது சோகை மட்டுமே ஏற்பட்டிருக்கிறது. இந்த வயசில் சோகை ஏற்படுவதற்குப் போஷாக்கு இல்லாததே காரணம். தினம் கோழிமுட்டை சாப்பிடலாம்; கோதுமைப் பண்டங்கள் சாப்பிடலாம்; கீரை வகைகளைச் சேர்த்துக்கொள்ளலாம். அயம் கலந்த டானிக் மருந்தையும் அருந்தலாம்.

ராமசுவாமி, புதூர்.

கே: ஜுலை ‘மஞ்சரி’யில், “தைராயிட் சுரப்பி தக்க அளவு சுரக்காது போனால் தாகம் ஏற்படும்; சருமம் தடிக்கும்; மந்தமாக இருக்கும்; உடலும் உள்ளமும் வளர்ச்சியற்றுப்போம்” என்று கூறியிருக்கிறீர்கள். இந்தக் குறைகளெல்லாம் எனக்கு இருப்பதால், நான் என்ன மருந்து சாப்பிடலாம்? என் வயசு 20.



வி: இந்தக் கேள்வியில் கண்ட விவரத்தில் ஒரு தவறு இருக்கிறது. 'தக்க அளவு தைராயிட் சுரப்பி சுரக்காது போனால், தாகம் அதிகம் ஏற்படும்' என்று ஜூலை 'மஞ்சரி'யில் நான் சொல்லவில்லை. இந்தக் கேள்விக்கும் ஜூலை 'மஞ்சரி'யிலேயே விடை இருக்கிறது. நண்பர் ராமசுவாமி அதையே கூர்ந்து படித்துத் தெரிந்துகொள்ளலாம்.

ஜகந்நாதன், பெரியகுளம்.

கே: வயசு 18. உயரம் 5 அடி 4 அங்குலம்; எடை 84 பவுண்டு; மார்பு அளவு 28 அங்குலம். வயசுக்குத் தகுந்தாற்போல் உடல் பருமன் இல்லையென்றும் ஒல்லியாயிருக்கிறேன் என்றும் நண்பர்களும் வீட்டில் உள்ளவர்களும் கூறுகிறார்கள்.

எச்சில் துப்பும் பழக்கம் அடிக்கடி இருந்துகொண்டு வருகிறது. இதனால் கெடுதல் உண்டா? நிறுத்த என்ன வழி?

உடல் பருக்கவும் வளரவும் என்ன உபாயம்?

வி: இந்த வயசில் அநேகம் பேர் ஒல்லியாகவே இருப்பார்கள். பிறர் சொல்வதற்காக உடல் ஆரோக்கியத்தைக் கெடுத்துக் கொள்ளக்கூடாது. நன்றாக விளையாட வேண்டும்; பசித்துச் சாப்பிட வேண்டும்.

எச்சில் துப்பும் பழக்கத்தால் பிறருக்குத்தான் கெடுதல்; துப்புகிறவர்களுக்கு ஒரு கெடுதலும் இல்லை. ஆயினும், அதுகூட ஏதாவது வியாதியின் குறியாக இருக்கலாம். வெறும் பழக்கமாயிருந்தால் அதை நிறுத்தி விடவேண்டுமென்று உள்ள உறுதி கொண்டு நிறுத்திவிட முடியும்.

பிரதாபன், திருமங்கலம்.

கே: என்றாவது ஒரு நாள் நான் ஓடியாடி வேலை செய்தால் அன்றிரவு படுக்கும்போது காலும் கையும் வலிக்கின்றன. காரணம் என்ன? வலியைத் தடுக்க வழி என்ன?

வி: என்றாவது ஒரு நாள் ஓடியாடி வேலை செய்தால், இப்படி வலிக்கத்தான் வலிக்கும். ஓடியாடி வேலை செய்வதை எப்போதுமே வழக்கமாகச் செய்துகொண்டால் வலி எடுக்காது.

க. செயராசு, திருமங்கலம்.

கே: எனக்கு உதடுகளின் இருபுறத்திலும் புண் மூன்று மாதமாக இருக்கிறது. காரணமும் பரிகாரமும் வேண்டும்.

வி: உதடுகளின் இருபுறமும் புண் தோன்றுவது ஒரு வகை வைட்டமின் குறைவாலே. இந்த வைட்டமினுக்கு ரிபொஃப்ளேவின் என்று பெயர். இது பாலில் இருக்கிறது; சில காய்கறிகளிலும் உண்டு. இந்தப் பண்டங்களைச் சாப்பிடுவதால் புண் குணமாகி விடும்.

நாராயணதாஸ், ஸ்ரீரங்கபுரம்.

கே: கோபத்தாலும் கடினமான வேலையாலும் முகம் அப்படியே ரத்தம் மாதிரி சிவந்து விடுகிறது. என்ன காரணம்?

வி: உடம்பில் வேண்டிய இடங்களுக்கு ரத்தத்தைச் செலுத்த ஒரு விதமான சுரப்பி இருக்கிறது. அதற்குப் பெயர் அட்ரினல் கிரந்தி. கோபம் வந்தவுடன் பல்லைக் கடிப்போம்; உரக்கக் கூச்சலிடுவோம்; பயங்கரமான பார்வையை முகத்தில் வரவழைத்துக் கொள்வோம். முக உறுப்புக்களுக்கு இப்படியெல்லாம் வேலை கொடுப்பதால், அவற்றின் தசைகள் அதிகமாக உழைக்கின்றன. இதற்காக அட்ரினல் சுரப்பி அதிகமாய்ச் சுரந்து ரத்தத்தை முகத்துக்கும் உடலின் பிற தசைகளுக்குங்கூடக் கொண்டுவரும். உடம்பே விறைத்து நிற்கும். கடுமையாக வேலை செய்யும்போதும் இதே போலத்தான் எல்லாத் தசைகளுக்



கும் ரத்தம் வந்து சேரும். ஏனென்றால், மூச்சைப் பிடித்துக்கொண்டே கடுமையான வேலையைச் செய்ய முடியும். அதற்கும் ரத்தம் உடலெங்கும் வரவேண்டும். மேலும், வேலை செய்து உஷ்ணத்தை எழுப்பிக் கொள்கிறோம். இந்த உஷ்ணம் உடம்பிலிருந்து வெளியாக வேண்டும். அதற்காக ரத்தம் அதிகமாகச் சருமத்தின் அடியில் வருகிறது. முகத்திலே சருமத்தினடியில் வரும் ரத்தத்தால் அது சிவக்கும்; வேர்வை அதிகமாகும்.

க. வே. சுப்பிரமணியன்.

கே: இரவில் உறங்கும்போது தினம் ஏதாவது கனவு காண்கிறேன். பகலில் உறங்கினால் அப்படிக் கனவு காண்பதில்லை. காரணம் என்ன? பரிகாரம் என்ன?

வி: சிறு வயசில் இருளைக் கண்டு பயம் உண்டாகியிருக்கவேண்டும். இந்தப் பயத்தாலே இரவில் நிம்மதியான தூக்கம் இல்லை. பகலில் தூங்கும்போது இந்தப் பயம் இல்லாமல் தூங்குவதே, கனவில்லாத தூக்கத்துக்குக் காரணம். நிம்மதியான தூக்கத்தில் கனவு ஏற்படுவதில்லை.

ஆர். எஸ். ராவ், திருச்சி.

கே-1: என் நண்பரின் இடது கால் சிறுவிரலில் 3 வருஷத்துக்கு முன் சிறு சிரங்கொன்று வெடித்துச் சீழ் கொட்டி அடுத்த மூன்று விரல்களையும் சுரணை இழக்கச் செய்துவிட்டது; உடலெங்கும் நீர் கோத்துக்கொண்டு சகிக்க முடியாத நாற்றம் வீசுகிறது.

வி: சரும வியாதி இது. சரும வியாதி நிபுணரைக் கேட்டுப் பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டும். சரும வியாதியில் எத்தனையோ விதங்கள் இருக்கின்றன. அவற்றில் இது எந்த விதம் என்று அறிய ஒரு டாக்டரிடம் நேரில் காட்டித்தான் தெரிந்துகொள்ள முடியும்


கே-2: உள் மனத்தின் வலிமையைப் பொறுத்து ஞாபக சக்தி அமைந்திருக்கும் என்றால், அதைப் பெருக்குவது எப்படி?

வி: ஞாபக சக்தி சிலருக்குப் பொதுவாகவே அதிகமாக இருக்கும். சில விஷயங்களில் மட்டும் சிலருக்கு ஞாபக சக்தி அதிகமாக இருக்கும். விருப்பமான விஷயங்களில் கருத்து அதிகமாக இருக்கும்; அதனால் ஞாபகமும் அதிகமாக இருக்கும். எந்த விஷயத்தில் ஞாபகம் வேண்டுமோ அதில் சிரத்தையை அதிகம் செலுத்த வேண்டும். ஞாபகம் இருக்க வேண்டிய விஷயங்களை இரண்டு மூன்று தரம் காகிதத்தில் திரும்பத் திரும்பக் குறித்து வைத்துக் கொண்டால், மறக்க மாட்டோம்.

கே-3: தைராயிட் சுரப்பியின் முக்கியத்துவம் என்ன? ஞாபக சக்தி எந்த அளவு இதைப் பொறுத்தது?

வி: தைராயிட் சுரப்பியின் முக்கியத்துவம்பற்றி 'மஞ்சரி'யில் எவ்வளவோ சொல்லியாகிவிட்டது. தைராயிடுக்கும் ஞாபகத்துக்கும் சம்பந்தம் இல்லை.

கே - 4: ஒரு மருத்துவரின் கண்கொண்டு ஆவியுலகத்து நிகழ்ச்சிகளை விவரிக்க வேண்டுகிறேன்.



வி: மருத்துவருக்கு ஆவியுலக அநுபவம் கிடையாது. ஆவியுலகம் சென்றால் பிறரைப் போலவே அவருந்தான் திரும்ப மாட்டார். அப்படித் திரும்பிய மருத்துவர் யாராவது இருந்தால் அவரைக் கேட்கலாம்.

கே - 5: ஆன்மாவைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

வி: ஆன்மாவை உடலை விட்டுப் பிரிக்க இயன்றால், அதைப்பற்றி அபிப்பிராயம் கூறலாம். இதுவரையில் அது சாத்தியமாகவில்லை.

ராகவன், சிதம்பரம்.

கே: என் நண்பர் ஒருவர் 20 வயசு வரையில் குள்ளமாகவே இருந்ததால், 'இவரது வளர்ச்சி இவ்வளவுதான்' என்று எண்ணியிருந்தோம். ஆனால், 'அயொடின்' மிகுந்த 'காட்லிவர் ஆயில்' (மீன் எண்ணெய்) சாப்பிட்டதால், அரக்கர் போல் வளர்ந்துவிட்டார். யாரும் வளர்வதற்குக் 'காட்லிவர் ஆயில்' உட்கொள்ளலாமா?

வி: உயரமாகக் கூடிய வயசில், தக்க வளர்ச்சி ஏற்படக்கூடும். ஆனால், இந்த நண்பரின் வளர்ச்சி இப்படித்தான் ஏற்பட்டது என்று உறுதியாய்ச் சொல்ல முடியாது. 20 வயசுக்கு மேல் இவர் இயல்பாகவே வளர்ந்திருக்கலாம்.

தர்மராஜன், ஹிராகுட்.

கே: என் எடை சென்ற இரண்டு மாதத்துக்குள் பத்துப் பவுண்டு குறைந்து போயிற்று. இதனால் ஏதாவது கேடு நேருமா? என் வயசு 58.

வி: இதே கேள்வியை என்னிடம் வேறொருவர் இந்த வயசுக் காலத்திலே கவலையுடன் கேட்டார். அவருடைய எடை பின்னால் 20 பவுண்டு குறைந்துவிட்டது. குழந்தை நிலையில் எடை ஏறுவது வெகு அவசியம். அது ஆரோக்கியத்தின் குறி. சுமார் 25 வயசு வரையில் எடை ஏறிக்கொண்டே போகலாம். ஆனால் குழந்தை நிலையைப்போல் வேகமாய் ஏறாது. பெண்களாயிருந்தால், பருவ காலத்தில் வெகு வேகமாக எடை ஏறும். சுமார் நாற்பது வயசாகும் போது, ஆண்களும் பெண்களும் அதிக எடை பெறுவார்கள்; பெண்கள் ஆண்களைவிட அதிக எடை பெறுவார்கள். இந்த வயசிலேயாவது இதற்கு முன்னேயாவது எடை குறையக் கூடாது. குறைந்தால் வியாதியின் குறி என்றே சொல்லவேண்டும்.

ஐம்பது வயசுக்குமேல் எடை குறைய ஆரம்பிக்கலாம். அறுபது வயசு ஆகும்போது மேலும் எடை குறைந்தால், அதை ஆரோக்கியத்தின் குறி என்றே கருதலாம். ஆனால் வேறு வகையில் ஆரோக்கியக் குறை இல்லை என்று வைத்தியரிடம் சென்று உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். கவலையுடன் என்னிடம் கேட்ட முதல் நண்பருக்கு அப்போது சமாதானம் சொன்னேன். அதற்குப் பிறகு பத்து ஆண்டுகள் ஆகிவிட்டன. அவர் இன்னமும் ஆரோக்கியமாகத்தான் இருக்கிறார். நகைச்சுவையாக அவரிடம் நான் இப்படிச் சொல்வதுண்டு. 'வயோதிகரின் உடம்பில் கனம் கூடாது; அவருடைய சொல்லில் கனம் இருக்கவேண்டும்.'

## ஒரே குறை

மனநோய் வைத்தியரிடம் ஓர் ஆள் வந்தான். ''ஹாலிவுட் நகரில் மிக அழகான ஒரு வீட்டில் நான் வசிக்கிறேன் எனக்கு லிமவுஸின் கார் இருக்கிறது. தேர்ந்த டிரைவர் இருக்கிறான். இரண்டு நீச்சல் குளங்கள் இருக்கின்றன (ஒன்று குழந்தைகளுக்காக). நினைத்தபோது நேரே கடற்கரையில் போய் இறங்க ஹெலிகாப்டர் விமானம் ஒன்று இருக்கிறது. பணக்கார கோல்ஃப் கிளப்புகள் மூன்றில் அங்கத்தினனாய்ச் சேர்ந்திருக்கிறேன். ஆறு பேர் செல்லக்கூடிய ஒரு படகு வைத்திருக்கிறேன். ஒட்டலில் மாதம் 1000 டாலர் சாப்பாடு சாப்பிடுகிறேன்..'' என்று சொல்லிக்கொண்டே போனான்.

''இந்த நிலைமைகளில் உனக்கு என்ன பிரச்னை வந்தது?'' என்று கேட்டார் டாக்டர்.

''இதுதான் என் பிரச்னை, டாக்டர்: வாரம் 50 டாலர் தான் நான் சம்பாதிக்கிறேன்'' என்றான் ஆள்.

—எச். கார்ட்னர், 'காரொனெட்'.

உலக இயல்பை ஒட்டியே நாட்டிய முறைகள் பெரிதும் அமைந்திருக்கின்றன.

# அபிநய ரகசியம்

## ஜம்முலமடக மாதவ. ராமசர்மா

அபிநயத்தில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன: முதலாவது, லோக தர்மி; இரண்டாவது, நாட்டிய தர்மி. இவற்றுள் லோக தர்மி என்பது உலக ரீதியான இயற்கை அபிநயங்களைக் கொண்டது. சாமானியமான சில சேஷ்டைகள் மனித மனோபாவங்களைக் காட்டுவனவாக இருக்கும். சில வெறும் அங்க அசைவுகளாகவே இருக்கும்.

நாட்டியதர்மி, லோகதர்மியை ஒட்டி வருவதேயானாலும், தெய்விகமான சோபைக்குக் காரணமாய் இருக்கும். நடிகர்களின் சங்கேதத்தோடு கூடிய நாட்டியதர்மியில், அங்கிகாபிநய விசேஷங்கள் ஏராளமாக இருக்கின்றன. பல வகையான ஹஸ்த முத்திரைகள், நிருத்த ஹஸ்தங்கள், இவற்றோடு தொடர்பு கொண்டு வரும் கரணங்கள், அங்க ஹாரங்கள் எல்லாம் நாட்டியதர்மி அபிநயத்துக்குச் சம்பந்தப்பட்டவையே.

இன்னும், சாரீவிதானங்கள், மந்தலநீதிகள் என்றும், கதிப்பிரசாரம் என்றும் அங்காபிநயத்தைச் சேர்ந்த பல முறைகள் இருக்கின்றன. அவை இருவர் போரிடும்போதும் யுத்த ரீதிகளிலும் அபிநயிக்க உபயோகப்படுபவை. அவற்றைக் கையாளுகிறவர்கள் நன்ருகத் தேகப்பயிற்சி செய்ய வேண்டும். வாளிப்பான உடல் கட்டைப் பெற்றிருக்கவேண்டும்.

கதிமுறை : கதி சஞ்சாரங்களில் சிறிது விசேஷம் இருக்கிறது. அந்த அந்த ரஸ பாவங்களுக்கு அநுகூலமாக அந்த அந்தப் பாத்திரங்களுக்குத் தக்கபடி கதி அமைய வேண்டும். காலத்தையும் வாத்தியத்தையும் ஒத்துப் போகவேண்டும்.




தைர்யோபபன்ன
கதிருத்தமானும்
மத்யா கதிர்
மத்யம ஸம்மதானும்
த்ருதா கதிச்ச
ப்ரசுராதமானும்.

இதன் பொருள்: 'உத்தமர்களின் கதி (நடை) தைரியத்துடன் கூடியதாய்த் தீர்மானம் கொண்டதாக இருக்கும். மத்தியமர்களின் நடை சாதாரணமாய், சொல்லக் கூடிய அளவுக்கு விசேஷம் ஒன்றும் இல்லாமல் இருக்கும். கீழ்த்தரமானவர்களின் நடை வேகமாய் இருக்கும்.'

நீளமான அரங்க மேடையில் நடிகன் ஐந்தடி தூரம் நடக்கலாம். மேடை சிறியதாய் இருந்தால் அடி மேல் அடிவைத்து நடக்கவேண்டும். தேவர், மானிடர், அரக்கர் இவர்களுடைய நடைகளில் சிறிது சிறிது பேதம் தென்படும்.

இவ்வளவு தூரம் கதிபேதம் காட்டிய பரதர், 'சில சமயம் மட்டும் இந்த நியமம் அவசியம் இல்லை'

மூலம்: பிரஜாமத (தெலுங்கு: 22-9-'58), பங்களூர்.



என்கிறார். நெருக்கடி (தடுமாற்றம்), ஆபத்து, கோபாவேசம் வந்த சமயம் இந்த நிலைகளில் எல்லாம் இந்தக் கட்டுப்பாடு வேண்டியதில்லை. அவரவருடைய பாத்திரத்துக்கு ஏற்றபடி நடிக்கலாம். ஆனாலும் பொதுவான நியமம் ஒன்று இருந்துதான் ஆகவேண்டும். அதை மீறக்கூடாது.

உத்தமானும் கதிர்யாது
ஸதாம் மத்யேஷு யோஜயேத்
யாகதிர் மத்யமாஸாம்து
ஸதாம் நீசேஷு யோஜயேத்.

உத்தமர்களின் நடையை மத்தியமர்களின் நடையாகக் காண்பிக்கக் கூடாது. மத்தியமர்களின் நடையை நீசர்களுக்கு அமைக்கக்கூடாது. பாத்திரங்களின் மாறுபாட்டுக்குத் தக்கபடி நடை அமையவேண்டும்.

ரஸகதி விசேஷங்கள்: புருஷார்த்தங்களுக்கு உபயோகிக்கும் ரஸகதிகள் சில இருக்கின்றன. சிருங்கார கதிகள் முக்கியமானவை; கண்ணுக்கு இனியவை. அவை இதோ இப்படி அமைந்திருக்கும்:

தூது வருகிற சேடி வழி காண்பிக்கத் தலைவன் அரங்கத்தில் நுழைவான்; நல்ல உடைகளும் மலர் மாலைகளும் அணிந்து தன் நடையும் அசைவும் கண் கவரும் முறையில் தோன்ற வருவான். லயத்துக்கும் தாளத்துக்கும் நடை இசையவேண்டும். காலை எடுத்து வைப்பதற்கு இசைவாகக் கை வீச்சும் இருக்கவேண்டும். இவையெல்லாம் தெளிவான அகத்துறைப் பாவங்கள் (காமித ரீதிகள்). இதில் ஒன்றும் ரகசியம் இல்லை.

ரகசியமான சிருங்காரத்தை 'ப்ரச்சன்ன காமிதம்' என்பார்கள். அதில் கதி இப்படி அமைந்திருக்கும். தலைவியுடன் பரிவார ஜனங்கள் யாரும் இருக்க மாட்டார்கள்; ஒரே ஒரு சேடிமட்டும் இருப்பாள். விளக்கு இருக்கக் கூடாது ஆபரணங்கள் இருந்தாலும் அதிகமாக இருக்கமாட்டா. அவசியமான அளவு உடை மட்டுமே இருக்க வேண்டும். நிச்சப்தமாய் ஓசைப் படாமல் அடிமேல் அடி வைத்து நடை தடுமாற நடுங்கிக்கொண்டே தலைவி வரவேண்டும்.

ரௌத்திர கதி: ரௌத்திர ரஸத்தில் தைத்திய ராட்சஸ கணத்தைச் சேர்ந்தவர்களும் அடக்கம். அவர்களும் அவர்களைப் போன்ற சுபாவம் உள்ளவர்களும் வேகமாய்க் காலை எடுத்துச் சற்று மெதுவாக வைக்கவேண்டுமென்று நாட்டிய வேதம் சொல்லுகிறது. இவர்கள் பீபத்ஸ அபிநயம் செய்யும் போது ஓர் இடத்தில் எட்டி நடை போட வேண்டும். ஓர் இடத்தில் கிட்டக் கிட்டக் கால் வைத்து நடக்க வேண்டும். காலைத் தூக்கி வைத்துத் தொங்கிக்கொண் டிருப்பதுபோல் பாவனை காட்டிக் கை வீச்சுக்களையும் நடைக்குத் தக்கபடி காண்பிக்க வேண்டும்.

இவர்களுடைய நடை சிறப்பாக இருக்கும். காலை வேகவேகமாக எடுத்து வைப்பதோடு பலவிதமான சாரீ கதிகளையும் கையாள வேண்டும். பக்கவாட்டில் தாண்டும்படியும் இருக்கும். மத்தியம, அதமர்களுடைய நடையில் சற்று வேறுபாடு உண்டு.

கருணை கதி: இது ஆட்கொண்ட மனிதனுடைய நடை தீர்மானத்தோடு நிதானமாக இருக்கும். அவன் நீண்ட பெருமூச்சுக்கள் விட்டுக்கொண்டு மேல் நோக்கியே நடப்பான். கால்களை அதிகமாக உயர்த்திப் போடக்கூடாது.

அடிபட்ட பாவனையில் தோள்கள் ஒடிந்த மாதிரி காட்டிக் கொள்ளவேண்டும். குளிரில்

நடுங்குவதாகக் காட்டும்போதும் மழையில் நனையும்போதும் நடுங்கியபடி கைகளை மடக்கி மார்பில் வைத்துக்கொண்டு கூனிக் குறுகி மெதுவாக நடக்கவேண்டும்.

யதி, பிரம்மசாரி, சந்நியாசி, தொழிலாளர் முதலியவர் வரும் சந்தர்ப்பத்தில் அவர்களுடைய பாத்திரத்துக்குப் பொருந்தியபடி நடை அமைந்திருக்க வேண்டும். ரதம், விமானம், மாடி இவற்றில் ஏறும்போதும் கப்பல் போன்றவற்றிலிருந்து குதிக்கும்போதும், மலையேறும்போதும், மரம் ஏறும் போதும் அந்த அந்த நிலையைத் தத்ரூபமாய்க் காண்பிக்கும் கதிப் பிரசாரங்கள் பலவிதமானவை.

விடபுருஷரின் நடை சொகுசாயும் ஒய்யாரமாயும் இருக்கும். நடைக்குத் தக்கபடி கைகளையும் வீசவேண்டும். முதியோர்களின் நடை உடல் நடுக்கத்தோடு மெதுவாக இருக்கும். பைத்தியக்காரனுடைய நடையில் ஓர் ஒழுங்கு இராது. வேகமாக ஓடுவதும் திடீரென்று நிற்பதும் விழுவதும் விழுந்த இடத்திலேயே உட்காருவதும் படுப்பதும் அதன் லட்சணம்.


விதூஷகம்: விதூஷகனுடைய நடையில் மூன்று வகையான ஹாஸ்யங்களும் கலந்திருக்கும்.

முதலாவது: கோணல் பற்கள், வழுக்கைத் தலை, குள்ளமான உருவம், விகாரமான முகம் இவையெல்லாம் அமைந்திருந்தால் அங்க ஹாஸ்யம் அமைந்திருக்கும். கொக்கைப்போல் அவன் எட்டி எட்டி நடப்பான்; மருண்டு மருண்டு பார்ப்பான்.

இரண்டாவது: காவிய ஹாஸ்யம். இதில் ஒழுங்கீனமான பேத்தல்கள் அதிகம். அர்த்தமற்ற கேலியும் கீழ்த்தரமான பேச்சு இதில் இடம்பெறும்.

மூன்ருவது - விதூஷகன் எப்படிப்பட்டவனுயிருந்தாலும் பாத்திரங்களுக்கு அநுசரணையாக அவன் நடந்துகொள்ள வேண்டும். அரசனருகே இருந்தால், கீழ்த்தரமான கேலிப் பேச்சுப் பேசுவான்.

தீயகுணங்களும் தாழ்ந்த கருத்துக்களும் உள்ளவன் அதிகாரத்



துக்கு வந்தால் அவனைச் 'சகாரன்' என்பார்கள். அப்படிப்பட்டவன் அடிக்கடி தன் நடை உடைகளைப் பார்த்துப் பார்த்து ராஜ நடை போடுவான். உடலைக் கோணிக் கொள்வான். கைகளை வீசியும் கர்வம் தோன்ற அடிமேல் அடி வைத்தும் நடப்பான். அங்கும் இங்கும் பார்த்துத் துணிச்சலுடன் நடப்பான்.

இப்படிச் சிலவற்றைப் பரதர் எடுத்துக் காட்டிவிட்டு, 'மற்றவற்றை உலகைப் பார்த்து அறிந்து கொள்' என்று சொல்லிவிட்டார்.

விஷ்ணு கதிக்கிரமம்: ''மகா விஷ்ணு மதுகைடபர்களுடன் போரிட நேர்ந்தது. நாட்டிய தர்மியை ஒட்டிய கதிக்கிரமங்களையும் சாரீ விதானங்களையும் அவர் கையாண்டார். எல்லா நடைகளையும் பரபரப்பு இல்லாமல் நிதானத்துடன் அவர் ஆண்டு சமாளித்தார். மதுகைடபர்கள் ஆவேசத்தோடு போரிட்டும் விஷ்ணுவின் கதி முறைகள் புரியாததால் தோற்ருர்கள்'' என்று பரதர் சொல்லியிருக்கிருர்.

பரதருடைய நாட்டியவேத, நாட்டிய சாஸ்திரங்கள், அபிநவ குப்தரின் 'அபிநவ பாரதி' என்னும் சிறந்த வியாக்கியானத்தால் பிரசித்தி பெற்றன. நாட்டிய வேதத்தில் நாட்டியக் கலையைப்பற்றிய பல விஷயங்களை அதில் அவர் அறுதியிட்டுக் கூறியிருக்கிருர்.

புதுமையை அறியும் ஆவல் மனித னுக்குத்தான் என்பது இல்லை; விலங்குகளுக்கும் உண்டு.

# விலங்குகளின் ஆராய்ச்சி ஆவல்

ஆர். ஸி. பாண்டே

'பேராவல் பூனையைக் கொன்றது' என்ற சொல் வழக்கு ஆங்கிலத்தில் (தமிழில் பேராசை பெரு நஷ்டம் என்பது போல்) உண்டு. பூனை இப்படிப் பேராவல் காரணமாகச் சாகுமா என்பது சந்தேகந்தான்; என்றாலும், எத்தனையோ பறவைகளும் விலங்குகளும் தங்களுக்குச் சம்பந்தமில்லாத விஷயத்தில் தலையிட்டு, அதனால் உயிரையே இழந்திருக்கின்றன.

காட்டு விலங்காக இருந்தாலும் சரி, வீட்டு விலங்காக இருந்தாலும் சரி, இரண்டு வகைக்குமே இந்த மாதிரி பேராவல் மிகுதியாக உண்டு. புத்திக் கூர்மை மிகுதியாக ஆக இப்படி எந்த விஷயத்தையும் அறிய வேண்டும் என்ற ஆவலும் அவைகளுக்கு அதிகமாகும்.

ஒரு சமயம், நீர் வற்றிக் கிடந்த ஓர் ஓடையின் பக்கம், (ஆடு ஒன்றைக் கட்டி ஆசை காட்டிப்) புலியைப் பிடிக்க ஏற்பாடு செய்திருந்த இடத்தில், ஒரு மரத்தின் மேலே அமைத்த பரணில் காத்திருந்தேன். அப்போது கீழே புதரில் ஏதோ அசைவது தெரிந்தது. உற்றுக் கவனித்தேன். ஓர் உருவம் - மதமத என்று இருக்கும் ஒரு காட்டுப் பன்றிக் குட்டிதான் - சோம்பிக்கொண்டே வந்தது! சின்னச் சின்னத் தந்தம் வாயில் நீட்டிக்கொண்டிருந்தன.

அது என் பக்கமாக வெறித்துப் பார்த்தது. நீண்டிருந்த அதன் முகத்தில் காது குத்திட்டு நின்றதிலிருந்து ஏதோ முன் பின் காணாத விநோதத்தைக் காண ஆவலோடு வருகிறது என்று தெரிந்தது.

காட்டுப் பன்றி மிகவும் தந்திரமாக நடந்துகொள்ளும்; இந்தச் சுபாவம் எனக்கு மிகவும் பிடிக்கும். சந்தர்ப்பத்துக்கு ஏற்ற மாதிரி செத்துவிட்டது போலவோ, நோயுற்றுக் கிடப்பது போலவோ வெகு சாமர்த்தியமாகப் பாசாங்கு



காப்பிரைட்: அமிர்தபஜார் பத்திரிகை (ஆங்கிலம்: 20-7-'58), கல்கத்தா.

செய்யும். இருந்தாலும், மிகவும் தைரியசாலி; ஒரு நாளும் தோல்வி அடையாது.

அப்படியே உறைந்து கிடப்பது போல் உட்கார்ந்திருந்தேன். புதரை விட்டுப் பன்றிக்குட்டி வெட்ட வெளிக்கு வந்தது; கொழு கொழுவென்றும் கம்பீர மாகவும் விளங்கியது. எதிர்ப்பது போல் என்னை நோக்கி வந்தது. முன்னைவிடக் கூர்ந்து என்னையே கவனித்தது. எனக்கும் அதற்கும் பன்னிரண்டு கஜ தூரந்தான் இருக்கும்.

அதன் மூக்கு நுனி பரபரப்பினால் துடித்தது; நான் அமர்ந்திருந்த மரத்தையே தாக்குமோ என்று தோன்றியது. என்னையும் அறியாமல் அசைந்துவிட்டேன் போல் இருக்கிறது. சவுக்கைச் சுண்டிவிட்டதுபோல் சட்டென்று துள்ளி எங்கோ புதரில் மறைந்து விட்டது, அந்தப் பன்றிக்குட்டி!

'நல்ல வேலையாகப் போய்த் தொலைந்தது' என்று எண்ண முடிந்ததா? அதுதான் இல்லை. சில விநாடிகளுக்கெல்லாம் அது மறுபடியும் வந்து எட்டிப் பார்த்தது. அதன் இனத்துக்கு இயல்பான அடங்காப் பேராவல் தூண்டவே மறுபடியும் என்னைப் பார்க்க வந்தது.

எப்போதும் உண்டி வில்லும் கையுமாகத்தான் இருப்பேன். வேறு சமயமாக இருந்தால் அதில் கல் வைத்துப் பன்றியின்மேல் அடித்திருப்பேன். ஆனால், புலி இப்படி ஆவல் காட்டாத பிராணி; அது மருண்டுவிடக்கூடாதே என்று அப்படிச் செய்யாமல், என் தொப்பியைத் தலைக்குமேல் வீசி ஆட்டினேன். உடனே பன்றிக் குட்டி அங்கிருந்து ஓட்டம் பிடித்தது.

சிறுத்தையைப்போல் புலி அவ்வளவு ஆவல் காட்டுவதில்லை. தன் பெருமையே தனக்குத் தெரியாது வாழும் வகையைச் சேர்ந்த பிராணி புலி.

தனக்குத் தெரியாத பொருள் ஒன்றை இன்னதென்று அறிந்துவிடவேண்டும் என்ற ஆவல் அதிகம் உண்டு கரடிக்கு. இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் அது நடந்துகொள்ளும் விதமே அலாதி. பொதுவாக, தானே நேரில் போய் அந்த விநோதப் பொருள் என்ன என்று கண்டறியப் பார்க்கும். அப்படியும் தெரியவில்லை என்றால், திடீரென்று, எதிர்பாராமல் அந்தப் பொருள் மேல் பாய்ந்து அதைத் தாக்கும்.

பெரிய விலங்கு வகையில் கரடி மிகவும் சாமர்த்தியசாலி என்பதில் சந்தேகமில்லை. இதற்கு ஒரு காரணம் - இதன் விளைவாகவே என்றும் சொல்லலாம் - கண்டதையெல்லாம் அது உண்ணுகிறது; புதுப் புது வஸ்துக்களை அது ருசி பார்க்க விரும்புகிறது. தெரியாத வஸ்து என்றால் போதும்; அதை உண்டு பார்க்க விரையும்.

மந்தையாகத் திரியும் விலங்கு வகைகளுக்கும் மொத்தமாக இப்படிப் பேராவல் மூண்டுவிடும். மற்றக் குரங்குகளுக்குத் தலைமை வகிக்கும் பெரிய குரங்கு உயரமான மரத்தின் உச்சியில் ஏறி எதையாவது கவனித்தால் போதும்; என்ன விசேஷம் என்று அறிய ஆவலுடன் உடனே எல்லாக் குரங்குகளும் அதைத் துரத்திக்கொண்டு மேலே ஏற ஆரம்பித்துவிடும். சற்று நேரத்துக்கெல்லாம் இப்படி ஒன்றன் பின் ஒன்றாக 'க்யூ' வரிசை போல் இருக்கும் குரங்குகளுக்குள், 'யார் முந்திக்கொள்வது?' என்று மும்முரமாகச் சண்டை மூண்டுவிடும்.

பறவைகளுக்கும் இந்தமாதிரி பேராவல் உண்டு. ஒரு தரம் புதர் ஒன்றில் என் காமிராவை 'டிரிபாட்' என்ற (முக்காலி போன்ற) பீடத்தில் திருகி வைத்துவிட்டு, அந்தப் பக்கம் அடிக்கடி செல்லும் கலைமான் ஒன்றைப் படம் பிடிக்கத் தயாராகக் காத்திருந்தேன். அப்போது 'ஏழு சகோதரிகள்' என்று வழங்கும் குருவிக்கூட்டம் ஒன்று என் காமிராவைச் சோதனை செய்யத் தொடங்கிவிட்டது. இலை அடர்ந்து தண்மையாக நிழல் பரப்பும் ஒரு மரத்தின் அடியில் சாய்ந்துகொண்டு இப்படி ஐந்தாறு பறவைகள் காமிராவைச்

சூழ்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தன. ஒன்று காமிரா வின் உச்சியில் உட்கார்ந்து அதைக் கொத்தியது; இன்னொன்று அதில் இணைத்திருக்கும் 'டிரிப் ஒயர்' என்ற கம்பியைப் பிடுங்கி அறுக்கப் பார்த்தது. மற்றவை அதில் என்ன விசேஷம் இருக்கிறது என்று கவனித்துக்கொண் டிருந் தன. இரண்டு குருவிகள் 'டிரி பாட்'டின் மூன்று கால்களுக்கு இடையிலும் அப்படியும் இப்படி யும் போய்க்கொண் டிருந்தன. அவைகளைப்போல் பேராவல் கொண்ட பறவைகளை நான் அது வரை பார்த்ததே இல்லை.

காமிராவை இந்த மாதிரி 'டிரிபாட்'டில் வைத்திருந்தால் காட்டு விலங்குகள் அது என்ன என்று அறிய ஆவலோடு வருவது நிச்சயம். இதுவரையில் காணுத பொருளைக் கண்டு திகில்; இதோடு அதென்ன என்று அறிய ஓர் ஆவல் - இப்படி இரண்டு உணர்ச்சி கள் போட்டி போட்டுக்கொள்ளக் கடைசியில் பேராவல் வென்று விடுகிறது.

காட்டு விலங்குகளில் பலவற் றுக்கு இந்த மாதிரி பேராவல் இருந்தாலும், திகிலும் முன் எச்சரிக்கையும் தலை தூக்குவதால் அந்த ஆவலை அடக்கிக்கொண்டு விடும். இதுவரையில் காணுத புது வஸ்து ஒன்று பார்வைக்குக்கவர்ச்சி யாக இருந்தாலும் ஆபத்தாக முடி யுமோ என்ற திகில் உணர்ச்சியால் 'அதைக் காணவேண்டும்' என்ற ஆவலை அடக்கிக் கொள்ளும். இல்லாவிட்டால், அந்த வஸ்து என்னதான் ஆகிறது பார்க்கலாம் என்று பொறுத்துப் பார்க்கும்.

ஆடுமாடு குதிரை போன்ற வீட்டு விலங்குகளும் இதேபோலத் தான். ஆனல் மொத்தத்தில் இப்படி இரண்டு வித உணர்ச்சி கள் போராடும்போது பேராவல் முடிவில் வென்றுவிடும்; இதற்குக் காரணம் இவை காட்டு விலங்கு கள் போல் அவ்வளவு லேசில் திகில் அடையாதிருப்பதுதான்.

ஒரு பொருளைப்பற்றி நன்ருகத் தெரிந்துவிட்டால், அப்புறம் பறவைகளுக்கோ விலங்குகளுக்கோ அதன்மேல் சிரத்தை இராது. தெரிந்துபோன விஷயம் என்ருல் அவைகளுக்குச் சலிப்புத் தட்டி விடும். அதைப்பற்றி வீணுக அக்கறைப்படுவானேன் என்று இருந்துவிடும். இன்னும் ஏதாவது புது வஸ்துவைத் தேடிக்கொண்டு கிளம்பிவிடும்.

ஆராய்ந்து அறிவது மனித வாழ்வுக்கே மிக அவசியம்; தாழ்ந்த வகையைச் சேர்ந்த விலங்குகளுக்கும் இது பொருந் தும். அறிய வேண்டுமென்று ஆவல் கொள்வது நம் மனம் சதா தொழில் புரிவதைக் காட்டுகிறது. அதே மாதிரி விலங்குகளுக்கு ஆவல் மூள்வதும், அவற்றின் மூளை வேலை செய்கிறது என்பதற்கு அறிகுறி.

## கர்ம வீரன்

அன்பினுல் தூண்டப்பெற்று அரும்பணி ஆற்றுகிறவன் அந்த வினையின் விளைவாகத் தனக்கு என்ன கிடைக்கும் என்று ஒருபொழுதும் எண்ணிப் பார்ப்பதில்லை. பிறர் நலத்தின் பொருட்டுத் தொண்டு புரிவதிலேயே அவன் திருப்தி அடைந் திருக்கிருன். அதுவே அவன் அடையும் ஆத்மத் திருப்தி யாகும். அந்தநிலையில் வினையாற்றுகிறவனுக்கு ஆத்ம சக்தி ஓங்குகிறது. உலகத்தையே திருத்தி அமைத்துவிடக் கூடிய ஆற்றலும் அருளும் அவன் மூலம் பொலிகின்றன. அத்தகைய மனிதனையே கர்ம வீரன் என்று போற்றிப் பாராட்டவேண்டும்.

—சுவாமி விவேகானந்தர்

புஸ்தகச் சுருக்கம்:

# பெண்களும் அழகும்

## எஸ்.கல்யாணி



அலங்காரம் செய்துகொள்ளலாம். ஆனால், அழகு வருமா? அழகு பெறவும், அலங்காரத்தையும் அழகாய்ச் செய்துகொள்ளவும் வழிகள் கூறுகிறது இந்தப் புஸ்தகம். இதை மிக்க கவர்ச்சியான முறையில் இன்ப நிலையத்தார் வெளியிட்டிருக்கிறார்கள்.

---

காப்பிரைட்: பெண்களும் அழகும் (தமிழ் நூல்).
வெளியிட்டோர்: இன்ப நிலையம், மயிலாப்பூர், சென்னை.
விலை ரூ. 1-50.

# பெண்களும் அழகும்

★

ஆண்களைவிடப் பெண்கள் அழகு ரசனையில் தேர்ந்தவர்கள். சிலப்பதிகாரத்தில், கடலாடு காதையில், பத்துத் துவர், ஐந்துவிரை, முப்பத்திரு வகை ஓமாலிகைகள் இவையெல்லாம் ஊறிய நீரிலே மாதவி தன் கூந்தலை நீராட்டி, வாசனைப் புகையிட்டு, ஐந்து வகையாக வகுத்து அழகு செய்தாளாம். பிறகு காலிலிருந்து தலைவரையில் அவள் செய்யும் அழகுச் சாதனை அவற்றுக்கு உறை போடக்கூடக் காணாது என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. பழந்தமிழ் நாளிலிருந்து இன்றுவரைக்கும் பெண்கள் அழகுச் சாதனைகளைத் தொழுது வருகிறார்கள். அன்றைய அழகு முறை வேறு; இன்றைய அழகு முறை வேறு.

முகத்தில் பூசிய மஞ்சளும், குங்குமப் பொட்டும், 'கோடாலி' முடிச்சுமாக இருந்த காலம் மறைந்து, பவுடர்ப் பூச்சும், சாந்துப் பொட்டும், தலைக் கட்டுமாக மாறி வருகிறது. புதுமை வேண்டியதுதான். ஆனால், உடையிலும் நடையிலும் முகத்திலும் எந்த நிலை வரையில் புதுமை வேண்டும்? இன்றைய நாகரிகம் என்பது, மேல்நாட்டு நாகரிகம் கலந்து மிளிர்வது. இதில் நம் நாட்டுப் பண்புக்கும் சீதோஷ்ண நிலைக்கும் ஏற்ற நாகரிக அழகுச் சாதனங்கள் எவை? எல்லாப் பெண்களும் ஒரே மாதிரியாக, ஒரே நிறத்தோடு இருப்பதில்லை. ஒருத்தி குட்டையாகச் சிவப்பாக இருந்தால், மற்றொருத்தி உயரமாகக் கறுப்பாக இருக்கலாம். இப்படிப் பல வேற்றுமைகள் இருக்கின்றன. ஒருத்திக்கு நன்றாக அமைந்துவிட்ட அலங்காரம், மற்றொருத்தியின் அழகை மிகைப்படுத்திக் காட்டாது. பெண்கள், பெண்களாகவே இருப்பதைத்தான் ஆண்கள் விரும்புகிறார்கள். அதனால் பெண்மையின் மென்மையை எடுத்துக்காட்டும் அலங்காரச் சாதனைகளைப்பற்றியே நாம் சிந்திக்க வேண்டும்.

அழகு என்றால், மீன் கண்களும் (வேல், மான், குவளை போன்ற பல உவமைகள்!) எடுப்பான மூக்கும் வில் போன்ற புருவமும் கொவ்வைச் செவ்வாயும் கொண்ட வட்டவடிவமான முகமும், முல்லைப் பல் வரிசையும், ஒசிந்த இடுப்பும் என்று பலவிதமாய் வர்ணிக்கும் இலக்கியக் கதாநாயகிகள்போல எல்லாருமே இருக்க முடியுமா? அப்படிப்பட்ட அழகிகள் உலகில் சொற்பமானவர்களே இருப்பார்கள். மற்றவர்களெல்லாம் என்ன செய்வார்கள்? ஓடி ஒளிந்துகொள்வார்களா? அப்படி இல்லை. கூடுமானவரைக்கும் தங்கள் புறத் தோற்றத்தைக் கவர்ச்சியாய்ச் செய்துகொள்வதில் கவனம் செலுத்துவார்கள்.

அழகை விரும்பாத பெண்கள் யார்? 'திரை உலகில் அழகிகளாக மின்னும் சினிமா நட்சத்திரங்களைப்போல நாமும் இருக்க வேண்டும்' என்று ஆசைப்படாத பெண்கள் இன்று இல்லை. மேல்நாட்டிலும் நம் நாட்டில் பம்பாய் போன்ற நகரங்களிலும் 'அழகு மாளிகைகள்' இருக்கின்றன - அதாவது அவரவருடைய உயரம், எடை, முகத் தோற்றம் இவற்றுக்கு ஏற்றபடி அலங்காரம் செய்து அழகுபடுத்துவதில் கை தேர்ந்த நிபுணர்கள் ஏற்படுத்திய ஆலோசனை மண்டபம். பண வசதி படைத்த பெண்களுக்கு இந்த இடங்கள் ஏற்றவை. ஆனால், மற்றவர்களுக்கு? விளம்பரங்களில் வரும் சோப்பு, பவுடர் போன்றவற்றை வாங்கித் தம்மைத் தாமே

அழகுபடுத்தும் முறையில் பல பெண்கள் அக்கறை காட்டி ஆயாசம் அடைகிருர்கள். தாங்கள் செய்யும் அடிப்படையான தவறு எது என்பதை இவர்கள் மறந்து விடுகிருர்கள்.

இன்றைய நாகரிகத்தில் உண்மையான அழகைக் கண்டு பிடிப்பது சிரமமாகவே இருக்கிறது. உண்மை அழகில்லாதவர்கள் பகட்டான சேலை கட்டி, பாங்கான அணி பூண்டு, கண்ணைப் பறிக்கும் பவுடர்ப் பூச்சுடன், புருவத்தை வரைந்து, உதட்டைச் சிவக்க அடித்து வெளியே வரும் போது, இந்த உலகமே வெளி வேஷம் போடும் பெண்கள் நிறைந்ததுதானே என்ற சந்தேகம் எழுகிறது!

அழகு செய்துகொள்வது என்ருல் என்ன என்பதை அறியாத சில பெண்கள், இப்போதுதான் படப் பிடிப்பிலிருந்து வெளியே வந்த சினிமா நட்சத்திரம்போல மின்னுவது நாகரிகமல்ல. இன்றைய நாகரிகப் பெண்களில் முக்கால்வாசிப் பேர் நடந்து செல்வதைச் சற்று நின்று வேடிக்கை பாருங்கள். அப்போது, 'உண்மை அழகின் உருவம் எங்கே?' என்றுதான் கேட்கத் தோன்றும்.

எலி வால் பின்னலும், பருக்கள் நிறைந்த முகமும், தீட்டிவிட்ட புருவமும், வெளுத்த உதடும், கூனிய முதுகும், ஒட்டிய மார்பும்.. இப்படி இன்னும் எத்தனையோ சொல்லலாம். உணவை விரலால் கொரித்துவிட்டு, காபியும், ஐஸ் கிரீமும், சாக்கலேட்டுமாக உள்ளே தள்ளிக்கொண்டே இருப்பதால் ஏற்படும் வரப் பிரசாதங்கள் இந்தச் சின்னங்கள்!

'அகத்தினழகு முகத்தில் தெரியும்' என்பார்கள். உள்ளத்திலே உற்சாகம் இருந்தால் முகத்திலே பிரகாசம் ஏற்படும். உள்ளத்தில் உற்சாகம் இருக்க வேண்டுமானுல், உடலில் வலிமை இருப்பது அவசியம். நல்ல உணவை உண்டு தேக ஆரோக்கியத்தோடு வாழ்ந்தால் தான், நோய் நொடியற்ற வாழ்வு கிட்டும். ஆரோக்கியமற்றவர்களுக்குக் கோபம், ஆத்திரம் போன்ற எரிச்சல் மிகுந்த குணங்கள் அடிக்கடி வரும். என்னதான் அழகிய முகமானுலும் முகத்தைச் சுளுக்கிக் கண்களை உருட்டி விழித்துக் குமுறும் சொற்களை வெளியே கொட்டினுல், பார்ப்பவர் என்ன நினைப்பார்கள்?

சுவரை வைத்துக்கொண்டு தான் சித்திரம் தீட்ட முடியும். ஆகவே, அழகு பெற விளங்குவதற்கு முக்கியமானது ஆரோக்கியமான உடல் நிலை. அதிகத் தடியாகவோ ஒடிந்து விழுவது போன்ற குச்சி உடலாகவோ இராமல், எவ்வளவு வேலை செய்தாலும் எத்தனை இடம் சுற்றினுலும் களைப் படையாத உடல் ஆரோக்கியம் தேவை.

நல்ல புஷ்டியான உணவைச் சாப்பிட்டு உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்வது அவசியம். நம் நாட்டுச் சமையலிலோ பெரும் பகுதி அரிசி உணவு. அந்த அரிசியையும் மில்லில் தீட்டி, கஞ்சி நீரை வடிகட்டி, எஞ்சி நின்ற சக்கையை மட்டும் உண்கிருேம். இந்த உணவில் புரதச் சத்து, வைட்டமின் எல்லாம் குறைவு. அரிசி உணவுடன், பச்சைக் காய்கள், பழங்கள், பருப்பு வகைகள், பால், நெய் அல்லது எண்ணெய் இவற்றையும் அவரவர் நிலைக்கேற்றபடி உபயோகிப்பது மிகச் சிறந்தது.

அடுத்த பக்கத்தில் உள்ள அட்டவணைப்படி மெலிந்தவர், நடுத்தரமானவர், தடித்தவர் என்ற மூன்று பகுதிகளில் நீங்கள் எந்தப் பகுதியைச் சேர்ந்தவர்?

இதில் மெலிந்தவரும் பருமனுயிருப்பவருந்தான் தங்கள் தேக நிலையைக் கவனித்துக்கொள்ள வேண்டும். மெலிவுப் பகுதியில் குறிப்பிட்ட எடைக்கும் கீழே எடை இருப்பவர் அதிக உணவை உண்டு தேக அபிவிருத்தி செய்து கொள்ளவேண்டும். நடுத்தரமாக இருப்பவரைப்பற்றிக் கவலையில்லை. அவர்கள் தங்கள் உணவை அதிகப் படுத்தாமலும் குறைக்காமலும், எப்போதும் போலவே இருந்தால்

## உடல் நிறை அட்டவணை

| உயரம் | நிறை: மெலிவு | நடுத்தரம் | பருமன் |
|---|---|---|---|
| 4½' முதல் 4'11'' | 104-111 | 110-118 | 117-க்கு மேல் |
| 5'0" | 105-113 | 112-120 | 120 ,, ,, |
| 5'1" | 107-115 | 115-122 | 122 ,, ,, |
| 5'2" | 110-118 | 118-125 | 125 ,, ,, |
| 5'3" | 113-121 | 121-128 | 128 ,, ,, |
| 5'4" | 116-125 | 125-132 | 132 ,, ,, |
| 5'5" | 119-125 | 126-135 | 135 ,, ,, |
| 5'6" | 123-132 | 132-140 | 140 ,, ,, |
| 5'7" | 126-136 | 136-144 | 144 ,, ,, |
| 5'8" | 128-138 | 138-147 | 147 ,, ,, |
| 5'9" | 132-143 | 143-151 | 151 ,, ,, |
| 5'10" | 136-146 | 146-155 | 155 ,, ,, |
| 5'11" | 139-150 | 148-158 | 158 ,, ,, |

போதும் பருமனுயிருப்பவர் தங்கள் தேகத்தின் அதிகப் பளுவைக் கரைக்கவேண்டும். மேலே குறிப்பிட்ட அட்டவணை இருபது வயசுக்கு மேல் உள்ளவருக்குப் பொருந்தும். ஆராய்ச்சியாளர்களின் கருத்துப்படி, இருபது வயசுக்குமேல் உடல் ஒரே எடையோடு இருக்கும்படி கவனித்துக் கொண்டோமானுல், நீண்ட ஆயுளும் ஆரோக்கிய வாழ்வும் கிட்டும்.

பழைய காலத்தில் என்றுல் நம் நாட்டுப் பெண்களுக்கு வீட்டு வேலை அதிகம் இருந்தது. குனிந்து நிமிர்ந்து, இடுப்பை வளைத்து வேலை செய்யவேண்டியிருந்ததால், இயற்கையாகவே அவர்களுக்கு உடலழகு இருந்தது. தண்ணீர்க் குடம் ஏந்தியதால் இடுப்பு அவர்கள் சொன்னபடி வளைந்து கொடுத்தது. உடல் வணங்கி உணவைச் சமைத்து, உணவைப் படைத்துப் பல வேலைகளைச் செய்ததால், கால், கை போன்ற அங்கங்கள் இயல்பாகவே திடம் பெற்றன.

இன்றே நாகரிக யுகம். மனிதர்கள் செய்யும் வேலையை மின்சாரம் செய்து முடிக்கிறது. தண்ணீர் கொண்டு வருவது முதல் ஆட்டி, அரைத்து அடுப்பிலிருந்து இறக்குவதுவரை எல்லாம் யந்திரத்தின் உதவியால் சொகுசாகச் செய்து முடித்துவிடுகிறேம். இதனுல் உண்மையான உடல் உழைப்புக்கு அதிக இடமில்லை. வீட்டில் வேலை செய்ய ஆட்களும் இருந்துவிட்டால் கேட்கவேண்டாம். அப்படிப்பட்ட சுகவாசிகளான பெண்களுக்குச் சதை போடாமல் என்ன செய்யும்? சமயம் வந்தால்கூட ஒரு துரும்பை எடுத்துப் போட மறுக்கும் இவர்கள், ஓயாமல் தங்கள் உடல் இளைக்கவில்லையே என்று குறைப்பட்டுக் கொள்கிருர்கள். பட்டினி வேண்டுமானுலும் கிடக்க இவர்கள் தயார்! ஆனுல், உடலை அசைத்து வேலை செய்வதா? மூச்சு விடாதீர்கள்! ஒரு செட் 'டென்னிஸ்' ஆடி உடலை இளைக்க வைக்கவும் தயார்! நம் கலாசாரப்படி வீட்டு வேலை செய்யாமல் பெண்கள் இருக்க முடிவதில்லை. ஆயினும், சிலருக்கு வீட்டு வேலை செய்யும் வாய்ப்பே இல்லாமல் போகலாம். அவர்கள் ஒழுங்காகத் தேகப் பயிற்சியாவது செய்து வர வேண்டும்.

முதலாவது, நிலைக்கண்ணுடிக்கு எதிரே சுவரின் மீது உங்கள்

தலையும் முதுகும் நன்றாகப் படும்படி சாய்ந்துகொண்டு, இரு கால்களையும் சேர்த்துவைத்துச் சற்றுத் தள்ளி (நாற்காலியில் உட்காரும் பாவனையில்) நின்று பாருங்கள். இதே நிலையில் நீங்கள் நிமிர்ந்து நடக்கப் பயில வேண்டும். நிமிர்ந்த பார்வையும் நேர் கொண்ட நெஞ்சமும் உள்ள புதுமைப் பெண்ணாகக் காட்சியளிப்பீர்கள்.

மற்றொரு விதக் கண்ணாடி வித்தையையும் தெரிந்து கொள்ளுங்கள். நிலைக்கண்ணாடிக்குப் பல அடி தூரத்தில் நின்றுகொள்ளுங்கள். இடுப்புக்கு நேரே இரு கைகளையும் சேர்த்துக் கூப்பி வைத்துக்கொண்டு, கண்ணாடியின் பிரதிபிம்பத்தில் உங்கள் கைகள் செய்யும் ஜாலத்தைக் கவனியுங்கள். உங்கள் பிரதிபிம்பத்தை நோக்கி நடந்து செல்லுங்கள். கைகள் பக்கவாட்டில் அசையாமல், கோணலாக நிற்காமல், மேலும் கீழும் ஆடாமல் இருந்தால் உங்கள் தோற்றம் கவர்ச்சியானது. இல்லையென்றால், அப்படிப் பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள்.

இடுப்பு, கால் போன்ற உடல் உறுப்புக்களை அளவோடு வைக்கச் சில பயிற்சிகள் தேவைப்படுகின்றன. வீட்டு வேலை அதிகம் இல்லாதவர்கள், இத்தகைய பயிற்சிகளைச் செய்வது நலம். பயிற்சி செய்யுமுன் அணிந்திருக்கும் உடைகள் யாவும் இறுக்கமாக இருக்கக்கூடாது. நல்ல காற்றோட்டமான இடமாகவும் அமையவேண்டும். தரையில் மல்லாந்து படுத்துக் கொள்ளுங்கள். இரண்டு பக்கமும் இரு கைகளையும் விரித்து நீட்டிக் கொள்ளுங்கள். முதலில் ஒரு காலை மடக்கி இடுப்புவரையில் கொண்டு வந்து, மேலே நீட்டிக்கொண்டிருக்கும் முழங்கைக்கு நேர் கீழாகக் காலை மடக்கி, பழையபடி மெதுவாக நீட்டுங்கள். மற்றொரு காலையும் மறுபுறம் முன்போலவே செய்யுங்கள். இதனால் இடுப்புக்கு நல்ல பயிற்சி கிடைக்கிறது.

அடுத்தபடி, இரு கைகளையும் உடலைத் திருப்பாமல் பக்கவாட்டில் சேர்த்து நீட்டவேண்டும்; இடது பக்கமும், வலது பக்கமுமாக மாற்றி மாற்றிக் கைகளைச் சேர்த்துச் சுழற்றி நீட்டவேண்டும்.

வேறு ஒருவகை, சப்பணம் கூட்டித் தரையில் உட்கார்ந்துகொண்டு இரு கைகளையும் உயரத் தூக்கிப் பக்கவாட்டில் கீழே கொண்டுவந்து இடுப்பருகில் சேர்க்கவேண்டும். இந்தப் பயிற்சிகளால் இடுப்பு, மார்பு, தோள் பட்டை இவற்றுக்கு நல்ல வலிமை ஏற்படும்.

கால்களுக்குப் பயிற்சி வேண்டுமானால், தரையில் ஒருக்களித்துப் படுத்துக்கொள்ளவேண்டும். ஒரு கையில் தலையை வைத்துக்கொண்டு, மறு கையால் நிலத்தில் ஊன்றிக்கொள்ள வேண்டும். இரண்டு முழங்கால்களையும் சேர்த்து மடித்து மார்பளவுக்குக் கொண்டு வாருங்கள். பின்பு இரு கால்களையும் மாற்றி மாற்றி நீட்டவேண்டும். குறைந்தது 25 முதல் 50 தடவை வரை இரு பக்கமும் மாற்றிப் படுத்து இந்தப் பயிற்சியைச் செய்வதால், வெகு எளிதில் அழகான உடலைப் பெறலாம்.

இனிக் கூந்தலைக் கவனிப்போம். கூந்தலை நாகப் பாம்புக்கும் சாட்டைக்கும் கவிஞர்கள் உவமை கூறுகிறார்கள். மேகம்போல் இருண்டு சுருண்ட குழல் என்றும், வசந்த காலத்தில் மன்மதனின் இருப்பிடம் என்றும் அவர்கள் குறிக்கும் கூந்தல், இந்தக் காலத்தில் என்ன பாடு படுகிறது!

கூந்தல் பெண்களுக்கு அழகு தரும் சாதனம். மேல் நாட்டில் கூந்தலைக் கழுத்துவரை வெட்டிவிடுவதை (பாப் செய்வதை) நாகரிகமாகக் கொண்டிருக்கிறார்கள். வட இந்தியாவிலும் இந்த நாகரிகம் வெகுவாகப் பரவியிருக்கிறது. தென்னாட்டில், இந்த நாகரிகம் பரவவில்லை; இனியும் பரவாது என்று நம்புகிறேன். தமிழ் நாட்டுப் பெண்கள் கூந்தலைத் தியாகம் செய்ய அவ்வளவு துணியமாட்டார்கள்.


எலும்பையும் நகத்தையும் போலவே கூந்தலும் தலையின் மீதுள்ள தோல் வழியே ரத்தக்

1



குழல்களில் இணைந்திருக்கிறது. தலைமயிர் சிறு பருவத்தில் மிக வேகமாக வளர்கிறது. அதுவும் ஒரே அளவாக வளர்வதில்லை. முன் பக்கம், நெற்றி, காது போன்ற இடங்களில் குட்டையாகவும், பின் பக்கம் நீளமாகவும் வளர்வதைக் காணலாம். தலைமயிர் ஒன்றின் ஆயுட்காலம் சுமார் நான்கு வருஷம். தலை மயிர் குறிப்பிட்ட அளவு நீளும் வரையில் அதன் வளர்ச்சி நீடிக்கிறது. பிறகு அதன் வாழ்வு முடிவடையவே, தானாகத் தலையிலிருந்து உதிர்ந்து விடுகிறது. அந்தக் காலி இடத்தை இட்டு நிரப்ப வேறு ஒரு புதிய மயிர் அங்கே முளைக்கிறது. இப்படிக் கூந்தல் உதிர்வதும் தோன்றுவதும் நம் ஆயுளில் எத்தனையோ தடவை நடைபெறுகின்றன. வயசாக ஆக, கூந்தல் வளரும் சக்தியை இழக்க ஆரம்பிக்கிறது. கூந்தலை இழப்பதற்கு வயோதிகம் முக்கியமான ஒரு காரணம்; வேறு காரணங்களும் உண்டு. போதுமான உடல் பலம், கூந்தலைச் சுத்தமாக வைத்துக்கொள்ளுவது, கூந்தலின் பலத்தைக் கனமான கொண்டை போன்றவற்றைப் போட்டுப் பரீட்சை செய்யாமல் இருப்பது, பொடுகு, பேன் போன்றவற்றால் பாதகமுறாமல் அதைக் காப்பது - இவையெல்லாம் கூந்தலின் ஆயுளை நீடிக்கச் செய்யும்.

2



வடக்கே வங்காள தேசத்து அழகிகளும் தெற்கே கேரள நாட்டு மங்கைகளும் கூந்தலழகுக்குப் பெயர் பெற்றவர்கள். இவர்கள் அன்றாடம் கூந்தலுக்கு எண்ணெயிட்டு ஸ்நானம் செய்வதால் இந்த வளர்ச்சி ஏற்படுகிறதாம். அது எப்படியிருந்தாலும் சரி, கூந்தலுக்குச் செழுமையும் அழகும் ஏற்பட இரு காரணங்கள் உண்டு: ஒன்று பாரம்பரியம்; மற்றொன்று உடல் ஆரோக்கியம்.

தலையை நன்றாகத் தேங்காய் எண்ணெயோ வாசனைத் தைலமோ தடவி, நெருக்கமான சீப்பினால் இழைய வார வேண்டும். தினமும் இரண்டு முறையாவது தலையை அழுந்த வாருவது அவசியம். இதனால் உதிர வேண்டிய மயிர்கள் உதிர்ந்து அடுத்துப் புதிதாக முளைக்க விருக்கும் தலைமயிருக்கு இடம் அளிக்கும். தலைமயிர் உதிர்வதைப் பார்த்துச் சில பெண்கள், நாசூக்காக மேலாக வாரிவிட்டுப் பேசாமல் இருந்துவிடுகிறார்கள். அது தவறான செயல்.

வாரம் இரு முறை எண்ணெய் ஸ்நானம் செய்வது மிகவும் நல்லது. தலையில் படிந்த அழுக்கு இந்த எண்ணெயில் கரைந்து சீயக்காயின் உதவியால் வெளியேறுவதால் கூந்தல் சுத்தம் அடைகிறது. தோலின் அடியிலுள்ள ரத்தக் குழல்கள் சுறுசுறுப்படைந்து வேலை செய்ய ஆரம்பிக்கின்றன.

சிலர் பச்சைத் தண்ணீரையும் வெந்நீரையும் மாற்றி மாற்றித் தலையில் ஊற்றுவதால், ரத்தக் குழல்கள் துரிதமாக வேலை செய்து கூந்தல் அபிவிருத்தி அடைகிறது என்கிறார்கள். இதை நடைமுறை

யில் கையாண்டு பார்ப்பதில் தவறில்லை. ஆனால், கூந்தல் நுனியை வெட்டிவிட்டால் வளரும் என்பதில் அர்த்தமே இல்லை.

கூந்தல் உதிர்வதற்குக் காரணமான பேன், பொடுகு போன்றவை நீங்க, டீ. டீ. டீ. பவுடர் போன்ற கிருமிநாசினிகளை உபயோகிக்க வேண்டும்.

கூந்தல் வளர வேண்டுமானால் வைட்டமின் ஏ, பி சத்துக்கள் நிறைந்த உணவை உண்பது அவசியம். புரதம் அதிகமாக உள்ள உணவுகளையும் உண்ண வேண்டும். பால், மாம்பழம், முட்டை போன்றவையும், முளை கட்டிய பயறு, கொத்துக் கடலைச் சுண்டல் இவையும் கூந்தலை வளரச் செய்யும். தலையை அழுந்த வாரினால், தலைச் சருமத்தின் அடியில் உள்ள ரத்தக் குழல்கள் சுறுசுறுப்படைந்து கூந்தலின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துகின்றன. தேயிலையைச் சிறிதளவு விளக்கெண்ணெயில் போட்டுக் கொதிக்க வைத்து, அந்த எண்ணெயைத் தினமும் படுக்கப் போகுமுன் உபயோகித்தால், கூந்தல் உதிர்வதைத் தடுக்கலாம். எண்ணெய் தேய்த்துக் குளித்தபின், தலையிலுள்ள ஈரத்தையெல்லாம் துவாலையால் துடைத்த பின்பு, மெதுவாக விரலை விட்டுத் தலைமயிரைக் கோதிவிட வேண்டும்.

---


பட விவரம்


1. நாற்காலி பாவனைப் பயிற்சி
2. நிலைக் கண்ணாடிப் பயிற்சி
3, 4, 5, உடற் பயிற்சிகள்


---

சிலர் கூந்தலுக்கு வாசனை ஊட்டுவதற்காக வாசனைத் தைலம் போடுகிறார்கள். ஆனால், அந்த வாசனை மற்றவர்களுக்குத் தலைவலி உண்டாக்கலாம். கூந்தலுக்கு வாசனையூட்டுவதற்கு நல்ல மணம் மிகுந்த மலர்களைச் சூடுவது நம் நாட்டு வழக்கம். வாசனையற்ற பூக்களை வண்டிச் சுமையாகச் சூட்டிக்கொள்வதைவிட, வாசனையுள்ள பூக்களைக் கொஞ்சமாகச் சூடினாலும், கூந்தல் மணம் பெறும்.

இந்தக் காலத்தில் விதவிதமான தலையலங்கார முறைகள் வந்திருக்கின்றன. அஜந்தா, எல்லோரா கொண்டைகள், மதராஸ் கொண்டைகள், வங்காளக் கொண்டைகள் என்று பலவிதங்கள். இன்னும் தலையைப் பின்னால் சேர்த்துக் கட்டி அப்படியே குதிரை வால்போல் 'புஸ்' என்று விட்டுவிடுவதும் ஓர் அலங்காரம். இரட்டைப் பின்னல், ஒற்றைப் பின்னல் என்ற பின்னல் அலங்காரம் வேறு வகை. இப்படியெல்லாம் கூந்தல் பலவகையான சித்திரவதைக்குள்ளாகி நம்மிட


3


4


5

மிருந்து மீளவேண்டி யிருக்கிறது. ஆனால், ஒருவர் முகம்போல மற்றவர் முகம் இருப்பதில்லை. ஒருவருக்குப் பொருத்தமான அதே பின்னல் அலங்காரம் வேறு ஒருவருக்கு அழகாக இருப்பதில்லை. இதன் காரணங்கள் இரண்டு: ஒன்று முகத் தோற்றம்; மற்றது, வயசு.

உருண்டை முகத்துக்கு, கழுத்தின்மீது சற்றுப் படிந்தாற்போல் போடும் கொண்டைத் தினுசுகளும் இரட்டைப் பின்னல்களும் எடுப்பாக இருக்கும். ஆனால், அஜந்தா போன்ற உயரமான கூந்தல் சிங்காரம், இவர்களை ஒரேயடியாக உருட்டிவிட்ட பந்தைப்போல் ஆக்கிவிடும்.

நீண்ட முகத்துக்கு உயரமாகப் போடும் கொண்டை அழகைத் தந்து, முகத்தின் நீளத்தையும் குறைத்துக் காட்டுகிறது. இரட்டைப் பின்னல் போன்றவையும் இவர்களுக்கு நன்றாக இருக்கும்.

சதுர முகமோ பட்டை முகமோ படைத்தவர்களுக்கு, உருண்டை வடிவில் போடும் கொண்டைகளை விடச் சற்றுத் தளரக் கழுத்தின் மீது படியும்படி போடும் வேறு விதக் கொண்டை அழகைத் தருகிறது.

வயசு ஏற ஏறப் பல பெண்கள் தங்கள் கூந்தலை அழகாகப் பின்னித் தொங்க விட்டுக்கொள்ளப் பாடுபடுகிறார்கள். நரை தோன்றி விட்டாலும் அதைக் கறுப்புச் சாயத்தால் மறைத்துப் பின்னலிட்டுத் தொங்க விட்டுக்கொள்வதன் மூலம் தாங்கள் சிறுமிகளாகத் தோன்றுவதாக இவர்களுக்கு ஓர் எண்ணம். இது தவறு. வயசாக ஆக நம் முகத்தின் தோல் தளர்ந்து கீழ் நோக்கிச் சுருக்கம் விழ ஆரம்பிக்கிறது. எனவே, தொங்கப்போடும் பின்னலுடன், முதுமையின் தளர்ச்சியும் சேர்ந்து, வயசின் முதுமையைத் தம்பட்டம் அடிக்க ஆரம்பித்துவிடும். வயசின் நிலையை மாற்றிக் காட்ட வேண்டுமானால், தலையை உயர்த்திக் கட்ட வேண்டும். இளஞ் சிறுமிகள் கொண்டை போட்டால் எடுப்பாக இருக்கிறதா? இல்லை. இதேபோல, வயசானவர்கள் பின்னலிட்டால், வேஷம் போட்டவர்கள் மாதிரி (நம் திரைப்படக் கதாநாயகிகள் பாவாடை, தாவணி அணிவது போல்) பொருத்தம் இல்லாமல் காட்சி அளிப்பார்கள்.

நேர் வகிடு எடுப்பதோ, கோணல் வகிடு எடுப்பதோ அவரவர் பழக்கத்தைப் பொறுத்தது. என்றாலும், இரட்டை மண்டை, நீண்ட மண்டை, உயர்ந்த மண்டை போன்றவற்றைப் பெற்றிருப்பவர், கோணல் வகிட்டையே எடுத்துக் கொள்வது நலம். இவர்களுக்கு நேர் வகிடு எடுப்பதால், மண்டையின் உண்மையான மேடு பள்ளங்கள் பிறர் கண்ணில் விகாரமாகத் தென்படும்.

சிறிய முகமுள்ள சிலர் ஒரு பெரிய சட்டியை வைத்துக் கவிழ்த்ததுபோல் பெரிய கொண்டையைப் போட்டுக்கொண்டு விடுகிறார்கள். குருவித் தலையில் பனங்காயை வைத்ததுபோல் பார்க்கப் பரிதாபமாக இருக்கும் இவர்கள் நிலை.

அகன்ற நெற்றியுடையவர்கள் முன்புறக் கூந்தலைச் சற்று நெற்றி மீது படியும்படி வாரிக்கொள்ள வேண்டும். இதனால் நெற்றியின் அதிகப்படி அகலம் மறைந்து, கவர்ச்சி ஏற்படுகிறது.

கூந்தலில் புஷ்பங்கள் சூட்டிக் கொள்ளுவது ஒரு கலை. இரட்டைப் பின்னல், ஒற்றைப் பின்னல் இரண்டுக்குமே கொஞ்சமாகப் பூ வைத்துக்கொள்ள வேண்டும். சிலர் வைக்கோற் போர்போல ஒரு பெரிய புஷ்பச் சுமையையே தலையில் இறக்குமதி செய்துவிடுகிறார்கள். கருநாகம் போன்ற அடர்த்தியான பின்னலுக்கு எவ்வளவு பூ வைத்தாலும் எடுப்பாக இருக்கும். ஆனால், எலி வாலை பின்னலில், ஒரு சுமை பூவை வைத்தால் எப்படி இருக்கும்? கொண்டை போட்டுக் கொள்பவர்கள் வட்டமாகவோ, வளைவாகவோ கொண்டையின் விதத்துக்கு ஏற்றபடி பூவைச் சூட்டிக்கொள்ளலாம்.

தலைமயிர் குட்டையாக இருப்பவர்களும், அதிகக் கட்டையாக இல்லாதவர்களும் சவுரியின் உதவியை நாடுவதில் தவறில்லை.

ஆனால், கூந்தலின் வளர்ச்சிக்கு ஏதுவான ஆகார வகைகளையும், சருமப் பாதுகாப்பையும் முதலில் கவனிக்கத் தவறாதீர்கள். செயற்கையைவிட இயற்கை சிறந்ததல்லவா?

மற்றொரு முக்கியமான விஷயம் உங்கள் கூந்தல் அலங்காரத்தைச் சில மாதங்களுக்கு ஒரு முறையாவது மாற்ற முயலுங்கள். ஒரே வித அலங்காரம் சலிப்பைத் தரும். தவிர, 'வடைக் கொண்டை அம்மாள்,' 'குதிரை வால் குமாரி' என்ற பட்டப் பெயர்களும் நிலைத்து விடும்.

எலும்பும் தசையுமான நம் உடலை நன்றாக மூடிக் காத்து வருவது மேல் தோல்.

மேல் தோலில் வேர்வையை வெளியேற்றும் சிறுசிறு துவாரங்கள் இருக்கின்றன. இந்தத் துவாரங்களுடன் வேர்வைக் குழல்கள் இணைந்திருக்கின்றன. அடித் தோலில் ரத்தக் குழல்கள் பிணைந்திருக்கின்றன. வேர்வையைத் தவிர எண்ணெய் போன்ற கொழுப்புச் சத்துக்களையும் வெளியேற்றும் சக்தி தோலுக்கு உண்டு.

வேர்வை போன்ற கழிவுப் பொருள்கள் நம் உடலிலிருந்து வெளியேறுவதால், தோலின்மீது அடிக்கடி அழுக்குக் குவிகிறது. இந்த அழுக்கை நீக்கவும், தோலைச் சுத்தமாக வைத்துக்கொள்ளவும் நாம் அன்றாடம் குளிக்க வேண்டியிருக்கிறது. நம் நாட்டு உஷ்ணமான சீதோஷ்ண நிலையில் நம் தேகத்தில் அடிக்கடி வேர்வை கசிந்து, அழுக்குக் குவிவது சுலபம்.

நாம் குளிப்பதற்காக அன்றாடம் உபயோகிக்கும் சாதனங்கள் சோப்பு, சீயக்காய், மஞ்சள் போன்றவைதான். குளிக்க உபயோகிக்கும் நீர் வெந்நீரா, குளிர் நீரா என்பது அவரவருடைய பழக்கத்தைப் பொறுத்தது.

உடல் தேய்க்கப் 'பிரஷ்' ஒன்றை வைத்துக்கொள்ளுங்கள். 'பிரஷ்' வாங்க முடியாதவர்கள், பீர்க்கங்காயின் உள்புறத்தைக் காய வைத்து விற்கும் 'கூடு' ஒன்றை வைத்துக்கொள்ளலாம். சிறிது தண்ணீரை மேலே விட்டுக்கொண்டு, 'பிரஷ்' அல்லது பீர்க்கங்காய்க் கூட்டினால் நன்றாக உடல் முழுவதும் தேயுங்கள். முக்கியமாகக் கழுத்தின் பின்புறம், கையிடுக்குகள், முதுகு, முழங்கை, கால் போன்றவற்றை நன்றாகச் சுத்தம் செய்யுங்கள். தோலில் படிந்து கிடந்த அழுக்கு இதனால் மெல்ல வெளியேறுகிறது. தண்ணீரும் சோப்பும் சேர்ந்து தோலைப் பரிசுத்தமாக்குகின்றன. சீயக்காய்ப் பொடி, வாசனைப் பொடி போன்றவற்றையும் உபயோகிக்கலாம். மஞ்சள் பூசுவதால் முகத்துக்கு மென்மை ஏற்படுகிறது என்று பலர் கருதுகிறார்கள். இதற்கு விஞ்ஞான ரீதியாக ஆதாரம் எதுவும் இல்லை. ஆயினும், மஞ்சளை மிதமாகப் பூசுவதால் தோலுக்கு ஒரு நிறம் ஏற்படுகிறது. தவிர, மஞ்சள் கிருமிநாசினி. தோலைப் பாதுகாக்கும் காவலனாக மஞ்சளைப் பூசிக் கொள்ளலாம்.

பச்சைத் தண்ணீரில் குளிப்பதன் மூலம் உடலின் ரத்தக் குழல்கள் வேகமாக இயங்குகின்றன. அதனால் தேகத்தில் சுறுசுறுப்பு ஏற்படுகிறது. ஆனால், வயசானவர்களும் பலவீனமடைந்தவர்களும், வியாதியுள்ளவர்களும் இந்த வைத்தியத்தைத் தாங்கமாட்டார்கள்.

மிகச் சூடான நீரை மேலே விட்டுக்கொண்டு குளிப்பதால், உடம்புக்கு இதம் தருவதாகச் சிலர் நினைக்கிறார்கள். உண்மையில் மிகச் சூடான நீர் நம் தேகத்தின் தசை நார்களைத் தளர்வடையச் செய்துவிடும். அதில் குளித்துவிட்டு வந்தவுடன் நமக்குச் சோர்வும் அலுப்பும் ஏற்பட்டு உறக்கம் வருவது சகஜம். எனவே, வெந்நீரில் குளிப்பவர்கள் அதிகச் சூடு இல்லாமல் வெதுவெதுப்பான நீரிலேயே குளிப்பது நலம். குளித்த பின் சுத்தமான துண்டினால் உடலைத் துடைக்கவேண்டும்.

குளிக்கும் நீரில் வாசனையூட்டும் தைலத்தைக் கலந்து குளிப்பதால், மேலெல்லாம் மணங் கமழ விளங்கலாம். ஆனால், எத்தனை பேருக்கு

இப்படித் தண்ணீரில் வாசனையைக் கலந்து நீராடக் கட்டுபடியாகும்?

அக்குளில் வழியும் வேர்வை நம்முடைய அழகான பட்டுச் சட்டை, வண்ணச் சோளி இவற்றின் நிறத்தையே மாற்றிவிடும் சக்தி வாய்ந்தது; மேலும், அது ஒருவித நாற்றத்தையும் உண்டாக்கி விடுகிறது. இதற்குக் காரணம் அங்கே வளரும் ரோமமே. இதை அடிக்கடி களைந்தெறிவது அவசியம். அங்கும் உடலின் மீதி இடங்களிலும் வாசனைப் பவுடரைச் சிறிதளவு தடவ வேண்டியது அவசியம். வேர்வை நாசினிகள் கடைகளில் விற்கின்றன. அவற்றை வாங்கி வாரம் இருமுறை யாவது உபயோகிக்கலாம். வேர்வைநாசினி வாங்க முடியாதவர்கள், நான் மேலே கூறிய பவுடர் முறையைக் கையாள்வது நலம்.

இவ்வளவும் உடலின் வெளிச் சுத்தம். உட்புறச் சுத்தத்தையும் நன்கு கவனிக்க வேண்டும். மலச் சிக்கல் இல்லாமல் இருப்பது முதல் கவனிப்பு. மலச்சிக்கலால் ஏற்படும் கேடுகளில் ஒன்று, கெட்ட ரத்தம். அதனால் தொடர்ந்து தலைவலி, வாயில் துர்நாற்றம், தோலில் கெடுதல்கள் போன்ற பலவித வியாதிகள் உருவெடுக்கின்றன. நல்ல காய்கறி, பழங்கள், தண்ணீர் போன்றவற்றை அதிக அளவில் சேர்த்துக்கொண்டால் நல்லது. சில சமயம் வெங்காயம் போன்றவை நாம் செய்த திருட்டுத்தனத்தைப் பறை சாற்றிவிடும். வாயில், சொத்தைப் பல் போன்றவையும், அருகில் இருப்பவரை விரோதியாக்கும் சக்தி படைத்தவை.

ஜவ்வாதுக்கும் புனுகுக்கும் பெயர் பெற்ற நம் நாடு, மகிழம்பூ, தாழம்பூ, ரோஜா போன்ற மலர்களிலிருந்து எடுக்கும் வாசனைகளுக்கும் பெயர் பெற்றது. இவற்றோடு மேல்நாட்டுப் பல ரக வாசனைகளையும் கடைகளில் விற்கிறார்கள். வாசனையை விரும்பாத மனிதர் யார்? ஆனால் அது அளவுக்கு மிஞ்சிவிடும்போது அதுவே துர்நாற்றமாகப் பரிணமித்து, மற்றவர் நம்மைக் கண்டால் மூச்சைப் பிடித்துக்கொண்டு ஓடச் செய்யலாம்; பிறருக்குத் தலைவலியை ஏற்படுத்தி அவர்கள் முகம் சுளிக்கும்படி செய்யலாம்; உங்களுக்கேகூடத் தலைவலியைக் கிளப்பி விடலாம். எந்த வாசனை உங்களுக்குப் பொருந்துகிறது என்பதை முதலில் கவனித்துப் பார்த்துப் பிறகு அதையே உபயோகிக்க வேண்டும்.

புனுகு ஜவ்வாது போன்ற அதிக மணம் வீசும் பொருள்களை நெற்றிப் பொட்டிலும், புருவத்திலும் தடவிக்கொள்வது சகஜம். ஆனால், எல்லாருக்கும் இதன் மணம் பொருந்துவதில்லை. வேறு வித வாசனைகளையும் பரிசோதித்துப் பார்த்த பின்பே உபயோகிக்க வேண்டும்.

வாங்கின வாசனைத் திரவியத்தைச் சிறு அளவில் உங்கள் கை மணிக்கட்டின்மீது தடவிப் பாருங்கள். தோலில் எரிச்சலோ, வெயில் படும்போது வெடிப்போ ஏற்படாமல் இருந்தால், வாசனைத் திரவியம் ஒத்துக்கொள்கிறது என்று அர்த்தம். இல்லையென்றால், அதை மாற்றியாக வேண்டும்.

வாசனைத் திரவியத்தைப் பொதுவாக உடைகளுக்குப் போடுவார்கள். ஆனால், உங்கள் மேலேயும் ஒரு துளி தட்விப் பாருங்கள். உங்கள் மணிக்கட்டுப் பக்கம், முழங்கை, கழுத்து, காதோரம், புருவம் இவற்றின்மீது கொஞ்சம் வாசனைத் திரவியத்தைப் பூசிவிடுங்கள்.

ஒரே ரக வாசனையை மிதமாக உபயோகித்தோமானால், மற்றவர் நம்மை விரும்பி வரவேற்கும் நிலையை அடைவோம்.

எண்சாண் உடம்புக்குத் தலையே பிரதானம் என்பார்கள். அதிலும் இன்றியமையாதது முகம். மனிதர்களின் வயசையும் கவலையையும் கண்ணாடி போல் பிரதிபலிப்பது முகம்.

முகத்தைச் சுத்தமாக முதலில் சோப்புப் போட்டுக் கழுவுகிறோம். ஆல்கலி காரமும் கொழுப்பும் கலந்துள்ள 'சோப்பு' நமது முகத்தைச் சுத்தப்படுத்தும் சக்தி வாய்ந்ததுதான். ஆனால், ஆல்கலி

காரம் அதிகமாகக் கலந்திருக்கும் சோப்பை உபயோகித்தால் தோலில் அரிப்பு ஏற்பட்டுவிடும். மட்ட ரகமான சோப்புகளில் அதிக வாசனையைக் கலந்து விற்கிறார்கள். அந்த வாசனையைப் பார்த்து ஆசைப்பட்டு, விலையின் சரஸத்தைக் கண்டு மயங்கி, அந்த ரக சோப்பை வாங்கி உபயோகப்படுத்துவதால், முகம் கெட்டு விடுகிறது.

உங்கள் முகத்துக்குப் பழக்கமான ஒரே சோப்பையே மாற்றுமல் உபயோகித்து வாருங்கள். பழக்கத்துக்கு அடிமையாகிவிட்ட உங்கள் முகம் புதிய சோப்புகளை எதிர்த்துப் புரட்சி செய்யும். அதன் பலன் முகத்தில் பருக்கள் போன்ற தொந்தரவு.

தோல் அமைப்பில் இரண்டு வகை உண்டு. ஒன்று, எண்ணெய்ப் பசை உள்ள தோல்; மற்றது வறட்சியான தோல். எண்ணெய்ப் பசை உள்ளவர் முகத்தில், சதா மினுமினுப்பான எண்ணெய்ப் பசை இருந்துகொண்டே இருக்கும். இந்த முகம் இளமையை விரைவில் இழக்காது. ஆனால், எண்ணெய்ப் பசையை முகத்திலிருந்து அடிக்கடி எடுக்கவேண்டிய வேலை இருக்கும். எண்ணெய்ப் பசை உள்ளவர் அடிக்கடி சோப்புப் போட்டுத் தங்கள் முகத்தைக் கழுவ வேண்டும்.

வறட்சியான சருமம் படைத்தவர்கள் எண்ணெய்ப் பசையை முகத்தில் ஏற்றிக்கொள்ள நேரும். குளிர் காலத்தில் இவர்களுடைய முகத்தில் வெடிப்புக்கள் ஏற்படும். கோடைக் காலத்திலோ வறவறப்பாக இருக்கும். இதைப் போக்க என்ன வழி? முகத்துக்கு அடிக்கடி சோப்புப் போட்டுக் கழுவக் கூடாது. கோடைக் காலத்தில் ஒரு வேளையாவது பயற்றம் மாவும் மஞ்சள் பொடியும் கலந்த வாசனைத் தூளை உபயோகித்து முகத்தைக் கழுவுவது நலம். குளிர் நாளில் 'ஸ்னோ' போட்டுப் பழக்கமானவர்களானால், சோப்பிட்டுக் கழுவிய பின் 'ஸ்னோ'வை உபயோகிக்கலாம். ஸ்னோ போடாதவர்கள் சோப்புப் போட்டு முகத்தைக் கழுவு முன், சிறிது 'ஆலிவ்' எண்ணெயோ தேங்காயெண்ணெயோ எடுத்து முகத்தில் நன்றாகத் தேய்த்துவிட்டுச் சற்று நேரம் அப்படியே விட்டு வைக்கவேண்டும். பிறகு முகத்தைச் சுத்தமான மெல்லிய துணியால் துடைக்க வேண்டும். கடைசியில் சோப்பிட்டு முகத்தைக் கழுவினால், தோலின் மென்மை கெடாமல் இருக்கும்.

இரவில் படுக்கப் போகுமுன் சோம்பலைப் பாராது முகத்தைக் கழுவிச் சுத்தப்படுத்த வேண்டும். நாம் போட்டுக்கொள்ளும் பவுடர் போன்றவை, முகத்துத் தோலின் துவாரங்களை அடைத்துக்கொண்டிருக்கும். அவற்றை அப்படியே விட்டுவிடுவதால், சருமத்திலிருந்து அழுக்குகள் வெளியேற வகையில்லாமல் பரு போன்றவை வர ஏதுவாகிவிடும். 'க்ளென்ஸிங் க்ரீம்' என்ற சுத்தம் செய்யும் க்ரீமை வாங்கி உபயோகிக்கலாம். முடியாதவர்கள் ஆலிவ் எண்ணெயாவது, தேங்காய் எண்ணெயாவது உபயோகிக்கலாம்.

க்ரீமைக் கொஞ்சம் எடுத்துத் தொண்டை, மோவாய், கன்னம், புருவம் இவற்றின் மீது தடவுங்கள். பிறகு இரு கைகளாலும் கழுத்தின் பின்புறத்திலிருந்து ஆரம்பித்து மோவாய், கன்னம், மேலே புருவம், மேலே நெற்றி வரைக்கும் தேய்த்துவிடுங்கள். க்ரீமைத் தடவும்போது கீழிருந்து மேலே தேய்க்கவேண்டும். சருமம் சுருக்கம் இல்லாமல் இருக்கவே, கீழிருந்து மேல் நோக்கித் தேய்க்கிறோம். ஐந்து நிமிஷங்களுக்குப் பிறகு, மெல்லிய பஞ்சால் முகத்தைக் கீழிருந்து மேல் நோக்கித் துடைக்க வேண்டும். பிறகு நல்ல நீரில், சோப்பினால் முகத்தையும் கழுத்தையும் கழுவுங்கள். மிருதுவான துணியினால் முகத்தைத் துடையுங்கள். முகம் பளபளவென்று மிருதுவான பட்டுப் போல் இருக்கும்.

இப்போது சருமத்தின் நிறத்தை மாற்றவும் அழகை அதிகரிக்கவும் சில தயாரிப்புக்களை விற்கிறார்கள். இவற்றால் ஓரளவு குணம் காணுவதாகச் சிலர் கூறுகிறார்கள். ஆனால்,

1


2


3


இயற்கை அளித்த தோலின் நிறத்தை மாற்ற முயலுவதன் மூலம் கிட்டும் பலன் என்ன? நாம் வெள்ளையாக வேண்டும் என்ற ஆசையால் போலிச் சரக்கை வாங்கிப் போட்டு முகத்தைக் கெடுத்துக் கொள்ள நேரலாம். எனவே, உங்கள் இயற்கை நிறத்திலேயே இயல்பான அழகைச் செய்து கொள்ள முயலுங்கள்.

'ஸ்கின் புட்' என்ற அழகுச் சாதனம் பலன் தருகிறதோ இல்லையோ எப்படியானாலும் ஒரு முறையில் உபயோகமாகிறது. முகத்தில் இதைத் தேய்ப்பது சருமத்துக்கு ஒரு விதப் பயிற்சி ஆகிறது. அதனால் சருமத்தின் அடியிலுள்ள ரத்தக் குழல்கள் சுறுசுறுப்படைந்து அதிக ரத்தத்தைப் பாய்ச்ச ஆரம்பிக்கின்றன. இதைவிடச் சாதாரண முறை ஒன்று உண்டு. இரவு படுக்கப் போகிறீர்களே, அப்போது படுக்கையில் படுத்தபடியே முகத்தை இரு பக்கமும் விரல்களால் மெதுவாகத் தேய்த்துவிட்டால் போதும். சருமத்தை அழுத்தித் தேய்க்கக் கூடாது; மெதுவாகத் தேய்ப்பது அவசியம்.

முகத்தில் கரும் புள்ளிகள் விழுவதும் பருக்கள் வருவதும் சகஜம். கண்டபடி சோப்பு, பவுடர் போன்றவற்றை உபயோகிப்பதாலும், இரவில் படுக்கப் போகுமுன் முகத்தைச் சுத்தமாகக் கழுவாததாலும் இவை வருகின்றன. பருக்கள் வந்தபின் அவை தாமாக மறையும் வரைக்கும் பேசாமல் விட்டு வைப்பதுதான் சிறந்தது. கையால் தொட்டு, அதை நசுக்கி எடுக்க முயல்வது அபாயம். முகத்தின் மீது ஏற்படும் பரு போன்றவற்றில் ஏதாவது அசுத்தம் பட்டுவிட்டால், முகம் பூராவும் பழுதடையும்; உயிருக்கேகூட ஆபத்து ஏற்படலாம்.

பரு வராமல் இருப்பதற்கு வைட்டமின் 'ஏ', வைட்டமின் 'பீ' இரண்டு சத்தும் உள்ள உணவுகளைச் சாப்பிடவேண்டும். கீரை, பச்சை மிளகாய்த் துவையல், பழ வகைகள் போன்றவை வைட்டமின் சத்துள்ளவை. 'வேப்பிலைக் கொழுந்தைச் சிறு அளவில் அரைத்து எடுத்துத் தயிரில் கலந்து விழுங்கினால் பரு வராது' என்று சிலர் கூறுகிறார்கள். பரு வராமல் இருக்க, மலச் சிக்கல் ஏற்படாமல் பார்த்துக்கொள்வது முக்கியம். மேலும், சாக்கலேட் போன்ற இனிப்புப் பண்டங்களை அதிகமாக உட்கொள்ளாமல் இருப்பதும் அவசியம். அதிகமான மாவுப் பொருள்களும், கொழுப்பும் பருவின் துணைவர்கள்.

பவுடர் என்பது நமது முகத்திலுள்ள வேர்வையை உறிஞ்சி, எண்ணெய்க் கசிவைத் தடுத்து, சருமத்தின்மீது ஒட்டிக்கொண்டு மணம் வீசும் மாவுப் பொருள். இதில் டால்கம் பவுடர் என்றும், முகப் பவுடர் என்றும் இரண்டு ரகங்கள் விற்கின்றன. பலர் டால்கம் பவுடரையே முகத்துக்கும் போட்டுக் கொள்வதுண்டு. டால்கம் பவுடர் உடலுக்குப் போட்டுக் கொள்ளும் பவுடர். முகப் பவுடரையே முகத்துக்கு உபயோகிப்பது நல்லது. ஏனென்றால், முகப் பவுடரில், அவரவருடைய முக நிறத்துக்கு ஏற்றபடி நிறம் உள்ள வகை கிடைக்கிறது.

தகுந்த நிறம் உள்ள முகப் பவுடரை எப்படித் தேர்ந்தெடுப்பது? முதலில் கொஞ்சம் பவுடரை எடுத்து முகத்தில் ஒரு பக்கம் போட்டுக்கொள்ளுங்கள். நல்ல சூரிய வெளிச்சத்தில் நின்று

கொண்டு, உங்கள் முகத்தைக் கண்ணாடியில் பாருங்கள்.

முகத்தின் நிறமும் பவுடரின் நிறமும் வேறு வேறாகத் தெரிகின்றனவா? உதாரணமாக, உங்கள் பழுப்பு நிற முகத்தில், சிவப்பு வர்ணம் அடித்ததுபோல் விளங்குகிறதா? முகத்தில் பவுடர் திட்டுத் திட்டாய் ஒட்டியும் ஒட்டாமலும் நிற்கிறதா? ஏதோ சுண்ணாம்பு மட்டையை வைத்துக்கொண்டு சுண்ணாம்பு அடித்தது மாதிரி முகத்தில் கீற்றுக் கீற்றாய்க் கோடுகள் விழுகின்றனவா? இருக்கிற உங்கள் கொஞ்ச நஞ்ச நிறமும் மங்கிவிட்டதா? இப்படி ஏதாவது ஒரு வழியில் பவுடர் ஒத்து வரவில்லையென்றால், தக்க வேறு நிறம் கிடைக்கும் வரைக்கும் முயலுங்கள்.




முகத்தின் நிறமும் பவுடரின் நிறமும் அதிக வித்தியாசமில்லாமல் இருக்கவேண்டும்; முகத்தில் பவுடர் போட்டவுடனே 'பளிச்'சென்று பரிசுத்தம் ஏற்பட வேண்டும்; முகத்தில் பிரகாசமும் தோலின் மென்மையும் தெரிய வேண்டும்; முகத்தில் இருக்கும் கரும்புள்ளி போன்ற வடுக்களை மறைத்து, முகத்தின்மீது பவுடர் மிருதுவாகப் பரந்து நிற்க வேண்டும்.

கடைகளில் சென்றவுடன் கடைக்காரர் எடுத்துக் காட்டும் விதவிதமான நிறங்களில் எதை எடுப்பது, எதை விடுவது என்று மதிமயங்காதீர்கள். உங்கள் புறங்கையின் நிறத்தையும் பவுடரின் நிறத்தையும் ஒப்பிட்டுப் பார்த்து, உங்கள் நிறத்தைவிடச் சிறிதே குறைந்த நிறம் உள்ள பவுடர் தானா என்று கவனித்து வாங்குங்கள். பவுடரின் நிறம் உங்கள் முகத்துக்கு ஏற்றதா என்பதையும் பரீட்சியுங்கள். கடையில் பெட்டியில் வைத்திருக்கும் பவுடரின் நிறம், வீட்டுக்கு வந்து நம் சருமத்தின்மீது பட்டவுடன் வேறு நிறமாக மாறிவிடலாம். பெட்டிக்குள்ளும் டப்பாக்களுக்குள்ளும் இருக்கும் நிறம் எப்போதும் சரியாக இருப்பதில்லை.

பவுடரைப் பூசுவதற்கு முன் 'ஸ்னோ' போடுவது எதற்காக? 'ஸ்னோ' போட்டு அதன்மீது பவுடரைப் பூசுவதால், பவுடர் காற்றில் பறந்துவிடாமல் பல மணி நேரம் நம் முகத்தின்மீது இருக்கிறது. ஸ்னோவுக்குப் பதிலாக நிறக் குழம்புகள் போன்றவற்றையும் பவுடரின் அடிப் பூச்சாக உபயோகிக்கலாம்.

அடிப் பூச்சுக்களை உபயோகிக்கும்போது நீங்கள் கவனிக்க வேண்டிய விஷயங்களும் உண்டு. உங்கள் முகத்தின் நிறத்தைவிட அதிக நிறமுள்ள பூச்சை மட்டும்

### பட விவரம்

மெலிந்த சரீரம் படைத்த சகோதரிகளுக்கும் நல்ல வாளிப்பான சரீர வாகு கொண்ட சகோதரிகளுக்கும் எடுப்பாக இருக்கும் சோலி வகைகள் இவை. படம் 1, 3 இரண்டிலும் பொத்தான்கள் பின் பக்கமாகப் போடும் முறையில் அமைந்திருக்கின்றன. பழக்கமில்லாதவர்கள் முன்புறமாக மாற்றி அமைக்கலாம். உயர்ந்த கழுத்துக்களுக்கு ஏற்ற கூடுதல் அலங்காரம் கொண்டைதான் என்பதை மறவாதீர்கள்.

வாங்க வேண்டாம். பூச்சை மிதமாகவே உபயோகியுங்கள். சில சமயம் இரண்டுவிதப் பூச்சுக்களை உபயோகித்து முகத்திலுள்ள குறைபாடுகளை மறைக்க முடியும்.

பவுடர் பூசுவது எப்படி என்று முதலில் கூறிவிடுகிறேன். நல்ல வெளிச்சம் விழும்படியான இடத்தில் கண்ணாடியை மாட்டுங்கள். பவுடர் ஒற்றும் சாதனம் (பஃப்) அல்லது பஞ்சு எடுத்துப் பவுடரை ஒற்றி எடுத்துக்கொள்ளுங்கள். முதலில் கழுத்திலிருந்து பவுடர் போட ஆரம்பிப்பதே முறை. விஷயம் தெரியாதவர்கள் முதலில் மூக்கிலும் கன்னத்திலும் பவுடரை அப்பிக்கொள்ள ஆரம்பிப்பார்கள். அது தவறு. கழுத்து, மோவாய், கன்னம், மூக்கு, நெற்றி இந்த வரிசையில் தாராளமாகப் பூசுங்கள். ஒரு நிமிஷம் அப்படியே விட்டு வைத்தால், முகத்தில் பவுடர் படியும். பிறகு மெதுவாகப் 'பவுடர் ஒற்றி'யால் முகத்தில் மீண்டும் ஒற்றி ஒற்றிப் பவுடரை எடுங்கள். மெல்லிய பஞ்சாலோ, பவுடர் ஒற்றியாலோ, மெல்லிய துணியாலோ, அதிகப்படியான பவுடரை இப்படி மெல்ல ஒற்றி எடுத்துவிடுங்கள். பிறகு புருவம், கண்ணிமை, தலை மயிர் இவற்றில் ஒட்டிய பவுடரைத் துடைத்து எடுங்கள்.

இரண்டு விதக் கலவைப் பவுடரைப் பூசுவதால் எப்படி, எந்த விதமான மாறுதல்கள் ஏற்படுகின்றன என்பதைக் கவனியுங்கள். பெரிய மூக்குப் படைத்தவர்களா? அப்படியானால் மற்ற இடத்தில் பூசும் பவுடரின் நிறத்தைவிடச் சற்றுக் குறைவான நிறமுள்ள பவுடரை மூக்கின்மீது பூசுங்கள். சிறிது குறைந்த நிறமுள்ள பவுடரை மூக்கு நுனியிலாவது பூசுங்கள். இதனால் மூக்கின் அளவு சிறியதாகத் தோன்றும். தாடை பெரிதாக இருப்பவர்கள், நிறம் குறைவான பவுடரை இரு தாடைகளின்மீதும் பரப்பிவிட வேண்டும். சிறிய மூக்குள்ளவர்கள், நீண்ட மூக்குப் படைத்தவர்களைப்போல் தோன்ற வேண்டுமா? மூக்குத் தண்டின்மீது அதிக நிறமும் பக்கவாட்டில் குறைந்த நிறமும் உள்ள பவுடர்களைப் பூசுவது நல்லது.

இதேபோல உங்களுக்குக் குறையாக உள்ள எந்தப் பாகத்தின்மீதும் நிறம் குறைவான பவுடரை உபயோகித்து இருட்டடிப்புச் செய்துவிடுங்கள். சட்டென்று எடுத்துக் காட்ட வேண்டிய பாகங்களுக்கு, அதிக நிறம் உள்ள பவுடரைப் பூசுவது நல்லது. ஆனால், நீங்கள் இருவிதப் பவுடர்களை உபயோகித்திருப்பது பிறருக்குத் தெரியாதபடி மிகவும் சாமர்த்தியமாகப் பூசிக்கொள்ளத் தெரிய வேண்டும்.

**மை,** பொட்டு, உதட்டுச் சாயம், 'ரூஜ்' என்னும் கன்னத்துச் சாயம் இவையும் அழகுச் சாதனங்கள்தான். ஆனால், இவற்றில் உதட்டுச் சாயமும் கன்னத்துச் சாயமும் நம் நாட்டுப் பண்பாட்டுக்கும் பெண்மைக்கும் ஒவ்வாதவை. நாட்டியமாடும் சகோதரிகளுக்கும், ஆங்கில முறைப்படி விருந்துகளுக்குச் செல்லும் சகோதரிகளுக்கும் இந்த உதட்டுச் சாயம், கன்னத்துச் சாயம்பற்றிய குறிப்புக்கள் பயன்படலாம்; மற்றவர்கள் கவனிக்க வேண்டாம்.

கன்னத்துச்சாயம் ஒரு துளிதான் வைக்கிறோம். அதை லேசாகப் பூசிப் பட்டும்படாமலும் தடவுவது நல்லது. பரந்த முகமுடையவர்கள், கன்னத்தின் பக்கவாட்டில் தடவினால், முகம் குறுகிவிட்டதுபோல் தோன்றும். சதுரமான முகத்துக்கு, கன்னத்தில் உயரமாகத் தடவினால் முகத்தின் சதுரம் உருண்டை யாகிவிட்டது போல் தோன்றும். உருண்டை முகம் படைத்தவர்கள், கண்களுக்கு நேர் கீழே கன்னத்தில் சாயத்தைத் தடவ வேண்டும். நீண்ட முகத்துக்கு, நடுக்கன்னத்தில் தடவினால் நீளம் குறைந்தது போல் தோன்றும்.

உதட்டுச் சாயம் பூசுவதிலும் சில வழிகளைக் கையாண்டால்தான் அழகாக இருக்கும். பெரிய உதடுகளுக்கு உட்புறமாகச் சாயம் பூச வேண்டும். சிறிய உதடுகளுக்கு வெளிப்புறமும் சேர்த்துப் பூசினால் நன்றாக இருக்கும். உதட்டோரங்

களுக்குக் கூர்மையாகச் சாயம் தீட்டிவிடுவதன் மூலம் வில் அம்பைப்போன்ற அழகான உதடு கள் அமைகின்றன.

இந்த உதட்டுச் சாயம் மெழுகு, எண்ணெய் ஆகிய கொழுப்புச் சத்துக்களைக் கொண்டு தயாரானது. சூரிய வெளிச்சத்தில் இவை தோலை அரித்து வீக்கம் ஏற்படுத்தலாம். நம் நாட்டுப் பெண்மைக்கு ஏற்ற உதட்டுச் சாயம், இயற்கை தந்த அழகுச் சாதனம். அதுதான் வெற்றிலை பாக்கின் நிறம். வெற்றிலை உடலுக்கும் நல்லது; உதட்டுக்கும் அழகு. வெற்றிலைக் காவி ஏறுவதால் பற்களின் வெண்மை கெட்டு விடுவதாகப் பலர் வாதிக்கலாம். உடனுக்குடன் பல்லைச் சுத்தம் செய்வது நல்ல முறை. உதட்டுச் சாயம் போன்றவற்றைச் சதா உபயோகித்து வருவதால், அந்தச் சாயங்கள் ஒரு விநாடி கலைந்தாலும் நம் வேஷம் வெளுத்து விடும்!

இயற்கையாகவே உதடு வெளுக்காமல் இருக்க நல்ல உணவை உட்கொள்வது அவசியம். வைட்டமின் 'பி', வைட்டமின் 'ஸி' இரண்டும் உள்ள உணவுகளை உட்கொள்ள வேண்டும். நல்ல காய்கறிகளைக் கூட்டுச் செய்து சாப்பிடுங்கள். பாகல் காய்-சுண்டைக் காய்க் குழம்பும் நல்லது. பால் சாப்பிட வேண்டும். ஈஸ்ட் பவுடர் அல்லது மாத்திரையைச் சாப்பிடுவது நல்லது. தக்காளிப் பழ ரஸம், கீரை போன்றவை நல்ல பலன் அளிக்கும். செழுமையான ரத்த ஓட்டம் இருந்தால், உதட்டில் தானாகவே நல்ல நிறம் வந்துவிடும்.

கண்களின் அமைப்பை எடுத்துக் காட்டும் சக்தி புருவத்துக்கு உண்டு. முகத்தின் மதிப்பையும் அழகையும் வரம்பிட்டுக் கூறுவது புருவந்தான். புருவமே இல்லாமல் பெயருக்கு ஒன்றிரண்டு ரோமங்கள்மட்டும் சிலருக்கு இயற்கையாகவே இருப்பது அவர்களுடைய துரதிருஷ்டந்தான். இதனால் செயற்கையாகவே அவர்கள் புருவத்தை எழுதிக்கொள்ள வேண்டியிருக்கிறது. கடைகளில் இதற்கென்று பென்ஸில் விற்கிறார்கள். அதை வாங்கிப் புருவத்தை எழுதிக்கொள்ளலாம். உண்மையான இயற்கைப் புருவத்தைப் போலவே இந்தப் பென்ஸிலால் கறுப்பாகத் தீட்டிக்கொள்வது நல்லது; மையால் எழுதுவது அவ்வளவு உகந்ததல்ல.

கட்டையான புருவத்தில் சில ரோமங்களைப் பிடுங்கி எடுத்து விட்டால், புருவம் சிறிது மெலிந்து விடும். ஆனால், ரோமங்களைப் பிடுங்கும்போது மிகவும் கவனமாகப் பிடுங்கவேண்டும். ஒவ்வொரு ரோமமும் புருவத்தின் எழிலுக்கு அவசியம். ஆகவே, அநாவசியமான ரோமத்தை மட்டும் நீக்கலாமே தவிர, அவசரப்பட்டுப் புருவத்தின் ஒழுங்கைக் கெடுத்துவிடாதீர்கள். காடுபோல் வளர்ந்திருக்கும் புருவங்களின் ரோமத்தைக் கீழ்ப்பக்கத்திலிருந்து நீக்க வேண்டும். இதனால் புருவம் ஒழுங்காவதுடன் சிறிய கண்கள், பெரிதாகத் தெரிய ஒரு வாய்ப்பு ஏற்படும். புருவத்தை மேல் பக்கத்திலிருந்து ஒழுங்குபடுத்த முயலாதீர்கள். கூடின புருவங்களின் இடையில் உள்ள ரோமத்தைக் களைய வேண்டும். எப்போதும் புருவம் மூக்கின் உட்புறவளைவிலிருந்து ஆரம்பிக்க வேண்டும். அதை நினைவில் வைத்துக்கொண்டு புருவத்தை ஒழுங்குபடுத்துங்கள். முகப் பவுடர் போட்டவுடன் புருவத்திலுள்ள பவுடரைத் துடைத்துவிட்டு, புருவத்தை ஒழுங்காகச் சேர்த்து விடுங்கள். விரலால் தடவி, ஒழுங்கு செய்வது அவசியம். 'பிரஷ்' ஷினாலும் இதைச் செய்யலாம். புருவத்துக்கும் கண்ணுக்கும் நடுவே உள்ள இடைவெளி அதிகமாக அதிகமாக, கண் பெரிதாகத் தோன்றும்.

கண்ணுக்கு மை பூசுவது அவசியமா? ஒரு விதத்தில் இது அவசியமே. என்றாலும், அதிகமாக அடிக்கடி மையிட்டுக் கொள்வது நல்லதல்ல. கண் இமைகளின்மீது மையைத் தடவிக்கொண்டால் கண்களின் அளவு பெரிதாக இருப்பதைப்போல் தோன்றும். மேலும், கறுப்புக் கோடிட்ட சுற்

றுப் புறத்தால், விழிகள் நல்ல பிரகாசமாகத் தோன்றும்.

பழங்காலத்தில் மை தீட்டுங் கோல் ஒன்று இருந்தது. இது பற்றிய ஆதாரம் நமக்கு இலக்கிய வாயிலாகத் தெரிய வருகிறது.

மைக் கோலுக்குப் பதில் சாதா ரணக் குச்சியை உபயோகிக்கலாம். ஆனால், கண்ணுக்கு உபயோகப் படுத்துவதனால் கவனமாக இருக்க வேண்டும். கொதிக்கும் வெந்நீரில் சிறிது நேரம் போட்டு வெந்த பின்பு, அதை எடுத்து உபயோ கிக்கலாம். மை தீட்ட உபயோகிக் கும் குச்சியைக் கண்ட இடத்திலும் வைப்பது தவறு. தூசி முதலியவை குச்சியின்மீது படிந்து, உபயோகிக் கும்போது கண்களில் உறுத்தும். குச்சியைப் பத்திரமாக மூடி வைக்க வேண்டும்.

கொஞ்சமாக மையைக் குச்சி யில் தேய்த்து எடுத்துக்கொள்ளுங் கள். கண் இமைகளைப் பிரித்து மேல்புறமும் கீழ்ப்புறமும் உள் பக்கமுமாக இமை முழுவதற்கும் தடவுங்கள். மைக்கீற்று லேசாக இருக்கும்படி தடவுவதுதான் முறை. பெரிய விழி படைத்தவர், லேசாக மை தடவினால் போதும். ஏற்கனவே பெரிய விழி படைத் தவர், பட்டையாக மை தீட்டிக் கொண்டால், ஆளையே கண்ணால் எரித்து விடுவதுபோல் தோற்றம் அளிப்பார்கள். உருண்டை விழி படைத்தவர், கண் ஓரத்தில் மையைச் சிறு கோடாக இழுத்து விடவேண்டும். சிறிய கண்ணுக்கு, இமையின் மேலாக, மை தடவ வேண்டும்; இமை ஓரத்தில் மையை நீட்டிவிடுவதும் அவசியம். நெருக்க மாக இருக்கும் கண்ணுக்கு, இமைக்குள் பட்டையாக மையைத் தீட்டுவது பலன் தரும்.

மையை அடிக்கடி உபயோகிப் பதைவிடச் சற்று விட்டு விட்டு உபயோகிப்பதுதான் நல்லது. கரித்தூளை அடிக்கடி மிக மென்மை யான இமையின்மீது தடவுவதால், கண்ணில் வியாதி வருவதாக வைத்திய நிபுணர்கள் கருதுகிறார் கள். கண்ணைச் சுற்றியுள்ள மெல் லிய சருமம், வேதனை தாங்காமல் கறுத்துப் போவதும் உண்டு. கண்ணைச் சுற்றிக் கருவளையங்கள் இடுவதற்கு, ரத்த சோகை, தூக்க மின்மை போன்ற பல காரணங்க ளுடன் இதுவும் ஒரு காரணமாகும். கரிய நிறமுடையவர்கள் மை இடு வதை விடுவது நல்லது.

விழியில் ஒளி இருக்கும்வரையில் தான் கண் அழகு பெறும். வயசாக ஆகக் கண் பிரகாசம் மங்குவது இயல்பு. ஆனால், இளம் வயசிலே கண் பிரகாசம் மங்கி, கண்ணாடி யின் உதவியை நாடுவது ஏன்? சரி யான ஊட்டமில்லாத உணவுதான் காரணம். வைட்டமின் 'ஏ,' வைட்டமின் 'ஸி' இரண்டும் உள்ள உணவுகளை உட்கொள்ள வேண் டும். பச்சைக் காய்கறிகள், காரெட் போன்றவற்றையும், எலு மிச்சம் பழம், மாங்காய் போன்ற ஊறுகாய்களையும் சாப்பிடலாம். கொத்துமல்லித் துவையல், கறிவேப்பிலைத் துவையல் போன்ற துவையல்களும் நல்லவை. தக்காளிப் பழம், முருங்கைக் காய் போன்றவற்றையும் உண்ணலாம்.

முக அலங்காரத்தில் சிகரம் போல் விளங்குவது 'பொட்டு'. பொட்டும் பூவும் மஞ்சளும் நம் நாட்டில் வாழும் பெண்களின் மங்கல அறிகுறிகள்.

பொட்டிடுவதில் பல விதம் உண்டு. சாந்துப் பொட்டிலிருந்து, ஜவ்வாது, குங்குமம், ஜிகினா வரை யில் பல ரகங்கள். ஒவ்வொன்றி லும் எத்தனை நிற பேதம்! பொட்டு இடுவதில்தான் எத்தனை விதம்! உருண்டைப் பொட்டு, நீளப் பொட்டு, அடுக்குப் பொட்டு என்று விதவிதமான உருவங்களை நெற்றியில் வரைந்து தள்ளிவிடுகிறார்கள். ஆனால், எல்லா விதப் பொட்டுக்களும் எல் லாருக்குமே நன்றாக அமைந்து விடுகின்றனவா? இல்லை.

குங்குமமானால் அதைக் காற்றில் கலையாமலும் வெயிலில் கரையா மலும் பார்த்துக்கொள்ளும் சிரமம் உண்டு. சாந்தோ மணிக்கணக்காக நெற்றிமீது அழியாமல் இருக்கும். பலவித நிறங்களில் கறுப்பும் சிவப்பும் தவிர மற்றவை அவ்வளவு எடுப்பாக இருப்பதில்லை. பெரும்பாலும் 'கோபி' என்ற

பொட்டும் வட்ட வடிவமான பொட்டுந்தான் அழகானவை. சில சமயம் ஆச்சரியக் குறி போலவும் கேள்விக் குறி போலவும் பலவிதச் சித்திர வேலைப்பாடுகளை நெற்றியில் செய்து கொள்கிறார்கள். இந்தச் சிங்காரப் பொட்டுக்கள், திரைப் படம், நாடக மேடை, நாட்டிய மேடை போன்றவற்றில் எடுப்பாக இருக்கலாம்; குழந்தைகளுக்கும், சிறுமிகளுக்கும் அழகாகவும், கல்லூரிப் பெண்களுக்குக் களிப்பூட்டும் அலங்காரமாகவும் இருக்கலாம். ஆனால், வாழ்க்கையில் ஈடுபட்ட பெண்களுக்கு ஏற்றதல்ல. கறுப்பாயிருப்பவர் சிவப்புச் சாந்து அல்லது குங்குமத்தை உபயோகிப்பது நலம். சிவந்த மேனிக்குச் சிவப்பும் சரி, கறுப்பும் சரி, நன்றாயிருக்கும். பொட்டு இடுவதை நெற்றியின் நடுவில் இடுவதுதான் எடுப்பாக இருக்கும். அகன்ற நெற்றியுடையவர், சற்றுப் பெரிய அளவில் இரு புருவங்களுக்கும் இடையே, நேர் மேலே இடுவது அழகு தரும். மிகச் சிறிய நெற்றி படைத்தவர், புருவங்களுக்கு இடையே கொஞ்சம் மேலே, சிறிய பொட்டை வைக்க வேண்டும். நீண்ட முகம் உடையவர்களுக்கு, உருண்டையான பொட்டு ஏற்றது. உருண்டை முகமோ பரந்த முகமோ உடையவர்களுக்கு, நீண்ட பொட்டு அழகாக இருக்கும்.

'மூக்கும் முழியுமாகப் பெண் இருக்கிறாள், கிளிமாதிரி' என்று பலர் கூறுவதைக் கேட்கிறோம்.


சப்பை மூக்குப் படைத்தவர்களைச் சிறிது அழகுக் குறைவாகவே மதிப்பிடுவது மக்களின் இயல்பு. ஆனால், நீண்ட மூக்கில் ஓர் அழகு இருப்பதைப்போல், சிறிய மூக்கிலும் ஒரு கவர்ச்சி இருக்கிறது.

இருக்கிற மூக்கை நன்றாக வைத்துக்கொள்வதுதான் முறை. மூக்கின் தோல் கண்ணின் மீதுள்ள தோலைப் போலவே மிக மென்மை வாய்ந்தது. மூக்கின்மீது ஏதாவது பருவோ, கரும்புள்ளியோ தோன்றினால் கவனமாகவும் நிதானமாகவும் எடுக்க வேண்டியது அவசியம். கரும்புள்ளியை அகற்றுவதற்குக் கடைகளில் விற்கும் மருந்துக் குழம்புகளை வாங்கி உபயோகிக்கலாம்.

சிலருக்கு மூக்கின்மீது சதா வேர்த்து விடுவதைப் பார்த்திருப்பீர்கள். எண்ணெய்க் கசிவு, வேர்வை வடிவது போன்றவற்றைத் தடுக்க இந்த மருந்துத் தயாரிப்பை அழகு நிபுணர்கள் கூறியிருக்கிறார்கள்: (1) தூள் செய்த படிகாரம்: 30 கிரெயின்; (2) ரெக்டிபைடு ஸ்பிரிட்: 2 அவுன்ஸ்; (3) கிளிஸரின்: 1 டிராம்; (4) பன்னீர்: 4 அவுன்ஸ்- பவுடர் போடுமுன் இந்த நான்கும் கலந்த குழம்பை அடிப்பூச்சாகக் கண்களில் படாமல் பூசி விட்டால், வேர்வை, எண்ணெய்க் கசிவுகளைத் தடை செய்யும். குளித்துவிட்டு வந்தபின், முகத்தில் (மூக்கு உள்படத்தான்) பூசிவிட்டால் பல மணி நேரம் தொந்தரவு இல்லாமல் இருக்கலாம்.

நம்மில் பலர் காது என்பது, வைரத் தோடு போடுவதற்காக மட்டும் இருப்பதாகக் கருதுகிறோம். ஆபரணத்தைமட்டும் பூட்டிவிடுவதால் காது அழகாகிவிடுமா? இல்லை. காதை அடிக்கடி குறும்பை நீக்கிச் சுத்தமாக்க வேண்டும். ஆபரணங்களை அடிக்கடி அகற்றிவிட்டு, காதில் ஆபரணமிட்ட இடத்தில் சுத்தம் செய்வதும் அவசியம். நாம் தினமும் குளிக்கும் போதும் சரி, முகம் கழுவும் போதும் சரி, காதில் தோடு போட்டுள்ள இடத்தில் தண்ணீர் புகுந்து வெளியேற வகையில்லாது தங்கிவிடுவதால், அங்கே அழுக்குடன் கலக்கிறது. இதனால் காதில் ஒரு துர்நாற்றம் வீசுகிறது. தவிர, காற்று இல்லாமல் அழுக்குச் சேரும் காரணத்தால், அரிப்பு, தோலுரிவது போன்ற தீமைகள் ஏற்பட ஆரம்பிக்கும். ஆகவே, அடிக்கடி தோடு போட்ட இடத்தைச் சுத்தம் செய்வது நலம்.

பற்களையும் வாயையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டியது மிகவும் முக்கியம். சிலர் பேசும் போது சிறிது தூரத்தில் நின்று வாயைத் திறந்தாலே போதும்;




காற்று வாக்கில் வரும் நாற்றம் சகிக்க முடியாது.

வாயில் துர்நாற்றம் வீசுவதற்கு மூன்று காரணங்கள்: ஒன்று, மலச் சிக்கல்; இரண்டு, நாம் சாப்பிட்ட உணவினுல் ஏற்பட்ட கோளாறு; மூன்று, பற்களின் அசுத்தம். மலச் சிக்கல் இல்லாமல் பார்த்துக் கொள்ள, இரவு படுக்கப் போகும் போது இரண்டு வாழைப் பழம் சாப்பிட வேண்டும். தக்காளிப் பழம், ஆரஞ்சுப் பழம் போன்ற பழ வகைகளைச் சாப்பிடுவதும் நல்லதுதான். வாரத்துக்கு ஒரு முறையோ மாதத்துக்கு ஒரு முறையோ 'பேதி'க்குச் சாப்பிடுவது பயன் தரும். மலச் சிக்கல் ஏற்படாமல் இருக்க மற்ருெரு சிறந்த வழி நிறையத் தண்ணீர் அருந்துவது.

நாம் சாப்பிடும் உணவுகள் ஜீர்ணம் ஆகாமல் ஏப்பம் வரும். சரியான பசி இல்லாமல் சாப்பிடுவதால் ஏற்படும் கோளாறு இது. சரியான உணவை, நேரம் அறிந்து அளவறிந்து சாப்பிட வேண்டும். வெங்காயம், பூண்டு போன்றவை உடலுக்கு நன்மை தருபவைதான். ஆனுல், வாயைத் திறந்து பிறரிடம் பேச முடியாத அளவுக்கு இவை நாற்றம் வீசும். அதிலும் வேர்வை வழியாகக்கூட நாற்றம் வீசும் அபார சக்தி பூண்டுக்கு உண்டு. இந்த நாற்றத்தை எப்படிப் போக்குவது? ஒன்று அல்லது இரண்டு காப்பிக்கொட்டையை எடுத்து வாயில் போட்டு அரையுங்கள். வெங்காயம், பூண்டு போன்றவற்றைச் சாப்பிட்டதன் மணம் மறைந்தேவிடும். வெற்றிலை பாக்குப் போடுகிறவர்களைப்பற்றிக் கவலையே இல்லை. அந்த மணத்தின் முன் வேறு எந்த மணமும் நில்லாமல் ஓடிவிடும்.

வாய்தான் உயிரின் வாயில் என்றுல் மிகையில்லை. உணவை உள்ளே தள்ள வாய்தானே அவசியம்? அதிலும் முக்கியம் பல். பல் அரைத்துத் தள்ளும் கலவையை நாக்கு உள்ளே தள்ளிவிடுகிறது. உயிருக்கு உணவை அளிக்கும் பல்லில், விஷம் கலந்தால் என்ன ஆகும்?

'முத்துப் போன்ற பல், முல்லை மலர்ச் சிரிப்பு' என்றெல்லாம் சித்திரிக்கிருர்கள். ஆனுல், எத்தனை பேர் அப்படிப் பல் வரிசை தெரிய வாய்விட்டுச் சிரிக்க முடிகிறது? பல் வரிசையாக இல்லாத குறையாவது படைப்பின் விநோதம் என்று விட்டுவிடலாம். பல்லை வெண்மையாகவும் சுத்தமாகவும் வைத்துக்கொள்ளாமல் இருப்பது யாருடைய தவறு? நம்முடையதுதானே?

ஒரு நாளைக்கு இரண்டு முறையாவது பல்லைச் சுத்தம் செய்ய வேண்டும். காலையில் எழுந்தவுடனும், இரவில் படுக்கப் போகு முன்னும் பல்லைத் தேய்ப்பது நன்மை தரும். இடையில் நேரம் இருந்தால் மூன்றும் முறை பல்லைத் தேய்ப்பதும் நல்லதே.

பல்லைத் துலக்க அவரவர் ரசனைக்கேற்றபடி வேப்பங்குச்சியோ, கரிப் பொடியோ, பல்பொடியோ, பசையோ எதை வேண்டுமானுலும் உபயோகியுங்கள். மேலிருந்து கீழும் கீழிருந்து மேலுமாகப் பல்லைத் துலக்கவேண்டும். வெளிப்புறத்தைப் போலவே, உட்புறமும் தேய்க்கவேண்டும். பல்லிடுக்கில் புகுந்த உணவுப் பொருள் துணுக்குகள் இப்படித் தேய்ப்பதால் வெளியே வந்துவிடும். பல் தேய்க்காவிட்டால் இந்தத் துணுக்குகள் பல்லிடுக்கில் தங்கிப் பல வியாதிகளை வரவழைக்கின்றன. பல்லுக்கு வியாதி வந்தால் உடலுக்கு வியாதி வர நேரம் பிடிக்காது.

சொத்தைப் பல், பல்லில் ரத்தமும் சீழும் வழியும் பயோரியா போன்றவைதான் பல்லின் எதிரிகள். சொத்தைப் பல் இருந்தால், அதை உடனே நீக்குவது நல்லது. அருகில் இருக்கும் மற்றப் பற்களின் வேரையும் சொத்தைப் பல் பாதித்துவிடும். பயோரியா என்னும் வியாதியில் ரத்தமும் சீழும் கசிவது, ஈறு கெட்டுப் போவதன் விளைவாகும். அதிகமான தித்திப்பும், அதிகச் சூடான பானமும், ஜில்லென்ற பானமும் பல்லை மேலும் சொத்தையாக்கும். மணல் போன்ற கரகரப்பான பொடிகளைப் போட்டுப் பல் தேய்ப்பதாலும், பல்லிடுக்கில் அதிக அழுக்குச் சேர விடுவதாலும் ஈறுகளில் ஏதாவது காயம் பட்டு அதனால் பயோரியா வியாதி வருகிறது என்கிறார்கள்.


பல் வியாதி ஏற்பட்டால் உடனே வைத்தியரிடம் சென்று தக்க சிகிச்சை பெற வேண்டும். பல்லுக்கு வேண்டிய கால்ஸியம் போன்ற சத்துள்ள உணவுகளை உண்பது அவசியம்.

நாம் எவ்வளவுதான் சுத்தம் செய்தபோதிலும், பல் இடுக்கில் ஒருவிதக் காவி நிறம் ஏறுவது சகஜம். அப்போதைக்கப்போது பல் வைத்தியரிடம் சென்று இதைச் சுத்தப்படுத்திக்கொண்டு வருவது நல்லது.

பல்லைத் தேய்க்கும்போது, நாக்கையும் நன்றாக வழிக்க மறக்கக் கூடாது. பல்லையும் வாயையும் சேர்த்துச் சுத்தம் செய்தால்தான் வாயில் நாற்றம் இருக்காது.



3



4



5

### பட விவரம்

பருத்த தேகமுடைய சகோதரிகள் இங்கே தந்திருக்கும் கழுத்து வகைகளைத் தாராளமாகத் தைத்துப் போட்டுக்கொள்ளலாம். ஆனால், மிக மெலிந்த சரீரமுடைய சகோதரிகள் தயை செய்து இந்த அகன்ற கழுத்து மாதிரிகளை நாகரிகமாகப் பின்பற்ற வேண்டாம். படம் 1-தவிர மற்ற எல்லாம் பின்பக்கம் பொத்தான் வைத்துத் தைக்கும் மாதிரிகள். பின் பக்கம் பொத்தான் வைத்துவிட்டுப் பிறர் உதவி இல்லாது அதைப் போடத் தெரிந்து கொள்வது ஒரு கலை. எனவே, பழக்கமில்லாதவர்கள் முன்பக்கமாக மாற்றிப் பொத்தானை வைப்பது நலம். தடித்த தேகமுடையவர்களது ரவிக்கையின் கை முழங்கைவரையில்தான் இருக்கலாம்.

பல் வலி போன்ற சமயங்களில், வாயைச் சுத்தம் செய்ய ஒரு துளி 'டெட்டால்' மருந்தைத் தண்ணீரில் விட்டுக் கொப்புளிப்பது உசிதம்.

இனி நகச் சாயங்களையும், கை விரல்களையும், காலழகையும் கவனிப்போம்.

கைகளைச் சுத்தமாக வைத்துக் கொள்வதுடன், மென்மையாகவும் மிருதுவாகவும் வைத்துக்கொள்ள வேண்டும்.

அடுப்படியில் வேலை செய்யும் நமக்குக் காய்கறிகளை நறுக்கவும், சமையலைச் செய்து இறக்கவுந் தான் கைகள் இருக்கின்றன என்று அலட்சியமாக இருந்துவிடுகிறோம். நெருப்பினருகில் வேலை செய்யும் விரல்களில், கரியும் வெடிப்பும் ஏற்படும். விரல் நகங்களுக்குள் அழுக்குப் புகும். அடுப்படியில் வேலை செய்த கை, அலங்காரமாகச் சும்மா இருக்கும் கையை விடக் கரடு பாய்ந்திருக்கும். அதன் நகங்கள் தேய்ந்திருக்கும்.

நமக்கு வேலையும் வேண்டும்; அழகும் வேண்டும். விரலுக்கு மோதிரம் அணிந்து அழகு பார்க்கிறோம். அதே விரல் புஷ்பம் போல் மிருதுவாகவும் இருக்க வேண்டும்.

அடுப்படியில் வேலையெல்லாம் முடிந்த பின்பு கைகளை நன்றாகக் கழுவிச் சுத்தம் செய்யுங்கள். இயற்கையாக அமைந்து விட்ட விரல்களை ஒன்றும் செய்ய முடியாது. நரம்பு புடைத்துக்கொண்டு விகாரமாகத் தோன்றும் கைகளைப் பிடித்து விடுவதன் (மஸாஜ்) மூலம் ஓரளவு சரிப்படுத்தலாம். தினமும் சிறிது தேங்காய் எண்ணெயோ நல்லெண்ணெயோ எடுத்து உள்ளங்கைகளிலும் விரல்களிலும் நன்றாகத் தடவிக்கொண்டு, சில நிமிஷநேரம் அப்படியே இருக்க வேண்டும். கைகளின் மென்மைக்காகவே கடையில் சில குழம்புகளும் க்ரீம்களும் விற்கிறார்கள். எல்லாரும் அவற்றை வாங்க முடியாது. ஆகவே, எண்ணெயை நன்றாகத் தடவித் தேய்ப்பதன் மூலம், தோலுக்கு எண்ணெயின் பளபளப்பும், அதன் அடியில் உள்ள ரத்தக் குழல்களுக்குச் சுறுசுறுப்பும் ஏற்படுத்தலாம். இரவில் படுக்கப் போகுமுன் இதைச் செய்தால் நலம். எண்ணெயோடு சிறிது நேரம் இருந்த பின்பு, வெதுவெதுப்பான வெந்நீரில் கையைச் சோப்புப் போட்டுக் கழுவ வேண்டும்.

வைட்டமின் 'ஏ', கால்ஸியம் இவை இல்லாமலோ போதாமலோ போனால் நகங்கள் செழித்து வளர்வதில்லை. வெண்ணெய், காரெட், பச்சைக் காய்கறிகள், மீன் எண்ணெய் போன்றவை நகத்துக்கு உறுதி அளிக்கின்றன.

நகமும் சதையும் சேருமிடத்தில், சிறு அர்த்த சந்திரன் வடிவத்தில் ஒரு வெள்ளை நிறத்தை நீங்கள் பார்த்திருப்பீர்கள். நகச் சாயம் பூசுமுன், நகத்தோடு இணைந்திருக்கும் சதையைச் சிறிது பின்னால் தள்ளிவிடுவார்கள். வளைந்த வடிவமாக நகம் இருந்தால்தான் சாயம் அழகாகப் பூச முடியும். சிறிய இரும்புக் குச்சியாலோ நகத்தை உருவாக்கும் வேறு நவீன சாதனம் ஒன்றினாலோ, அந்த அர்த்த சந்திரன் வடிவு சிறிது தெரியும்வரை, நகச் சதையைப் பின்னால் தள்ளிவிடுவார்கள். இப்படிச் செய்யும் போது சில சமயம் நகத்தின்மீது காயம் பட்டு நகத்தில் வெள்ளைப் புள்ளி விழலாம். இதைத் தடுக்க எண்ணெய் தடவி வருவது நல்லது.

கை விரல் நகங்களை வாரம் ஒரு முறையாவது கத்தரித்து ஒழுங்கு செய்வது அவசியம். நகங்களுக்கு இடையே அழுக்குச் சேர விடுவது, நமக்கு எவ்வளவு துன்பமோ அவ்வளவு பிறருக்கும் அருவருப்பை அளிக்கும்.

நகச் சாயத்தில் பல நிறங்கள் இருக்கின்றன. நகத்தின் இயற்கை வர்ணத்தோடு ஒத்துப் போகிற சாயந்தான் சிறந்தது.

கால் நகங்கள்மீதும் கை நகங்களைப்போலவே கவனம் செலுத்த வேண்டும்.

நகச் சாயம் நம் நாட்டுப் பண்பாட்டுக்கும், பழக்கங்களுக்கும் ஏற்றதல்ல என்பது என் கருத்து

நாம் உணவைக் கையால் பிசைந்து விரலில் வாய்க்குள் செலுத்தும் வழக்கம் உள்ளவர்கள். சமையல் செய்யும்போதும் விரல்களையே பெரிதும் நம்பியிருக்கிறோம். இந்த விரல்களில் நகப்பூச்சைப் பூசிவிட்டால், வேலை செய்வது எப்படி? நகப் பூச்சு அழிந்துவிடும். அந்தப் பூச்சில் உள்ள சில கலவைப் பொருள்கள் நம் உணவில் கலந்து நமக்குக் கெடுதலும் உண்டு பண்ணக்கூடும்.

நம் நாட்டுப் பண்புக்கு ஏற்ற ஒரு சாயம் உண்டு என்பதை மறவாதீர்கள். அதுதான் மருதோன்றி என்ற மருதாணி. மருதோன்றி இட்ட நகங்கள் சிவப்பாக இருக்கும். இதனால் அபாயம் எதுவுமில்லை. மருதாணி உடலுக்கு நல்லது என்றும், குளிர்ச்சி தரும் என்றும் நம் நாட்டு வைத்திய நிபுணர்கள் கூறுகிறார்கள். இதை உபயோகிப்பதில் பணச் செலவில்லை. நம் நகங்களை விட்டு மாறாமல் மருதாணியின் நிறம் நாள்பட இருக்கும்.

கை விரலில் வெடிப்பு ஏற்படுவதைப்போலவே பாதத்திலும் வெடிப்பு ஏற்படுவது சகஜம். இந்த வெடிப்பைப் 'பித்த வெடி' என்று கூறுகிறார்கள். வைட்டமின் 'ஏ' குறைவினால் இந்த வெடிப்பு ஏற்படுகிறது என்பது டாக்டர்களின் கருத்து. இதற்குக் கடைகளில் அநேகவிதமான மருந்துகள் விற்கின்றன. தக்க வைத்தியரிடம் சென்று அவருடைய ஆலோசனையின்படி ஏற்ற மருந்தை வாங்கிப் போடுங்கள்.

நம்மிடம் ஒரு பெரிய கெட்ட குணம் உண்டு. அழகுக்காக ஆசைப்பட்டுச் செருப்பை வாங்குவோமே தவிர, நம் காலுக்காகச் செருப்பு வாங்க மாட்டோம். அது காலைக் கடித்தாலும் சரி, காலைத் திணித்துக்கொண்டாவது அவதிப்படுவதில் பரம திருப்தி. 'காலுக்குதவாத செருப்பைக் கழற்றி எறி' என்பது பழமொழி. காலுக்கு ஏற்ற அளவு செருப்பு வாங்குவதுதான் அறிவுடைமை. ஆயினும், அவரவருடைய பாதத்தின் தன்மைக்கு அழகு தரும்படியான செருப்பை வாங்குவது நல்லது. பார்க்கப் போனால், சில சமயம் காலின் அழகையே எடுத்துக் காட்டும் சாதனமாகச் செருப்பு அமைந்துவிடுவது சகஜம்.

அகன்ற பாதம் படைத்தவர், தங்கள் காலின் அகலத்தை மறைத்துச் சிறிதுபோல் தோன்றும்படி செய்யவேண்டும். காலின் குறுக்காகச் செருப்பின் 'வார்' வந்தால், காலின் அகலம் அதிகரித்துத் தோன்றும். காலின் மேல்புறத்திலிருந்து சிறிது வளைந்து கீழே நீட்டுவாக்கில் 'வார்' வந்து முடிகிற மாதிரி செருப்பு, காலை நீளமாகவும் சிறிதாகவும் காட்டும். மேலும் பூ வேலை, அழகான பட்டுப் பூச்சி, 'வீ' போன்ற எழுத்து இவற்றைக் கொண்ட செருப்பு வகையும் அழகாக இருக்கும். பெரிய பாதங்களுக்கு ஏற்றது, கறுப்பு நிறச் செருப்பு. பூ வேலைப்பாடுகளும், சித்திர வேலைப்பாடுகளும் இந்தப் பாதத்துக்கு ஏற்றவை அல்ல. கொழு கொழுவென்றிருக்கும் செழுமையான பாதங்களுக்கு, அடி கனமான செருப்புத் தேவை; செருப்பின் நிறம் பகட்டாக இருக்கக் கூடாது. நீண்ட பாதங்களுக்கு, குதிகால் உயர்ந்த செருப்பு ஏற்றது. அடி கனமான பட்டைச் செருப்பும் உபயோகிக்கலாம். சப்பட்டைப் பாதம் படைத்தவர்களுக்கு ஏற்றது சிறிது உயர்ந்த குதிகால் செருப்பே. பாதத்துக்கு வளைவு தர இது சிறந்தது. முன் பாதம் சிறிது வளைந்து இருப்பவர்களுக்கு ஏற்றது சாதாரணச் செருப்பு. குதிகால் சிறிது உயர்ந்த செருப்பை இவர்கள் உபயோகிப்பதிலும் தவறு இல்லை.

அழகான முகத்துக்கும் அலங்காரத்துக்கும் உறுதுணையாக நிற்பது உடை. நகைகள் இல்லாவிட்டாலும், அழகான உடை இருந்துவிட்டால் அந்தக் குறை அவ்வளவாகத் தெரியாது.

நாகரிகம் என்ற பெயரில் ரவிக்கைகள், சேலைகள் எவை வந்தாலும் உடனே நாம் பாய்ந்து அவற்றை வாங்கி அணிவது வழக்க

மாகிவிட்டது. இன்றைய நாகரிகம் என்பதற்காக ஒரு புதுப் பாணி ரவிக்கையை அணிவதைவிட, இது நமக்கு ஏற்றதுதானு என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். நாம் எல்லாரும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. உடல் கட்டோ நிறமோ ஒத்திருப்பதில்லை. இத ஞல் ஒருவருக்கு அழகாக விளங் கும் புது நாகரிக பாணி, மற்ருெரு வருக்குச் சர்வ விகாரமாக இருக்க லாம். சிலருக்கு எந்த நாகரிகமும் பொருத்தமாக இருக்கும். அப்படி அமைவது வெகு அபூர்வம்.

உடையை உடுத்தும் கலையில் அடிப்படையான அம்சம் உங்கள் உருவத்தின் நிறமும் தோற்றமுந் தான். நீங்கள் குட்டையா, குண்டா, உயரமா, ஒல்லியா? எந்த வகையைச் சேர்ந்தவர்கள்? கறுப்பா, மாநிறமா, சிவப்பா?

குட்டையான தேகம் உடைய வர்கள் வாங்கும் ஆடைகளில் எல் லாம் சிறு பூக்கள், சிறு கோடுகள் போட்டவைதான் இருக்கவேண் டும். நீண்ட கோடுகள் போட்ட துணிகளோ புடைவைகளோ இவர் களை உயரமாகக் காட்டும்.

உயரமாக, ஒல்லியாக இருப்ப வர்களுக்கு எதுவுமே எடுப்பாக இருக்கும். சிறு பூக்கள் போட்ட துணிகளையோ சிறிய சித்திர வேலைப்பாடு கொண்ட துணி களையோ விடப் பெரிய பூக்கள், அழகான கோடுகள், கட்டங்கள் இவை கொண்ட துணிகள் மிக நன்ருக இருக்கும்.

சிறிது தடித்திருக்கிறீர்களா? அப்படியானுல் உடலின் குறுக் காகக் கோடுகள் வரும் சேலைத் திஞுசுகளை உடுத்தாதீர்கள். அழ கான சிறு பூக்களோ மெல்லிய கோடுகளோ போட்ட சேலைகளை உபயோகிக்கலாம்.

பருத்த சரீரம் உடையவர்கள் மிகச் சிறிய பூக்கள் கொண்ட துணிகளை உபயோகிப்பது நலம். இவற்றையும்விட வெறும் நிறம் மட்டும் உள்ள (ப்ளேன்) துணிகளை உபயோகிப்பது சிறந்தது.

கறுப்பானவர்களுக்கு எப் போதும் இளம் (லைட்) நிறங்கள் தான் எடுப்பாக இருக்கும். மாநிற மானவர்களும் கறுப்பு நிறத்தவர் களை ஓரளவுக்குப் பின்பற்ற வேண் டும். சிவந்த நிறத்தவர்களைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். அவர்களுக்கு எந்த நிறமும் அழ காக இருக்கும்.

வெள்ளையும், 'மஸ்டர்டு' என்ற மஞ்சள் நிறமும், வாடின ரோஜா இதழின் நிறமும் எவருக்குமே பொருத்தமாக இருக்கும். வெள்ளை உடை உடுத்துவதில் முக்கியமாக ஒன்றைக் கவனிக்க வேண்டும்: வெள்ளைத் துணிகள் எப்போதும் துளி அழுக்கில்லாமல் சுத்தமாக இருப்பது அவசியம்.

ஒரே நிறத்தில் ரவிக்கையும் சேலையும் அணிவது ஒரு வகை நாக ரிகம். அதேபோல வேறு வேறு நிற பேதங்களை ஜோடி சேர்ப்ப தும் ஒரு வகை நாகரிகம். பச்சை, நீலம் போன்றவற்றுக்கு மஞ்சள், கறுப்பு, சிவப்பு நிறங்களை ஜோடி சேர்க்கலாம். மஞ்சள், கறுப்பு, சிவப்பு ஆகியவற்றுக்கு முறையே சிவப்பு, கறுப்பு, மஞ்சள் போன்றவற்றை ஜோடி சேர்க்க லாம். இளம் நிறத்தில் சேலை கட்டினுலும், ஆழ்ந்த நிறத்திலோ வேறு நிறத்திலோ ரவிக்கை அணி வது அழகாக இருக்கும்.

பாவாடை, தாவணி அணிகிற வர் எப்போதும் பாவாடை நிறத் தையும், சட்டை நிறத்தையும் ஒரே நிறமாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். இடையில் உடுத்தும் தாவணியின் நிறம் பாவாடையின் நிறத்துக்கு ஏற்றபடி ஆழ்ந்த நிற மாகவோ வேறு நிறமாகவோ இருந்தால் அழகு தரும்.

இறுகப் பிடிக்கும்படி ரவிக்கை அணிவதுதான் நவீன பாணி. ஆனுல், பருத்த சரீரம் உடையவர் களும் குச்சிபோல் தேகம் படைத்தவர்களும் இறுகப் பிடிக் கும் ரவிக்கையை அணிவதால் பலன் விபரீதமாகிறது. தடித்தவர் கள் தங்கள் சதையை அழுத்தி ரவிக்கையைப் போட்டவுடன், அவர்களுடைய சதை, 'எங்கே வெளியேற வழி இருக்கும்?' என்று தவிப்பதைப்போல் பிதுங்கிக் கொண்டு காட்சியளிக்கும். அப் படி அழுந்த ரவிக்கை போடுவ

தால் ரத்த ஓட்டம் பாதகம் அடையும். அதே போன்ற ரவிக்கை ஒல்லி உடம்பு பெற்றவர்களுக்கு, ஏதோ குச்சி ஒன்றுக்கு உடை மாட்டினதுபோல் தோன்றும்.

தடித்தவர்கள் விதம் விதமான கழுத்துக்களைப் பரீட்சை பார்க்க முயல்வதும் நல்லதல்ல. 'ப' போன்ற அகன்ற கழுத்துக்கள் இவர்களுடைய பருமனை ஓரளவு குறைத்துக் காட்டும். ரவிக்கையின் கைகளை முழங்கையோடு நிறுத்திக்கொள்வதுடன், சற்றுத் தாராளமாக அழுந்தப் பிடிக்காமல் வைத்துக்கொள்ள வேண்டும். சிலருக்குக் கழுத்து நீண்டு அழகாக இராது. அவர்களுடைய தலை, உடல்மீது ஒட்டவைத்த மாதிரி இருக்கும். கழுத்தில் பட்டையோ சுருக்கங்களோ வைத்த ரவிக்கைத் தினுசுகளை அவர்கள் உபயோகிக்காமல் இருப்பது நலம். குச்சி போன்றவர்களும் ரவிக்கையின் கைகளை அழுந்தப் பிடிக்கும்படி தைக்காமல் சிறிது தாராளமாகத் தளர விட்டே தைத்துக் கொள்ளவேண்டும்.

உடுத்தும் உடைகள் பட்டானுலும் பருத்தியானுலும் சுத்தமாகவும் மடிப்புக் கலையாமலும் இருப்பது முக்கியம். உடைகளில் வாசனை போடுவது அவசியமே. ஆனல், அடிக்கடி தண்ணீரில் நனைக்க முடியாத உடைகளில் வாசனை போடும்போது யோசித்துச் செய்ய வேண்டும். புடைவைத் தலைப்பிலும் ரவிக்கையின் தோள்பட்டையிலும் வாசனையைத் தெளிப்பது நல்லது. வெளியே சென்று வந்த பின்பு மடித்து வைக்கவேண்டிய உடைகளைக் காற்ருடச் சிறிது நேரம் கொடியில் போட்டுவிட்டுப் பிறகு மடித்து உள்ளே வையுங்கள்.

'பாடி'களைப்பற்றிச் சில வார்த்தைகள் சொல்லிவிடுகிறேன். இவற்றை வாங்கி உபயோகிப்பவர்கள், சரியான அளவு பார்த்து வாங்குவதுதான் சிறந்தது. இல்லையென்ருல், பாடியின் நாடாக்கள் தோள்பட்டையை அழுத்தி அழுத்தி நிரந்தரமான பள்ளம் ஒன்றைத் தோற்றுவித்து விடுகின்றன. இதேபோல் முதுகுப் பக்கமும், பாடியின் பட்டையான பாகம் உறுத்திக்கோடு விழுகிறது. மேலும், மெல்லிய ரவிக்கைகள் போடும்போது பாடியைப் போட விரும்பாதவர்கள் இருக்கிருர்கள். பின்பக்கத்தை மறைத்துக் கை வைத்துத் தைத்த பாடி தினுசுகளை இவர்கள் உபயோகிக்கலாம்.

நகைகளுக்கு ஆசைப்படாத பெண்கள் இல்லை என்பார்கள். ஆனல், இன்றைய நாகரிகத்தில் நகைகளுக்கு அதிகமாக இடமில்லை. நாசுக்காய் ஒன்றிரண்டு அணிவதோடு சரி. 'பொன் நகை எதற்கு? புன்னகையே போதுமே!' என்று பலர் இருந்து விடுகிருர்கள். தவிர, போலி நகைகள் வேறு வந்து, அசலுக்கும் நகலுக்கும் உள்ள வேற்றுமை தெரியாது மதி மயங்கச் செய்கின்றன.

சாதாரணமாகக் கம்மல் என்னும் தோடுதான் நாம் காதில் அணிவது. இந்தத் தோடு, வெள்ளைக் கல்லாலோ, வைரத்தாலோ, கெம்பாலோ, பொன்னலோ, முத்தாலோ செய்ததா யிருக்கலாம்.

தோடு சிறிய அளவில் உருவானது. இதைத் தவிர இப்போது 'ஸ்டட்டுகள்' என்ற நூதனக் காதணிகள் பலவிதமாக உருவெடுத்திருக்கின்றன. பாம்பு முதல் புஷ்பக் கொத்துவரையில் பலவித உருவங்கள் இதற்கு. காதைப் போன்ற உருவில் பெரிதாகச் செய்து காது முழுவதும் மாட்டிக் கொள்ளும் காதணியும் உண்டு.

தோடு ஒன்றுதான் எல்லாருக்கும் பொருத்தமானது. சிறு காதணிகளைப் பரந்த முகமுடையவர்கள் அணிந்துகொண்டால், முகம் சிறிது சிறுத்துத் தோன்றும். தடித்த சரீரம் உடையவர்களும் அகன்ற முகம் படைத்தவர்களும் பெரிய பெரிய காதணிகளை அணியாதீர்கள். உங்கள் முகம் பின்னும் விசாலமாகத் தெரியும்.

மாட்டல், ஜிமிக்கி, லோலாக்கு போன்றவை மாறி மாறி வந்து கொண்டிருக்கின்றன. நீண்ட முகமுள்ளவர்கள் காதில் தொங்கும் நகைகளைப் போட்டுக் கொள்வது, முகத்தின் நீளத்தைப் பின்

னும் அதிகமாக்கிக் காட்டுகிறது. உருண்டை முகங்களுக்கு ஜிமிக்கி, லோலாக்குப் போன்றவை எடுப்பாக இருக்கும். நீண்ட முகம் படைத்தவர்களும் அவற்றைப் போடலாம். ஆனால், போடும் மாதிரியில் மாறுதல் இருக்கவேண்டும். ஜிமிக்கி போன்றவை மிகவும் நீண்டு தொங்காமல், சிறிது குட்டையாக இருக்கவேண்டும்.

நெக்லஸ் என்ற கழுத்தணிகள் பல தினுசுகளில் வந்திருக்கின்றன. பட்டையாகக் கழுத்து முழுவதும் மறைத்துக்கொள்ளக்கூடிய பெரிய கழுத்தணி முதல், மெல்லிய சலங்கை வரிசை வரையில் கழுத்தணிகள் உண்டு. ஒரு சரம் முத்து மாலை முதல் அடுக்காக முத்துச் சரங்களை அணிவதும் ஒரு நாகரிகந்தான். சங்கிலிகளை வரிசையாகக் கழுத்தில் மாட்டிக்கொள்வதும் ஒரு விதமே. இருந்தாலும், 'கோட் ஸ்டாண்டு' என்று கழுத்தை நினைத்துக்கொண்டு நகைகளை வாரிப் போட்டுக்கொண்டு போவதில் அர்த்தமில்லை. மற்றவர்கள் நம்மை நடமாடும் நகைக்கடையாக நினைப்பதற்கு இடம் தரலாமா?

பருத்த சரீரம் படைத்தவர்கள் குறைவாகவே சங்கிலிகளை உபயோகிக்க வேண்டும். அகன்ற கழுத்தணிகளை உபயோகியாமல், மெல்லிய வேலைப்பாடமைந்த சிறு கழுத்தணிகளைப் போட்டுக்கொள்ளலாம். உயரமாக இருப்பவர்களுக்கு அகன்ற கழுத்தணிகள் எடுப்பாக இருக்கும். ஆடம்பரமான ஜரிகை வேலைப்பாடமைந்த உயர்ந்த சேலைக்கும், ரவிக்கைக்கும் இடையே, அதிக விலையுயர்ந்த அணிகளை அணியாதீர்கள். அவை ஒரேயடியாக உங்கள் அழகையே கொன்றுவிடும். பகட்டான சேலைக்கும் ரவிக்கைக்கும், எளிய முறையில் கழுத்தணியையும் காதணியையும் தேர்ந்தெடுங்கள். இதேபோல் பார்ப்பவர் கண்களைக் கவரும்படியான கழுத்தணியோ காதணியோ இருந்தால், சேலையும் ரவிக்கையும் பகட்டாக இருக்கக்கூடாது.

மூக்குத்தி போட்டுக்கொள்வது நம் நாட்டு நாகரிகமா என்பது சந்தேகமே. முஸ்லிம்களின் ஆட்சிக் காலத்தில் நம் நாட்டில் இந்த நகை புகுந்ததாகத் தெரிகிறது. எனவே, மூக்குத்தி போட்டுக்கொள்ளாத சகோதரிகள் கவலைப்படத் தேவையில்லை. ஒரு தொல்லை மிச்சம் என்று சந்தோஷப்படலாம். மேலும், நீண்ட மூக்குள்ளவர்களுக்குத்தான் மூக்குத்தி எடுப்பாக இருக்கும்; மற்றவர்களுக்கு ஒரு மாதிரிதான்..!

முத்து மாலை கறுப்பு உடம்பு உள்ளவர்களுக்கு நன்றாக இருக்கும். சிவந்த நிறமுடையவர்களும் அதைப் போட்டுக்கொள்ளலாம். நல்ல நீல நிற ஆடைக்கு ஏற்றது முத்து மாலை.

மஞ்சள் அல்லது சிவப்பு நிறத்துக்கு ஏற்றது தங்க நகை. பச்சை போன்ற நிறங்களுக்குக் கல் நகை பொருத்தம். தங்க வளையல்களைத் தவிர, மற்ற வளையல்களை உடைக்கு ஏற்ற நிறத்தில் அணிவது அவசியம். ஒன்று, சேலையின் நிறத்துக்கு ஏற்றபடி அணிவது; மற்றொன்று, ரவிக்கையின் நிறத்துக்குப் பொருந்த அணிவது. இப்படி அணியும் வளையல்கள் பகட்டாக இல்லாமல் ஒரே நிறத்தில் இருப்பது உசிதம்.

அழகுப் பையைத் தேர்ந்தெடுப்பதில் நிற ஜோடிப்புப்பற்றியும் பார்க்கவேண்டும். ரவிக்கை, வளையல், கால் செருப்பு, அழகுப் பை இவை எல்லாம் ஒரே நிறமாக இருக்க வேண்டும். விதம் விதமாகப் பல பையும் பல செருப்பும் வாங்க முடியாதவர்கள், கறுப்பு நிறப் பையும் கறுப்பு நிறக் கால் செருப்பும் வாங்கிவிடுங்கள். இவை இரண்டும் எல்லா நிறத்துக்கும் பொதுவாக விளங்கும்.

அழகு செய்துகொள்ளும்போது நாம் இரண்டு விஷயங்களைச் சதா நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்: ஒன்று பெண்மை; மற்றொன்று வயசு. நம்மை மற்றவர், 'பெண்' என்று மதித்துப் போற்றும்படியாக அழகு செய்து கொள்வது அவசியம். மற்றவர், 'இவள் பெண்ணா அல்லது வேறு

ஏதாவதோ?' என்று மருளும்படியாக உடை உடுத்தாதீர்கள்.

அடுத்ததாக, வயசுக்கு ஏற்ற அழகு செய்துகொள்ளக் கற்றுக் கொள்ளுங்கள். உங்கள் வயசை உங்களாலேயே ஏமாற்ற முடியாது.

*15 முதல் 20 வரை:* இந்த வயசின் காலந்தான் இளமையின் எழில் பொங்கிச் சுழியிடும் காலம். இந்த வயசில் எந்த விதமான அலங்காரமும் சோபிக்கும். அதிகமாக அலங்காரப் பூச்சுக்களை உபயோகிக்க வேண்டாம். பவுடரைக் கூட அதிகமாகப் பூசக்கூடாது.

*20 முதல் 30 வரை:* பதினாறு வயசில் ஏற்பட்ட அதே கவர்ச்சி உங்கள் முகத்தில் இப்போது சிறிது முதிர்ந்து வேறு விதமாகத் தோற்றம் அளிக்கும். உங்களிடம் உள்ள சிறு குறைகள் கொஞ்சங் கொஞ்சமாகப் புலப்பட ஆரம்பிக்கும். இந்த வயசில்தான் முகப் பூச்சின் உண்மையான தேவை ஆரம்பமாகிறது. வெளியே செல்லும்போது உங்கள் அலங்காரம் அற்புதமாக இருக்கட்டும். வீட்டில் சிறிது இயற்கை அழகோடு இருக்கப் பழகுங்கள்.

*30-முதல் 40 வரை:* சிலருக்கு இந்தக் காலத்தில் உண்மையான இளமை வந்துவிடுகிறது! தாய்மைப் பேறு அடையாத பெண்களிடங்கூட, தாய்மையும் பெண்மையும் கலந்த பரிபக்குவம் பெற்ற அழகு இந்தக் காலத்தில்தான் ஏற்படுகிறது. எனவே, சின்னஞ்சிறு சிறுமிகளோடும் இளமங்கைகளோடும் போட்டி இடாமல், தங்கள் வயசுக்கேற்றபடி அழகு செய்துகொள்வது நல்லது. முகத்தின் சருமத்தை மிகவும் கவனமாகப் பாதுகாக்க வேண்டிய அவசியமும் ஏற்படுகிறது. முதுமையின் சுருக்கங்கள் முகத்தில் அதி விரைவில் விழாதபடி கவனமாகப் பார்த்துக்கொள்ளுங்கள்.

*40 முதல் 50 வரை:* தலையில் நரை மயிர் தோன்றி, முகத்தில் சுருக்கங்கள் ஒன்றிரண்டாக விழ ஆரம்பிக்கும் காலம். சில பெண்கள் 60 வயசு வரை ஒரு நரை கூடத் தோன்றாமல் இருப்பதைப் பார்க்கலாம். எல்லாருக்கும் அப்படி முடியுமா? செயற்கையாக நரையை மாற்ற முயலாதீர்கள். முகப் பூச்சு முதலியவற்றை மிக மிகக் குறைந்த அளவில்தான் உபயோகிக்க வேண்டும். ஆடம்பரமான ஆடை அலங்காரங்களைவிட, எளிமையும் கவர்ச்சியும் நிறைந்த ஆடை அணிகளே சிறந்தவை.

*50 வயசுக்கு மேல்:* அநேகமாகப் பாட்டியாகிவிடும் இந்த வயசில், எந்தப் பெண்மணியும் செயற்கையழகில் கருத்தைச் செலுத்துவதில்லை. அவர்கள் திருப்தியெல்லாம் ஆத்ம திருப்தியாக மாறிவிடுகிறது. என்றாலும், சில சமயம் திடீரென்று நினைத்துக்கொண்டு செயற்கை யழகை நாடலாம். எனவே, இயற்கை யழகு கெடாத வகையில், குறைவாகப் பவுடர் பூச்சுப் போன்றவற்றை உபயோகிப்பது நலம். உடைகள் விஷயத்திலும் அணிகள் விஷயத்திலும் எளிமை வேண்டும்.

இந்தச் செயற்கையழகுக்கும் முக்கியமாக உடல்வலிமை இருப்பது அவசியம்.

சமீபத்தில் ஓர் ஆங்கில ஆசிரியையின் கட்டுரை ஒன்றைப் படித்தேன். அதில் தேனைப்பற்றிய ஒரு ரகசியம் இருந்தது. ஒரு தேக்கரண்டி தேனில், ஒரு முட்டையின் சத்தும் காய்கறியின் பக்குவமான சத்தும் கிட்டத்தட்ட இருக்கின்றனவாம். பழ ரஸத்திலோ சூடான பாலிலோ, ஒரு தேக்கரண்டி தேனைக் கலந்து அருந்தினால் நல்ல பலன் தருகிறது என்கிறாள் அந்த ஆசிரியை.

'பிடியழகி இட்டால் பெண்ணழகி ஆவாள்' என்பது பழமொழி. உடலில் ஆரோக்கியம் குறையாமல் இருந்தால்தான், அழகு இருக்கும். உடலில் ஊட்டம் குறைவு படாமல், மேனியழகைக் காப்பதே கருத்தாக இருக்க மறவாதீர்கள்.

உடலிலே பெரும் பகுதி நீர்; அது குறையாதபடி இட்டு நிரப்புவது முக்கியம்.

# அற்புத மருந்து-தண்ணீர்

★

ஆலயம்மாவுக்கு வயசு பதினென்று. ஜலதோஷம் ஏற்படும்போதெல்லாம் அவளுக்கு ஆஸ்த்மா கண்டுவிடும். சமீபத்தில் இப்படி ஆஸ்த்மா கண்ட போது ஓயாமல் இருமிக்கொண்டிருந்தாள். எதையும் சாப்பிடவோ குடிக்கவோ கூட அவளால் முடியவில்லை. ஆலயம்மாவின் தாய் தன் குடும்ப டாக்டரைக் கூப்பிட்டுவரப் போனுள். ஆனல் அவர் யாருக்கோ ஆப்பரேஷன் செய்துகொண்டிருந்தார். வேறு வழி இல்லாமல் கடைசியில் இன்னெரு வைத்தியரை அழைத்து வந்தாள். ''ஆலயம்மா சிறிது நேரத்துக்கு ஒருதரம் கொஞ்சம் தண்ணீர் குடித்து வருவது நல்லது'' என்ருர் அவர். குடும்ப டாக்டர் வருகிற வரை அப்படியே செய்து வரும்படி ஆலயம்மாவிடம் சொன்னுள் அவளுடைய தாய். ஒரு மணி நேரத்துக்கெல்லாம் ஆலயம்மாவின் இருமல் நின்றுவிட்டது.

இரண்டு வயசுக் குழந்தை ஜகதீசனுக்குப் பகல் முழுவதும் ஜுரம். சாயங்காலம் ஜுரவேகம் அதிகமாயிற்று. குழந்தைக்கு இருப்புக் கொள்ளவில்லை. டாக்டர் வந்து எனிமா கொடுத்தார்; வயிற்றிலிருந்த மலம் நீங்கிய சற்று நேரத்துக்கெல்லாம் குழந்தை நிம்மதியாகத் தூங்க ஆரம்பித்து விட்டான்.

தண்ணீரைப் போன்ற சாதாரண வஸ்து இவ்வளவு எளிதில் குணம் தருகிறதென்ருல், ஆச்சரியமாக இல்லையா? நோய், காயம் இவைகளுக்கு அன்ருடம் சிகிச்சை செய்கிருரே உங்கள் டாக்டர், அவர் இப்படி ஏதாவது ஒரு விதத்தில் தண்ணீரைப் பயன் படுத்துவது சகஜம். தண்ணீர் இல்லாவிட்டால் நாம் சில நாளில் வாடி வற்றி இறந்து போய்விடுவோம்; நீர் இன்றி உடலுக்கு மருந்து கொடுத்தாலும் பயன் இல்லை; ரணசிகிச்சை செய்தாலும் உயிருக்கே ஆபத்தாகி விபரீதமான பலனே ஏற்படும்.

புதிதாக வந்திருக்கும் அற்புத மருந்து வகையைக் கண்டு ஏற்பட்ட உற்சாகத்தில், சாதாரண ஜுரம் வந்தால், ''இப்படிக் கைகண்ட அற்புத மருந்துகள்தான் உண்டே; முற்றினல் கவனித்துக் கொள்ளலாம்'' என்று அசட்டுத் தைரியத்தோடு இருந்துவிடுகிருேம். சில சமயம் ஜலதோஷம், மார்ச்சளி, வயிற்றுக் கோளாறு இவைகளைப்பற்றி அக்கறைப்படுவதில்லை. வீட்டில் தங்கி ஓய்வு எடுத்துக்கொண்டால் நோயை எதிர்த்துச் சமாளிக்க முடியும். ஆனல் அதற்கு மாருக நாம் பிடிவாதமாய் வேலைக்குப் போய் வருகிருேம்; உடல்நிலை கெட்டு விடுகிறது. நம்மோடு பழகுபவர்களுக்கெல்லாம் அந்த நோய் தொத்தும்படி நடந்துகொள்கிருேம். படுக்கையில் ஓய்வெடுத்துக் கொண்டு நீராகாரம் உட்கொண்டால் உடம்புக்கு நல்லது. இதனல் நம்மைப் பீடிக்கும் நோய் விரைவில் நீங்கும்; பிராங்கைட்டிஸ், சினுஸைட்டிஸ் போன்ற நோய்களும் அண்ட மாட்டா. 'ஜலதோஷம் முற்றினல் டாக்டரிடம் போனல் போகிறது' என்பது நம் சித்தாந்தம்.

அநேகம் பேர், ''இந்த மாதிரியெல்லாம் அவதிப்படுவானேன்?


மூலம்: ஹெரால்டு அவ் ஹெல்த் (ஆங்கிலம்: ஆகஸ்ட் '58),
தபால் பெட்டி நம்பர் 25, புனு-1.

ஓர் ஊசி போட்டுக்கொண்டால் ஒரே நாளில் தீர்ந்துவிடுகிறது'' என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். டாக்டர், ''உங்களுக்கு லேசாக ஜலதோஷம் கண்டிருக்கிறது. கொடுக்கிற மாற்று மருந்து உடம்பைப் பாதிக்கலாம்; ஆகவே, ஒன்றும் கொடுக்காமலே இருக்கிறேன். ஆனால் படுத்து மட்டும் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்; நிறைய நீராகாரமாகச் சாப்பிடுங்கள்'' என்று சொன்னால் சில நோயாளிகளுக்குக் கோபம் வந்துவிடும்.

'அற்புத மருந்து'கள் என்று வழங்குபவற்றை வெகு நாளைய அநுபவத்தைக் கொண்டு தீர யோசித்துப் பார்த்துத்தான் வைத்தியர்கள் கொடுப்பார்கள் என்பது அந்த மாதிரி நோயாளிகளுக்குத் தெரிகிறதில்லை. இப்படி மாற்று மருந்து கொடுத்தாலும் நீராகாரம் அவசியந்தான்.

இரண்டு விதத்தில் நம் உடம்புக்கு நீர் கிடைத்து வருகிறது. முதல் வகை: நாம் உட்கொள்ளும் உணவு, நீராகாரம் இவைகளிலிருந்துதான் இப்படி மிகுதியாகக் கிடைக்கிறது. நம் உணவில் ஒரு பாதி நீர்தான். உதாரணமாக, தக்காளிப் பழத்தில் 94·3 சத வீதமும், ஆப்பிளில் 84·9 சத வீதமும், மாட்டிறைச்சியில் 73·8 சத வீதமும், ரொட்டியில் 35·3 சதவீதமும் வெறும் நீர்தான். இரண்டாம் வகை: நம் உடம்புக்குள்ளேயே சுரக்கும் நீர். ரசாயன மாறுதலின் பயனாக இப்படி உடலிலேயே இடைவிடாமல் நீர் உற்பத்தியாகிறது. நம் உணவில் உள்ள ஹைட்ரஜன் (ஜலஜப் பொருள்) ஏற்கனவே உடலினுள் மூலக் கூறு (மாலெக்யூல்) களிலுள்ள ஆக்ஸிஜ(பிராண வாயுவி)னுடனே வெளியிலிருந்து வரும் ஆக்ஸிஜனோடோ கலக்கிறது! இதன் விளைவாக நீர் உற்பத்தியாகிறது. 24 மணி நேரத்துக்கு ஒரு பைண்ட் நீர் இப்படிச் சுரக்கிறது.

இந்த நீர் தொடர்ந்து நம் உடலை விட்டு ஏதாவது ஓர் உருவில் வெளியேறி வருகிறது.



ஒவ்வொரு தினமும் 8 காலன் தண்ணீர் குடிக்கவேண்டும்

மூத்திரப் பை ஒழுங்காக வேலை செய்ய வேண்டுமானால் ஒரு பைண்டிலிருந்து $1\frac{1}{2}$ பைண்ட் அளவு நீர் இருக்கவேண்டியது அவசியம். உடம்பில் உஷ்ணம் சரிவர இருந்து வருவதற்கும் பின்னும் அதிக அளவு நீர் அவசியம். எந்நேரமும் உட்கார்ந்தபடி வேலை செய்கிறவர்களின் உடலிலிருந்து சருமத்தின் வழியாகவும் சுவாசக் குழாய் மூலமும் இரண்டு குவார்ட் அளவு நீர் வற்றி வெளியேறிவிடும். உஷ்ணப் பிரதேசத்தில் வேலை செய்யும் ஒரு தொழிலாளியின் உடல்நிலை சரியாக இருக்க வேண்டுமானால் 5 குவார்ட் அளவு நீர் அவனுடைய உடலிலிருந்து வெளியேற வேண்டும். 70 டிகிரி உஷ்ணமுள்ள அறையில் கம்மென்று பட்டினி கிடக்கும் ஆசாமியின் உடம்பிலிருந்துகூட $1\frac{1}{2}$ பைண்ட் அளவு நீர் வற்றி வெளியேறிவிடும். நமக்குக் கிட்டும் நீரின் அளவைவிட மிகுதியாக நம் உடம்பிலிருந்து நீர் வெளியேறினால் உடல் வற்றிவிடும். இதனால் காய்ச்சல் ஏற்படும். மூத்திரப் பை சரிவர வேலை செய்வதில்லை; மூத்திரம் சற்று இறுகிவிடுகிறது. நாக்கும் உதடும் உலர்ந்து விடுகின்றன.

இப்படி வீட்டில் சகஜமாக வரும் காய்ச்சல்கள் அதிகமானால் பசி மந்தித்துவிடும். வழக்கம் போல் சாப்பிட மாட்டோம்; நீராகாரமும் குறைந்துவிடுகிறது. ஆனால்

இந்தச் சந்தர்ப்பத்தில் நீராகாரம் அவசியம்; ஆகவே அதையே மிகுதியாக உட்கொள்ளவேண்டும்.

காய்ச்சலாகக் கிடப்பதிலோ, வேலை நேரம் வீண் போவதிலோ, பிறருக்கு ஒரு சுமையாக இருப்பதிலோ நமக்கு மகிழ்ச்சியா என்ன? அதெல்லாம் இல்லை. இன்னும் கேட்டால், இப்படிப் பணம் செலவழிவது நமக்கே பிடிக்கவில்லை. தேவையான அளவு நீரோ, பழ ரசமோ உட்கொண்டால் நாமே ஆச்சரியப்படும்படி உடம்பு விரைவில் குணமாகிவிடும்.

அநாவசியமான சிக்கல்களும் ஏற்படமாட்டா; அதிக அளவுக்கு மருந்தும் உட்கொள்ளவேண்டியிராது. காய்ச்சலாகக் கிடக்கும்போது நீர் சாப்பிடுவதென்றால் யாருக்கும் தமாஷாகப் படாது என்பது உண்மைதான். நானும் ஒப்புக்கொள்கிறேன். ஆனால், இதுதான் சிக்கனமான வழி; கைமேல் பலனும் உண்டு. இதனால், 'குடிக்க மறந்துவிட்டேன்', 'வாந்திக்கு வரும்போல் இருக்கிறது' என்று சாக்குப்போக்குச் சொல்லத் தொடங்கிவிடுவோம். குழந்தைக்கு இப்படி வெறும் நீர் கொடுப்பதென்றால் தாயார் பாடு சிரமந்தான். இத்தனை மணி நேரத்தில் இவ்வளவு நீர் பருக வேண்டும் என்று ஒரு பாத்திரத்தில் அளந்து வைத்துக்கொள்ளலாம். கடிகாரத்தில் அலாரம் அடிக்கும்போதோ, ரேடியோவில் மணி அடிக்கும்போதோ, வேறு வகையிலோ இது நீர் பருக வேண்டிய நேரம் என்று தெரிந்துகொண்டு அப்போதப்போது ஒரு டம்ளர் நீர் பருகலாம்.

ஆற அமர்ந்து, ''இனி நீங்கள் சில நாள் வரையில் நிறைய நீராகாரமாகச் சாப்பிடவேண்டும். அதற்குக் காரணம் என்ன தெரியுமா?'' என்றெல்லாம் விவரமாகச் சொல்ல நம் டாக்டர்களுக்கு நேரம் இராது; அவர்களுக்கோ பல அலுவல்கள். வைத்தியம் செய்துகொள்ள அவர்களைத் தேடி நாம் வந்திருப்பதால், அவர்கள் சொல்கிறபடி நாம் நடப்போம் என்று கருத வேண்டியிருக்கிறது. இந்த உத்தரவுக்கு நோயாளிகள் கட்டுப்பட்டு நடக்கும்படி செய்ய நர்சுகளுக்குத் தெரியும்.

அநேகம் பேருக்கு-முக்கியமாகக் குழந்தைகளுக்கு - ஜுரம் வரும் போல் இருந்தால், தாகம் எடுப்பது சகஜம். ஒரே சமயத்தில் அதிக அளவு நீர் பருகினால் வாந்தி எடுக்க வரும். திரவ உணவு ஏதாவது கொடுத்தாலே போதும். ''நீராகாரம் கொடுத்து வர வேண்டும்'' என்று டாக்டர் சொன்னால் (சாராய வகையைத் தவிர எந்தத் திரவ உணவு வாய்க்குப் பிடித்திருந்தாலும் சாப்பிடலாம். துருவின 'ஐஸ்' (குறைந்த அளவில்) ஆக இருந்தாலும் சரி, குழம்பு, பழ ரசம் போன்ற திரவமாக இருந்தாலும் சரி, சாப்பிடலாம்; கொஞ்ச நாளைக்குக் கன ஆகாரமே தேவையில்லை. வயிறு, குடல் பற்றிய கடுமையான தொற்று நோய்களுக்கு உடனடியாக டாக்டரை அழைத்துக் காட்டுவது நல்லது. வாந்தி எடுப்பதால் உடம்பிலுள்ள நீர் விரைவில் வெளியேறி விடுகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் கண்ட உணவும் சாப்பிட்டால் குடல் பகுதியில் பின்னும் பாதகம் ஏற்படும். ஆகவே, டாக்டர் வந்து பார்த்து இன்ன உணவுதான் சாப்பிடவேண்டும் என்று சொல்லும் வரையில் திரவ உணவே உட்கொள்ள வேண்டும்; ஆனால் கொழுப்புப் பொருள் அடங்கிய திரவம் எதையும் சாப்பிடக்கூடாது; பாலை அவசியம் விலக்க வேண்டும். குறைந்த அளவில் ஆப்பிள் சாறு உட்கொள்ளலாம். டாக்டர் வந்து பார்த்துச் சொல்லும் வரையில் கன உணவுமட்டும் சாப்பிட வேண்டாம்.

EDITED PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN

# குசேலர் கண்ட புது உலகம்

குசேலரைப்பற்றி நீங்கள் கேள்வியுற்றிருப்பீர்கள்; அவர் கண்ணனுடன் சாந்தீபனி முனிவரிடம் படித்தவர். மணமானதும் நிறையக் குழந்தைகளைப் பெற்று, வறுமையில் வருந்தினார். அவருடைய மனைவி அவரைக் கண்ணனைக் காணச் சொல்லி, துவாரகைக்கு அனுப்பினாள். கண்ணன் மாளிகையில் அவருக்கு ராஜோபசாரம் நடந்தது. குசேலர் கொண்டுவந்திருந்த அவலில் ஒரு பிடியைக் கண்ணன் ஆவலுடன் உண்டான். குசேலர் பெருஞ் செல்வத்தைப் பெற்றார்; நல் வாழ்வு வாழ்ந்தார்.

குசேலர் என்ற சொல்லுக்கு, உடுக்க நல்ல துணி இல்லாதவர் என்று பொருள். அவருடைய இயற்பெயர் சுதாமா. இப்பொழுதும் அவருடைய அணிநகரமான சுதாமாபுரி குஜராத்தில் இருக்கிறது. அது போர்பந்தர் என்றும் வழங்குகிறது.

சுதாமாவின் பிற்கால வாழ்க்கையைப்பற்றிய ஒரு நிகழ்ச்சி, குஜராத் முழுவதிலும் பிரசித்தமாக இருக்கிறது. ஒரு தடவை சுதாமாபுரியில் கண்ணனும் சுதாமாவும் கடலில் ஸ்நானம் செய்யச் சென்றார்கள். சுதாமா முழுக்குப் போட்டதுமே, ஏதோ ஒரு புதிய நாட்டுக்குப் போய்ச் சேர்ந்துவிட்டார். அந்த நாட்டில் ஏழை எவனுமில்லை; துன்புற்று அழுகிறவன் இல்லை; இன வேறுபாடு பாராட்டிப் பகைமையை வளர்ப்பவன் இல்லை.

''இந்த நாடு சுதாமாபுரியிலிருந்து எவ்வளவு தொலைவில் இருக்கிறது?'' என்று சுதாமா அந்த நாட்டினரைக் கேட்டார். ''இங்கிருந்து அங்கே போக இருபது ஆண்டுகள் பிடிக்கும்'' என்று அவர்கள் சொன்னார்கள். சுதாமா அங்கு ஓர் அந்தணருடைய வீட்டில் தங்கினார். அந்தணர் தம் மகளைச் சுதாமாவுக்கு மணம் செய்வித்தார்.

சுதாமாவின் இந்த மனைவிக்கு ஐந்து புதல்வர்கள் பிறந்தார்கள். சில ஆண்டுகளுக்குப் பின் அவள் இறந்துவிட்டாள். அந்த நாட்டு வழக்கப்படி, மனைவி இறந்தால் கணவன் உடன்கட்டை ஏறவேண்டும். சுதாமா இதை விரும்பவில்லை. ''குழந்தைகளை நான் காப்பாற்ற வேண்டாமா? நானும் இறந்தால் குழந்தைகள் என்ன ஆவது?'' என்று அவர் சொல்லிப் பார்த்தார். இறந்த பெண்ணின் பெற்றோர்களும் உறவினர்களும் இதை ஒப்புக்கொள்ளவில்லை. அவர் உடன்கட்டை ஏறத்தான் வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். தப்பித்துக்கொள்ள வழியில்லாமல், சுதாமா உடன்கட்டை ஏறுவதற்குமுன் விதிப்படி குளிக்கச் சென்றார். ஆற்றில் முழுக்குப் போட்டு அவர் தலை நிமிர்ந்ததும் பார்த்தால், கரையில் கண்ணன் நிற்கிறான்!

கண்ணனைக் கண்டதும் அவருக்குப் பழைய நினைவுகள் வந்தன. ''கண்ணா, நான் கடலில் முழுக்குப் போட்டதுமே...'' என்று அவர் வரலாற்றைச் சொல்லத் தொடங்கினார்.

''உன் கதையையெல்லாம் அப்புறம் சொல்லு. வா, வீட்டுக்குப் போகலாம். சமையல் ஆறிப்போயிருக்கும்'' என்று கூறி, கண்ணன் அவரை அழைத்துப் போனான். அவர் வீட்டுக்கு வந்ததும் பார்த்தால், சமையல் பாதிதான் ஆகியிருந்தது. கணத்தை யுகமாகவும் யுகத்தைக் கணமாகவும் காட்ட வல்ல கண்ணனுடைய விளையாட்டை நினைந்து வியந்து, இதைச் சுதாமா தம் மனைவியிடம் சொல்லிச் சொல்லி மகிழ்ந்தார்.

'அகலலீலா' என்ற பெயரால் குஜராத்தி மொழியில் பழங்காவியமாக, வியாச வல்லபராம் என்பவர் இந்தக் கதையைப் பாடியிருக்கிறார்.

—'மதுகரம்'

**Manjari - Sept. '58** **Regd. No. M. 4975**

(Regd. as a Newspaper in Ceylon)

# மஞ்சரி

## பொருளடக்கம்

விளம்பி - புரட்டாசி செப்டம்பர் 1958

| | | |
|---|---|---|
| ஊரும் உலகமும் | .. | 1 |
| சத்தியமே பெரிது | .. | 3 |
| ஷா வகுத்த அரசியல் | ரா. ஸ்ரீ. தேசிகன் | 5 |
| மேதை ராமாநுஜன் | ஸ்வராஜ்யா | 9 |
| சௌகந்திக வனத்தில் | .. | 14 |
| பிணங்களின் நடுவே (லெபனுன் கதை) | கிப்ரான் - கா. ஸ்ரீ. ஸ்ரீ. | 19 |
| ஊஞ்சல் உற்சவம் .. | ப்ரபாஸி | 22 |
| உடலுக்கு வேண்டிய உப்புக்கள் .. | கர்மவீர் | 25 |
| ஆனைமலை ஆதிவாசிகள் .. | சுதேசமித்திரன் | 27 |
| அஞ்சு தென்னை .. | மாத்ருபூமி | 31 |
| கழிவுப் பொருளிலே சக்தி .. | தொழில் இந்தியா | 34 |
| பி. பி. ஸி - யின் வெளிநாட்டு ஒலிபரப்பு | காமன்வெல்த் டுடே | 38 |
| இத்தனை ரெயில் விபத்து ஏன்? .. | கிர்லோஸ்கர் | 41 |
| என்னைக் கேளுங்கள் .. | என். சேஷாத்திரிநாதன் | 51 |
| அபிநய ரகசியம் .. | பிரஜாமத | 55 |
| விலங்குகளின் ஆராய்ச்சி ஆவல் .. | அமிர்த பஜார் பத்திரிகை | 58 |
| பெண்களும் அழகும் (புஸ்தகச் சுருக்கம்) | எஸ். கல்யாணி | 61 |
| அற்புத மருந்து - தண்ணீர் .. | ஹெரால்ட் அவ் ஹெல்த் | 86 |
| குசேலர் கண்ட புது உலகம் .. | (3-ஆம் அட்டை) | |